
# ஆண்டறிக்கையும் கணக்குகளும் - 2023



மொறட்டுவைப் பல்கலைக்கழகம்
இலங்கை

# நிலைபேறான மற்றும் தொ ழில்நுட்பம்

I2023-ஆம் ஆண்டில், மொறட்டுவைப் பல்கலைக்கழகம் அதன் கீர்த்திமிக்க வரலாற்றில் மற்றொரு முக்கியமான மைல்கல்லை அடைந்துகொண்டதுடன், நோக்கத்துடனான அதன் மாற்றத்துக்கான பயணத்தை ஆரம்பித்தது. பல்கலைக்கழக கல்விச் செயற்பாடுகள், மாணவர் அலுவல்கள், நிருவாகம், நிதி, ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகள், ஆலோசனை சேவை, கைத்தொழில் உறவுகள் மற்றும் சர்வதேச உறவுகள் உட்பட அனைத்து அத்தியாவசிய துறைகளிலும் பல்கலைக்கழகம் பாராட்டத்தக்க முன்னேற்றங்களை அடைந்துள்ளது. வருடம் முழுவதும் பல்கலைக்கழகம் சுற்றுச்சூழல் பொறுப்புணர்வு, சமூகப் பொறுப்பு மற்றும் செயல்திறனான நிருவாகம் என்பவற்றை கவனமாக சமநிலைப்படுத்திக்கொண்டு அதன் மூலோபாய இலக்குகள் மற்றும் நோக்கங்கள் ஆகியவற்றை அடைவதில் கவனம் செலுத்தியது. எனினும், அரசாங்கத்தின் நிதியைச் சார்ந்திருக்கும் பகுதிகள் சம்பந்தமாக சவால்கள் எழுந்ததுடன் முடிவெடுப்பதற்கான வரையறுக்கப்பட்ட சுதந்திரதன்மை, சில துறைகளின் முன்னேற்றத்திற்கு தடையாக அமைந்தது. இந்த கட்டுப்பாடுகளுக்கு மத்தியிலும், பல்கலைக்கழகம் அதனது மூலோபாய முகாமைத்துவத் திட்டத்தின் இலக்குகளில் பெரும்பாலானவற்றை, குறிப்பாக 1 முதல் 6 வரையில் குறிப்பிடப்பட்டுள்ளவற்றை வெற்றிகரமாக அடைந்துகொண்டது.



(மென்பொருளின் பிரதியை பதிவிறக்கம் செய்வதற்காக மேலுள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்)

# உள்ளடக்கம்

## 01

### மொறட்டுவைப் பல்கலைக்கழகம் சார் கண்ணோட்டம் மற்றும் ஆளுகை


தொலைநோக்கு, செயற்பணி, பெறுமானங்கள் மற்றும் இலக்குகள் - 06

பல்கலைக்கழகத்தின் சின்னம் - 08

உப வேந்தரின் செய்தி - 10

நிறுவனக் கட்டமைப்பு - 12

பல்கலைக்கழகத்தின் ஆளுகை, சட்ட வரைவுச் சட்டகம் மற்றும் அதிகார அமைப்புக்கள் - 14

பல்கலைக்கழக கவுன்சில் - 17

கூட்டங்கள் - 20

பங்கீட்டுபொட்டாளர் பகுப்பாய்வு - 21

பட்டதாரிகள் பற்றிய விவரம் - 24

முகாமைத்துவ கலந்துரையாடல்: பல்கலைக்கழக செயல்பாடுகள் பற்றிய கண்ணோட்டம் - 25

பகுப்பாய்வு - 58


## 02

### மொறட்டுவைப் பல்கலைக்கழகம் சார் நிலைபேறான அபிவிருத்தி


பெறுமதி உருவாக்க மாதிரி - 62

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான வழி - 64

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுடன் (SDGs) UoM இன் மூலோபாய இலக்குகளை சீரமைத்தல் - 74

பல்கலைக்கழகத்தில் இடர் பகுப்பாய்வும் முகாமைத்துவமும் - 76


## 03

### மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் கல்விசார், நிருவாகம்சார் மற்றும் மாணவர் அலுவல்கள்


வளங்கள் மற்றும் மாணவர்கள் – 88

உள்நாட்டு மாணவர்கள் – 89

வெளிநாட்டு மாணவர்கள் - 95

மாணவர் நலன் மற்றும் வசதிகள் - 96

பணியாளர்கள் பற்றிய விபரம் - 100

கல்விசார் பணியாளர்கள் - 102

நிருவாகப் பிரிவுகள் மற்றும் பணியாளர்கள் – 103

கல்விசாரா பணியாளர்கள் – 113

கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்கள் - 116

நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள் - 117

பணியாளர் அபிவிருத்தி நிலையம் – 118

பணியாளர் நலன் மற்றும் வசதிகள் – 119

தொழில் வழிகாட்டி அலகு - 121

பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைதூரக் கற்றல் - 123

# 04

## மொறட்டுவைப் பல்கலைக்கத்தின் புத்தாக்கங்கள், ஆய்வு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள்


எதிர்கால புத்தாக்கங்கள் மற்றும் தொழில்முனைவு சார் உணர்வை வளர்த்தல் - 133

ஆய்வு கருத்திட்டங்கள் மற்றும் ஆக்கவுரிமைகள் – 136

ஆய்வு, புத்தாக்கங்கள் மற்றும் பிரசுரங்கள் – 137

கிடைத்த விருதுகள் பற்றிய விபரம் – 139

பல்துறை ஆராய்ச்சி நிலையங்கள் – 140

கைத்தொழில்துறை அனுசரணை ஆராய்ச்சி ஆய்வகங்கள் – 141


# 05

## மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் ஆலோசனை மற்றும் வெளிக்கள நடவடிக்கைகள்


கருத்திட்ட ஆலோசனை அலகு - 149

நிறுவன சமூகப் பொறுப்பு (CSR) செயற்பாடுகள் - - 150

கழகங்கள் மற்றும் சங்கங்கள் - 151


# 06

## மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் நிதிசார் கண்ணோட்டம்


ஒட்டுமொத்த நிதிசார் மீளாய்வு - 157

கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை – 2023.12.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது - 161

கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கைக்கான பதில் – 2023.12.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது - 168

முடிவடைந்த ஆண்டுக்கானது - 171

நிதி நிலைமைக் கூற்று - 171

நிதி செயலாற்றல் கூற்று -172

தேறிய சொத்து மாற்றம் சார் கூற்று -173

காசுப்பாய்ச்சல் கூற்று -174

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் - 175

பாதீட்டு ஒப்பீட்டு அறிக்கை - வருமானம் - 196 பாதீட்டு ஒப்பீட்டு அறிக்கை - செலவினம் - 197 மூலதன நிதி பகிர்வு சார்ந்த அறிக்கை - 202

வருமான விபரம் - 203

மீண்டெழும் வருமானம் - 203 மூலதன வருமானம் - 203

செலவின விபரம் - 204

மீண்டெழும் செலவினம் - 204 மீண்டெழும் செலவினம் - 208

நிதி முன்னேற்றம் சார் விபரம் - 209

நிர்மான கருத்திட்டங்கள் சார் முன்னேற்றம் - 209

செலவினம் சார் முன்னேற்றம் - 210

உருவாக்கப்பட்ட வருமான நிதிசார் முன்னேற்றம் - 210

மாணவருக்கான கிரயம் - 211


தசாப்தம் - ஒரு பார்வை - 212

கணக்காய்வு குழு அறிக்கை - 214

நிறுவனம் சார் தகவல்கள் - 218


01

# மொறட்டுவைப் பல்கலைக்கழகம் சார் கண்ணோட்டம் மற்றும் ஆளுந




தொலைநோக்கு, செயற்பணி, பெறுமானங்கள் மற்றும் இலக்குகள் - 06

பல்கலைக்கழகத்தின் சின்னம் - 8

துணை வேந்தரின் செய்தி - 10

நிறுவனக் கட்டமைப்பு - 12

பல்கலைக்கழகத்தின் ஆளுகை, சட்ட வரைவுச் சட்டகம் மற்றும் அதிகார அமைப்புக்கள் - 14

பல்கலைக்கழக கவுன்சில் - 17

கூட்டங்கள் - 20

பங்கீட்டுப்பாட்டாளர் பகுப்பாய்வு - 21

பட்டதாரி சார் விவரம் - 24

முகாமைத்துவ கலந்துரையாடல்: பல்கலைக்கழக செயல்பாடுகள் பற்றிய கண்ணோ ட்டம் - 25

SWOT பகுப்பாய்வு - 58

# தொலைநோக்கு செயற்பணி பெறுமானங்கள் மற்றும் இலக்குகள்

## தொலைநோக்குக் கூற்று

உலக தரத்திலான பட்டதாரிகளை உருவாக்குவதற்காக வலுவூட்டப்பட்ட சூழலுடன் உலகளாவிய ரீதியில் அங்கீகாரம் பெற்ற பல்கலைக்கழகமாக திகழ்தல்.

## செயற்பணிக் கூற்று

- ஆராய்ந்தறியும் மனோபாவத்தை போஷிக்கின்ற மற்றும் உலகளாவிய சவால்களுக்கு ஆக்கபூர்வமாக பதிலளிப்பதற்கான அறிவு, திறன்கள் மற்றும் நடத்தைகளை விருத்தி செய்கின்ற மாற்றத்திற்கான கல்வியை வழங்குதல்;
- புத்தாக்க முயற்சியாண்மை ஊடாக எல்லைகளை விரிவுபடுத்துவது சார்பாக உயர் தாக்கத்தை ஏற்படுத்தும் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல்;
- உலகளாவிய அளவில் நிலைநிறுத்தப்பட்ட பல்கலைக்கழகமாக நிறைபேறான வளர்ச்சியை உறுதி செய்வதற்காக அறிவியல்சார், தொழில்நுட்பம், சமூக பொருளாதார முன்னேற்றம் மற்றும் நல்வாழ்வுக்கு பங்களிப்பு செய்தல் மூலமாக அடைந்துகொள்ளல்.

## முக்கிய பெறுமானங்கள்

1. தர நிலை:
அதன் அனைத்து முயற்சிகளிலும் மிக உயர்ந்த தர நிலையை அடைந்துகொள்ள பாடுபடுதல்.
2. திறமை மற்றும் தொழில்வாண்மை:
சாதனையின் மிக உயர்ந்த தரத்தை அடைந்து கொள்வதற்காக அனைத்து சேவைகளையும் திறமையாகவும் தொழில்வாண்மையாகவும் வழங்க அர்ப்பணிப்புடன் செயலாற்றுதல்.
3. ஒத்துழைப்பு மற்றும் குழுப் பணி:
பங்குதாரர்களின் திருப்தி மற்றும் பலனளிக்கும் அனுபவம் ஆகியவற்றுக்கு உகந்த சூழலில் குழு சார்ந்த இயக்கத்தை மதிக்கும் அதேவேளை ஒத்துழைப்பை விருத்தி செய்வதை ஊக்குவித்தல்.
4. பணியாட்தொகுதினரையும் மாணவர்களையும் வலுவூட்டுதல்:
செயலாற்றலை சிறப்பாக்குவதற்காக பணியாட்தொகுதியினர் சார் திறன் விருத்தியின் ஊடாக புதிய கருத்துக்களை ஏற்றுக்கொள்வதற்கு ஊக்குவித்தல் மற்றும் பயன்மிக்க கல்விக்கான கற்றல் சூழலை உறுதிசெய்தல் மற்றும் செயல்திறனை சிறப்புறச் செய்வதற்காக மாணவர்களுக்கான ஆக்கத்திறன் வெளிப்பாடுகள்.
5. பதிலளிக்கும் தன்மை:
துரித தேசிய அபிவிருத்திக்கான வசதிகளை ஏற்படுத்துவதற்கு அர்ப்பணிப்புச் செய்து, தேவைகளை புரிந்துகொள்ளுதல் மற்றும் நிபுணர்களின் ஆலோசனைகள் மற்றும் புத்தாக்க துவக்க முயற்சிகள் ஊடாக விரைவான பதிலளிப்பை காட்டுதல்.

6. நேர்மைத்தன்மை
மற்றும்
வெளிப்படைத்தன்மை:
பயனுறுதிமிக்க தொடர்பாடல் மற்றும் பரஸ்பர புரிந்துணர்வு ஊடாக சகல பங்குதாரர்கள் இடையேயும் நம்பிக்கையையும் மரியாதையையும் கட்டியெழுப்புவதற்கு ஊக்குவித்தல்.

7. நெறிமுறை நடத்தை,
பொறுப்புக்கூறல் மற்றும்
கண்ணியம்:
சிறந்த நெறிமுறை தரங்களைப் பேணுவதன் மூலமும், உயர் கண்ணியம் மற்றும் பொறுப்புக்கூறலை வெளிப்படுத்துவதன் மூலமும் சகல பணிகளையும் நிறைவேற்றுவதற்கு ஊக்குவித்தல்.

8. பாதுகாப்பு மற்றும் காப்பு:
மாணவர்கள், பணியாளர்கள் மற்றும் ஏனைய பங்குதாரர்கள் சார்பாக பாதுகாப்பான மற்றும் அச்சமற்ற சூழலை உறுதிசெய்ய பாடுபடுதல்.

9. நிலைபேறானதன்மை:
நிலைபேறானதன்மைக் கோட்பாடுகள் மற்றும் பசுமைக் எண்ணக்கருக்கருக்கள் ஆகியவற்றினை ஏற்றுக்கொள்வதை ஊக்குவித்தல்.

10. நல்லாட்சி:
சட்டப்பூர்வ தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யும் அதேவேளை, நியாயத்தன்மை மற்றும் வெளிப்படைத்தன்மை ஆகியவற்றைத்

# இலக்குகள்

இலக்கு 1 - கல்வி மற்றும் பரப்புரை
உயர் கல்வியில் சிறந்து விளங்கும் நிலையமாக உலகளாவிய அங்கீகாரத்தை அடைந்து கொள்ளும் அதேவேளை, சமூகம் மற்றும் கைத்தொழில்துறை தேவைகள் மற்றும் எதிர்பார்ப்பு சார்பாக தேசிய அளவில் பொருத்தமான கல்வியை வழங்குதல்.

இலக்கு 2 - ஆராய்ச்சி மற்றும் பரப்புரை
உலகளாவிய அங்கீகாரத்துடன் ஆராய்ச்சி, புத்தாக்கம் மற்றும் தொழில்முனைவு என்பவற்றில் சிறப்பினை அடைவதற்காக பல்துறைசார் ஆராய்ச்சி கலாச்சாரமொன்றை உருவாக்குதல்.


இலக்கு 3 - புலமைசார்ந்த மற்றும் பௌதிக சூழல் அனைத்து செயற்பாடுகளிலும் சிறப்பினை அடைவதற்காக பல்கலைக்கழகத்தில் புலமைசார்ந்த மற்றும் பௌதிக சூழலை மேம்படுத்துதல்.

இலக்கு 04 - திருப்தியான பல்கலைக்கழக சமூகம்
திருப்தியான பல்கலைக்கழக சமூகமொன்றை உருவாக்குவதற்கு உகந்த சூழலொன்றை உருவாக்குதல்.

இலக்கு 05 - நிபுணத்துவ சேவை மற்றும் ஆலோசனை கொள்கை உருவாக்கம் மற்றும் தேசிய அபிவிருத்தி சார்பாக பொது மற்றும் தனியார் துறைகள் இரண்டிற்கும் நிபுணத்துவ சேவை மற்றும் ஆலோசனையை வழங்குவதில் தலைமை வகித்தல்.

இலக்கு 06 - ஆட்சிக் கோட்பாடுகள், நிறுவனம்சார் தரம் நல்லாட்சிக் கலாச்சாரமொன்றை உருவாக்குதல் மற்றும் நிறுவன நடைமுறைகள் சார் தரத்தினை மேம்படுத்துதல்.

# பல்கலைக்கழகத்தின் சின்னம்




மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் சின்னமானது ஐந்து பகுதிகளைக் கொண்ட கலைத் திரட்டாகும். கீழ் பாகத்தில் 'மொறட்டுவை பல்கலைக்கழகம்' எனும் பெயர் இடம்பெற்றுள்ளதுடன், அதற்கு மேலே தேவனாகரி எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ள சுதந்திரமாக மிதக்கும் பல்கலைக்கழகத்தின் முழக்கத்தை தழுவியதாக இரண்டு பக்கங்களிலும் மேல் நோக்கி விரிந்திருக்கும் இரு நெற்கதிர்கள் மற்றும் அதற்கு மேலே சக்கர அடையாளமொன்று காணப்படுவதுடன், அங்கு புத்தகமொன்றின் மீது வைக்கப்பட்டுள்ள பாரம்பரிய சிட்டி விளக்கொன்று உள்ளது, தேசிய சிங்கம், அதனது வலது பாதத்தினால் வாளை ஏந்தியபடியிருப்பது கீரிடமாக அமைந்துள்ளது, இச் சின்னத்தில் காணப்படும் சிங்கம் தேசியக்கொடியில் உள்ள சிங்கத்தைப் போலவே இருப்பதுடன், இது பல்கலைக்கழகத்தின் தேசிய நிலையைக் குறிக்கின்றது. இதிலுள்ள பற்சக்கரமானது இரண்டு அர்த்தங்களை கொண்டுள்ளது. அது, சத்திய சக்கரதை - தர்மசக்கரத்தை பிரதிநிதித்துவப் படுத்துவதுடன், தொழில்நுட்பத்தின் தொடர்ச்சியான முன்னேற்றத்தையும் குறிப்பிடுகின்றது. சக்கரத்தின் உள்ளே இருக்கும் எளிய ஒற்றைச் சுடருடனான பாரம்பரிய சிட்டிவிளக்கு, ஞான ஒளியை பரப்புவதையும், திரண்ட ஞானத்தையும் அறிவையும் குறிக்கின்ற பாரம்பரிய ஓலைச் சுவட்டின் மீது இருக்கிறது. நெற்கதிர்கள் வாழ்க்கையின் சுபீட்சத்தையும் நிறைவான தன்மையையும் குறிக்கின்றது.

பல்கலைக்கழகத்தின் பொன்மொழி சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்டுள்ள "வித்யாய்வ சர்வதானம்" என்பதன் பொருள் "அறிவே சகல செல்வம்" என்பதாகும்.



# துணை வேந்தரின் செய்தி



"தொழில்நுட்பம் மற்றும் தொடர்புடைய துறைகளில் சிறந்து விளங்கும் உலகளாவிய மையமாக மாறும் தொலைநோக்குடன், மொறட்டுவைப் பல்கலைக்கழகமானது இலங்கையின் சிறந்த பல்கலைக்கழகங்களில் ஒன்றாக கருதப்படுகிறது."

மாற்றத்துக்கான கல்வியை வழங்குவதன் மூலமும் உயர் தாக்கமுள்ள ஆராய்ச்சிகளை மேற்கொள்வதன் மூலமும், உலகளாவிய சவால்களுக்கு ஆக்கப்பூர்வமாக பதிலளித்தல், இலங்கையை அறிவினை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரமாக மாற்றுவது சார்பாக வழிநடத்துவதற்குத் தேவையான திறன்கள் மற்றும் மனப்பாங்கை கொண்ட பட்டதாரிகளை உருவாக்குதல் பல்கலைக்கழகத்தின் நோக்கமாகும்.


இப் பல்கலைக்கழகமானது, பொறியியல், கட்டடக்கலை, கணிய அளவையியல், வடிவமைப்பு, பட்டணமும் நாடும் திட்டமிடல், வசதியேற்பாடுகள் முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்பம், போக்குவரத்து மற்றும் தேவை விநியோக ஒழுங்கமைப்பு முகாமைத்துவம், வியாபார விஞ்ஞானம் மற்றும் மருத்துவம் ஆகிய துறைகளில் பட்டப்படிப்பு மற்றும் பட்டமேற்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை வழங்கிவருகிறது. 2023- ஆம் ஆண்டில் 2,241 புதிய மாணவ, மாணவிகள் அனுமதிகளை பெற்றுக் கொண்டதையடுத்து, 2023-ஆம் ஆண்டின் இறுதியில், மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பு மாணவ, மாணவிகள் எண்ணிக்கை 8,677 ஆக இருந்தது. 2023 பட்டமளிப்மளிப்பு விழாவில், 1,662 இளமாணிப் பட்டங்கள் மற்றும் 494 பட்டமேற்படிப்பு பட்டங்கள் உட்பட மொத்தமாக 2,156 பட்டங்கள் வழங்கப்பட்டன.


கடந்த பத்து வருடங்களில், இளம்பட்டதாரி மாணவர்களின் வருடாந்த உள்வாங்கலில் காணப்பட்ட அதிகரிப்புக்கு மத்தியிலும், மற்றும் அவர்களுக்கான வசதிகளும், வளங்களும் விகிதாசார அதிகரிப்பைக் காட்டிலும் குறைவாக இருந்தபோதிலும், மொறட்டுவை பல்கலைக்கழகமானது அதன் கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்களின் பொருத்தத்தையும் அவற்றின் தரத்தையும் பேணுவதிலும், மேம்படுத்துவதிலும் பெருமை கொள்கிறது. பட்டமளிப்பு விழா இடம்பெற்ற தினம் வரையில், அனைத்து பட்டதாரிகளிலும் 85.7% பேர் தொழில் புரிவதாக, 2023 ஆம் ஆண்டின் பட்டதாரிகள் பற்றிய டிரேஷர் ஆய்வு சுட்டிக்காட்டியதோடு, இது எதிர்கால தொழில் வழங்குநர்களிடையே மொறட்டுவை பல்கலைக்கழகப் பட்டதாரிகளுக்கான தொடர்ச்சியான உறுதிமிக்க கேள்வியை எடுத்துக்காட்டுகிறது.
பல்கலைக்கழகத்தின் செயல்பணிக் கூற்றின் மற்றொரு அத்திவாரமாக அதிநவீனமும், உயர் தாக்கமும் கொண்ட ஆய்வு நடவடிக்கை விளங்குகின்றது. பல்கலைக்கழக ஆய்வுச் சமூகத்தின் அர்ப்பணிப்பு எடுத்துக்காட்டப்படு வகையில், 2023 ஆம் ஆண்டில், 200 இற்கும் மேற்பட்ட ஆராய்ச்சி கட்டுரைகள் சுசிகை செய்யப்பட்ட பருவ இதழ்களில் பிரசுரிக்கப்பட்டன. 2023 ஆம் ஆண்டில் அதன் பணியாளர்களும் மாணவர்களும் பெற்ற தேசிய மற்றும் சர்வதேச அங்கீகாரங்கள் சான்று பகர்கின்றவாறு, தாக்கம் கொண்டதும் செயற்பாட்டில் காண்பிக்கக்கூடியதுமான ஆய்வில் சிறந்து விளங்கும் நிலையமாக தொடர்ந்தும் அதன் நிலைப்பாட்டினை மேம்படுத்துவதற்கு பல்கலைக்கழகம் உறுதிபூண்டுள்ளது. மொறட்டுவை பல்கலைக்கழகமானது தரம், ஒத்துழைப்பு வழங்கல், பொறுப்புக்கூறல், வலுவூட்டல் மற்றும் நிலைபேறான தன்மை போன்றவற்றை உள்ளடக்கிய முக்கிய பெறுமானத்தின் அடிப்படையில், அதன் மூலோபாய முகாமைத்துவத் திட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டவாறான அதன் இலக்குகளை நோக்கிய பயணத்தை தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றது. இதற்காக, சர்வதேச பல்கலைக்கழகங்களுடனான மேம்பட்ட ஒத்துழைப்பு மற்றும் கூட்டாண்மை, இளம் பட்டதாரிகளின் நிகழ்ச்சித்திட்டங்களுக்கான சான்றங்கீகாரம், பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் சார்ந்த மற்றும் நிர்வாகம் சார்ந்த சேவைகளை டிஜிட்டல் மயமாக்குதல், பசுமை வளாக முன்னெடுப்புக்களை மேற்கொள்ளல், அத்துடன் புத்தாக்கம் மற்றும் தொழில்முயற்சியாண்மைக் கலாச்சாரத்தை உருவாக்குதல் ஆகியவற்றின் அடிப்படையில் முன்னேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவை உள்ளூர் சமூகத்தை ஊக்குவித்து, தொழில்நுட்பத்திலான முன்னேற்றங்கள் பற்றிய பேச்சுவார்த்தைகளைத் தூண்டுவதன் மூலம் கல்வி, கைத்தொழில் மற்றும் சமூகம் ஆகியவற்றுக்கிடையில் வலுவான தொடர்புகளைக் கட்டியெழுப்புதை இலக்காகக் கொண்ட பல்கலைக்கழகத்தின் முதன்மை தொழில்நுட்பக் கண்காட்சியான EXMO 2023 இல் காட்சிப்படுத்தப்பட்டன. இந்த முயற்சிகள், விரிவான மற்றும் சமமான கற்றல் வாய்ப்புகளை வழங்குதல், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் நிலைபேறான நடைமுறைகளை வலியுறுத்துதல், புத்தாக்கம், ஆராய்ச்சி மற்றும் நிலைபேறான உட்கட்டமைப்பை விருத்தி செய்தல், கூட்டாண்மை மற்றும் ஒத்துழைப்புகளில் ஈடுபடுதல், அத்துடன் அறிவுப் பகிர்வு மற்றும் கூட்டு முயற்சிகளை மேம்படுத்துதல் போன்றன உள்ளிட்ட பல நிலையான அபிவிருத்தி இலக்குகளுடன் பல்கலைக்கழகத்தின் பயணம் இணங்கிச் செல்வதைப் பிரதிபலிக்கின்றன. மேலும், நீடுறுதிமிக்க நகர்ப்புற திட்டமிடல், கட்டிடக்கலை, போக்குவரத்து, பொறுப்புமிக்க நுகர்வு, கழிவு முகாமைத்துவம், வட்ட ஒழுக்குப் பொருளாதாரக் கோட்பாடுகள் மற்றும் தணிப்பு நடவடிக்கை, பொருந்திக் கொள்ளல் மற்றும் விழிப்புணர்வூட்டல் ஊடான காலநிலை மாற்றம் போன்றவற்றை ஊக்குவிப்பதற்காக மிகவும் குறிப்பாக பங்களிப்புச் செய்கின்ற பல கல்வித் திணைக்களங்களும் மற்றும் ஆய்வு நிலையங்களும் காணப்படுகின்றன. இதனால், மொறட்டுவை பல்கலைக்கழகமானது, நிலையான அபிவிருத்தி இலக்குகளை 2030 ஆம் ஆண்டிற்குள் அடைந்துகொள்வதற்கான இலங்கையின் முயற்சிகளுக்கு முனைப்புடன் பங்களிக்கிறது. பல்கலைக்கழகமானது, இலங்கை தேசிய கணக்காய்வு அலுவலகத்திடமிருந்து, 2019 ஆம் ஆண்டு முதற் கொண்டு தொடர்ச்சியான ஐந்து வருடங்களாக "தெளிவான கணக்காய்வுக் கருத்துரை" ஐப் பெற்றுவந்துள்ளது. இது அனைத்து முக்கிய பிரிவுகளிலுமான நிதிக் கூற்றுக்களின் பாரபட்சமற்ற தன்மையைப் பிரதிநிதிபலிப்பதோடு, இலங்கை அரச துறைக்கான கணக்கீட்டுத் தரநியமங்களுடன் இணங்கியொழுகுவதற்கான அதன் அர்ப்பணிப்பினையும் எடுத்துக்காட்டுகின்ற அதேவேளை, பல்கலைக்கழகத்தின் ஆளுகையின் ஒரு முக்கிய கரம் என்பதையும் பிரதிபலிக்கின்றது.

இவ் அனைத்துச் செயற்பாடுகள் மற்றும் சாதனைகள் ஆகியவற்றுக்கு அடிப்படையாக அமைவது, சமூகத்திற்கு பெறுமதியை சேர்ப்பதுடன் சேவையை வழங்குவதே பல்கலைக்கழகத்தின் செயற்பணியாகும். கடந்த சில வருடங்களின் மொறட்டுவைப் பல்கலைக்கழகமானது குறிப்பிடத்தக்க வெற்றிகள் அடைந்ததை அரசாங்கம் கவனத்தில் கொண்டு "தெற்காசியாவில் உலகளாவிய அளவில் மிகவும் அங்கீகாரம் பெற்ற அறிவுசார் நிறுவனமாக" ஆகும் அதனது தொலைநோக்கத்திற்கு ஆதவளிக்கும் என நாம் மனபூர்வமாக நம்புகின்றோம்.

பேராசி. என்.டீ. குணவர்தன
துணை வேந்தர்

# ஆளுகை சட்ட வரைவுச் சட்டகம் மற்றும் பல்கலைக்கழக அதிகார அமைப்பு





வணிக பீடம்/
முடிவு அறிவியல்
தொழில்துறை மேலாண்மைத்
தொழில்நுட்ப மேலாண்மைத்
பணியாளர் மேம்பாட்டு
மருத்துவ பீடம்/
உடற்கூறியல்
உடலியல்
மருந்தியல்
நோயியல் & தடயவியல் மருத்துவத் துறை
மருத்துவம் மற்றும் மனநலத் துறை
மகப்பேறியல் மற்றும் மகளிர் மருத்துவத் துறை
மருத்துவக் கல்வித் துறை
சர்வதேச உறவுகள்
மார்ஷ்
பட்டதாரி படிப்புகளின் பீடாதிபதி/பீட
பட்டதாரி ஆய்வு வாரியம்
நூலகர்
தர உத்தரவாத

# ஆளுகை சட்ட வரைவுச் சட்டகம் மற்றும் பல்கலைக்கழக அதிகார அமைப்பு

## கூட்டுறவு ஆளுகை


கூட்டுறவு ஆளுகை தொடர்பான வழிகாட்டிகள் மற்றும் அரசிற்கு சொந்தமான தொழில் முயற்சிகளது தொழிற்பாட்டு கையேடு ஆகியவை அறிமுகப்படுத்தப்பட்டதன் பின்னர் மற்றும் 2023 செப்டெம்பர் 13 ஆம் திகதியிடப்பட்ட 2023 இலக்கமுடைய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நிதி சுற்றுநிருப கடிதத்தின் படி, கையேடுகளில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் அரசிற்கு சொந்தமான நிதி நிறுவனங்களது நல் ஆளுகை தொடர்பான கோட்பாடுகளுக்கேற்ப அதனது தொழிற்பாடுகளை ஒத்த வகையில் மேற்கொள்வதற்கான காத்திரமான முன்னேற்றகரமான முயற்சிகளை மொறட்டுவை பல்கலைக்கழகம் மேற்கொண்டது. அரச தொழில்முயற்சி திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்ட இந்த பூரணத்துவமிக்க வரைவுச் சட்டகத்தின் படி இத்தகைய நிறுவனங்களானது சிறப்பான பொறுப்புக்கூறல், வெளிப்படைத்தன்மை மற்றும் வினைத்திறன் ஆகியவற்றுடன் தொழிற்படுகின்றன என்பதை உறுதி செய்யும் முகமாக அரசாங்கத்திற்கு சொந்தமான நிறுவனங்கள் முழுவதும் அரசாங்கத்திற்கு சொந்தமான தொழில்முயற்சிகள் முழுவதும் ஆளுகை நடைமுறைகளை தராதரப்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

உள்ளக கட்டுப்பாடுகள் மற்றும் இடர் முகாமைத்துவம் தொடர்பான கையேட்டில் குறிப்பிடப்பட்ட பிரதான தேவைப்பாடுகளுக்கு ஒத்துப் போகும் வகையில், இயங்காற்றல்மிக்க உள்ளக கட்டுப்பாட்டு முறைகள் தாபிக்கப்படுவதை முறைகள் காத்திரமாக நடைமுறைப்படுத்துவதை உறுதிப்படுத்துவதற்கேற்ற நடவடிக்கைகளை பல்கலைக்கழகம் மேற்கொண்டது. மேலும் ஏற்படக்கூடிய இடர்களை முன்கூட்டியே இனங்கண்டு அவற்றை தணிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் முகமாக பூரணத்துவமிக்க இடர் முகாமைத்துவ உபாயமுறையொன்றினை விருத்தி செய்வதற்கான முன்னெடுப்புகளை பல்கலைக்கழகம் மேற்கொண்டது. நிகழக்கூடிய உயர்வான இடர்கள் மற்றும் அவற்றின் தாக்கங்கள் ஆகியவற்றை தொகுத்து அதற்கேற்ற வகையில் இடர் முகாமைத்துவ உபாயமுறைகள் மேற்கொள்ளப்படுவதை இலக்காகக் கொண்டு அவற்றை உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்குவதற்கேற்ற விதத்தில் ஒட்டுமொத்த இடர் முகாமைத்துவத்தில் பல்கலைக்கழகமானது உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அனுமதிக்கும் முகமாக உறுதியான கட்டுப்பாட்டு சூழல் ஒன்றினை உருவாக்குவதாகும்.

அரச தொழில்முயற்சி திணைக்களத்தினால் ஏற்கனவே விநியோகிக்கப்பட்ட PED சுற்றுநிருபங்களுக்கு இணங்கியதாக, மேலும் சிறந்த ஆளுகை தொடர்பான PED 12 போன்ற பொது திறைசேரி சுற்றுநிருபங்களுக்கு ஏற்ப, கூட்டுறவு ஆளுகை மற்றும் தொழிற்பாடு கையேடு தொடர்பாக அண்மையில் விநியோகிக்கப்பட்ட PED சுற்றுநிருபங்களுக்கு ஏற்ப கணக்காய்வு குழு சமவாயத்தின் குறிப்பிடப்பட்ட அறிவுறுத்தல்களை பல்கலைக்கழகம் பின்பற்றியது. கணக்காய்வு குழு, ஆக்க அமைவு, கூட்டங்கள், உள்ளக கணக்காய்வு, வெளிநிலை கணக்காய்வுடன் தொடர்புடைய தொடர்புமுறைகள், இணக்கப்பாடு ஆகியவற்றின் நோக்கெல்லைகளாக இத்தகைய பிரதேசங்கள் காணப்படுகின்றன.
2023 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க அண்மையில் விநியோகிக்கப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நிதி சுற்றுநிருப கடிதத்திற்கு இணங்கும் முகமாக, கணக்காய்வு குழுவின் விருப்புரைகளுடன் சேர்த்து கணக்காய்வு குழு சமவாயத்தினை மேலும் விருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை பல்கலைக்கழகம் மேற்கொண்டது.

பொது நிதியுடன் தொடர்புடைய விடயங்கள் குறிப்பாக பொது நிதியிலிருந்து பணம் செலுத்தப்படுகின்ற ஊழியர்கள் தொடர்பான சிறந்த ஆளுகை தொடர்பான விடயங்களை சிறப்பாக பின்வருமாறு மேற்கொள்கின்றனர் என்பதை உறுதிப்படுத்துவதற்காக இது தொடர்பான தீர்மானங்களை மேற் கொள்கின்ற பொழுது பல்கலைக்கழகமானது கடுமையாக ஒழுங்கு மரபினை பின்பற்றியது.

## சட்ட கட்டமைப்பும் அதிகார மட்டங்களும்



லங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்பில் திருத்தப்பட்டவாறான) குறிப்பிடப்பட்டுள்ளதான நாட்டின் மியயர் சட்டமும் அத்துடன் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட பின்வரும் பல்வேறு சட்டங்களும் பல்கலைக்கழக முறைமைக்கு ஏற்புடையதாக விளங்குகின்றன. அதாவது, 1998 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, கல்வி நிறுவனங்களில் பகிடிவதையையும் வேறுவகையான வன்செயல்களையும் தடைசெய்தல் சட்டம் (திருத்தப்பட்டவாறான), 2015 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டம் 1954 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, கடை மற்றும் அலுவலக ஊழியர்கள் சட்டம் 1971 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க நிதிச் சட்டம், 1993 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, ஊழியர் நம்பிக்கை நிதியம் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, பணிக்கொடை செலுத்தல் சட்டம் 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, அரச கைத்தொழில் கூட்டுத்தாபனங்கள் சட்டம் 1935 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, வர்த்தக சங்கம் கட்டளைச்சட்டம் (திருத்தப்பட்டவாறான), 1950 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, கைத்தொழில் பிணக்குகள் சட்டம் போன்றவைகளும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 170 ஆம் உறுப்புரையின் வரம்பிற்குள் ஒரு அரசாங்க நிறுவனமொன்றாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதால், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் கொள்கைகள் அமைச்சு, பொது நிர்வாக அமைச்சு அத்துடன் அரசாங்க தொழில்முயற்சிகள் திணைக்களம் போன்றவற்றால் பிரசுரிக்கப்படுகின்ற சுற்றுநிருபங்கள், அத்தகைய சுற்றுநிருபங்களின் ஏற்பாடுகள் சட்டத்திற்கு முரணாக இல்லாதவிடத்து, அல்லது அவை ஆணைக்குழுவினால் விசேடமாக ஏற்றுக்கொள்ளப்பட்டால் அன்றி, அவை பல்கலைக்கழகங்களுக்கும் ஏற்புடையதாகும்.

1979 சனவரி 01 ஆம் திகதியிலிருந்து செல்லுபடியாகும் வகையில் நடைமுறைக்கு வந்த, 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டங்களில் பல்கலைக்கழகம் தொடர்பான அடிப்படைச் சட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன (இதனகத்து இது "சட்டம்" என குறிப்பிடப்படும்). இது பின்னர் 1985 இன் 07 ஆம் இலக்க திருத்தப்பட்ட பல்கலைக்கழக சட்டங்கள், 1988 இன் 24 ஆம் இலக்க, 1988 இன் 26 ஆம் இலக்க, 1988 இன் 33 ஆம் இலக்க, 1989 இன் 03 ஆம் இலக்க, 1995 இன் 01 ஆம் இலக்க, 2009 இன் 57 ஆம் இலக்க மற்றும் 2016 இன் 17 ஆம் இலக்க பல்கலைக்கழக (திருத்தப்பட்ட) சட்டங்கள் ஆகியவற்றினால் திருத்தப்பட்டது. இந்த சட்டத்தின் 3 ஆம் பிரிவில் காணப்படுகின்ற ஏற்பாடுகளின் படி, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது (இதனகத்து "ஆணைக்குழு" என அழைக்கப்படும்) பல்கலைக்கழகங்களது நிருவாகம், உயர் கல்வி நிறுவனங்களின் நிருவாகம் ஆகியவற்றை ஒழுங்கமைப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றின் ஆளுகையுடன் தொடர்புடைய சுற்றுநிருபங்கள், தாபன சுற்றுநிருப கடிதங்கள், நிதி சுற்றறிக்கைகள், உள்ளக கணக்காய்வு சுற்றுநிருப கடிதங்கள், ஒப்புதிய சுற்றுநிருபங்கள் ஆகியவற்றை அவ்வப்பொழுது ஆணைக்குழு வழங்கி வருகின்றது. ஆலோசனைகளை தவிர ஏனைய பொருட்கள், வேலைகள், அறிவுரைகள், சேவைகள் ஆகியவற்றை கொள்வனவு செய்வதற்கான நடைமுறைகளுக்காக தேசிய கொள்வனவு நிறுவனத்தினால் (தற்சமயம் தேசிய கொள்வனவு ஆணைக்குழு என அழைக்கப்படுகின்றது) வெளியிடப்பட்ட கையேடுகள் மற்றும் பொது கொள்வனவு வழிகாட்டிகள் ஆகியவற்றில் குறிப்பிடப்பட்ட செயன்முறைகள் மற்றும் ஏற்பாடுகள் ஆகியவற்றை பல்கலைக்கழகம் பின்பற்றி வருகின்றது. தாமதங்களை குறைத்து மற்றும் நிதி ரீதியான மிகவும் சாதகத்தன்மைமிக்க மற்றும் தன்மை ரீதியில் மிகவும் சிறப்பான சேவைகளையும் விநியோகங்களையும் நாட்டிற்கு பெற்றுக் கொள்ளும் முகமாக அரசாங்க கொள்வனவு செயன்முறைகளின் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்தும் முகமாக இத்தகைய வழிகாட்டிகள் மற்றும் கையேடுகள் ஆகியன தயாரிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக வேலை சார்ந்தவற்றை கொள்வனவு செய்வதற்கான நிர்மாணத் தொழிற்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் தராதரங்களை பல்கலைக்கழகம் பின்பற்றி வருகின்றது.

பல்கலைக்கழக கல்வி விடயங்களுக்கு பொறுப்பான அமைச்சர் அவர்கள் ஆணைக்குழுவின் கலந்தாராய்வுகளுடன் சட்டத்தினால் இவருக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் கட்டளைகளை விதிப்பதற்குமான அதிகாரத்தை சட்டத்தின் IV ஆம் பகுதி அமைச்சருக்கு வழங்குகின்றது. சட்டத்தின் கீழ் தனது தத்துவங்கள், தொழிற்பாடுகள் ஆகியவற்றை செயலாற்றுகை செய்து நிறைவேற்றுவதற்கான அவசியமானவை என கருதுகின்றவற்றை மேற்கொள்வதற்கு இயலுமையாக்குகின்ற அத்தகைய விடயங்கள் தொடர்பான கட்டளை சட்டங்களை ஆணைக்குழு உருவாக்குவதற்கான அதிகாரத்தினை சட்டத்தின் 18 ஆம் பிரிவு வழங்குகின்றது. மேலும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றுக்கான அடிப்படை நிருவாக விதிகள் மற்றும் பல்கலைக்கழக நிருவாகங்களுக்கான ஒழுங்குவிதிகள் ஆகியவற்றை

உருவாக்குவதற்கான தத்துவங்களை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கான மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்கான தாபனக்கோவை வழங்குகின்றது.

சட்டத்தின் ஏற்பாடுகளின் படி மற்றும் அதன் கீழ் மேற்கொள்ளப்பட்ட கட்டளைச் சட்டங்கள் ஆகியவற்றின் படி சட்டத்தின் 135 ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்ட ஏதாவது விடயம் அல்லது எல்லா விடயங்கள் தொடர்பிலான துணைச் சட்டங்களை உயர்கல்வி நிறுவனங்கள் தொடர்பான ஆளுகை அமைப்பானது உருவாக்கலாம். மேலும் சட்டத்தின் ஏற்பாடுகளின் படி மற்றும் ஏதாவது பொருத்தமான கருவிகள் படி ஆணைக்குழு, பல்கலைக்கழக சேவைகள் மேன்முறையீட்டு சபை குறித்துரைக்கப்பட்ட அதிகார அமைப்பு அல்லது ஏதாவது அதிகார அமைப்பு அல்லது உயர்கல்வி நிறுவனம் அல்லது நிறுவனம் தொடர்பான ஏதாவது அமைப்பு இந்த சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பான விதிமுறைகளை உருவாக்கலாம். இத்தகைய விதிமுறைகள், ஒழுங்குவிதிகள், சட்டங்கள் ஆகியவற்றின் கீழ் பல்கலைக்கழகமானது தனது நிருவாகத்தினை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது.

## பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புக்கள்

### பல்கலைக்கழக கவுன்சில்

1978-ஆம் ஆண்டின் 16-ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் (திருத்தங்களுக்கு ஏற்ப) ஏற்பாடுகளுக்கு இணங்க, பல்கலைக்கழக கவுன்சில், மூதவை மற்றும் பீட சபைகள் ஆகியன பல்கலைக்கழகத்தின் பிரதான அதிகார அமைப்புக்களாகும். சட்டத்தின் 44(1) பிரிவின் படி, பல்கலைக்கழகத்தின் நிறைவேற்று அமைப்பாகவும் ஆட்சி செய்யும் அமைப்பாகவும் காணப்படுகிறது. பல்கலைக்கழக கவுன்சில், பல்கலைக்கழகத்தின் சகல கல்வி, நிருவாக மற்றும் நிதி சார்ந்த அங்கீகாரத்தை வழங்கும் இறுதி அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மொறட்டுவை பல்கலைக்கழகத்தின், பல்கலைக்கழக கவுன்சிலின் உள்ளடக்கமானது பின்வருமாறு அமைந்திருந்தது.

i. துணை வேந்தர்
ii. பிரதி துணை வேந்தர்
iii. பட்டமேற்படிப்புக் கற்கைகள் பீடத்தின் பீடாதிபதி
iv. ஒவ்வொரு பீடத்தின் பீடாதிபதி (கட்டடக்கலை, வியாபாரம், பொறியியல், தகவல் தொழில்நுட்பம் மற்றும் மருத்துவம்)
v. மூதவையின் மூலம், அதன் அங்கத்தவர்களில் இருந்து தெரிவுசெய்யப்படும் இரு உறுப்பினர்கள்
vi. மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஐந்து வகையின் கீழான மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு சமமான உறுப்பினர்கள் எண்ணிக்கையை, அதாவது 11 உறுப்பினர்களுடன் ஒன்றைக் கூட்டுதல். அத்தகைய சகல உறுப்பினர்களும் கல்வி, தொழில்வாண்மை, வணிக, கைத்தொழில், விஞ்ஞானபூர்வ அல்லது நிருவாக துறைகளில் கீர்த்திமிகுந்த சேவையை வழங்கியுள்ள நபர்களிலிருந்து ஆணைக்குழுவின் மூலம் நியமிக்கப்படுதல் வேண்டும்.

பதிவாளர் பல்கலைக்கழக கவுன்சிலின் பதவிவழி செயலாளராவார். அழைப்பின் பேரில், அவதானிப்பாளராக நிதி பொறுப்பாளர் பல்கலைக்கழக கவுன்சிலின் கூட்டங்களில் பங்குபற்றுவார்.

### மூதவை (செனட்)

சட்டத்தின் 46 (1)-வது பிரிவின் மூலம் பல்கலைக்கழத்தின் கல்விசார் அதிகார அமைப்பாக மூதவை ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழகத்திற்கான அறிவுறுத்தல்கள், கல்வி, ஆராய்ச்சிகள் மற்றும் பரீட்சைகள் சம்பந்தமான கட்டுப்பாடுகள் மற்றும் பொது வழிகாட்டுதல்கள் என்பன பல்கலைக்கழக மூதவைக்கு உரியனவாகும்.

மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் மூதவையின் உள்ளடக்கமானது பின்வருமாறு அமைந்திருந்தது.

i. துணை வேந்தர்
ii. பிரதி துணை வேந்தர்
iii. பட்டமேற்படிப்புக் கற்கைகள் பீடத்தின் பீடாதிபதி
iv. ஒவ்வொரு பீடத்தின் பீடாதிபதி
v. ஒவ்வொரு கற்கைத் திணைக்களங்களின் தலைவர்கள்
vi. பல்கலைக்கழகத்தின் சகல நிரந்த பேராசிரியர்கள்
vii. நூலகர் - மற்றும்
viii. மேலே குறிப்பிடப்பட்டுள்ள விரிவுரையாளர்களை

தவிர்த்து, ஒவ்வொரு பீடங்களின் நிரந்தர விரிவுரையாளர்கள் எண்ணிக்கை மூலமாக தொிவு செய்யப்படும் விரிவுரையாளர்கள் இருவர்.

பதிவாளர் மூதவையின் பதவிவழி செயலாளராவார். பணிப்பாளர்/ கட்டடக்கலை மற்றும் வியாபார பட்டப்படிப்பு மற்றும் பட்டமேற்படிப்பு கற்கைகள் பீடங்கள், பணிப்பாளர்/ ஒவ்வொரு பீடங்களினதும் தர உத்தரவாதம், பணிப்பாளர்/ திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம் (CODL) மற்றும் பிரதான மாணவர் ஆலோசகர் ஆகியோர் அழைப்பின் பேரில் அவதானிப்பாளர்களாக மூதவையின் கூட்டங்களில் பங்குபற்றுவர்.

ட்டத்தின் பிரிவு 48 இன் பிரகாரம், ஒவ்வொரு பீடமும், மூதவையினால் ஆற்றுப்படுத்தப்படுகின்ற எந்தவொரு விடயத்தையும் பரிசீலனை செய்து அது தொடர்பில் அறிக்கை செய்வதற்கும், மூதவையின் கட்டுப்பாட்டிற்குட்பட்டு பீடத்தில் உள்ள திணைக்களங்களின் கற்பித்தல், பரீட்சை மற்றும் ஆய்வுகளை மேற்கொள்ளல் தொடர்பான நடவடிக்கைகளை சீரமைப்பதற்கும், பீடத்திலுள்ள பாநெறிகள் மற்றும் பரீட்சைகள் தொடர்பான அனைத்து விடயங்கள் குறித்துமான பரிந்துரைகளையும் அது பற்றிய அறிக்கைகளையும் மூதவைக்குச் சமர்ப்பிப்பதற்கும், எந்தவொரு விசேட பாடத்தினையும் அல்லது பாடங்களையும் பரிசீலனை செய்து அது தொடர்பில் அறிக்கையிடும் நோக்கில், பீடத்தின் உறுப்பினர்கள் அல்லாத நபர்களை உள்ளடக்கிய குழுக்களை நியமிப்பதற்கும், அத்துடன் பரீட்சகர்களாக நியமிக்கப்படுவதற்குப் பொருத்தமான நபர்களை மூதவைக்குப் பரிந்துரை செய்வதற்கும், பீடத்தின் ஒவ்வொரு திணைக்களத்திலும் இருந்தான பிரதிநிதித்துவத்தைக் கொண்ட சபை ஒன்றினைக் கொண்டிருத்தல் வேண்டும். மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு பீடங்கள் சார்பான பீட சபையின் உள்ளடக்கமானது பின்வருமாறு அமைந்திருந்தது.

i. பீடத்தின் தலைவர் (பீடாதிபதி)
ii. பீடத்திலுள்ள கற்கைத் திணைக்களங்களின் எல்லா நிரந்தர பேராசிரியர்கள், இணை பேராசிரியர்கள், சிரேஷ்ட விரிவுரையாளர்கள் மற்றும் விரிவுரையாளர்கள்
iii. பீடத்தின் நிரந்தர விரிவுரையாளர்களில் இருந்து அவர்களது எண்ணிக்கையினால் தெரிவு செய்யப்பட்ட இரண்டு உறுப்பினர்கள்.
iv. பந்திகள் (ii) மற்றும் (iii) இல் குறிப்பிடப்படுபவர்களை தவிர்த்து, பீடத்தில் ஆலோசனைகளை வழங்குகின்ற நிரந்தர பணியாளர்களின் இருந்து அவர்களது எண்ணிக்கையினால் தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்கள் இருவர்.
v. பீடம் தொடர்பான கற்கை துறைகளில் புகழ்மிக்க நபர்களிலிருந்து பீட சபையின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட பல்கலைக்கழக பணியாளர் அங்கத்தவர்ளில் இல்லாத மூன்று நபர்கள்.

பொழிப்பு

கல்வி, நிருவாகம் மற்றும் நிதி தொழிற்பாடுகள் சட்டத்திற்கு இணங்குவதை உறுதிப்படுத்துவதற்காக பல்கலைக்கழகம், 1978-ஆம் ஆண்டின் 16-ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தில் கூறப்பட்டவாறு, மேலே குறிப்பிடப்பட்டுள்ள சட்டங்கள்/ விதிகள்/ ஒழுங்குவிதிகள் மற்றும் பல்கலைக்கழகத்தின் குறிப்பிட்ட அதிகாரிகளின் அதிகாரங்கள் ஊடாக பிணைக்கப்பட்டுள்ளது.

# பல்கலைக்கழக கவுன்சில்

[illegible] ஆம் ஆண்டின் [illegible] ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் [illegible] வது பிரிவின் திருத்தங்களுக்கு ஏற்ப பல்கலைக்கழக கவுன்சில் பல்கலைக்கழகத்தின் நிறைவேற்று அமைப்பு மற்றும் நிர்வாகிக்கும் அதிகாரசபையாக இருக்கிறது. அதன் 44-வது பிரிவின் 1-வது உப பிரிவுக்கு ஏற்ப 2023-ஆம் ஆண்டு காலப்பகுதியில் மொறட்டுவைப் பல்கலைக்கழக கவுன்சில் கீழே குறிப்பிடப்படும் உறுப்பினர்களைக் கொண்டமைந்திருந்தது

## பதவிவழி உறுப்பினர்கள்



**பேராசி. என்.டீ. குணவர்தன**
துணை வேந்தர் (துவிசாளர்)



**கலாநிதி டீ.பீ. சந்திரசேக்கர**
பிரதி துணை வேந்தர்

### பீடங்களின் பீடாதிபதிகள்



**பேராசி. (Ms.) வை.ஜீ. சந்தநாயக்க**
பீடாதிபதி/ கட்டடக்கலைப் பீடம்



**பேராசி. ஜீ.டீ. சமரசிங்ஹ**
பீடாதிபதி/ வியாபார பீடம்
(2023 அக்டோபர் முதல் அமுலுக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டார்)



**பேராசி. கே.ரீ.எம்.யூ. ஹேமபால**
பீடாதிபதி/ பொறியியல் பீடம்



பேராசி. அஜித் த அல்விஸ்
பீடாதிபதி/ பட்டமேற்படிப்பு கற்கைகள் பீடம்



**திரு. பி. எச். சுதந்த** பீடாதிபதி/
தகவல் தொழில்நுட்ப பீடம்



பேராசி. எப்.ஆர். பெர்னாந்து
**பீடாதிபதி/ மருத்துவ பீடம்**

## பீடங்களின் பீடாதிபதிகள்



பேராசி. எஸ்.டபிள்யூ.எஸ்.பி. தசநாயக்க
முன்னாள் பீடாதிபதி/ வியாபார பீடம் (2023 செப்ரெம்பர் வரை பணியாற்றினார்)

## மூதவை மூலம் தெரிவு



பேராசி. ஏ.எஸ். கருணானந்த



பேராசி. (திருமதி) பி.எம்.டபிள்யூ.

## பல்கலைக்கழக மானியங்கள்



பேராசி. ஜயந்த பலவர்தன
புற்றுநோயியல் சார் பேராசிரியர்/ சிரேஷ்ட புற்றுநோய் மருத்துவ ஆலோசகர், மருத்துவ பீடம், (கொ. பா.ப. - KDU)
(2023 நவம்பர் வரை பணியாற்றினார்)



திரு. டிஷான் சுபசிங்ஹ
தலைவர், சணச பொது காப்புறுதி கம்பனி



கலாநிதி ஷமர ஷந்திராபய யாப்பா அபேவர்தன
பொது கொள்கை மற்றும் அபிவிருத்தி நிபுணர்

# பல்கலைக்கழக மானியக் குழுவால் நியமிக்கப்பட்ட



கலாநிதி ஆர். ஷின்தக லக்ஷ்மன் த சில்வா
சிரேஷ்ட ஆராய்ச்சி விஞ்ஞானி, கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகம் (ITI)



கட்டடக்கலைஞர் ஆஷ்லி த வொஸ்
பட்டயக் கட்டடக்கலைஞர்



Dr. ஹசித் விக்கிரமசிங்ஹ
மருத்துவ ஆலோசகர்
தேசிய வைத்தியசாலை
(2023 திசம்பர் முதல் அமுலுக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டார்)



திருமதி அனோமா இத்தமல்கொட
கறகைகள் சார் பணிப்பாளர், இலங்கை பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம், மனித வளங்கள் ஆலோசகர், சிரேஷ்ட வங்கியாளர்

குறிப்பு : 2023 ஆண்டினுள் பணியாற்றிய (பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மூலம் நியமிக்கப்பட்ட) பல்கலைக்கழக கவுன்சிலின் பின்வரும் உறுப்பினர்களது புகைப்படங்கள் இங்கு உள்ளடக்கபடவில்லை.

Dr. எம். நரேந்திர பின்டொ
சிரேஷ்ட மருத்துவ ஆலோசகர், எலும்பியல் மற்றும் காயம்சார் சத்திரசிகிச்சை மருத்துவர்
நெவில் பெர்னாந்து போதனா வைத்தியசாலை

பேராசி. ரோஹான் சமரஜீவ
தலைவர், LIRNEasia

Ms. சரோஜினி குசலா வீரவர்தன
ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி

கலாநிதி என்.சி. விதானகே
முன்னாள் உதவி ஆணையாளர்
தேர்தல்கள் திணைக்களம்

Ms. ஹரிப்பிரியா ஜயசுந்தர, P.C.
மேலதிக சொலிசிட்டர் ஜெனரல், சட்டமா அதிபர் திணைக்களம்
Additional Solicitor General,
Attorney General's Department

## பதவிவழி செயலாளர்



**திரு. டி.எல்.டி. ஜெயந்த**

திரு. டீஎல்.டீ ஜயந்த

பதிவாளர்

# கூட்டங்கள்

1978 இன் 16 ஆம் இலக்க திருத்தப்பட்ட பல்கலைக்கழக சட்டங்களின் பிரகாரம் மொறட்டுவை பல்கலைக்கழகமானது பல்கலைக்கழக கவுன்சில் மற்றும் செனட் ஆகியவற்றுடன் பீடங்களுடன் தொடர்புடைய சபைகளையும் உருவாக்கியது. கல்விசார் அலுவல்களுடன் தொடர்புடைய சகல விடயங்களும் பீடங்களுடன் தொடர்புடைய சபைகள் அதைத் தொடர்ந்து செனட் ஆகியவற்றினால் மேற்கொள்ளப்படுகின்றது. செனட் இனால் விதந்துரைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பான மிகுதி ஒப்புதலை பல்கலைக்கழகத்தின் கல்விசார் மற்றும் நிருவாகம் சார் அதிகார அமைப்பு என்ற உயர் பீடம் என்ற முறையில் சபை (இறுதி ஒப்புதலை) வழங்குகின்றது. பல்கலைக்கழகத்தின் சகல விதமான நிருவாக மற்றும் நிதி சார்ந்த விடயங்களையும் சபை மேற்கொண்டு வருகின்றது. 2023 ஆம் ஆண்டில் கீழ் குறிப்பிடப்பட்டவாறு மேற்குறிப்பிடப்பட்ட அதிகார அமைப்புகள் தொடர்பான கூட்டங்களை பல்கலைக்கமகக்கினால் நடாக்க முடிந்தது.

| கூட்டங்க | 2023 இல் நடாத்தப்பட்ட எண். |
|---|---|
| பல்கலைக்க | 13 |
| சென | 12 |
| பீட சபை | |
| கட்டடக்கலை பீடம் | 12 |
| வியாபார பீடம் | 12 |
| பொறியியல் பீடம் | 12 |
| தகவல் தொழில்நுட்ப பீடம் | 12 |
| மருத்துவ பீடம் | 12 |
| மருத்துவ பீடம் | 12 |
| கற்கைகள் பீடம் | |

சகலருக்கும் வாழ்நாள் முழுவதும் கற்கின்ற சந்தர்ப்பத்தை ஏற்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட நிலையமொன்றான திறந்த மற்றும் தொலைக்கல்வி கற்றல் நிலையம் (CODL), அதன் கூட்டங்களை பின்வருமாறு நடாத்தியுள்ளது.

| | |
|---|---|
| முகாமைத்துவ சபை - திறந்த மற்றும் தொலைக்கல்வி | 4 |
| கற்கை சபை - | 6 |

2023 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகத்தின் பிற சட்டப்பூர்வ குழுக்களால் நடத்தப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை பின்வருமாறு:


| சட்டரீதியான | கூட்டங்களின் எண்ணிக்கைheld 2023 |
|---|---|
| நிதிக் | 12 |
| தணிக்கை | 5 |
| மூத்த நிர்வாகக் | 6 |

தீர்மானங்களை மேற்கொண்டு வேலைகளை இலகுபடுத்தி மேற்கொள்வதற்காக பல்கலைக்கழகமானது பல நிலையியற் குழுக்கள், உப குழுக்கள், தற்காலிக குழுக்கள் ஆகியவற்றை பல்கலைக்கழகத்தின் மாறுபட்ட மட்டங்களில் உருவாக்கியது. அத்தகைய முக்கியமான குழுக்கள் மற்றும் 2023 ஆம் ஆண்டில் அவை நடாத்திய கூட்டங்கள்

| குழு | [illegible] |
|---|---|
| விடுப்பு & விருதுகள் குழு | 12 |
| செனட் பாடத்திட்டம் & மதிப்பீட்டுக் குழு | 12 |
| திட்டமிடல் | 12 |
| கட்டிட முன்னேற்ற | 7 |
| ஆராய்ச்சி மேலாண்மை | 12 |

# பங்கீட்டுப்பாட்டாளர்

பல்வகையான நிறுவனம் என்ற முறையில் மொறட்டுவை பல்கலைக்கழகமானது பல்வேறு வகையான பங்கீட்டுபாட்டாளர்களுடன் காத்திரமான முறையில் ஈடுபட்டு வருகின்றது. இவை ஒவ்வொன்றும் தனித்துவமான அபிலாசைகளை கொண்டுள்ளன. இவ்வாறு பல்வேறு வகையான எதிர்பார்ப்புகள் தொடர்பில் சிறப்பான புரிதல்களை கொண்டுள்ளமையினால் அவர்களது தேவைகளை நிறைவேற்றி அவர்களது



# பங்கீட்டுபாட்டாளர் பகுப்பாய்வு


| பங்கீட்டுபாட்டாளர் குழு | எதிர்பார்ப்புகள் | இணக்கப்பாட்டுக்கான வழிகள் |
|---|---|---|
| மாணவ, மாணவிகள் |   தரமான கல்வி<br> மென் திறன் விருத்தி<br> வேலை வாய்ப்புக்கள் கிடைக்கக்கூடிய தன்மை<br> நியாயமான அங்கீகாரம்<br> நவீன தொழில்நுட்பவியலால் வலுவூட்டப்படும் கற்றல் வசதிகள்<br> நட்புசார் ஆதரவு சேவைகள் |   சரியான நேரத்தில் பாடத்திட்ட மறுசீரமைப்பு<br> செயன்முறை பயிற்சி வாய்ப்புக்கள்  மென் திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்க ள்  தொழில் வழிகாட்டி<br> மாணவர் பின்னூட்டல் பொறிமுறை  ஒன்லைன் கற்றல் வசதிகள்<br> தர உத்தரவாத பிரிவு |
| ஊழியர்கள் |  வேலை திருப்தி<br> சம்பளங்களும் ஏனைய நிதிசார் மற்றும் நிதிசாராத சலுகைகள்<br> சமமான வாய்ப்புகள்<br> தொழில் வளர்ச்சி<br> சிறந்த ஆராய்ச்சி கலாச்சாரம்  நேர்மறையான வேலை சூழல் |   திணைக்கள மற்றும் பீட கூட்டங்கள்<br> பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்<br> முகாமை செய்தல் மற்றும் மீளாய்வு கூட்டங்கள்<br> பணியாளர் நிகழ்வுகள்<br> மேம்படுத்தப்பட்ட வெளிப்படைத்தன்ம ை  திறந்த தொடர்பாடல் |
| முன்னாள் மாணவர்கள் |  பல்கலைக்கழக நிகழ்வுகளில் பங்குபற்றல்<br> தொடர்புபடல் வலையமைப்பு வாய்ப்புகள்<br> எதிர்கால திட்டங்களுக்கு ஒத்துழைத்தல்<br> அங்கீகாரம் |  முன்னாள் மாணவர் சங்கங்கள்  நிகழ்வுகள்<br> தொடர்பாடல் தளங்கள்<br> வழிகாட்டுதல் நிகழ்ச்சித்திட்டங்கள் |
| ஒத்துழைக்கும் பிரிவினர்கள் |  ஒத்துழைப்புத் கருத்திட்டங்கள்<br> பரஸ்பர நலன் அளிக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மற்றும் உடன்டிக்கைகள்<br> வேலை வாய்ப்புகளுக்கான அபேட்சகர்கள்<br> கூட்டாண்மை நிகழ்வுகள்<br> கூட்டங்கள், மாநாடுகள் மற்றும் வெபினார்கள் |   சரியான நேரத்தில் மற்றும் வெளிப்படையான தொடர்பாடல்<br> ஆராய்ச்சி மற்றும் கல்விசார் நிபுணத்துவம் ஊடான ஆதரவு<br> நிகழ்வுகளையும் மற்றும் மாநாடுகளையும் நடத்துதல்<br> அனுசரணையளிப்பு<br> பெருநிறுவன நிகழ்வுகளில் பல்கலைக்கழகத்தின் பங்கேற்பை பிரதிநிதித்துவப்படுத்துதல். |

| | | |
|---|---|---|
| நிதியளிப்பு மற்றும் ஒழுங்குபடுத்தல் அமைப்புக்கள் | சட்டங்களையும் ஒழுங்குவிதிகளையும் கடைப்பிடித்தல்<br> நிதி மற்றும் வளங்களை செயல்திறனாக பயன்படுத்துதல்<br> வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல்<br> பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்தல் | கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்கள்<br> அறிக்கையிடல் தேவைக்காக கூடுதல்<br> திறந்த தொடர்பாடல்<br> நிகழ்வுகளில் பங்கேற்றல் |
| விற்பனையாளர்கள், வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் | பெறுவனவு நடைமுறைகளுக்கு ஏற்ப செயல்படல்<br> இணங்கப்பட்ட ஒப்பந்த ஆவணங்களுக்கு ஏற்ப தங்களது சேவைகளை வழங்கும் போது நிபந்தனைகளைப் பின்பற்றுதல்.<br> பொருட்கள், சேவைகள் மற்றும் வேலை ஒப்பந்தங்களை வழங்கும் போது தரமான, சரியான நேரத்தில் மற்றும் சிக்கனமான தீர்வுகளை வழங்குதல். | சரியான நேரத்தில் விலைகோரல்<br> பல்கலைக்கழகங்களுடன் உடன்படிக்கைகளில் கையெழுத்திடுதல் மற்றும் ஒப்பந்தங்களில் ஈடுபடுதல்.<br> கொள்வனவு/ சேவை கட்டளைகளை ஏற்றுக்கொள்ளல்<br> முன்னேற்றம் சார் கூட்டங்களில் கலந்துகொள்ளல்<br> கொடுப்பனவு கோரிக்கை/ பெற்றுகொள்ளல்<br> ஒப்படைக்கப்பட்ட பணிகளை சரியான நேரத்தில் செய்துமுடித்தல்<br> விற்பனைக்குப் பிந்திய சேவை/ குறைபாடுகளை சீராக்குதல் |
| சமூகம் | சமமான கல்வி வாய்ப்புகள்<br> பொருளாதார, சமூக மற்றும் சூழல் மேம்பாட்டுக்கான பங்களிப்பு<br> ஒன்லைன் கல்வி கருவிகள் மற்றும் வளங்கள் சார் அணுகுதல்<br> சமூக பொறுப்புக்கூறல் | பொது சொற்பொழிவுகள் மற்றும் கருத்தரங்குகள்<br> உள்ளூர் கருத்திட்டங்களுக்கா ன ஒத்துழைப்பு<br> திறந்த பல்கலைக்கழக (விழிப்புணர்வு) நிகழ்வுகள்<br> ஊடக அறிவித்தகள்  சமூக ஊடகங்கள்<br> சமூக பொறுப்புத் திட்டங்கள் (CSR) |

# மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் பட்டதாரிகள் பற்றிய விளக்கம்

பல்கலைக்கழகத்தின் குறிப்பிடப்பட்ட கல்விசார் நிகழ்ச்சித்திட்டம் ஒன்றை பூரணப்படுத்தியதன் பின்னர்
மாணவர் ஒருவர் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற திறன்கள், அறிவு, மனப்பாங்குகள், பண்புகள் ஆகியன பற்றிய விடயங்களை மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் பட்டதாரிகள் பற்றிய விளக்கம் காட்டுகின்றது. மாணவர்கள் தெரிவு செய்த கற்கை அல்லது தொழில்வாண்மை தொடர்பில் பட்டதாரிகள் பெற்றிருக்க வேண்டிய தேர்ச்சிகள் மற்றும் தன்மைகள் பற்றிய விபரங்களை இது குறிப்பிடுகின்றது. மாணவர்கள் தமது எதிர்கால தொழிற்துறைகளில் அல்லது மேலதிக கல்வியில் வெற்றி பெறுவதற்கு தேவையான ஆற்றல்களை பெற்றிருக்கின்றனர் என்பதை உறுதி செய்து கொள்வதற்கான விடயங்களுக்கான பாடத்திட்ட விருத்திக்கான வழிகாட்டியாக இந்த பட்டதாரிகள் பற்றிய விளக்கம் காணப்படுகின்றது.

பல்கலைக்கழத்தின் பட்டதாரிகள் கொண்டிருக்கின்ற பிரதான பண்புகளை காண்பிக்கும் தனது பட்டதாரிகளின் தோற்றப்பாட்டினை பின்வரும் வரைபடம் காட்டுகின்றது.



# முகாமைத்துவ கலந்துரையாடல்: பல்கலைக்கழக செயற்பாடுகள் பற்றிய கண்ணோட்டம்

மொறட்டுவை பல்கலைக்கழகமானது கட்டடக்கலை, பொறியியல், தகவல் தொழில்நுட்பம், பட்டமேற்படிப்புக் கற்கைகள், வியாபாரம் மற்றும் மருத்துவம் ஆகிய ஆறு பீடங்களைக் கொண்டிருக்கிறது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் (UGC) மூலம் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான பதினாங்கு (14) இளமாணிப் பட்டப் பாடநெறிகளை வழங்கும் முப்பத்து ஐந்து (35) கல்விசார் திணைக்களங்கள் 2023 இன் இறுதியில் பல்கலைக்கழகத்தில் காணப்பட்டன. செலவை மீட்கும் அடிப்படையில் தற்போது ஐம்பத்தைந்துக்கு (55) மேற்பட்ட பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துகின்றது. அதில், 2023 இல் 45 நிகழ்ச்சித்திட்டங்களை (நிகழ் ஆண்டு 2023) நடாத்தி வருகின்றதுடன், புதிய பட்டமேற்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் சில உட்பட 23 நிகழ்ச்சித்திட்டங்கள் (உள்வாங்கல் 2023) பற்றிய புதிய உள்வாங்கல் செயற்பாட்டை மேற்கொண்டுள்ளது.



# பல்கலைக்கழகத்தின் வரலாறு

**1960**

ஐம்பது ஏக்கர் பரப்பளவில் உள்ள கட்டுபட்ட இடத்தில் தொழில்நுட்பக் கல்வி, நடைமுறை தொழில்நுட்ப நிறுவனம் (IPT) நிறுவப்பட்டதன் மூலம் தொடங்கியது, இது மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் தற்போதைய வளாகத்தில் தொழில்நுட்பக் கல்விப் பாடநெறியை வழங்கியது.

**1966**

சிலோன் தொழில்நுட்பக் கல்லூரி (CCT) அதே இடத்தில் நிறுவப்பட்டது, இது ஒரு பட்டப்படிப்புக்கு சமமான ஐந்து ஆண்டு தொழில்நுட்ப டிப்ளோமாவை வழங்குகிறது.

**1972 FEB**


சிலோன் தொழில்நுட்பக் கல்லூரி (CCT), இலங்கைப் பல்கலைக்கழகத்தின் கட்டுபெத்த வளாகமாக பல்கலைக்கழக அந்தஸ்தைப் பெற்றது, சிறப்பம்சமாக பொறியியல் மற்றும் கட்டடக்கலை பீடமொன்றை மாத்திரமே கொண்டிருந்தது.

**1972 MAY**

பல்கலைக்கழகத்தின் நிறுவனப் பெயர் இலங்கைப் பல்கலைக்கழகம் என மாற்றப்பட்டது, இது தொழில்நுட்ப டிப்ளோமா திட்டத்தை பி.எஸ்சி. பொறியியல் பட்டப்படிப்பு திட்டமாக மேம்படுத்த வழிவகுத்தது.

**1978**

இலங்கைப் பல்கலைக்கழகத்தின் கட்டுபெத்த வளாகம் சுயாதீன பல்கலைக்கழக அந்தஸ்தைப் பெற்றது, இப்போது அது "இலங்கை மொரட்டுவ பல்கலைக்கழகம்" என்று அழைக்கப்படுகிறது, இதில் பொறியியல் பீடம், கட்டிடக்கலை பீடம் மற்றும் இயற்பியல் மற்றும் பயன்பாட்டு அறிவியல் பீடம் ஆகியவை அடங்கும்.


இயற்பியல் மற்றும் பயன்பாட்டு அறிவியல் பீடம் பொறியியல் பீடத்துடன் இணைக்கப்பட்டது.
1981
2001
தகவல் தொழில்நுட்ப பீடம் நிறுவப்பட்டது.
பட்டதாரி படிப்பு பீடம் நிறுவப்பட்டது.
2015
2017
வணிகவியல் பீடம் நிறுவப்பட்டது.
மருத்துவ பீடம் நிறுவப்பட்டது.
2020

# முகாமைத்துவ கலந்துரையாடல் பல்கலைக்கழக செயற்பாடுகள் பற்றிய கண்ணோட்டம்

மொறட்டுவை பல்கலைக்கழகமானது கட்டடக்கலை, பொறியியல், தகவல் தொழில்நுட்பம், பட்டமேற்படிப்புக் கற்கைகள், வியாபாரம் மற்றும் மருத்துவம் ஆகிய ஆறு பீடங்களைக் கொண்டிருக்கிறது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் (UGC) மூலம் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான பதினாங்கு (14) இளமாணிப் பட்டப் பாடநெறிகளை வழங்கும் முப்பத்து ஐந்து
(35) கல்விசார் திணைக்களங்கள் 2023 இன் இறுதியில் பல்கலைக்கழகத்தில் காணப்பட்டன. செலவை மீட்கும் அடிப்படையில் தற்போது ஐம்பத்தைந்துக்கு (55) மேற்பட்ட பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துகின்றது. அதில், 2023 இல் 45 நிகழ்ச்சித்திட்டங்களை (நிகழ் ஆண்டு 2023) நடாத்தி வருகின்றதுடன், புதிய பட்டமேற்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் சில உட்பட 23 நிகழ்ச்சித்திட்டங்கள் (உள்வாங்கல் 2023) பற்றிய புதிய உள்வாங்கல் செயற்பாட்டை மேற்கொண்டுள்ளது.

அட்டவணை 1- மொறட்டுவை பல்கலைக்கழக பீடங்கள் மற்றும் திணைக்களங்கள்

**கட்டடக்கலை பீடம்**

- கட்டடக்கலை திணைக்களம்
- பட்டணமும் நாடும் திட்டமிடல் திணைக்களம்
- கட்டட பொருளியல் திணைக்களம்
- ஒருங்கிணைந்த வடிவமைப்பு திணைக்களம்
- வசதியேற்பாட்டு முகாமைத்துவ திணைக்களம்

**வியாபார பீடம்**

- தீர்மானித்தல் விஞ்ஞான திணைக்களம்
- கைத்தொழில் முகாமைத்துவ திணைக்களம்
- தொழில்நுட்ப முகாமைத்துவத் திணைக்களம்

**பொறியியல் பீடம்**

- இரசாயன மற்றும் செயல்முறை பொறியியல் திணைக்களம்
- சிவில் பொறியியல் திணைக்களம்
- கணினி விஞ்ஞான, பொறியியல் திணைக்களம்
- நில மூலவளங்கள் பொறியியல் திணைக்களம்
- மின் பொறியியல் திணைக்களம்
- இலத்திரணியல், தொலைத்தொடர்பு பொறியியல் திணைக்களம்
- மொழிகள் திணைக்களம்
- பொருட்கள் விஞ்ஞானம் மற்றும் பொறியியல் திணைக்களம்
- இயந்திரப் பொறியியல் திணைக்களம்
- கணிதவியல் திணைக்களம்
- புடவை மற்றும் ஆடை பொறியியல் திணைக்களம்
- போக்குவரத்து, தேவை. ஒழுங். விநியோ. முகாமை. திணைக்களம்

## தகவல் தொழில்நுட்ப பீடம்

தகவல் தொழில்நுட்ப திணைக்களம்

கணிப்பீட்டு கணிதவியல் திணைக்களம்

பல்துறைசார் கற்கைகள் திணைக்களம்

## பட்டமேற்படிப்புக் கற்கைகள் பீடம்

## மருத்துவ பீடம்

உடற்கூற்றியல் திணைக்களம்

உயிர் இரசாயனவியல் மற்றும் சிகிச்சையக இரசாயனவியல் திணைக்களம்

உயிரின ஆய்வியல் திணைக்களம்

மருந்தாக்கவியல் திணைக்களம்

நுண்ணுயிரியல் மற்றும் ஒட்டுண்ணியியல் திணைக்களம்

சமூக மருத்துவம் மற்றும் குடும்ப மருத்துவ திணைக்களம்

நோயியல் மற்றும் தடயவியல் மருத்துவ திணைக்களம்

மருத்துவம் மற்றும் மன நல திணைக்களம்

அறுவைசிகிச்சையியல் மற்றும் மயக்கமருந்தியல் திணைக்களம்

மகப்பேற்று மற்றும் பெண்ணோயியல் திணைக்களம்

சிறுவர் மருத்துவம் மற்றும் குழந்தை பிறப்பு நோயியல் திணைக்களம்

மருத்துவக் கல்வி திணைக்களம்

மருத்துவ தொழில்நுட்ப திணைக்களம்

# முகாமைத்துவ கலந்துரையாடல் பல்கலைக்கழக செயற்பாடுகள் பற்றிய கண்ணோட்டம்


மொறட்டுவை பல்கலைக்கழகமானது இன்று இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களிடையே அதிகளவான கேள்வியை கொண்டுள்ள தொழில்நுட்ப பல்கலைக்கழகமெனும் கீர்த்தியைப் பெற்றுக்கொண்டுள்ளது. கல்வி அடிப்படையில், ஏற்றுக்கொள்ளப்பட்ட உலகப் புகழ்பெற்ற பல்கலைக்கழகமொன்றில் பட்டப்பின்படிப்பு நிகழ்ச்சித்திட்டம் எதிலும் இலகுவாக அனுமதி பெற்றுக்கொள்ளக்கூடிய மற்றும் கற்கைகள் மற்றும் செயற்பாடுகள் ஆகிய இரண்டிலும் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சிறந்த பல்கலைக்கழமொன்றினால் உருவாக்கப்பட்ட பட்டதாரிகளைப் போன்று சிறப்பாகச் செயலாற்றக்கூடிய - தொழில்நுட்பத் துறைகளிலே "உலக தரம் வாய்ந்த பட்டதாரிகளை" உருவாக்குவதற்கு பல்கலைக்கழகம் கடுமையாக உழைக்கின்றது. அதனடிப்படையில், மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் பிரதான இலக்கானது கற்கைகள் சார்பாக மிகச் சிறந்த, தன்னம்பிக்கைமிக்க, நெகிழ்வுடைய, அதிகளவில் வேலை பெறக்கூடிய சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரம் வாய்ந்த, பட்டத்தைப் பெற்றுக்கொண்ட பின்னர் தொழில் செய்யக் கூடிய பட்டதாரிகளை உருவாக்குதல் மற்றும் அதேபோல், அவர்கள் பட்டத்தைப் பெறும்போது எமது மாணவர்கள் அதிகமானோர் "வேலை தேடுபவராக" அன்றி "வேலை உருவாக்குபவர்" எனும் நிலைக்குப் பயிற்றுவிப்பதுமாகும்.

**பல்கலைக்கழகத்தின் மூலோபாய திட்டமிடல் மற்றும் பல துவக்க முயற்சிகளை அமுலாக்குதல் மூலமாக இலங்கையை "அறிவியல் கேந்திரநிலையமாக" ஆக்குவதற்கு பங்களிப்புச் செய்யும் அதேவேளை, எமது நாட்டினது பொருளாதார அபிவிருத்தியில் செயற்பாட்டு இயக்கி ஒன்றாக ஆகுவதற்கான சில குறிக்கோள்களை உருவாக்கியுள்ளது.**

இப் பின்னணியுடன் இந்த மீளாய்வானது, மொறட்டுவை பல்கலைக்கழகத்தில் உயர் கல்வி பெற்றுக்கொள்ளல் அதிகரிக்கப்பட்டது சார்பாகவும், பல்கலைக்கழகத்தின் தற்போதய அடைவுகள் மற்றும் அங்கீகாரங்கள் தொடர்பாக முதலில் நோக்குகின்றது. அதன் பின்னர் அது, மூலோபாயத் திட்டமிடல் அம்சங்கள், முதலீட்டுச் செலவுகள், புத்தாக்கமும் தொழில்முனைவுசார் தன்மையும் கொண்ட பட்டதாரிகளை உருவாக்குதல், பல்கலைக்கழக-கைத்தொழிற்றுறை ஒத்துழைப்புக்கள், தர உத்தரவாதம் என்பவற்றுடன் ஆய்வு விவரக்குறிப்பு மற்றும் சர்வதேசமயப்படுத்தல் சார்பாக முன்னேற்றும் எமது முயற்சி போன்றவற்றை நோக்குகின்றது.

**01.** பல்கலைக்கழக கல்வி பெற்றுக்கொள்வதை அதிகரித்தல்

தற்போது, மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் பிரதான வளாகத்தில் பட்டப்படிப்பு மாணவ, மாணவிகள் 8677 எண்ணிக்கையானோர் உள்ளனர். பொறியியல் பீடமானது மூன்று பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குகின்றது. அவை வருமாறு.




உரு 1 – கடந்த 10 ஆண்டுகள் காலப்பகுதி சார்பான மாணவர் உள்வாங்கல்

- பி.எஸ்சி. பொறியியல் (பதினொரு விசேட கற்கைப் பிரிவுகளில்)
- பி.எஸ்சி. போக்குவரத்து மற்றும் தேவை விநியோக ஒழுங்கமைப்பு முகாமைத்துவம்
- பி. வடிவமைப்பு - நவநாகரீக வடிவமைப்பு மற்றும் உற்பத்தி அபிவிருத்தி

கட்டடக்கலைப் பீடம் ஆறு பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குகின்றது.

- பீ. கட்டடக்கலை
- பீ. வடிமைப்பு
- பி.எஸ்சி. கணிய அளவையியல்
- பி.எஸ்சி. வசதியேற்பாடுகள் முகாமைத்துவம்
- பி.எஸ்சி. பட்டணமும் நாடும் திட்டமிடல்
- பி.எஸ்சி. நிலத்தோற்ற வடிவமைப்பு கட்டடக்கலை

தகவல் தொழில்நுட்ப பீடம் மூன்று பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குகின்றது.

- பி.எஸ்சி. தகவல் தொழில்நுட்பம்
- பி.எஸ்சி. தகவல் தொழில்நுட்பமும் முகாமைத்துவமும்
- பி.எஸ்.சி. செயற்கை மதிநுட்பம்

வியாபார பீடம்

- வியாபார விஞ்ஞானம் சார் இளமாணி (வியாபார பகுப்பாய்வு, வியாபார செயலாற்றல் முகாமைத்துவம் மற்றும் நிதியியல் பகுப்பாய்வு ஆகிய மூன்று விசேட துறைகளில்) பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை வழங்கிவருகின்றது.

மருத்துவ பீடம்

- M.B.B.S. பட்டத்தை வழங்கிவருகின்றது.

கட்டடக்கலைப் பீடம், வியாபார பீடம், பொறியியல் பீடம் மற்றும் தகவல் தொழில்நுட்ப பீடம் ஆகியன வழங்கும் இளமாணி பட்டங்கள் அனைத்தும் 4 வருடங்கள் கொண்ட கௌரவ பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் ஆகும். இவற்றை விடுத்து, MBBS பட்டம் மற்றும் கட்டடக்கலை இளமாணிப் பட்டம் ஆகியன ஐந்து வருடங்களாகும். இதற்கு மேலதிகமாக, தகவல் தொழில்நுட்ப பீடம் தனது பங்காளி நிறுவனங்களின் உதவியுடன் இணைந்து வெளிவாரியாக வழங்கும் நிகழ்ச்சித்திட்டமாக தகவல் தொழில்நுட்ப இளமாணி (BIT) நிகழ்ச்சித்திட்டத்தை வழங்குகின்றது.

மொறட்டுவைப் பல்கலைக்கழகம் 2006 ஆம் ஆண்டில் அதனது திறந்த தொலைக் கல்வி (ODL) முறையிலான முதலாவது வெளிவாரி இளமாணி நிகழ்ச்சித்திட்டமான தகவல் தொழில்நுட்ப இளமாணிப் பட்டத்தை (BIT) ஆரம்பித்தது. மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் பிரதான திட்டத்தின் ஊடாக இந்த திறந்த மற்றும் தொலைக்கல்வி முறையானது உயர் தரத்தில் தகுதிபெற்ற, குறிப்பாக கிராமபுர பிரதேசத்தைச் சேர்ந்த அதிக எண்ணிக்கையான மாணவர்களுக்கு இப் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் உயர் தரத்தைக் கொண்ட கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பினை குறிப்பிடத்தக்களவு அதிகரிக்கின்ற முறையொன்றாக இனம்காணப்பட்டுள்ளது. இந்த BIT நிகழ்ச்சித்திட்டமானது, பிரதானமாக அங்கீகாரம் பெற்ற பங்காளி நிறுவனங்களின் ஊடாக வழங்கப்படுவதுடன், இந்த முன்மாதிரியானது ஏனைய பல பல்கலைக்கழகங்கள் மூலம் வெளிவாரி பட்டங்கள் வழங்கப்படுகின்ற முறையை விட மாறுபட்டுக் காணப்படுவது அதன் தரத்தை உறுதிப்படுத்துவதும் மாணவர் எண்ணிக்கையை கட்டுப்படுத்துவதும் ஆகும். 2023 ஆண்டின் போது இந் நிகழ்ச்சித்திட்டத்திற்கு 1696 பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளதுடன், தற்போது 4384 பதிவுசெய்யப்பட்ட மாணவர்கள் இந் நிகழ்ச்சித்திட்டத்தை தொடர்கின்றனர்.

## 02. இலக்குகளை தாபித்தல்

2.1 இலக்குகளை தாபித்தல்; பிரதான திட்டம் தேசிய அபிவிருத்தி இலக்குகள் மற்றும் உபாய ரீதியான நோக்கங்கள் ஆகியவற்றுக்கு ஏற்ப உயர்கல்வி அமைச்சு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, மொறட்டுவை பல்கலைக்கழகம் ஆகியன 2020 ஆம் ஆண்டிற்கான அதனது பூரணத்துவமிக்க பிரதான திட்டத்தினை முன்னெடுத்தது, இதன் தொலைநோக்கு 2030 வரை விரிவடைந்துள்ளது. இந்த உபாய ரீதியான வழிகாட்டல் முறைகளானது கட்டிடக் கலை பீடத்தினை

# மேலாண்மை கலந்துரையாடல்

## பல்கலைக்கழக செயல்பாடுகள் பற்றிய கண்ணோட்டம்

சேர்ந்த அர்ப்பணிப்புமிக்க குழுவொன்றினால் விருத்தி செய்யப்பட்டது மற்றும் போதியளவு உட்கட்டமைப்பு வசதிப் பகிர்வினை உறுதி செய்யும் முகமாக பல்கலைக்கழகத்தின் பௌதீக ரீதியான அபிவிருத்தியை வழிகாட்டும் வகையில் வடிவமைக்கப்பட்டது.

மூல பிரதான திட்டமானது தற்போது பல்கலைக்கழக வேலைகளை வழிகாட்டிய பொழுதிலும் கூட அண்மைக் காலங்களாக பல்கலைக்கழகத்தில் ஏற்பட்டு வருகின்ற உள்ளக மற்றும் வெளிநிலை மாற்றங்களை பல்கலைக்கழகம் நன்கு புரிந்துள்ளது. இவை நிலைமைகளை மாற்றலாம். இவற்றிலிருந்து கிடைக்கின்ற வாய்ப்புகளை பயன்படுத்துகின்ற அதேவேளை இத்தகைய மாற்றங்களுக்கு பதிலளிக்கும் முகமாக, உள்ளக நிபுணத்துவமிக்க கட்டிடக் கலைஞர்களின் அபிப்பிராயத்தை கொண்டு பல்கலைக்கழக பிரதான திட்ட குழுவினால் மீளமைக்கப்பட்ட பிரதான திட்டமானது தற்சமயம் விருத்தி செய்யப்பட்டுள்ளது. இருப்பினும், சகல பீடங்களையும் சேர்ந்த நிபுணர்களின் கூட்டு முயற்சியினால் இது மேற்கொள்ளப்பட்டது. மீளாய்வு செய்யப்பட்ட திட்டத்தின் பிரதான இலக்கானது தாக்குப் பிடிக்கக்கூடிய மற்றும் நிலைபேறான உட்கட்டமைப்பு வசதிகளை கூட்டிணைப்பதுடன் மற்றும் பல்கலைக்கழக சமுதாயத்தின் வளர்ந்து வரும் தேவைகளை நிறைவேற்றக்கூடியதாக கல்வி இருத்தல் வேண்டும். இந்த கூட்டிணைந்த முயற்சியினால் சகல பீடங்களது தன்மையையும் உறுதி செய்வதுடன் முழுமையான அவதானத்தினை மொறட்டுவை பல்கலைக்கழகம் செலுத்தியுள்ளது.

### 2.2 இலக்குகளை தாபித்தல்; உபாய ரீதியான முகாமைத்துவ திட்டம்

**2021 ஆம் ஆண்டில், 2022 – 2026 ஆம் வருடங்களுக்கான உபாய ரீதியான முகாமைத்துவ திட்டமொன்றினை விருத்தி செய்வதற்கான குழுவொன்றினை உப வேந்தர் நியமித்தார், கடந்த கால கூட்டுறவு திட்டத்தினை (2017 – 2021) இது மீளாய்வு செய்தது. பிரதான செயலாற்றுகை குறிகாட்டிகள் மற்றும் உபாய ரீதியான செயல்களை குறிப்பிடுவதோடு பல்கலைக்கழகத்தின் வருடாந்த செயல்திட்டங்களுக்கான அடிப்படை வரைவுச் சட்டகமாக இந்த திட்டம் காணப்படுகின்றது. 2022 பொருளாதார சவால்களுக்கு பதிலளிக்கும் முகமாக, தற்போது காணப்படுகின்ற நிலைமைகளை பிரதிபலிக்கும் முகமாக சில பிரதான குறிகாட்டிகள் மீளாய்வு செய்யப்பட்டன,** பல்கலைக்கழகமானது விரைவுத் திறன்மிக்கதாகவும் இசைவாக்கம் மிக்கதாகவும் திகழ்வதை இது உறுதி செய்தது.

தன்மை, தேர்ச்சி, தொழில்வாண்மைத்துவம், கூட்டிணைவு, நிலைபேறு தன்மை, ஏனைய விடயங்கள் உள்ளடங்கலாக இயங்காற்றல்மிக்க முக்கியமான பெறுமானங்களை உள்ளடக்கி பிரதான செயலாற்றுகை குறிகாட்டிகள் உபாய ரீதியான முகாமைத்துவ திட்டம் (SMP) உருவாக்கப்பட்டன. உலக தராதரம்மின்ன பட்டதாரிகளை உருவாக்குதல் மற்றும் உயர்வான தாக்குத்திறன்மிக்க ஆய்வுகள் மற்றும் புத்தாக்க நடைமுறைகள் மூலமாக சமூக பொருளாதார மேம்பாட்டிற்கு பங்களிப்புச் செய்தல், அத்தோடு உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமாக திகழ்வதற்கான பல்கலைக்கழகத்தின் தொலைநோக்கு தொடர்பில் முக்கியமான பெறுமானங்களாக இவை காணப்படுகின்றன.

உபாயரீதியான முகாமைத்துவத் திட்டத்தின் இலக்குகளானது பூரணத்துவமிக்கதாக காணப்படுவதுடன் நிலைமாற்றுக் கல்வி, பல்துறை ஆய்வுக் கலசாரத்தினை மேம்படுத்தல், புலமை சார் மற்றும் பௌதீக சார் சுற்றாடல்களை மேம்படுத்தல், திருப்திகரமான பல்கலைக்கழக சமுதாயம் ஒன்றினை தோற்றுவித்தல் போன்றவற்றை வழங்குவது தொடர்பான பல்கலைக்கழகத்தின் பணி நோக்கிற்கு ஏற்ப காணப்படுகின்றன. நிபுணத்துவ சேவைகளின் முக்கியத்துவம் மற்றும் அரசாங்க மற்றும் தனியார் துறையினருக்கு ஆலோசனை தெரிவித்தல், சிறந்த நல்லாட்சி மற்றும் நிறுவன ரீதியான தன்மைகள் ஆகியவற்றினை விருத்தி செய்தல் போன்றவற்றின் முக்கியத்துவம் பற்றி இத்திட்டம் வலியுறுத்துகின்றது.

## 03. தாபிக்கப்பட்ட இலக்குகளை நடைமுறைப்படுத்தல்

### 3.1 உபாய ரீதியான முகாமைத்துவ திட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்ட இலக்குகளை நடைமுறைப்படுத்தல்

பிரதான திட்டத்தில் குறிப்பிடப்பட்ட நோக்கங்களை அடைவதற்காக 2023 ஆம் வருடம் முழுவதும் பல்கலைக்கழகமானது

தொடர்ச்சியாக முக்கிய முயற்சிகளை

அட்டவணை 2: கடந்த 5 வருடத்தின் மூலதன உட்கட்டமைப்பு அபிவிருத்தி கருத்திட்டங்கள்

| கருத்திட்டம் | பெறுமதி (ரூ. மில்.) | செயல்மட்டம் |
|---|---|---|
| புடைவை மற்றும் ஆடை தொழில்நுட்ப திணைக்கள புடைவை சார் நீடிப்பு கட்டட நில மற்றும் இடைநிலை மாடிகளின் எஞ்சிய வேலை. | 28 | 2019-ல் பூர்த்தி செய்யப்பட்டது |
| கட்டட பொருளியல் திணைக்களத்திற்கான கட்டடம் | 75 | நடைபெறுகின்றது |
| பொருட்கள் விஞ்ஞானமும் பொறியியலும் திணைக்கள கட்டடம் | 439 | நடைபெறுகின்ற து |
| எந்திரவியல் பொறியியல் திணைக்களத்திற்கான உத்தேச கட்டடம் | 247 | நடைபெறுகின்ற து |
| கட்டடக்கலை பீட விரிவுரை மண்டபக் கட்டடத்தின் (Prefabricated Steel) எஞ்சிய வேலைகளை பூர்த்திசெய்தல் | 150 | நடைபெறுகின்ற து |
| பொறியியல் பீட பலநோக்கு கட்டடத்தின் (Prefabricated Steel) எஞ்சிய வேலைகளை பூர்த்திசெய்தல் | 200 | நடைபெறுகின்ற து |

மேற்கொண்டது. பல திட்டமிடப்பட்ட அபிவிருத்திகள் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டன, நீண்ட கால இலக்குகளை அடைகின்ற பயணத்தில் பல்கலைக்கழகம் இருப்பதை இது உறுதி செய்தது. நிதியிடல் மற்றும் ஏனைய வளங்கள் மீது தாக்கத்தினை செலுத்திய தவிர்க்க முடியாத வெளிநிலை காரணிகளான பூகோள பொருளாதார பின்னடைவு போன்றவற்றினால் சில முன்னெடுப்புகள் தாமதப்பட்டன அல்லது சீர் செய்யப்பட்டன. இருப்பினும் பிரதான திட்டத்திற்கு ஏற்ப மொறட்டுவை பல்கலைக்கழகத்தினுள் காணப்படுகின்ற மருத்துவ பீடத்தின் உடல் கூறியல், உடலியல், உயிர் இரசாயனவியல் திணைக்களத்தில் ஆய்வு கூடங்கள் மற்றும் துணை சேவைகளை தாபிப்பதற்கான பிரேரிக்கப்பட்ட கட்டிட தொகுதியின் தெரிவு செய்யப்பட்ட நிர்மாண ரீதியான ஒப்பந்தங்களை செயற்பாடுகளை பூரணப்படுத்துவதற்கு பல்கலைக்கழகத்தினால் முடிந்தது.

புதிய ஆட்சேர்த்தல் தொடர்பான மட்டுப்பாடுகள் மற்றும் திறமையான ஆளணியனரின் மூளைசாலிகள் வெளியேற்றம் ஆகியன உபாய ரீதியான முகாமைத்துவ திட்டத்தின் சில அம்சங்களை உரிய நேரத்தில் நடைமுறைப்படுத்துவதில் சவால்களை ஏற்படுத்தின. இத்தகைய சவால்களுக்கு மத்தியிலும் மொறட்டுவை பல்கலைக்கழகமானது இவற்றை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் பாராட்டக்கூடிய முன்னேற்றங்களை எய்தியது. குறிப்பாக வெளிநிலை மாணவர்களை உள்ளீர்ப்பது தொடர்பில் கணிசமான முன்னேற்றங்கள் அதிகரித்தன. மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் நலன்கள் மற்றும் மாணவர்களது கண்ணியம் ஆகியவற்றை

அதிகரிப்பதற்காக பல்கலைக்கழக சுற்றாடலை மேம்படுத்தும் முகமாக வளாக பூந்தோட்டம் மற்றும் பசுமை வளாகம் போன்ற புதிய முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும் தகவல் தொழில்நுட்ப சேவைகளுக்கான நிலையத்தின் உதவியுடன் பல மாணவர் சேவைகள் மற்றும் நிருவாக ரீதியான சேவைகள் ஆகியன டிஜிட்டல் மயப்படுத்தப்பட்டன, அரசாங்க கொள்கைகளின் 6 ஆம் இலக்கத்தின் கீழ் நிர்ணயம் செய்யப்பட்ட இலக்குகள் மற்றும் நிறுவன ரீதியான தன்மைகள் ஆகியவற்றுக்கு ஏற்ப இவை மேற்கொள்ளப்பட்டன.

தொழிற்துறை கூட்டிணைவுகள் மற்றும் ஆய்வு வெளியீடுகள் தொடர்பில் கணிசமானளவு முன்னேற்றங்கள் பதியப்பட்டன. சர்வதேச மயப்படுத்தல் மற்றும் பயனுறுதிமிக்க பங்காண்மைகளுடன் தொடர்புடைய பல்கலைக்கழகத்தின் இலக்குகளுக்கு உதவும் வகையில் 2023 இல் கணிசமான எண்ணிக்கையிலான ஆய்வு மாநாடுகள் நடைபெற்றன. மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் உபாய ரீதியான முகாமைத்துவ திட்டமானது ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் குறிப்பாக 17 ஆம் இலக்கிற்கு ஏற்ப காணப்பட்டன, இது நிலைபேறான அபிவிருத்திக்காக பங்காளர்கள் தொடர்பில் கவனத்தை செலுத்துவது பற்றி குறிப்பிட்டுள்ளது. சர்வதேச பல்கலைக்கழகங்கள் மற்றும் நிறுவனங்களுடனான கூட்டிணைவை முதன்மைப்படுத்தி, மொறட்டுவை பல்கலைக்கழகமானது இணைந்த ஆய்வு கருத்திட்டங்கள், பீடம் மற்றும் மாணவர் பரிமாற்றங்கள், வளங்களை பகிர்தல், பூகோள அறிவு மற்றும் புத்தாக்க வலையமைப்புகள் ஆகியவற்றை மேம்படுத்துதல் தொடர்பில் இலகுபடுத்தல்களை மேற்கொண்டது.

செயலமர்வுகள், கருத்தரங்குகள், மாநாடுகள் ஆகியவற்றின் மூலம் அனுபவங்களை பகிர்ந்து கொள்வதற்கும் மற்றும் நிலைபேறான நடைமுறைகளுக்கு பங்களிப்புச் செய்கின்ற தாபிக்கப்பட்ட வலையமைப்புகள் தொடர்பான தளங்களை பல்கலைக்கழகம் வழங்குகின்றது. காலநிலை மாற்றம், புதுப்பிக்கக்கூடிய சக்தி, 7,11,13 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் போன்ற பூகோள சவால்களுக்கு முகங் கொடுக்கும் விதத்தில் தொழிற்துறை பங்காளர்கள் மற்றும் கல்வியியல் நிறுவனங்களுடன் கூட்டிணைந்த ஆய்வு முன்னெடுப்புகளில் மொறட்டுவை பல்கலைக்கழகமும் பங்குபற்றியது. மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் மாணவர் மற்றும் பீட பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டமானது பரஸ்பர புரிதல், ஒத்துழைப்பு, 17 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி இலக்கின் பிரதான அம்சங்கள் ஆகியவற்றை ஊக்குவித்தது. மேலும் தனியார் துறை மற்றும் பொதுத் துறையுடனரான கலந்தாலோசனை கருத்திட்டங்கள் தொடர்பான மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் ஈடுபாடானது, விசேடமாக சமுதாய மைய கருத்திட்டங்களானது பிரதேச மக்களது வாழ்க்கையின் தன்மையை மேம்படுத்துவதை இலக்காகக் கொண்டு காணப்பட்டது. குறிப்பாக இதன் நிமித்தம் வேலை வாய்ப்புகள் மற்றும் நிலைபேறான நடைமுறைகளை மேம்படுத்தல் ஆகியன தோற்றுவிக்கப்பட்டன. 12 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி இலக்கிற்கு பங்களிப்புச் செய்யும் வகையில் சக்தி வினைத்திறன்மிக்க தொழில்நுட்பங்கள், கழிவு குறைத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள், நிலைபேறான போக்குவரத்து தீர்வுகள் ஆகியவற்றின் மூலம் பல்கலைக்கழகம் முழுவதும் நிலைபேறான நடைமுறைகளை இது மேம்படுத்தியது. இத்தகைய முயற்சிகள் மூலமாக மொறட்டுவை பல்கலைக்கழகமானது நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் குறிப்பாக 17 ஆம் இலக்கத்திற்கு முன்னுரிமை அளித்து அதனது உபாய ரீதியான முகாமைத்துவ திட்டத்திற்கு ஏற்ப பூகோள நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதில் உறுதியான அர்ப்பணிப்பினை மொறட்டுவை பல்கலைக்கழகம் வெளிப்படுத்தியது.

சவால்களுக்கு முகங் கொடுக்கும் விதத்தில் தொழிற்துறை பங்காளர்கள் மற்றும் கல்வியியல் நிறுவனங்களுடன் கூட்டிணைந்த ஆய்வு முன்னெடுப்புகளில் மொறட்டுவை பல்கலைக்கழகமும் பங்குபற்றியது. மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் மாணவர் மற்றும் பீட பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டமானது பரஸ்பர புரிதல், ஒத்துழைப்பு, 17 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி இலக்கின் பிரதான அம்சங்கள் ஆகியவற்றை ஊக்குவித்தது. மேலும் தனியார் துறை மற்றும் பொதுத் துறையுடனரான கலந்தாலோசனை கருத்திட்டங்கள் தொடர்பான மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் ஈடுபாடானது, விசேடமாக சமுதாய மைய கருத்திட்டங்களானது பிரதேச மக்களது வாழ்க்கையின் தன்மையை மேம்படுத்துவதை இலக்காகக் கொண்டு காணப்பட்டது. குறிப்பாக இதன் நிமித்தம் வேலை வாய்ப்புகள் மற்றும் நிலைபேறான நடைமுறைகளை மேம்படுத்தல் ஆகியன தோற்றுவிக்கப்பட்டன. 12 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி இலக்கிற்கு பங்களிப்புச் செய்யும் வகையில் சக்தி வினைத்திறன்மிக்க தொழில்நுட்பங்கள், கழிவு குறைத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள், நிலைபேறான போக்குவரத்து தீர்வுகள் ஆகியவற்றின் மூலம் பல்கலைக்கழகம் முழுவதும் நிலைபேறான நடைமுறைகளை இது மேம்படுத்தியது. இத்தகைய முயற்சிகள் மூலமாக மொறட்டுவை பல்கலைக்கழகமானது நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் குறிப்பாக 17 ஆம் இலக்கத்திற்கு முன்னுரிமை அளித்து அதனது உபாய ரீதியான முகாமைத்துவ திட்டத்திற்கு ஏற்ப பூகோள நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதில்

உறுதியான அர்ப்பணிப்பினை மொறட்டுவை பல்கலைக்கழகம் வெளிப்படுத்தியது.

**நிலைபேறான போக்குவரத்து தீர்வுகள் ஆகியவற்றின் மூலம் பல்கலைக்கழகம் முழுவதும் நிலைபேறான நடைமுறைகளை இது மேம்படுத்தியது. இத்தகைய முயற்சிகள் மூலமாக மொறட்டுவை பல்கலைக்கழகமானது நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் குறிப்பாக 17 ஆம் இலக்கத்திற்கு முன்னுரிமை அளித்து அதனது உபாய ரீதியான முகாமைத்துவ திட்டத்திற்கு ஏற்ப பூகோள நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதில் உறுதியான அர்ப்பணிப்பினை மொறட்டுவை பல்கலைக்கழகம் வெளிப்படுத்தியது.**

## 3.2. மூதனன முதலீடுகள் ஊடாக தாபிக்கப்பட்ட இலக்குகளை நடைமுறைப்படுத்தல்

மொறட்டுவை பல்கலைக்கழகம் அதன் பௌதிக உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக மிக விசேட நிதிகளைப் பெற்றுக்கொண்டது. மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்களின் விரிவாக்கத்திற்கு இணைவாக கடந்த ஐந்தாண்டு காலப்பகுதியினுள் பூர்த்திசெய்யப்பட்ட நிர்மாணக் கருத்திட்டங்கள் பற்றிய விபரங்களை அட்டவணை-2 காட்டுகிறது. 2023 ஆண்டின் போது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) ஊடாக திறைசேரியிலிருந்து மூலதன முதலீடாக நிர்மானிப்புக்களுக்காக ரூ. 230.6 மில்லியனும், மூலதனச் சொத்துக்களை புனரமைப்புச் செய்வதற்காக ரூ. 25.0 மில்லியனும், நிலையான சொத்துக்களை கையகப்படுத்துவதற்காக ரூ. 35.0 மில்லியனும் பெற்றுக்கொள்ளப்பட்டன. இதற்கு மேலதிகமாக, பொது நிதி சுற்றறிக்கை இல. 380 இற்கு ஏற்ப, பிற மூலகங்களிலுருந்து உருவாக்கப்பட்ட வருமானம் மற்றும் பல்கலைக்கழக அபிவிருத்தி நிதியம் மற்றும் திணைக்களம்சார் அபிவிருத்தி நிதியம் ஆகியவற்றில் திரட்டப்பட்டவையிலிருந்து ரூ. 53.7 தொகை 2023 ஆண்டில் புதிய மூலதன உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக மொறட்டுவை பல்கலைக்கழகம் முதலீடு செய்தது.

## 3.3. தாபிக்கப்பட்ட இலக்குகள்; தர உறுதிப்பாடு ஆகியன நடைமுறைப்படுத்தல்

மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் தர உறுதிப்பாடானது அதனுடைய நிறுவன ரீதியான தொழிற்பாட்டு வரைவுச் சட்டகத்தில் காத்திரமாக காணப்படுகின்றது. சகல பீடங்களிலும் தரமான கல்வி மற்றும் ஆய்வுகள் ஆகியன மேம்படுத்தப்பட்டு அர்ப்பணிப்புடன் பேணப்படுவதை இது பிரதிபலிக்கின்றது. பல்கலைக்கழகத்தின் தர உறுதிப்பாட்டு நடைமுறைகளானது தேசிய வழிகாட்டிகள் மற்றும் சர்வதேச சிறந்த நடைமுறைகள் ஆகியவற்றுக்கு ஏற்ப கவனமாக வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் இந்த பல்கலைக்கழகத்தின் பட்டதாரிகள் பூகோள ரீதியாக தொழிற்துறையின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு ஏற்ற விதத்தில் திறன்களையும் அறிவையும் கொண்டுள்ளனர் என்பதனை உறுதி செய்கின்றது.

மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் தர உறுதிப்பாட்டு முயற்சிகளின் மையமாக தர உறுதிப்பாட்டிற்கான நிலையம் காணப்படுகின்றது, தர உறுதிப்பாட்டு செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படுவதையும் ஒருங்கிணைக்கப்படுவது தொடர்பாகவும் முக்கிய வகிபாகத்தினை இது வகிக்கின்றது. தர உறுதிப்பாட்டு செயன்முறைகளுக்கு ஏற்ப பல்கலைக்கழகம் இயங்கி வருகின்றது என்பதை உறுதி செய்வதற்கான மற்றும் பீடங்களையும் திணைக்களங்களையும் வழிகாட்டுவதற்கான பொறுப்பு தர உறுதிப்பாட்டு நிலையத்திற்கு காணப்படுகின்றது. இது உள்ளக மற்றும் வெளிநிலை மீளாய்வுகளை மேற்கொள்வதுடன் தொடர்ச்சியான மேம்பாட்டிற்கான கலாசாரத்தினை ஊக்குவிக்கின்றது. தன்மை தொடர்பான இதனது கட்டமைக்கப்பட்ட அணுகுமுறை மூலம், கல்வி சார் நிகழ்ச்சித்திட்டங்களானது பொருத்தப்பாட்டுடன் உயர் தரம்மிக்கவையாக திகழ்கின்றன என்பதை உறுதி செய்வதற்காக பல்கலைக்கழகமானது தொடர்ச்சியாக சுய மதிப்பீடு, சகபாடிகள் மீளாய்வு, பின்னூட்டல் பொறிமுறைகள் ஆகியவற்றில் ஈடுபட்டு வருகின்றது.

தர உறுதிப்பாட்டு நிலையத்தின் வேலைகளுக்கு மேலதிகமாக, மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் தர உறுதிப்பாட்டு செயன்முறைகளுக்கு இயங்காற்றல்மிக்க உட்கட்டமைப்பு வசதிகள் உதவி

செய்கின்றன. இவற்றுள் தன்மை உறுதிப்பாட்டு தொடர்பான பீடமும் உள்ளடங்குகின்றது. இது பீட மட்டத்திலான கண்காணித்தல் மற்றும் தரத்தை மேம்படுத்தல் ஆகிய செயற்பணிகள் இதற்கு வழங்கப்பட்டுள்ளன. கல்வி சார் சிறப்புத் தன்மைகளை பேணுவதற்காக மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் உபாயரீதியான இலக்குகளை குறிப்பிடுகின்ற பூரணத்துவமிக்க தர உறுதிப்பாட்டு கொள்கை வரைவுச் சட்டகத்தினால் இத்தகைய முயற்சிகள் மேலும் வலுவூட்டப்படுகின்றது. பங்கீட்டுப்பாட்டாளர் ஈடுபாட்டின் முக்கியத்துவம், முறையான மீளாய்வுகள், புத்தாக்க ரீதியான கற்பித்தல் மற்றும் கற்றல் நடைமுறைகளை ஏற்றுக் கொள்ளுதல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை இந்த வரைவுச் சட்டகம் வலியுறுத்துகின்றது.

தனது அன்றாட தொழிற்பாடுகளில் தரமான உறுதிப்பாடு உள்ளடக்கப்பட்டுள்ளதை உறுதிப்படுத்துவதற்காக பல்வேறு விதமான முன்னெடுப்புகளை பல்கலைக்கழகம் நடைமுறைப்படுத்தி வருகின்றது. இவற்றுள் தகவல் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட கற்பித்தல் கருவிகள், தொடர்ச்சியான பாடவிதான அபிவிருத்திகள், மாணவர் மற்றும் பீடம் சார்ந்த உள்ளீடுகளானது தீர்மானம் மேற்கொள்ளல் செயன்முறைகளை அறிவிப்பதற்காக பயன்படுத்தப்படுகின்றன என்பதை உறுதி செய்வதற்காக பின்னூட்டல் சார்ந்த தாபித்தல்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன. தரமான புத்தாக்க ரீதியான மதிக்கின்ற கூட்டிணைந்த சுற்றாடல் ஒன்றை ஊக்குவிப்பதன் மூலம், மொறட்டுவை பல்கலைக்கழகமானது தேவைகளை நிறைவேற்றுவது மாத்திரமல்லாது மாணவர்கள், பீடம் மற்றும் வெளிநிலை பங்கீட்டுபாட்டாளர்களின் அவசியங்களையும் நிறைவேற்றி வருகின்றது.

2023 ஆம் ஆண்டில் உபாய ரீதியான முன்னெடுப்புகள் மற்றும் குழு செயற்பாடுகள் ஆகியவற்றின் மூலமாக பல்கலைக்கழகம் முழுவதும் கல்வியின் தன்மை மற்றும் சேவைகள் ஆகியவற்றை மேம்படுத்தும் முகமாக தர உறுதிப்பாடு தொடர்பான நிலையமானது முக்கிய வகிபாகத்தை வகித்தது. தர உறுதிப்பாட்டு நிலையமானது சம்பந்தப்பட்ட குழுக்களுடன் கூட்டிணைந்து, தொடர்ச்சியான கண்காணித்தல் மற்றும் கல்வித் தராதரங்களின் மேம்பாடு ஆகியவற்றை மேம்படுத்தும் முகமாக 6 கூட்டங்களை நடாத்தியது. கல்வியியல் சாராத பணியாட்கள் மற்றும நிருவாக ஆளணியினர் ஆகியோரை வலுவூட்டும் முகமாக ஆவண முகாமைத்துவம், தொழில்வாண்மை அபிவிருத்தி, ஆக்கத்திறன் மேம்படுத்துதல் தொடர்பில் செயலமர்வுகளும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களும் நடாத்தப்பட்டன. மாணவர் பின்னூட்டல், மற்றவருடைய படைப்புக்களை திருடுதல் ஆகிய கொள்கையை மீள் மதிப்பீடு செய்தல், பட்டப் பின் படிப்பு கற்கை நிகழ்ச்சித்திட்டங்களை மேம்படுத்துதல் தொடர்பான சீரமைப்புகளை மேற்கொள்வதற்கான முக்கிய காரணியாக தர உறுதிப்பாட்டு நிலையம் காணப்பட்டது. மேலும் மருத்துவ பீடத்தின் மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் இறுதி வெளியீட்டில் இலங்கை மருத்துவ சபை மற்றும் சம்பந்தமான சுய மதிப்பீட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அத்தோடு 2023 ஆம் ஆண்டிற்கான முன் சான்றுப்படுத்தலும் பூரணப்படுத்தப்பட்டிருந்தது.

உலகத் தராதரம்மிக்க பல்கலைக்கழகமாக திகழ்வது தொடர்பான எமது தொலைநோக்கை நோக்கிய பயணம் தொடர்பில் 2023 ஆம் ஆண்டில் உலகத் தராதரத்தினை அடைவதற்கான முயற்சிகளை மொறட்டுவை பல்கலைக்கழகம் மேற்கொண்டது மற்றும் 2023 இல் மொறட்டுவை பல்கலைக்கழகமானது இலங்கையிலிருக்கின்ற 5 சிறப்பான பல்கலைக்கழகங்களினுள் ஒன்றாக காணப்பட்டது. உலக பல்கலைக்கழகங்களின் வெபோமெட்ரிக்ஸ் தரப்படுத்தலின் படி இது காணப்பட்டது. வெபோமெட்ரிக்ஸ் மதிப்பீட்டு தன்மைகளின் பிரகாரம் மொறட்டுவை பல்கலைக்கழகம் போன்ற மத்திய அளவிலான பல்கலைக்கழகம் ஒன்றிற்கு நிலையை மேம்படுத்துவது சிரமமாகும். ஆசிய பல்கலைக்கழக தரப்படுத்தல் 2023 இன் பிரகாரம் 760 பல்கலைக்கழகங்களினுள் மொறட்டுவை பல்கலைக்கழகமானது 501 – 550 என தரப்படுத்தப்பட்டது (QS AUR 2023). ஆசிய பிராந்தியத்தில் 12,000 பல்கலைக்கழகங்களுக்கு மத்தியில் முதல் முறையாக மொறட்டுவை பல்கலைக்கழகம் ஆசியாவிலேயே உயர் தரம்மிக்க 2.5% இனை மொறட்டுவை பல்கலைக்கழகம் பெற்றுக் கொண்டது.

மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் பல்வேறு வகையான பட்டதாரி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது. அத்தோடு பல சிறப்பு அந்தஸ்துமிக்க அமைப்புகளினால் அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இலங்கை பொறியியலாளர் நிறுவகத்தினால் பல பொறியியல் பட்டங்களுக்கு அங்கீகாரம்

அளிக்கப்பட்டுள்ளன, வொஷிங்டன் ஒப்பந்தத்தில் இது கையொப்பமிட்டுள்ளது. கட்டிடக் கலை மற்றும் அளவியல் ஆய்வு உள்ளடங்கலாக கட்டிடக்கலை பீடத்தினால் வழங்கப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்களானது RIBA, CAA, மற்றும் RICS, மற்றும் ஏனையவற்றின் சர்வதேச அங்கீகாரத்தை பெற்றுள்ளது, இலங்கை மருத்துவ சபையினால் புதிய MBBS நிகழ்ச்சித்திட்டத்திற்கும் முன்அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது

## 5.4 நிலைபேறான டிஜிட்டல் மாற்றம்

நிலைபேறான டிஜிட்டல் மாற்றத்திற்கான மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் உபாயமுறைக்கு ஏற்ப, 2023 ஆம் ஆண்டு முக்கிய வருடமாக காணப்படுகின்றது. ஏனெனில் இவ்வருடத்தில் பல்வேறு வகையான புத்தாக்க முன்னெடுப்புகள், பல்கலைக்கழக செயன்முறைகள் மற்றும் சேவைகள் ஆகியவற்றை மேம்படுத்துவதை இலக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டன.

புதிய பீடங்கள் மற்றும் பட்டப் படிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக சேவைகள் தொடர்பில் அதிகரித்து வந்த கேள்விகளுக்கு பதிலளிக்கும் முகமாக புதிய முகாமைத்துவ தகவல் முறையொன்றினை விருத்தி செய்வதற்கான தீர்மானமானது ஆரம்பக் கட்ட முன்னெடுப்புகளுள் ஒன்றாக காணப்படுகின்றது. இந்த அபிவிருத்தியானது தகவல் தொழில்நுட்ப தொழிற்துறை பங்காளர்களின் கூட்டிணைவுடன் CITeS/MIS பிரிவின் நிபுணத்துவம் மற்றும் கலந்தாலோசனையுடன் இந்த அபிவிருத்தி பொறுப்பேற்கப்பட்டது. 2024 இறுதியில் பிரதான கல்வி சார் செயன்முறைகளைப் பூரணப்படுத்தல் மற்றும் 2025 இறுதிப் பகுதியில் ஏனைய நிருவாக ரீதியான செயன்முறைகளை இறுதிப்படுத்தல் ஆகியன இதன் நோக்கங்களாகும். இந்த முறையானது பல்கலைக்கழகத்தின் வளர்ந்து வருகின்ற தேவைகளை நிறைவேற்றுகின்றது என்பதை உறுதி செய்வதற்கு, தனித்துவமான தேவைப்பாடுகளை இனங் காண்பதற்கும் டிஜிட்டல் சுற்றாடல் முறைக்கு பொருத்தமான மீள் பொறியியல் செயன்முறைகளை இனங் காண்பதற்குமான வியாபார செயன்முறை மீள் பொறியியல் நடவடிக்கைகளை வியாபார பீடம் ஆரம்பித்தது. பட்டப் பின் படிப்பு கற்கைநெறிகளின் கல்வி சார் நிருவாகத்தினை மேம்படுத்துவதற்காக, தற்போதைய முகாமைத்துவ தகவல் முறை விரிவாக்கம் செய்யப்பட்டது. இந்த விரிவாக்கமானது பட்டப் பின் படிப்பு மாணவர்களுக்கான மிகவும் வினைத்திறன்மிக்க மற்றும் வெளிப்படைத் தன்மைமிக்க நிருவாக நடைமுறைகளுக்கு இந்த விரிவாக்கம் வாய்ப்பளித்ததுடன், கல்வியியல் மற்றும் நிருவாக ரீதியான செயற்பாடுகளை சீர் செய்தது.

முழுமையாக டிஜிட்டல் மயப்பட்ட பல்கலைக்கழக முறைமையை நோக்கிய பயணத்தின் கணிசமான முன்னேற்றமாக மொறட்டுவை பல்கலைக்கழகமானது புதிய ஒன்லைன் மூலமான கொடுப்பனவு முறையொன்றினை ஒருங்கிணைத்தது, இது "GovPay," என அழைக்கப்படுவதுடன் தொழில்நுட்ப அமைச்சு மற்றும் LankaClear Pvt Ltd. உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டது. இந்த முறையின் மூலமாக பல்கலைக்கழகமானது ஒன்லைன் மூலமான கொடுப்பனவுகளை ஏற்றுக் கொள்வதுடன் இலங்கையிலுள்ள சகல பிரதான வங்கிகள் மூலமாகவும் பணத்தினை மாற்ற முடியும். வெளிநிலை பட்டப் படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களுடன் 'GovPay' முறை மூலமாக வெற்றிகரமான முன்னோடி நிகழ்ச்சித்திட்டம் மேற்கொள்ளப்பட்டது மற்றும் ஏனைய பட்டப் படிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் குறுகிய கால கற்கைநெறிகள் ஆகியவற்றுக்கு 2024 ஆம் ஆண்டில் இம்முறையை விரிவாக்குவதற்கான திட்டங்கள் உள்ளன.

வெளிநாடுகளிலிருந்து பல்கலைக்கழகத்திற்கு வருகின்ற மின்னஞ்சல்களை பாதுகாப்பாக பெற்றுக் கொள்வது தொடர்பில் நீண்ட காலமாக காணப்படுகின்ற சவால்களுக்கு முகங் கொடுக்கும் முகமாக, மேம்பட்ட பாதுகாப்பு நடைமுறைகளை உள்ளடக்கிய புதிய பாதுகாப்பான மைல்போர்டல் முறையொன்றினை மொறட்டுவை பல்கலைக்கழகம் அறிமுகம் செய்தது. இதன் மூலம் உலகின் எந்தப் பாகங்களிலிருந்தும் வருகின்ற மின்னஞ்சல்களை பல்கலைக்கழகமானது மற்றும் பல்கலைக்கழகத்திலுள்ள பீடங்கள் பணியாட்கள், மாணவர்கள் ஆகியோர் பாதுகாப்பாகவும் சௌகரியமாகவும் பெற்றுக் கொள்ள முடியும் என்பதனை இந்த முன்னெடுப்பு உறுதி செய்தது. மேலும் விரிவுரை மண்டபங்கள், ஆய்வுகூடங்கள், தகவல் தொழில்நுட்ப ஆய்வு கூடங்கள் போன்ற பல்கலைக்கழக வளங்களை பயனுறுதிமிக்க முறையில் பகிரப்படுவதை இலகுபடுத்தும் முகமாக,

ஒன்லைன் வள முன்பதிவு முறையொன்றினை CITeS நடைமுறைப்படுத்தியது. இந்த முறை மூலமாக பணியாட்டொகுதி உறுப்பினர்கள் வளங்களை பயன்படுத்த முடியுமா என்பதை முன்கூட்டியே அறிந்து கொள்வதுடன் பல்வேறு திணைக்களங்கள் மற்றும் பீடங்கள் மூலமாக இவற்றை ஒதுக்குவதற்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும். இத்தகைய கோரிக்கைகளை பயனுறுதிமிக்க முறையில் வள ஒதுக்கீடு தொடர்பான நிருவாகிகள் ஆராய்வதுடன் இம்முறையானது மேம்பட்ட வள பகிர்தல் முறைக்கு இட்டுச் செல்வதுடன் பேபர் வேலைகளை குறைப்பதுடன் அதனோடு தொடர்புபட்ட தாமதங்களையும் குறைக்கின்றது.

ஒட்டுமொத்தமாக நோக்குகையில் 2023 இல் மொறட்டுவை பல்கலைக்கழகத்தினால் பொறுப்பேற்கப்பட்ட டிஜிட்டல் மயப்படுத்தல் தொடர்பான முன்னெடுப்புகளானது தொழிற்பாட்டு வினைத்திறனை மேம்படுத்தல், சேவை விநியோகத்தினை மேம்படுத்தல், சகல பங்கீட்டுப்பாட்டளர்களுக்குமாக மிகவும் நெருக்கமான மற்றும் அணுகிப் பெறக் கூடிய கல்வியியல் சூழலை உற்சாகப்படுத்தல் தொடர்பான அர்ப்பணிப்புகளை பிரதிபலிக்கின்றது.

## 04 தரமான கல்வி மூலம் பல்கலைக்கழக மாணவர்களை வலுவூட்டல்

ஒவ்வொரு பீடம் மற்றும் திணைக்களத்தினது வினைத்திறன்மிக்க நிருவாக கட்டமைப்பினை உறுதி செய்கின்ற அதேவேளை, மற்றும் போதியளவு உட்கட்டமைப்பு வசதிகளை இலகுபடுத்துவதன் மூலம் பல்கலைக்கழக பட்டங்களின் தரம் மற்றும் தன்மை ஆகியவற்றை உறுதி செய்து, திறமையான மனித மூலதனத்தினை ஆட்சேர்ப்பு செய்து மற்றும் உதவிகரமான வேலை கலாசாரத்தை ஊக்குவிப்பதுடன், தனது கல்வி சார்ந்த துறை மற்றும் அதனோடு தொடர்புடைய சம்பந்தப்பட்ட புறகிரத்திய செயற்பாடுகள் ஆகியவற்றில் முன்னோடியாக திகழ்வதற்கு எதிர்பார்க்கின்ற பல் ஆளுமைமிக்க பல்கலைக்கழக மாணவர்களை உருவாக்குவதற்கு பல்கலைக்கழகம் முயற்சிக்கின்றது. பல்கலைக்கழகத்தின் மேற்படி எதிர்பார்ப்புகளை எவ்வாறு வெற்றிகரமாக அடைய முடியும் என்பதனை பின்வரும் உப தலைப்புக்கள் குறிப்பிடுகின்றன.

## 05 தொழில்முனைவோர் மற்றும் புத்தாக்க ஈடுபாடுகள்

ஆக்கத்திறன், கூட்டிணைவு, அறிவை நடைமுறை சார்ந்து பிரயோகித்தல் ஆகியவற்றை உற்சாகப்படுத்தி அதற்கேற்ற சுற்றாடலை ஊக்குவித்து அதன் மூலம் புத்தாக்க கலாசாரம் மற்றும் தொழில்முனைவோர் திறன்களை மேம்படுத்துவதற்கு மொறட்டுவை பல்கலைக்கழகம் அர்ப்பணிப்புடன் திகழ்கின்றது. தொழில்முனைவோர் சார்ந்த சிந்தனைகளை பாடத்திட்டத்தினுள் இணைத்து அடைப்பெட்டிகள், வழிகாட்டுதல் நிகழ்ச்சித்திட்டங்கள், தொழிற்துறை பங்காண்மைகள் போன்ற வளங்களுக்கான அணுகலை வழங்குவதன் மூலம், பல்கலைக்கழக மாணவர்களும் மற்றும் ஆசிரியர்களும் தமது கருத்துக்களை சாத்தியமான வியாபார சூழ்நிலைக்கு மாற்றக்கூடியவர்களாக அவர்களை வலுப்படுத்துவதை பல்கலைக்கழகம் இலக்காகக் கொண்டுள்ளது. இத்தகைய முன்னெடுப்புகள் மூலம், மொறட்டுவை பல்கலைக்கழகமானது அடுத்த தலைமுறை சார்ந்த புத்தாக்கவியலாளர்கள் மற்றும் தொழில்முனைவோர் ஆகியோரை செழிப்புறச் செய்கின்ற இயங்காற்றல்மிக்க முறையொன்றினை உருவாக்குவதற்கு எதிர்பார்க்கின்றது.

AHEAD கருத்திட்ட நிதியிடல் 2018 ஆம் ஆண்டில் மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் நிறுவனப் பிரிவு தாபிக்கப்பட்டது, இது பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப மாற்ற நிலையமாக மற்றும் புலமைச் சொத்து முகாமைத்துவ நிலையமாக சேவையாற்றி வருகின்றது. இதன் ஆரம்ப நோக்கங்களாக பல்கலைக்கழகத்தின் புலமை சொத்தினை பாதுகாப்பதுடன், ஆய்வுகூடம் சார் முறைகளை சமூக உற்பத்திகளாக மாற்றி, அதேவேளை ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை மேம்படுத்துவதாகும். பூரணத்துவமிக்க புலமை சொத்து பாதுகாப்பு, புலமைச் சொத்து முகாமைத்துவம் தொடர்பான MN 3060 போன்ற கல்விசார் முன்னெடுப்புகள், வர்த்தக மயப்படுத்தல் வழிமுறைகள், அடைபெட்டிகளை ஆரம்பித்தல் ஆகியவற்றின் மூலம் புத்தாக்கத்திற்கு இப்பிரிவு உதவுகின்றது. பல்வேறு விதமான காப்பீடுகளை மேற்கொள்ளல், புலமை சொத்து தொடர்பில் மாணவர்களுக்கு கல்வியூட்டுதல், அனுமதிப் பத்திர உடன்படிக்கைகள் பற்றிய

பேச்சுவார்த்தைகள், வளர்ச்சிக்கான உதவிகளை நல்குதல் உள்ளடங்கலாக குறிப்பிடக்கூடிய அடைவுகளுக்கு இந்த முயற்சிகள் இட்டுச் சென்றன. ஒட்டுமொத்தமாக பல்கலைக்கழகத்தின் புத்தாக்கமானது தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியான சந்தைகளையும் அடைவதற்கு உறுதிப்படுத்துவதற்கான முக்கிய வகிபாகத்தினை நிறுவனப் பிரிவு வகிக்கின்றது. இதன் மூலம் புத்தாக்கம், கல்வி, பொருளாதார வளர்ச்சி, நிலைபேறான உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பான நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளின் பூகோளத் தன்மைக்கு ஏற்ப இலங்கை சமுதாயம் முன்னேறுவதற்கு பங்களிப்புச் செய்கின்றது.

தற்போது, பல்கலைக்கழகத்தின் 30 ஆக்கவுரிமை விண்ணப்பங்கள் காப்புரிமை மானியங்களுக்காக தேசிய புலமைச்சொத்துக்கள் அலுவலகத்தின் (NIPO) மூலம் செயல்முறைக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றன. பல்வேறு வகையான பொறியியற் துறைகளில் மூன்று காப்புரிமை விண்ணப்பங்களை தாக்கல் செய்ததன் மூலம் புத்தாக்கம் தொடர்பில் கணிசமான முயற்சிகளை மொறட்டுவை பல்கலைக்கழகம் மேற்கொண்டது. முதல் பிரயோகமாக "உணரி இல்லாத உணர் கருவிகள் மற்றும் இயந்திர கற்றல் நுட்பம் ஆகியவற்றை பயன்படுத்தி மேற்பரப்பு முறையினை இனங் காண்பதன் மூலமான பொருட்களை வகைப்படுத்தல்", இது மின்னியல் பொறியியல் திணைக்களத்தின் கீழ் வருவதுடன் இயந்திர கற்றலை ஒருங்கிணைப்பதன் மூலம் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்கான மொறட்டுவை பல்கலைககழகத்தின் அர்ப்பணிப்புகளை இது புலப்படுத்துகின்றது. இரண்டாவது பிரயோகமாக, "அவசர கால வாய்வு ஒழுங்குபடுத்தல் வெளியேற்றல் முறை" இதனை இயந்திரவியல் பொறியியல் திணைக்களம் விருத்தி செய்தது, வாய்வு ஒழுங்குபடுத்தல் முறைகளில் முக்கியமான பாதுகாப்பு நடைமுறைகள் தொடர்பில் இது செயற்படுகின்றது. சிவில் பொறியியல் திணைக்களமானது "உள்ளக பதப்படுத்தல் கொங்ரீட் சேர்க்கை" தொடர்பான பிரயோகம் ஒன்றை மேற்கொண்டது. இது கொங்ரீட் கட்டுமாணப் பணிகளின் நீண்ட காலம் நிலைத்திருத்தல் மற்றும் செயலாற்றுகை ஆகியவற்றை மேம்படுத்துவதை இலக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது. இந்த காப்புரிமை சார் பிரயோகங்களானது ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி தொடர்பான பல்கலைக்கழகத்தின் அர்ப்பணிப்புகளை பிரதிபலிப்பதுடன், பொறியியல் துறையில் சிறப்பான கல்வி மற்றும் நடைமுறைப் பிரயோகங்கள் ஆகியவற்றிற்கு பங்களிப்புச் செய்கின்றது.

தொழிலுரிமைத்துவம் சார் சூழலொன்றை உருவாக்குவதற்கான பல்கலைக்கழகத்தின் முயற்சி தொடர்பான செயற்பாடுகள் ஊடாக ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள புலமைச் சொத்து பற்றிய ஆலோசனை குழு (IPAC), பல்கலைக்கழக கைத்தொழில்துறை இணைப்புக் குழு (UIIC), கருவாக்கல் சார் திணைக்களங்கள் மற்றும் பீடங்களில் உள்ள கருவாக்கல்சார் நிறுவனங்களை வலுவூட்டிப் பாதுகாக்கும். இவ் அனைத்து அடிப்படை அம்சங்களும் குறிப்பாக எமது பட்டதாரிகள் "வேலை தேடுபவராக அல்லாது வேலை உருவாக்குபவர்" எனும் நிலையை உருவாக்கவும் மற்றும் எமது பணியாட்டொகுதி உறுப்பினர்களுக்கு வணிகமயப்படுத்தக்கூடிய அவர்களின் புத்தாக்கங்களுக்கு ஆக்கவுரிமை சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்கும் இம் முயற்சிகள் பங்களிப்புச் செய்யும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

### 4.1.1 EXMO 2023 – தொழில்நுட்ப கண்காட்சி

EXMO 2023, ஆனது மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் முக்கியமான தொழில்நுட்ப கண்காட்சியாகும், இது 2023 ஜுலையில் இடம்பெற்றது. பொறியியல் பீடமானது ஏனைய பீடங்களான கட்டிடக்கலை, தகவல் தொழில்நுட்பம், வியாபாரம், மருத்துவம் ஆகியவற்றுடன் கூட்டிணைந்து மேற்கொண்டதோடு மொறட்டுவை பல்கலைக்கழகமானது EXMO 2023 ஐ ஏற்பாடு செய்தது, இது பீடம், தொழிற்துறை, சமூகம் ஆகியவற்றுக்கிடையிலான உறுதியான தொடர்புகளை ஏற்படுத்துவதை இலக்காகக் கொண்டு ஏற்பாடு செய்யப்பட்ட விசேட தொழில்நுட்ப கண்காட்சியாகும்.

நாட்டின் தொழில்நுட்ப மேம்பாட்டிற்கு முக்கிய பங்களிப்புச் செய்பவர் என்ற முறையில், மொறட்டுவை பல்கலைக்கழகமானது அதன் திறமையான பல்கலைக்கழக மாணவர்களின் புத்தாக்க ரீதியான கருத்துக்களை பரந்த சமூகத்திற்கு எடுத்துச் செல்வதற்கான பொறுப்பினை ஏற்றதோடு வளர்ந்து வருகின்ற தொழில்நுட்பங்கள் பற்றிய விழிப்புணர்வையும் ஏற்படுத்தியது. நாட்டின் அபிவிருத்திக்காக

சகல பீடங்களினாலும் வழங்கப்படுகின்ற அர்ப்பணிப்புகளுக்கு இந்த கண்காட்சி சான்றாக திகழ்ந்தது. அத்தோடு உள்ளூர் சமூகத்தின் மனதைக் கவர்ந்ததுடன் இத்துறை சார்ந்த அண்மைக் கால போக்குகள் பற்றிய கலந்துரையாடல்களையும் சமூகத்தில் ஏற்படுத்தியது.

பாடசாலை மாணவர்கள், பல்வேறு விதமான பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த பல்கலைக்கழக மாணவர்கள், பொதுமக்கள் ஆகியோரது தொழில்நுட்ப அறிவினை மேம்படுத்துவதை இலக்காகக் கொண்டு தொடர்ச்சியான கல்வி சார் அமர்வுகள் இந்த கண்காட்சியில் உள்ளடக்கப்பட்டிருந்தது. இந்த அமர்வுகளானது துறை சார்ந்த நிபுணர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் ஆர்வமிக்க பல்கலைக்கழக மாணவர்கள் ஆகியோரினால் நடாத்தப்பட்டது. அண்மைக் கால போக்குகள் பற்றிய பெறுமதியான அறிவினையும் மற்றும் தொழில்நுட்ப துறையின் மேம்பாடுகள் பற்றியும் பெறுமதியான கருத்துக்கள் இங்கு வழங்கப்பட்டன. இந்த அறிவுப் பரிமாற்ற களத்தினை ஆரம்பித்து வைத்ததனால் வளர்ந்து வருகின்ற தொழில்நுட்பங்கள் பற்றிய காத்திரமான புரிதல்கள் மற்றும் சமூகத்தின் மீது இதனால் ஏற்படக்கூடிய தாக்கங்கள் பற்றிய அறிவினை பங்குபற்றுநர்கள் மத்தியில் வலுவூட்டியது.

### 4.1.2 இலங்கையில் முதலாவது போர்முலா மாணவர் மின் கார்

போர்முலா மாணவர் என்பது ஒரு சர்வதேச கருத்திட்டமாகும். இதில் மொறட்டுவை பல்கலைக்கழகத்தினைச் சேர்ந்த இயந்திர பொறியியல் துறை மாணவர்கள் பங்குபற்றுவதற்கும் போட்டியிடுவதற்கும் அனுமதிக்கப்பட்டனர். உலகளாவிய ரீதியில் இருக்கின்ற வெளிநாட்டு மாணவக் குழுக்களுடன் இந்நிகழ்வின் பொழுது போட்டியில் ஈடுபடுவதற்கான வாய்ப்புகள் வழங்கப்பட்டதோடு நிலையான மற்றும் இயங்காற்றல்மிக்க நிகழ்வுகளுக்கு முகங் கொடுக்கும் முகமாக போர்முலா வகையிலான தனி இருக்கை கார் ஒன்றினை உருவாக்குவதற்கும் புத்தாக்க ரீதியாக அதனை வடிவமைப்பதற்கும் தேவைப்படுத்தப்பட்டது. 2014 ஆம் ஆண்டிலிருந்து பல்கலைக்கழகமானது போர்முலா மாணவர் நிகழ்வில் ஈடுபட்டது. போர்முலா பாரத் 2022 போட்டியில் நேரடியாக பங்குபற்றுவதை நோக்காகக் கொண்டு பெல்கொன் E1 இறுதிப்படுத்தும் முகமாக டீம் பெல்கொன் E பந்தயமானது தீர்மானிக்கப்பட்டது. மெய்நிகர் போர்முலா பாரத் போட்டிகளில் பல்வேறு விதமான விருதுகளை குழு வென்றது. 2022 இல் நடைபெற்ற போர்முலா பாரத் மெய்நிகர் போட்டியில் இரண்டாம் இடத்தினை பெற்றுக் கொண்டமை குறிப்பிடக்கூடிய ஓர் அடைவாகும். 2023 ஆம் வருடத்தில், போட்டிகளுக்கான நிதியை திரட்டும் முகமாக 2023 ஆம் ஆண்டில் பல்வேறு வகையான பிரச்சாரப் பணிகளை அணி மேற்கொண்டது. இதற்கான நிதியினை பல்வேறு வகையான கைத்தொழில் துறையைச் சேர்ந்த அனுசணையாளர்கள் மற்றும் பொதுமக்கள் வழங்கினர்.

போர்முலா மாணவர் கலாசாரம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி அதனை செழுமைப்படுத்துகின்ற இலக்கிற்கு ஏற்ப சர்வதேச மோட்டார் விளையாட்டு தளத்தில் இலங்கை பிரதிநிதித்துவம் செய்வது குழுவின் முயற்சியாகும். அதன் படி இவர்கள் இலங்கையின் பல்வேறு வகையான முன்னணி பொறியியல் கண்காட்சிகளில் பங்குபற்றியதோடு, 2023 ஜனவரியில் INCO மற்றும் 2023 ஒக்டோபரில் TECHNO ஆகியவற்றில் பங்குபற்றினர். இந்த கருத்திட்டத்தில் 30,000 இற்கும் மேற்பட்டவர்கள் பங்குபற்றினர்.

இலங்கையில் முதலாவது மின்சார கார் பெல்கன் E1 ஆனது EXMO 2023 கண்காட்சியின் பொழுது பெல்கொன் E1 ஆரம்பித்து வைக்கப்பட்டது. இது முக்கிய அடைவுகளில் ஒன்றாகும். மட்டுப்படுத்தப்பட்ட வளங்கள் காணப்பட்ட பொழுதிலும் கூட மிகச் சிறப்பான பெறுபேறுகளை அடைந்ததன் விளைவாக கிடைக்கப் பெற்ற நம்பிக்கையின் காரணமாக புதிய வெளிநிலை தொடர்புகளை வெற்றிகரமாக குழு தாபித்தது.

2023 இறுதியில், போட்டி தராதர மட்டத்திற்கு காரினை வெற்றிகரமாக குழு மேம்படுத்தியது. அத்தோடு ரத்மலானை, கொழும்பு சர்வதேச விமான நிலையத்தில் காரிற்கான முழுமையான செயலாற்றுகை சோதனையை நடாத்தியது. போர்முலா மாணவர் போட்டிகளுக்கான வேகத்தை அதிகரித்தல், பிரேக் பிடித்தல், ஒடோ குரொஸ், ஸ்கிட் பேட் நிகழ்வுகள் ஆகியவற்றையும் நடாத்தியது.

## குழு விளையாட்டுக்கள் உள்ளடங்கலாக விளையாட்டுப் போட்டி

மொறட்டுவை பல்கலைக்கழகம் அதனது விளையாட்டு போட்டிகள் மற்றும் பொழுது போக்கு செயற்பாடுகளின் பொழுது சிறப்பான பங்களிப்புகளை வழங்கியதோடு, சிறப்பான அடைவுகளையும் வெளிப்படுத்தியது. வருடம் முழுவதும் பல்கலைக்கழகத்தின் விளையாட்டு குழுக்களானது தனித்துவமான திறன் மற்றும் அர்ப்பணிப்புகளை வெளிப்படுத்தியதோடு பல்கலைக்கழகத்திற்கு பல்வேறு வகையான வெற்றிக்கேடயங்களையும் கொண்டு வந்தனர்.

இலங்கை பல்கலைக்கழக விளையாட்டு அமைப்பின் (SLUSA) சார்பாக இலங்கை கிழக்கு பல்கலைக்கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட 2023, 14-வது இலங்கை பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டிகளின் பொழுது மொறட்டுவை பல்கலைக்கழகமானது தனித்துவமான திறன்கள் மற்றும் அர்ப்பணிப்புகள் ஆகியவற்றை வெளிப்படுத்தியது. இலங்கை பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டியின் (SLUG) பொழுது மொறட்டுவை பல்கலைக்கழகமானது இரண்டாவது இடத்தினை பெற்றுக் கொண்டதுடன் (2023) பல்வேறு வகைகளின் கீழ் பல வெற்றிக் கேடயங்களை பெற்றுக் கொண்டது.

சம்பியன்ஷிப்ஸ்

SLUG பட்மின்டன் சம்பியன்ஷிப் |ஆண்| SLUG
பேஸ் போல் சம்பியன்ஷிப்
SLUG கூடைப்பந்து சம்பியன்ஷிப் SLUG
சதுரங்க சம்பியன்ஷிப் |ஆண்|
SLUG படகோட்டல் சம்பியன்ஷிப் |ஆண், பெண்|
SLUG டேபல் டென்னிஸ் சம்பியன்ஷிப் |ஆண், பெண்| SLUG
டேக்வான்டோ சம்பியன்ஷிப் |ஆண், பெண்| SLUG டேபல்
டென்னிஸ் சம்பியன்ஷிப் |ஆண்|

2வது இடங்கள்

UoM சதுரங்க அணி |பெண்
UoM வலைப்பந்து அணி UoM
நீச்சல் அணி |ஆண்|

3வது இடங்கள்

UoM கரம் அணி |பெண்| UoM கிரிக்கெட் அணி UoM
ஹொக்கி அணி
UoM டென்னிஸ் அணி |பெண்|



மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் பல்வேறு விதமான விளையாட்டு நிகழ்வுகளில் பெற்றுக் கொண்ட அடைவுகளின் காரணமாக மொறட்டுவை பல்கலைக்கழகமானது சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டது. குறிப்பாக கணனி விஞ்ஞானம் மற்றும் பொறியியல் பீடங்களைச் சேர்ந்த இரண்டு பல்கலைக்கழக மாணவர்கள் முதலாவது தெற்காசிய சர்வதேச திறந்த டேக்வான்டோ சம்பியன்ஷிப் போட்டிகள் 2023 இல் தங்கம் மற்றும் வெள்ளிப் பதக்கங்களை பெற்றுக் கொண்டனர்.

மேலதிகமாக, மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் ஆண்களுக்கான எட்டு மற்றும் நான்கு பேரைக் கொண்ட படகோட்டப் போட்டியில் வெண்கலப் பதக்கத்தினைப் பெற்றுக் கொண்டனர். இது மலேசியாவில் இடம்பெற்றது, சர்வதேச ரீதியாக இவர்களது திறமை வெளிப்பட்டது. மேலும் கணனி விஞ்ஞான திணைக்களத்தைச் சேர்ந்த பல்கலைக்கழக மாணவர் ஒருவர் ஆண்களுக்கான கூடைப்பந்து அணியில் இலங்கையை பிரதிநிதித்துவம் செய்தார். இந்த போட்டி ரெட் புல் 3x3 உலகக் கோப்பை. இது 2023 இல் சேர்பியாவில் இடம்பெற்றது. இவர் ஆசிய கோப்பை தேசிய அணியில் FIBA 3x3 அணியில் உறுப்பினராக இருந்தார். வரலாற்றில் முதல் முறையாக சுற்றுப் போட்டி ஒன்றில் பெற்றுக் கொண்ட தகைமையாகும். அத்தோடு இந்தப் போட்டில் 12 ஆவது இடத்தைப் பெற்றுக் கொண்டார். மேலும் பங்களதேஷ் இல் இடம்பெற்ற ஆசிய வலய சதுரங்கப் போட்டியில் மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் தகவல் தொழில்நுட்ப பீடத்தினை சேர்ந்த பல்கலைக்கழக மாணவரொருவர் இலங்கையை பிரதிநிதித்துவம் செய்தார்.

மொறட்டுவை பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாணவர்கள் பல்வேறு விதமான தேசிய விளையாட்டு நிகழ்வுகளில் குறிப்பிடக்கூடிய அடைவுகளை பெற்றுக் கொண்டனர். இதன் மூலம் தமது திறமைகளையும் அர்ப்பணிப்புகளையும் வெளிப்படுத்தினர். பொறியியல் பீடத்தைச் சேர்ந்த இரண்டு மாணவர்கள் 2023 இல் நடைபெற்ற 71 ஆவது தேசிய பட்மின்டன் போட்டியில் ஆண்களுக்கான இருவரைக் கொண்ட முதல் காலிறுதிப் போட்டியில் பங்குபற்றினர், அதேபோல் கணனி விஞ்ஞான மற்றும் பொறியியல் திணைக்களத்தின் ஆண்களுக்கான கூடைப்பந்து

போட்டியில் இராணுவக் கமாண்டருக்கான சவால் கேடயத்தைப் பெற்றுக் கொண்டனர். மேலும் 2023 தேசிய இளைஞர் விளையாட்டு விழாவின் பொழுது வெற்றிக் கேடயத்தைப் பெற்றுக் கொண்டனர் மற்றும் (தேசிய விளையாட்டு விழா 2023) மேலும் தனியாட்களுக்கான போட்டியிலும் மொறட்டுவை பல்கலைக்கழக மாணவர்கள் சிறப்பு தேர்ச்சிகளை வெளிப்படுத்தினர். 77 ஆவது தேசிய மேசை பந்து வெற்றிக் கேடயப் போட்டியில் தேசிய இருவர் கலப்பு வெற்றிக் கேடயத்தைப் பெற்றுக் கொண்டனர். மேலும் 2023 இல் நடைபெற்ற இலங்கை பெண்களுக்கான தேசிய சதுரங்க வெற்றிக் கேடயப் போட்டியில் தகவல் தொழில்நுட்ப பீடத்தைச் சேர்ந்த பல்கலைக்கழக மாணவர் ஒருவர் இரண்டாவது இடத்தை பெற்றுக் கொண்டார். பல்வேறு விதமான குழுப் போட்டிகளில் தம்மை பிரதிநிதித்துவம் செய்ததோடு மொறட்டுவை பல்கலைக்கழக மாணவர்கள் தேசிய ஹொக்கி வெற்றிக் கேடயப் போட்டியிலும் மேசைப் பந்து வெற்றிக் கேடயப் போட்டியிலும் பங்குபற்றினர், தேசிய விளையாட்டு அரங்கில் பல்கலைக்கழகத்தின் பிரசன்னத்தை இவர்கள் வெளிப்படுத்தினர்.

## 4.3 ஆக்கபூர்வமான வேலைகள்

மொறட்டுவை பல்கலைக்கழகமானது போட்டிசார் விளையாட்டுகளில் மிகச் சிறப்பாக காணப்பட்டது மாத்திரமல்லாது அதனது மாணவர்களுக்கு பல்வேறு வகையான பொழுது போக்கு செயற்பாடுகளையும் வழங்கியது, பல்கலைக்கழகத்தினுள் இது ஆரோக்கியமாக சுறுசுறுப்புமிக்க வாழ்க்கை முறையை மேம்படுத்தியது. இத்தகைய பொழுது போக்கு செயற்பாடுகளானது விளையாட்டுகளில் பல்கலைக்கழகத்தின் பெட்டி, பல்கலைக்கழகத்தினுள் பல்திறன்மிக்க இயங்காற்றல்மிக்க சமுதாயத்தை உருவாக்குவதற்கும் பங்களிப்புச் செய்தன. பல்கலைக்கழகத்தின் திணைக்களங்கள், பீடங்கள், மாணவர் கழகங்கள், ஏனைய அமைப்புகள்
ஆகியன வருடம் முழுவதும் பல்வேறு வகையான நிகழ்வுகளை ஏற்பாடு செய்தன. இதன் மூலம் பல்கலைக்கழகத்தின் இயங்காற்றல்மிக்க சமுதாயத்தை வெளிப்படுத்தியது.

இவற்றுள் முக்கிய நிகழ்வுகளுள் ஒன்றாக மொறட்டுவை பல்கலைக்கழக தடகள குழுவானது களனிப் பல்கலைக்கழகம் மற்றும் வயம்ப பல்கலைக்கழகம் ஆகியவற்றுடன் இணைந்து ஏற்பாடு செய்த வருடாந்த நிகழ்வான பிளையிங் சூ 2023 ஆகும், ஏனைய பல்கலைக்கழகங்களுடன் தோழமையை ஏற்படுத்தும் நோக்கில் இது ஏற்பாடு செய்யப்பட்டது.

கலாசார நிகழ்வுகளை மேம்படுத்துவதற்காக குறிப்பிடக்கூடிய வகிபாகத்தினை சிவில், பொறியியல் திணைக்களம் வகித்தது. இது சிங்கள மற்றும் தமிழ் புதுவருட விழா நிகழ்ச்சித்திட்டம் ("சிவில் அபே அவுருது"), தைப்பொங்கல் விழா, ரமதான் விழா, கிரிஸ்மஸ் ஒளிவிழா நிகழ்ச்சித்திட்டம், பிரித் ஓதுதல் விழா, தானம் வழங்கும் வைபவங்கள் போன்ற பல்வேறு நிகழ்வுகளை நடாத்தியது. இத்தகைய நிகழ்வுகள் கலாசார பன்மைத்துவத்தை ஊக்குவித்தது மாத்திரமல்லாது மாணவர்கள் மத்தியில் கூட்டிணைவையும் ஏற்படுத்தியது. இந்த நிகழ்வுகளுக்கு மேலதிகமாக, இசை சார்ந்த திறன்களை மேம்படுத்தும் முகமாக பல்கலைக்கழகத்தின் இசை சார் கழகங்கள் முக்கியமான வகிபாகத்தை வகித்தன. கிளசிகல் இசை கழகமானது வைநாதி 2023 இசை நிகழ்வொன்றினை ஏற்பாடு செய்தது. அதேவேளை வசதிகள் முகாமைத்துவ திணைக்களமானது டெலன்ட் சினெஜி 2023 என்ற நிகழ்வினை நடாத்தியது. இதன் மூலம் இளம் மாணவர்கள் தமது திறன்களை வெளிப்படுத்துவதற்கான களம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது. ஏனைய இசை நிகழ்வுகளுள் "புறவற ரங்க மடல", "சிவில் பாதுர 2023", மற்றும் 'சரசவி கீ சிசில', ஆகியனவாகும். இவை பல்கலைக்கழக வளாகத்தினுள் இடம்பெற்றன. சமுதாய வெளிக்கல நிகழ்ச்சித்திட்டங்களிலும் உறுதியான அர்ப்பணிப்பு பல்கலைக்கழகத்திடம் காணப்பட்டது. சிவில், பொறியியல் துறை திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட "சுகஸ்த" நிகழ்ச்சித்திட்டமானது கல்வி சார் வசதிகளை மேம்படுத்தும் முகமாக தெரிவு செய்யப்பட்ட 7 பாடசாலைகளில் நடைபெற்றது.

## 05 பல்கலைக்கழகத்திற்கு சர்வதேச ரீதியாக அங்கீகாரத்தை ஏற்படுத்துதல்

17 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி இலக்கினை அடைவதற்கு 2023 ஆம் ஆண்டு காலப் பகுதியில் சர்வதேச மயப்படுத்தல் தொடர்பில் மொறட்டுவை பல்கலைக்கழகமானது

தொடர்ச்சியாக சிறப்பான முக்கியத்துவங்களை வழங்கியது. இதற்காக ஆக்கபூர்வமான பங்காண்மைகள் மற்றும் நிலைபேறான அபிவிருத்திக்கு கூட்டிணைவுகளை ஏற்படுத்தல் ஆகியவற்றை மேற்கொண்டது.

2023 ஆம் ஆண்டு காலப் பகுதியினுள் சர்வதேச மயப்படுத்தல் தொடர்பில் மொறட்டுவை பல்கலைக்கழகமானது தொடர்ச்சியாக முக்கியத்துவங்களை வழங்கியது. பல்கலைக்கழகத்தினை பல்துறை திறமைமிக்க நிறுவனமாக மாற்றுவதற்கு, சர்வதேச நிறுவனங்களுடனான பங்காண்மை அவசியம் என பல்கலைக்கழகம் நம்புகின்றது. இதற்காக அறிவு, தொழில்நுட்பம், வளங்கள் ஆகியன பரிமாறிக் கொள்ளப்படுவது அவசியமாகும். எதிர்வரும் தசாப்தங்களில் முகங்கொடுக்கின்ற சவால்களை முகாமைத்துவம் செய்வது மிக முக்கியம் என பல்கலைக்கழகம் புரிந்துள்ளது. இதற்காக கூட்டிணைந்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுவது அவசியம். இவை எமது திட்டத்தில் உள்ளடக்கப்படல் வேண்டும்.

இறுதியாக கூட்டிணைந்த பட்டதாரி நிகழ்ச்சித்திட்டங்களை தாபித்தல், சர்வதேச மாணவர்களை கவர்தல், சர்வதேச விடயங்களை இலகுபடுத்தல், வெளிநாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களில் எமது மாணவர்களுக்கு இடங்களை பெற்றுக் கொள்ளுதல் போன்ற பல்வேறு வகையான இலக்குகளை நாம் பொறுப்பேற்றோம். மேலும் எமது சர்வதேச ரீதியான பங்காண்மைகளை மேம்படுத்துவதற்கு பல்வேறு வகையான சர்வதேச நிறுவனங்களுடன் உடன்படிக்கைகளையும் மற்றும் புரிந்துணர்வு உடன்படிக்கைகளையும் காத்திரமாக மொறட்டுவை பல்கலைக்கழகம் மேற்கொண்டு வருகின்றது.

2023 ஆம் ஆண்டில் சர்வதேச ரீதியாக கல்வியியல் சார் பிரசன்னம் மற்றும் பங்காண்மைகள் ஆகியவற்றை விரிவாக்குவதற்காக கணிசமான முன்னேற்றங்களை மொறட்டுவை பல்கலைக்கழகம் மேற்கொண்டது. தொழில்நுட்பத்திற்கான நகோகா பல்கலைக்கழகம், இன்சியோன் தேசிய பல்கலைக்கழகம், பிரயோக விஞ்ஞானத்திற்கான என்ஸ்பேச் பல்கலைக்கழகம், மியாசாக்கி பல்கலைக்கழகம், சேன்டோங் பல்கலைக்கழகம், RMIT அவுஸ்திரேலியா, டீகிங் பல்கலைக்கழகம், கொன்ஸ்டென்ஸ் பல்கலைக்கழகம், மாரா தொழில்நுட்ப பல்கலைக்கழகம், மற்றும் சைட்மா பல்கலைக்கழகம் உள்ளடங்கலாக சர்வதேச பல்கலைக்கழகங்களுடன் 27 இற்கும் மேற்பட்ட காத்திரமான கூட்டிணைவுகளை மொறட்டுவை பல்கலைக்கழகம் தற்போது பேணி வருகின்றது. ஒன்றிணைந்த ஆய்வு கருத்திட்டங்கள், மாணவர்கள் மற்றும் பணியாட்டொகுதி பரிமாற்றங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இத்தகைய கூட்டிணைவுகள் காணப்படுகின்றன.

சஞ்சிகை வெளியீடுகள், ஆய்வு வெளியீடுகள் உள்ளடங்கலாக PhD நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குவதற்காக RMIT அவுஸ்திரேலியா மற்றும் QUT ஆகியவற்றுடன் பங்காண்மைகளை துணி மற்றும் ஆடை பொறியியல் துறை திணைக்களம் பங்காண்மைகளை மேற்கொண்டுள்ளது. இலங்கைக்கான CCA-DRR ஆய்வு வழிமுறையொன்றினை விருத்தி செய்வதற்காக Erasmus+ ICM நிதியிடப்பட்ட CCA-DRR நிகழ்ச்சித்திட்டம் மூலம் ஐக்கிய இராச்சியத்தை சேர்ந்த ஹடஸ்பீல்ட் பல்கலைக்கழகத்துடன் கூட்டிணைவுகளை கட்டிடக்கலை திணைக்களம் மேற்கொண்டது.

மேலும், சிங்கப்பூரின் PBA முறைகள் தனியார் நிறுவனத்துடன் புரிந்துணர்வு உடன்படிக்கையினை மின்சார பொறியியல் திணைக்களம் கைபொப்பமிட்டது. அதேவேளை தாய்லாந்தில் உள்ள சிரின்ஹோர்ன் சர்வதேச தொழில்நுட்ப நிறுவகத்துடன் பணியாட்டொகுதி பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டம் ஒன்றினை சிவில் பொறியியற் துறை திணைக்களம் மேற்கொண்டது. இதன் விளைவாக கல்வி சார் முடிவுகள் வெற்றிகரமாக விநியோகிக்கப்பட்டன. ஐரோப்பிய சங்கத்தினால் நிதியிடப்பட்ட தொழில்நுட்பத்திற்கான KTH ரோயல் நிறுவனத்துடன் பங்காண்மையுடன் சுற்று பொருளாதார நிகழ்ச்சித்திட்டங்களுக்காக EUSL MSc நிகழ்ச்சித்திட்டம் ஒன்றில் இரசாயன மற்றும் செயன்முறை சார் பொறியியல் திணைக்களம் மேற்கொண்டது.

சான்றுப்படுத்தல் மற்றும் மீளாய்வு நிகழ்ச்சித்திட்டங்கள் ஆகியவற்றை துரிதப்படுத்தும் முகமாக 2023 ஆம் ஆண்டில் பல சர்வதேச மீளாய்வாளர்கள் விஜயம் செய்தனர். கூட்டிணைந்த ஆய்வு கருத்தரங்குகள், பணியாளர் மற்றும் மாணவர் பரிமாற்றங்கள், விஜயங்கள் மற்றும் கூட்டிணைந்த கல்வி சார் நிகழ்ச்சித்திட்டங்கள் உள்ளடங்கலாக சர்வதேச கல்வியியலாளர்கள், சர்வதேச கூட்டிணைவு விரிவுரையாளர்கள்

ஆகியோரினால் சிறப்பு
விரிவுரைகளும் பேச்சுகளும்
இடம்பெற்றன.

டிகின் பல்கலைக்கழகம்,
தொழில்நுட்பத்திற்கான ரோயல் மெல்போன்
நிறுவகம் (RMIT), வொலோங்கொங்
பல்கலைக்கழகம் உள்ளடங்கலாக நன்மதிப்பு
பெற்ற அவுஸ்திரேலிய
பல்கலைக்கழகங்களுடன் கூட்டிணைந்து

2023 ஆண்டு வரை வெளிநாட்டு உயர் கல்வி நிறுவனங்களுடனும் (HEIS) பல்கலைக்கழகங்களுடனும் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைகள்/ புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் (MoUs) (செயலாக்கமுள்ளவை)




2023 ஆண்டில் வெளிநாட்டு உயர் கல்வி நிறுவனங்களுடனும் (HEIS) பல்கலைக்கழகங்களுடனும் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைகள்/ புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் (MoUs)




அட்டவணை 3: 2023 இல் மொரோக்கோ மேலாண்மையால் கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தங்கள் மற்றும் புரிந்துணர்வு

# மேலாண்மை கலந்துரையாடல்

## பல்கலைக்கழக செயல்பாடுகள் பற்றிய கண்ணோட்டம்

மொறட்டுவை பல்கலைக்கழகமானது PhD நிகழ்ச்சித்திட்டங்களை வெற்றிகரமான மேற்கொண்டது. தற்சமயம் 20 இற்கு மேற்பட்ட மாணவர்கள் இத்தகைய கூட்டிணைந்த PhD நிகழ்ச்சித்திட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். RMIT மற்றும் மொறட்டுவை பல்கலைக்கழகம் ஆகிய இரண்டிலுமிருந்து மொறட்டுவை பல்கலைக்கழகத்தினைச் சேர்ந்த முதலாவது PhD பட்டதாரியாக டொக்டர் ஹர்சனி மல்லவஆரச்சி திகழ்ந்தார். 2023 ஆம் ஆண்டில் அடையப்பட்ட முக்கியமான அடைவொன்றாகும்.

5.1 உலகளாவிய கல்விசார் ஒத்துழைப்புக்களை வலுப்படுத்தும் நோக்கத்துடன் பல முக்கியமான உடன்படிக்கைகள் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் (MoUs) கைச்சாத்திட்டது.

சர்வதேச கல்விசார் மற்றும் ஆராய்ச்சி ஒத்துழைப்புக்களை வலுப்படுத்தும் நோக்கத்துடன் மொறட்டுவை பல்கலைக்கழகம் 2023 ஆண்டில் பல முக்கியமான உடன்படிக்கைகளிலும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களிலும் (MoUs) கைச்சாத்திட்டது.

அட்டவணை 3:2023 ஆண்டில் UoM மூலம் கைசாத்திடப்பட்ட உடன்படிக்கைகள் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் (MoU)

அட்டவணை 4: 2023 ஆண்டில் சர்வர்தேச இணைக்கப்பாடுகள்

| நிறுவனம்/அமைப்புக்கள் | ஒப்பந்த வகை | கவனம்செலுத்தல் |
|---|---|---|
| ஹெசெல்ட பல்கலைககழகம், பெல்ஜியம் | புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் | கல்விசார் மற்றும் ஆராய்ச்சி சார்பான ஒத்துழைப்புக்கான கட்டமைப்பு |
| கட்டடக்கலை மற்றும் தொழில்நுட்ப ஷியான் பல்கலைக்கழகம், (XAUT) சீனா | புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் | கலாச்சார, கல்வி மற்றும் ஆராய்ச்சி ஒத்துழைப்பு: கூட்டு ஆராய்ச்சி, பீட பரிமாற்றல்கள், பகிர்ந்துகொண்ட வளங்கள் |
| த மொரிடினரா இன்ஸ்ரிடியுட் ஐஅமெ. | உப உத்தரவாத லாகுனா நிதி உடன்படிக்கை | கல்விசார் மற்றும் விஞ்ஞானபூர்வ ஒத்துழைப்பு: இணைந்த ஆராய்ச்சி மற்றும் கல்விசார் பரிமாறல்கள் |
| பெலாருஷியா அரச மருத்துவ பல்கலைக்கழகம், பெலாருஸ | உடன்படிக்கை | கல்விசார் மற்றும் விஞ்ஞானபூர்வ ஒத்துழைப்பு மற்றும் பரிமாறல்களை விருத்திசெய்தல் |
| ரீடிங் பல்கலைக்கழகம் ஐக்கிய இராச்சியம் | புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் | ஆராய்ச்சி ஒத்துழைப்பு மற்றும் கல்விசார்ந்த ஆரம்பித்தல் |
| இந்தியா தொழில்நுட்ப நிறுவகம் மும்பாய் | புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் | பொறியியல் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த ஆராய்ச்சி மற்றும் கல்விசார் பரிமாறல் ஒத்துழைப்புக்கள் |
| யுனெஸ்கோ - தலைமை உடன்படிக்கை | உடன்படிக்கை | தெற்காசியாவில் நிலைபேறான நீர்வள முகாமைக்கான யுனெஸ்கோ தலைமையை மொறட்டுவை பல்கலைக்கழகத்தில் உருவாக்குதல் |

5.2 உலகளாவிய கல்விசார் கூட்டாண்மைகளை விரிவாக்கும் நோக்கத்துடன் சர்வதேச விஜயங்கள் மற்றும் பரிமாறல்கள்.

2023 ஆண்டில் சர்வதேச இணக்கப்பாடுகள் அதன் கல்விசார் வலையமைப்பை விரிவுபடுத்துவதற்கும் அர்த்தமுள்ள ஒத்துழைப்புக்களை வளர்ப்பதற்கும் முக்கியத்துவமளித்துள்ளது:

அட்டவணை 4: 2023 ஆண்டில் சர்வர்தேச இணக்கப்பாடுகள்

| நிறுவனம்/அமைப்புக்கள் | பிரதானமாக கவனம்செலுத்தம் பகுதிகள் |
|---|---|
| முகாமைத்துவ அறிவியல்கள் சார் லாஹோர் பல்கலைக்கழகம் (LUMS) பாகிஸ்தான் | சாத்தியமான ஒத்துழைப்புக்கள், மாணவர் மற்றும் பணியாளர் பரிமாறல்கள், இலங்கை மாணவர்களுக்கான அல்லாமா இக்பால் புலமைப்பரிசில்கள் |
| கட்டடக்கலை மற்றும் தொழில்நுட்ப ஷியான் பல்கலைக்கழகம், (XAUT) சீனா | கலாச்சார, கல்வி, மற்றும் ஆராய்ச்சி ஒத்துழைப்புக்கள், கூட்டு ஆராய்ச்சிகள், பீட பரிமாறல்கள் சார்பான மெய்நிகர் புரிந்துணர்வு ஒப்பந்தம் (Virtual MoU) |

| | |
|---|---|
| ராஜகிரி சமூக விஞ்ஞானங்கள் சார் கல்லூரி இந்தியா | பீட மற்றும் மாணவர் பரிமாறல்கள், ஆய்வு ஒத்துழைப்புக்கள், சமூக விஞ்ஞானங்கள் சார் கைத்தொழில்துறை வெளிக்காட்டல் |
| குயின்ஸ்லாந்து தொழில்நுட்ப பல்கலைக்கழகம் (QUT) அவுஸ்திரேலியா | பணியாளர் மற்றும் மாணவர் பரிமாறல்கள், கூட்டு ஆராய்ச்சி கருத்திட்டங்கள், தொழில்சார் பயிற்சி |
| விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப ஷன்டோங் பல்கலைக்கழகம் மற்றும் லினி பல்கலைக்கழகம், சீனா | கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்கள், பீட பரிமாறல்கள், சீன மொழி பாடநெறிகள் சம்பந்தமான ஒத்துழைப்புக்களை ஆழப்படுத்துதல் |
| சூழல் பொறியியல் இன்ஸ்ரிடியுட், RUDN பல்கலைக்கழகம், ரஷ்யா | கோடைக்கால கூட்டு நிகழ்ச்சித்திட்டங்கள், பிரசுரங்கள், ஒன்லைன் விரிவுரைகள், சூழல் பொறியியல் சார் சாத்தியமான புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) |
| ஷங்காய் விளையாட்டுத்துறை பல்கலைக்கழகம், சீனா | விளையாட்டுத்துறை மற்றும் உடற்கல்வி திணைக்களத்துடன் மாணவர் பரிமாறல் சம்பந்தமான ஒத்துழைப்புக்கள் |
| சிட்னி தொழில்நுட்ப பல்கலைக்கழகம் (UTS), அவுஸ்திரேலியா | கூட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் மாணவர் பரிமாறல்கள் |
| INTI பல்கலைக்கழகம், மலேசியா | மாநாடுகள், ஆராய்ச்சி, பரிமாறல் நிகழ்ச்சித்திட்டங்கள் சார்ந்த ஒத்துழைப்பு ஒன்றுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் உச்சகட்டத்தை எட்டியுள்ளது |
| நொடின்ங்ஹம் பல்கலைக்கழகம், ஐக்கிய இராச்சியம் | செயற்கை மதிநுட்பம் (AI) மற்றும் பிக் டேட்டா எப்ளிகேஷன்ஸ் (Big Data applications) அகழ்வு ஆராய்ச்சி ஒத்துழைப்புக்கள் மற்றும் கருத்தரங்குகள் சார்பாக கவனம் செலுத்துதல். |
| யுனெஸ்கோ இயற்கை விஞ்ஞான நிபுணர்கள் வருகை | உலகளாவிய சூழல் அறிவியல்கள், காலநிலை மாற்றம் மற்றும் நிலைபேறான தன்மை ஆகியன சார் ஒத்துழைப்பு பகுதிகள் குறித்த கலந்துரையாடல். |

## 5.3. ஆய்வு மற்றும் கூட்டிணைவு ஆகியவற்றை காட்சிப்படுத்துவதை இலக்காகக் கொண்ட சர்வதேச கருத்தரங்குகள் மற்றும் மாநாடுகள்

2023 ஆம் ஆண்டில் சர்வதேச கருத்தரங்குகள் மற்றும் மாநாடுகளில் மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் ஈடுபாடானது பூகோள கல்வியியல் சார் பேச்சுவார்த்தைகளில் ஊக்குவிப்பதன் அதன் வகிபாகத்தை புலப்படுத்தின. 2023 இல் நடைபெற்ற சில பிரதான சர்வதேச மாநாடுகளில் பின்வருவனவும் உள்ளடங்கும்.

- 11-வது உலக நிர்மாண கருத்தரங்கு
- உலக வளங்கள் முகாமைத்துவம் மற்றும் சுற்றாடல் தொடர்பான 7-வது சர்வதேச மாநாடு
- பொறியியல் மாநாடு தொடர்பான (AOTULE) ஆசிய சமுத்திர உயர் மட்ட பல்கலைக்கழக கூட்டமைப்பு
- தகவல் தொழில்நுட்ப ஆராய்ச்சி பற்றிய 8-வது சர்வதேச மாநாடு (ICITR)
- மேம்பட்ட பொருட்கள் மற்றும் அவற்றின் பிரயோகம் தொடர்பான சர்வதேச கருத்தரங்கு
- ஆய்வு வாரம் 2023 மற்றும் BEMRU ஆய்வரங்கு
- நீர் மற்றும் வெள்ள முகாமைத்துவம் பற்றிய 9-வது சர்வதேச மாநாடு (ICWFM)
- சர்வதேச நீர் மாநாடு 2023

## [illegible] தெற்கு ஆசிய நீர் முகாமைத்துவத்திற்காக [illegible] மதன்ஜீட் சிங்க நிலையத்துடன் இணைந்து மொறட்டுவை பல்கலைக்கழகம் [illegible]

தெற்கு ஆசிய பிராந்தியத்தில் நீர் முகாமைத்துவம் மற்றும் சுற்றாடல் நிலைபேறு தன்மை தொடர்பில் அர்ப்பணிப்புடன் செயற்படும் நற்பெயர்மிக்க நிறுவனமாக UMCSAWM காணப்படுகின்றது. சர்வதேச ரீதியாக அங்கீகாரம் பெற்ற நீர் வளங்கள் மற்றும் பொறியியல் முகாமைத்துவம் தொடர்பான MASTER மற்றும் APOS நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குகின்றது. நிலைபேறான மற்றும் புத்தாக்க ரீதியான தீர்வுகள் மூலம் சிக்கலான நீருடன் தொடர்புடைய சவால்களை முகங் கொடுப்பதற்கு அவசியமான தொழில்நுட்ப திறன்கள் மற்றும் அறிவு ஆகியவற்றை மாணவர்களுக்கு வழங்குவதை மையமாகக் கொண்டு இந்த நிகழ்ச்சித்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

2010 ஆம் ஆண்டு முதல் UMCSAWM கருத்திட்டம் நடைபெற்று வருகின்றது, கருத்தார்ந்த பிரேரணையொன்றின் மூலம் 2003 ஆம் ஆண்டில் விதைக்கப்பட்ட விதைகளானது தொலைநோக்குமிக்க தலைவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டது. இந்த கருத்திட்டம் 2010 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதுடன் மொறட்டுவை பல்கலைக்கழகம் மற்றும் தென் ஆசிய பவுன்டேஷன் ஆகியவற்றுக்கிடையிலான கருத்திட்ட ஆரம்பம் தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டது. 2012 ஆம் ஆண்டில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது முதுநிலை பட்டப் படிப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்கான ஒப்புதலை வழங்க சம்மதித்தது. நிலையத்திற்கான கட்டிடம் திறந்து வைக்கப்பட்டதன் மூலம் 2013 ஆம் ஆண்டில் இக்கருத்திட்டமானது மேலும் அபிவிருத்தி அடைந்தது மற்றும் இவ்வருட ஆகஸ்ட் மாதத்தில் முதல் தொகுதி மாணவர்கள் வரவேற்கப்பட்டனர்.

தனது 10 ஆவது வருடத்தை கொண்டாடும் தருணத்தில் இந்த நிலையத்தின் MSc நிகழ்ச்சித்திட்டமானது தற்சமயம் 7 ஆவது தொகுதி மாணவர்களை உள்வாங்கியுள்ளது. இதுவரையில் சார்க் நாடுகளிலிருந்து 52 முழுநேர மாணவர்களை உள்வாங்கியுள்ளதுடன் 96 உள்நாட்டு மாணவர்களும் பங்குபற்றியுள்ளனர். UMCSAWM ஆனது 2017 இல் UMCSAWM நீர் மாநாட்டினை ஏற்பாடு செய்தது. 6 சர்வதேச செயலமர்வுகள் நடைபெற்றதுடன் நீர் துறை தொடர்பில் சிவில் பொறியியற் துறை செயற்பாட்டாளர்கள் மற்றும் ஏனைய தொழில்வாண்மைமிக்கவர்களுக்கு இத்துறையைச் சார்ந்த பெரும் எண்ணிக்கையிலான ஆட்களுக்கு பெறுமதியான அறிவூட்டல்களை வழங்கியது.

தென்ஆசியாவில் நிலைபேறான நீர் வளங்கள் முகாமைத்துவம் தொடர்பான யுனெஸ்கோ தலைமையிலான நிகழ்வொன்றினை மொறட்டுவை பல்கலைக்கழகம் 2023 நவம்பர் 24 இல் ஆரம்பித்தது. இந்த புதிய தலைமைத்துவமானது UNITWIN/ UNESCO தலைமைத்துவ வலையமைப்புக்களை கொண்டதுடன் நீர் வளங்கள் நிலைபேற்று தன்மையை மேம்படுத்தி இப்பிராந்தியம் முழுவதும் ஆய்வு மற்றும் கல்வி சார் முன்னெடுப்புகளை முன்னெடுத்துச் செல்லும். மேலும் தெற்கு ஆசிய நாடுகள் தொடர்பான நீர் ஆய்வு முன்னெடுப்புகளை மேற்கொள்வதில் இந்த நிலையம் முதன்மையாக காணப்படுகின்றது. நிலையத்தின் நடவடிக்கைகளை விரிவாக்குவதற்காக மேலதிக கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன, நீர் முகாமைத்துவக் கல்வி மற்றும் ஆய்வுகளில் தலைவர் என்ற இதன் வகிபாகம் மேம்படுத்தப்பட்டது.

## 5.5 உள்ளூர் கைத்தொழில்துறையுடனான இடைத்தொடர்பு

பயனுறுதிமிக்க பல்கலைக்கழக – கைத்தொழில்துறை பிணைப்பு மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் பலம் வாய்ந்த காரணிகளுள் ஒன்றாகும். பொதுமுயற்சிகள் கைத்தொழில் துறையில் உள்ளோர்களுக்கான பகுதி நேர பட்டப்பின்படிப்பு பாடநெறிகள், குறுங்கால பாடநெறிகள், பயிற்சியும் தொடர் தொழில்சார் அபிவிருத்தி (CPD) பாடநெறிகள், கருத்தரங்குகள், செயலமர்வுகள், ஆலோசனை மற்றும் பரிசோதனை ஒப்படைகள், கைத்தொழில் நிதியிடப்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்தி (R & D) ஆய்வுகூடங்கள், அறக்கொடையுடனான தலைமைகள், திணைக்கள கைத்தொழில்துறை ஆலேசானை சபைகள், பீட கைத்தொழில் ஆலோசனை சபைகள் மற்றும் கூட்டிணைந்த சமூக பொறுப்பு நடவடிக்கைகள் மூலமாக மொறட்டுவை பல்கலைக்கழகம் கைத்தொழில் துறைகளுடனும், சமூகத்துடனும் குறிப்பிடத்தக்க வகையில் பரஸ்பர செயற்பாடுகளை மேற்கொள்கின்றது. கைத்தொழிலுடனும் சமூகத்துடனும் காணப்படும் பரஸ்பர இணைப்புக்கள் மூலம் கைத்தொழிற்சாலைகளின்

முன்னேற்றம் மற்றும் அதற்கேற்ப நாட்டின

பொருளாதார அபிவிருத்தியை மேற்கொள்ளல் என்பதுடன், அதற்கு மேலாக அதனூடாக பல்கலைக்கழக பணியாட்டொகுதி உறுப்பினர்களுக்கும், மாணவர்களுக்கும் மற்றும் அதற்கு இணையாக நிறுவகத்திற்கும் பாரிய நன்மைகள் பெருமளவில் கிடைப்பதனால் இந்த பரஸ்பர செயற்பாடுகள் பல்கலைக்கழகத்திற்கு தீவிரமாக ஊக்கமளிக்கின்றது. கைத்தொழில்துறை மூலம் நிதியளிக்கும் ஆராய்ச்சி மையங்கள் வெற்றிகரமான பல்கலைக்கழக கைத்தொழிற்துறை ஒத்துழைப்பு சார் மற்றுமொரு முக்கியமான பொறிமுறையாகும்.

அட்டவணை 5: கைத்தொழில்துறை ஒத்துழைப்பு ஆய்வுகூடங்கள்

| ஆய்வுகூடம் | நோக்கம் |
|---|---|
| செல்லிட தொடர்பாடலுக்கான டயலொக்-UOM ஆராய்ச்சி ஆய்வுகூடம், தொலைத்தொடர்பாடல் Dialog | தொலைத்தொடர்பாடல் துறையினுள் கைத்தொழில் அடிப்படையிலான ஆராய்ச்சி மற்றும் உற்பத்திப் பொருள் அபிவிருத்தி. |
| Zone 24X7 UoM ஆராய்ச்சி ஆய்வுகூடம் | |
| பிரிமியம் இன்டர்நெஷனல் - UoM ஆய்வுகூடம் | இலத்திரணியல் சார்ந்த புதிய தொழில்நுட்பங்களின் ஆராய்ச்சி மற்றும் விருத்தி. |
| INSEE-UoM ஆய்வுகூடம் | உயிரியல் மருத்துவ தொழில்நுட்பங்கள் சார் ஆராய்ச்சி மற்றும் விருத்தி. |
| Epic-UoM புத்தாக்க ஆய்வகம் | பொருட்கள் ஆராய்ச்சி. |
| QBITS - செயற்கை மதிநுட்ப புத்தாக்க ஆய்வகம் | பலவித தொழில்நுட்பவியல் துறை சார் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கம். |
| | செயற்கை மதிநுட்பம் சார் ஆராய்ச்சி மற்றும் விருத்தி. |
| SLIoT வடிவமைப்பு புத்தாக்க ஆய்வகம் | Internet of Things (IoT) அடிப்படையிலான தீர்வை விருத்திசெய்தல். |
| மரப்பலகை உற்பத்தி புத்தாக்க நிலையம் (TDIC) | மொறட்டுமுல்லை மரப்பலகையை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்துறையை மேம்படுத்துதல். |
| Huawei ICT அகடமி புத்தாக்க ஆய்வகம் | பல்கலைக்கழக ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கைத்தொழில்துறை ஒத்துழைப்பு ஆகியவற்றுக்கு ஆதவளித்தல். |
| LECO-UoM ஸ்மார்ட் அமைப்பு ஆராய்ச்சி ஆய்வகம் | ஸ்மார்ட் அமைப்பு தொழில்நுட்பங்கள் சார் ஆராய்ச்சி மற்றும் விருத்திசெய்தல். |
| MAS Intimates INGENIUM தொழில்நுட்ப ஆய்வகம் | பிணைக்கும் தொழில்நுட்பம் பற்றிய பயிற்சி கொள்ளளவை மேம்படுத்துதல். |
| KKYW பெரேரா செல்லிட தொடர்பாடல் ஆய்வகம் | செல்லிட தொடர்பாடல் தொழில்நுட்பங்கள். |
| IntelliSense ஆய்வுகூடம் | நுண்ணறிவு உணர்ச்சியை அளவிடுதல் மற்றும் கட்டுப்படுத்தல். |

உலக சந்தைகளில் சிறிய மற்றும் மத்திய தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான புத்தாக்க ரீதியான பொதியிடல் தீர்வுகளுக்காக மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் ஒருங்கிணைக்கப்பட்ட வடிவமைப்பு திணைக்களம் மற்றும் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை (EDB) ஆகியன கூட்டிணைந்து 2023 இல் செயற்பட்டன. மாணவர்கள் மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி சபை ஆகியவற்றில் பங்காண்மைகள் மூலம் ஐரோப்பிய சந்தையில் விசேட தேவைகளை நிறைவேற்றும் முகமாக பொதியிடல் தீர்வுகள் உருவாக்கப்பட்டன. ஏற்றுமதி அபிவிருத்தி சபை மற்றும் மொறட்டுவை பல்கலைக்கழகம் ஆகியவற்றுக்கிடையிலான உபாயரீதியான கூட்டணிகளானது பூகோள சந்தையில் இலங்கை சிறிய மற்றும் மத்திய கைத்தொழில் முயற்சிகளுக்கான போட்டித் தன்மையை மேம்படுத்துவதற்கான ஒருங்கிணைந்த செயற்பாட்டை வெளிப்படுத்தியது. இத்தகைய மேம்பட்ட பொதியிடல் முறைகளானது சர்வதேச சந்தைகளில் பிரவேசிப்பதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தியது, இத்தகைய கூட்டிணைந்த தாக்கமானது பூகோள வியாபார நிலைகள் முழுவதும் எதிரொலிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கொழும்பு சர்வதேச கொள்கலன் நிலையமானது (CICT) மொறட்டுவை பல்கலைக்கழகத்துடன் குறிப்பிடக்கூடிய பங்களிப்புகளை ஏற்படுத்தியது, இது கல்வியலாளர்கள் மற்றும் தங்குமிட ஏற்பாட்டாளர்கள் மற்றும் பொறியியல் துறைகள் ஆகியவற்றுக்கிடையில் மிகவும் ஒருங்கிணைந்த கூட்டிணைவுகளை ஏற்படுத்தியது. இந்த கூட்டிணைவானது (CICT) இன் முகாமைத்துவ பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்கு திறமையான நபர்களை ஆட்சேர்ப்பதை அவற்றை இனங்காண்பதை இலக்காகக் கொண்ட கூட்டிணைவாகும். அதேவேளை இத்தொழிற்துறையில் இளம் திறமைகளை தலைமைத்துவ நிலைமைக்கு தயார் செய்து அவர்களை வளர்த்து வருகின்றது. இந்த கொழும்பு சர்வதேச கொள்கலன் நிலையத்தின் (CICT) முன்னெடுப்பானது, சுற்றாடல், சமூகம், நல்லாட்சி (ESG) கொள்கைகளில் கவனத்தை செலுத்துவதுடன் கம்பனிக்கு மாத்திரமல்லாது சமூகத்தின் வளர்ச்சிக்கும் சாதகமாக பங்களிப்புச் செய்கின்றது.


சகல பணியாட்தொகுதி உறுப்பினர்களும் பல்கலைக்கழக, கைத்தொழில்துறை பரஸ்பர இணைப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற அதேநேரம், அரசாங்க திரட்டு நிதியத்திலிருந்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஊடாக வழங்கப்படும் நிதி ஏற்பாடுகளுக்காக அவர்கள் கல்வித்துறை சார்பாக பொறுப்புக் கூறுவதை உறுதிப்படுத்துவதற்காக அவர்களால் பட்டதாரி கல்விச் செயற்பாடுகள் தொடர்பாக தம்மீது ஒப்படைக்கப்பட்ட கல்விசார் வேலை பணிகள் மற்றும் கல்விசார் அலுவல்களையும் நிறைவேற்றுவதனை உறுதிப்படுத்துதல் பல்கலைக்கழக நிருவாக சபையின் கொள்கையாகும். பட்டதாரி மாணவர்களுக்கான உயர் பயிற்சி மற்றும் தராதரங்களை மேம்படுத்துவதற்காக வழங்கப்படும் பாடநெறிகள், அறிவு மற்றும் தொழில்நுட்பம் என்பவற்றை விருத்திசெய்யவும் மாற்றம் செய்யவும் நடாத்தப்படும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், CPD பாடநெறிகள், ஆய்வு மற்றும் அபிவிருத்தி கருத்திட்டங்கள், கருத்தரங்குகள், செயலமர்வுகள் மற்றும் ஏனைய கல்விசார் ஒப்படைகள், கைத்தொழிலுக்கான ஆலோசனை மற்றும் ஆய்வு ஒப்படைகள் மற்றும் கூட்டிணைந்த சமூக பொறுப்பு நடவடிக்கைகள் ஆகியன பொது நிதிச் சுற்றுநிருபம் இல. 380-இற்கு இணங்க செலவு மீட்பு (சுய நிதியிடல்) அடிப்படையில் செயற்படுத்தப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்களாகும். அதற்கேற்ப, மொறட்டுவைப் பல்கலைக்கழகம் சமூகம், கைத்தொழில் சார்ந்து காணப்படும் அதன் கடப்பாடுகளை அரசாங்கத்திற்கு எவ்வித செலவுமின்றி நிறைவேற்றி வருகின்றது.

இத்தகைய செயற்பாடுகள் மூலம் மொறட்டுவை பல்கலைக்கழகமானது 2023 இல் 709.7 மில்லியன் ரூபாவை ஈட்டியது. இத்தகைய செலவு சேகரிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டதன் மூலம் (சுய நிதியிடல்) மற்றும் தொழில்முயற்சி செயற்பாடுகளுக்கான தொழிற்துறை முன்னெடுப்புகளை மேற்கொண்டதன் மூலமும் கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 7.5% அதிகரிப்பிற்கான காரணியானது. இலாபம் கருதாத அடிப்படை என்ற முறையில் பொது நிதி சுற்று நிருபம் 380 இன் பிரகாரம் இவ்வாறு ஈட்டப்பட்ட வருமானம் பயன்படுத்தப்பட்டது. 16 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி இலக்கை அடைவதற்கு பல்கலைக்கழகத்திற்கு இது உதவியது: சமாதானமான உள்ளடக்க ரீதியான சமூகங்களை ஊக்குவித்ததுடன் வினைத்திறன்மிக்க பொறுப்புக்கூறக் கூடிய, உள்ளடக்கிய அமைப்பு கலாசாரத்தினை கட்டியெழுப்பியது.

## அடைவுகள் அங்கீகாரங்கள் மற்றும் பிரசுரங்கள்

கடந்த பத்தாண்டுகளில் வருடாந்த உள்வாங்கலின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்களவில் அதிகரித்து இருப்பதுடன், வரையறுக்கப்பட்ட வசதிகளுடன் மொறட்டுவைப் பல்கலைக்கழகம் எல்லாப் பட்டதாரிகளையும் ஏற்றவகையிலும் தரத்திலும் தடங்களின்றிப் பேணிச் செல்வதனாலும் மேம்படுத்தியுள்ளதனாலும் பெருமிதம் அடைகின்றது. 2023 இல் நடாத்தப்பட்ட பட்டதாரிகளின் தொழில் தன்மைகள் பற்றிய டிரஷர் ஆய்வொன்றில் (Tracer surveys) மொறட்டுவைப் பல்கலைக்கழகப் பட்டதாரிகள் கைத்தொழில்களாலும், அதன் தொழில்வழங்குநர்களாலும் பெரிதும் வேண்டப்படுகின்றார்கள் என்பதைக் சுட்டிக்காட்டும் வகையில் அவர்களின் பட்டமளிப்பு விழாவின் போது சகல பட்டதாரிகளும் 85.7%-மும், வடிவமைப்பு பட்டதாரிகள் 93.6%-மும், வசதியேற்பாட்டு முகாமைத்துவ பட்டதாரிகள் 91.1%-மும், கணிய அளவையியல் பட்டதாரிகள் 96.4%-மும் மற்றும் தகவல் தொழில்நுட்ப பட்டதாரிகள் 90%-மும் வேலைவாய்ப்பை பெற்றுள்ளனர் எனும் தகவல் தொியவந்துள்ளது.

பல்வேறு பட்டப் படிப்புகளுக்கான வேலைவாய்ப்பு 2023




உரு 2 – பல்வேறு துறைகள் சார் பட்டங்களில் வேலைவாய்ப்பு - 2023

2023-இல் இறுதிப் பரீட்சைக்குத் தோற்றிய 1669 மொத்த மாணவர் எண்ணிக்கையில் 1587 (95%) பேர் விதிக்கப்பட்ட குறைந்தபட்ச காலவரையறைக்குள் தமது முதனிலை பட்டத்தைப் பெற்றுக்கொண்டார்கள். 2023 ஆண்டு பொதுப் பட்டமளிப்புவிழாவில் பட்டமேற்படிப்பு பட்டங்ளையும் உள்ளடக்கி மொத்தமாக வழங்கப்பட்ட 2156 பட்டங்களில், 1662 இளமாணிப் பட்டங்களும், 494 பட்டமேற்படிப்பு பட்டங்களும் உள்ளடங்கியிருந்தன.

### 5.1 சர்வதேச விருதுகள் மற்றும் அங்கீகாரங்கள்

- "பாரிய சந்தை பெஷன் வடிவமைப்பு செயன்முறை தொடர்பான ஆய்வு" என தலைப்பிடப்பட்ட ஆவணத்திற்காக 2023 எமரெல்ட் இலக்கிய விழாவில் துணி மற்றும் ஆடைகள் பொறியியல் துறை திணைக்களத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் டொக்டர் பிரபோத் தர்ஷன முனசிங்க அவர்கள் கௌரவிக்கப்பட்டார். மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர் டொக்டர் ஜி.டி.கே. திசாநாயக்க மற்றும் சுரே பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் அன்ஜல டக்மன், (ஐக்கிய இராச்சியம்) ஆகியோரின் மேற்பார்வையின் கீழ் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த விருதியை எமரெல்ட் வெளியீடு வழங்கியது.

- சிவில் பொறியியலாளர் நில அளவையாளர்கள் பற்றிய பட்டய நிறுவனத்தினால் ஐக்கிய இராச்சிய மென்செஸ்டர் புத்தாக்கம் மற்றும் நிலைபேறு தொடர்பான "2023 ரொபின் ஜோன்ஸ் விருது" ஒரு நன்மதிப்பு பெற்ற விருதாகும். இவ்விருதானது கட்டிடப் பொருளியல் திணைக்களத்தினைச் சேர்ந்த பல்கலைக்கழக மாணவர் ஒருவருக்கு வழங்கப்பட்டது.

- யுனெஸ்கோவினால் ஏற்பாடு செய்யப்பட்ட 2023 எதிர்கால வடிவமைப்பாளர் சர்வதேச புத்தாக்க வடிவமைப்பு விருதுகள் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்கான விஞ்ஞானம் பற்றிய புத்தாக்க போட்டி ஆகியவற்றில்

# மேலாண்மை கலந்துரையாடல்

# பல்கலைக்கழக செயல்பாடுகள் பற்றிய கண்ணோட்டம்

## இரண்டு தங்கப் பதக்கங்களை ஒருங்கிணைத்தல் வடிவமைப்பு திணைக்களத்தை சேர்ந்த இரண்டு பல்கலைக்கழக மாணவர்கள் பெற்றுக் கொண்டனர்.

☐ மொறட்டுவை பல்கலைக்கழகத்தை சேர்ந்த குழுவானது, கேம்பிரிஜ் மற்றும் ஒக்ஸ்போர்ட் ஐ சேர்ந்த குளோபல் பிஅர்ஸ் இன் கூட்டிணைவு பங்காளர்கள், எக்ஸஸ் இன்ஜினீரிங்ஸ் பிஎல்சி, மற்றும் ஐக்கிய இராச்சியத்தின் WSP ஆகியவற்றுடன் சேர்த்து ஐக்கிய இராச்சிய பொருளியல் சஞ்சிகையிடமிருந்து நன்மதிப்புமிக்க விருதான "2023 புத்தாக்க விருதிற்கான கூட்டிணைவு" இனை பெற்றுக் கொண்டது.

☐ DVCon இந்தியாவினால் ஏற்பாடு செய்யப்பட்ட 2023 RISC-V Processor வடிவமைப்பு மற்றும் உறுதிப்படுத்தல் சவால் கிண்ணத்தில் இரண்டாம் நிலையினை மின்னியல் மற்றும் தொலைத் தொடர்பு பொருளியல் திணைக்களத்தை சேர்ந்த பல்கலைக்கழக மாணவர் குழு பெற்றுக் கொண்டது, இது அவர்களது மின்னியல், தொலைத் தொடர்பாடல்கள், கூட்டிணைந்த பொறியியல் கள வேலைகள் ஆகியவற்றில் மேற்கொண்ட முன்னோடி பங்களிப்பினை புலப்படுத்துகின்றது.

☐ பேர்டுபுஹான் அகிடெக் மலேசியா – கட்டிடக் கலைக்கான மலேசிய நிறுவகம் ஆகியற்றினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஐந்தாவது கட்டிடக் கலை தொடர்பான மாணவர் வடிவமைப்பு போட்டி 2023 இல் இறுதிப் போட்டியாளர்களாக கட்டிடக் கலை திணைக்களத்தை சேர்ந்த இரண்டு பல்கலைக்கழக மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். புத்தாக்க ரீதியான வடிவமைப்புகள் மற்றும் ஆக்கத்திறன் தொடர்பில் தமது திறமைகளை இவர்கள் இங்கு வெளிக்காட்ட முடியும்.

☐ கொசின், கட்டிடக் கலைக்கான இந்திய நிறுவகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பொழுது போக்கு – உள்ளாச விடுதி மற்றும் விருந்தோம்பல் வகையின் கீழ் 2023 பருவ கால கட்டிடக் கலை தொடர்பான விருதினை கட்டிடக் கலை திணைக்களத்தைச் சேர்ந்த விரிவுரையாளரான பேராசிரியர் என்.ஜி.ஆர். பெரேரா பெற்றுக் கொண்டார்.

☐ எல்சிவிஅரினால் விநியோகிக்கப்பட்ட கிளீநர் லொஜிஸ்டிக் என்ட் சப்லை செய்ன் சஞ்சிகையினால் சிறந்த மீளாய்வு பத்திரத்திற்கான விருதினை போக்குவரத்து முகாமைத்துவம் மற்றும் வசதிகள் பொறியியல் துறை திணைக்களத்தை சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளரான டொக்டர் பி.டி. ஹெட்டிஆரச்சி அவர்களுக்கு வழங்கப்பட்டது.

## தேசிய விருதுகள் மற்றும் அங்கீகாரங்கள்

☐ உபவேந்தர்கள் மற்றும் இலங்கை பணிப்பாளர்களுக்கான குழுவினால் (CVCD) பொறியியல் துறை, கட்டடக் கலை, தொழில்நுட்பம் தொடர்பில் 2022 இற்கான மிகவும் சிறப்பான சிரேஷ்ட ஆய்வாளர் என்ற அங்கீகாரத்தை சிறப்பு விருதினையும் கட்டிட பொருளியல் திணைக்களத்தை சேர்ந்த விரிவுரையாளர் பேராசிரியர் கான்சன பெரேரா அவர்களுக்கு வழங்கப்பட்டது. இலங்கை நூலக சங்கத்தினால் பொல்கொட சுற்றாடல் பற்றிய விழிப்பூட்டல்களை ஏற்படுத்திய அவருடைய முயற்சிக்காக "எம்.எஸ். விஜித த சில்வா ஆய்வு விருதினை" சிரேஷ்ட உதவி நூலகரான திருமதி. துசாரி செனவிரத்ன அவர்களுக்கு வழங்கப்பட்டது.

☐ இலங்கையில் பல்வேறு பல்கலைக்கழகங்கள் மற்றும் நிறுவனங்களைச் சேர்ந்த பங்குபற்றுநர்களுக்கு எதிராக போட்டியிட்டு 2022 SLIIT Codefest Hackathon நிகழ்வில் இரண்டாவது நிலையினை தகவல் தொழில்நுட்ப பீடத்தினை சேர்ந்த அணி S2Nx பெற்றுக் கொண்டது.

☐ 2023 இல் காலநிலை மாற்றம் தொடர்பான (ICCC 2023) 7 ஆவது சர்வதேச மாநாட்டில் சிறந்த ஒட்டுமொத்த சமத்துவத்திற்கான விருதினை வழங்கி சிவில் பொறியியல் துறை திணைக்களத்தினைச் சேர்ந்த விரிவுரையாளர் திருமதி. கபிலா சுப்ரமணியம் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

☐ திணைக்களத்தைச் சேர்ந்த விரிவுரையாளரான டொக்டர் அமில் திப்படுவாவ இன் மேற்பார்வையின் கீழ் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கான சிறந்த ஆராய்ச்சி விருதினை போக்குவரத்து மற்றும் வசதிகள் திணைக்களத்தை சேர்ந்த உடனடி பட்டதாரி மாணவர் ஒருவர் பெற்றுக் கொண்டார்.

☐ 2021-2022 வருடத்திற்கான சனாதிபதி சுற்றாடல் விருது வழங்குதலின் பொழுது சுற்றாடல் பாதுகாப்பிற்காக காத்திரமான பங்களிப்புகளை

வழங்கியமைக்காக அவரை பாராட்டி தங்கக் கிண்ண

விருது சிவில் பொறியியல் திணைக்களத்தினை சேர்ந்த விரிவுரையாளரான பேராசிரியர் ரங்கிக ஹல்வதுர அவர்களுக்கு வழங்கப்பட்டது.

 ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் வர்த்தக திணைக்களத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான விடய ஆய்வு போட்டியில் வியாபார பீடத்தினது கைத்தொழில் முகாமைத்துவ திணைக்களத்தின் இரண்டு அணிகள் வெற்றியீட்டின.

 சிவில் பொறியியல் திணைக்களத்தை சேர்ந்த விரிவுரையாளரான பேராசிரியர் சிந்தக மல்லிகாராச்சி மற்றும் டொக்டர் எச்ஆர் பசிந்து ஆகியோருக்கு ஐக்கிய அமெரிக்க இலங்கை புல்பிரைட் ஆணைக்குழுவினால் 2023-2024 இற்கான புல்பிரைட் சிறப்பான ஆராய்ச்சி மற்றும் விரிவுரை விருதுகள் வழங்கப்பட்டன (US-SLFC)

 2023 மொறட்டுவை பொறியியல் ஆய்வு மாநாட்டின் பொழுது நீரியல் மற்றும் சுற்றாடல் பொறியியல் துறைக்கான சிறந்த ஆய்வுப் பத்திரத்திற்கான விருதினை மொறட்டுவை பல்கலைக்கழகத்தை சேர்ந்த தெற்கு ஆசிய நீர் முகாமைத்துவத்திற்கான (UMCSAWM) யுனெஸ்கோ மதன்ஜீட் சிங் நிலையத்தை சேர்ந்த ஆய்வு பேரஞர் ஒருவருக்கு வழங்கப்பட்டது.

 மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தைச் சேர்ந்த கலாநிதி பட்ட ஆராய்ச்சி கல்வியாளரொருவர், FGS மூலம் ஒழுங்குசெய்யப்பட்ட 3Minutes Thesis எனும் ஆய்வுக்கட்டுரைப் போட்டியில் (3MT) சிறந்த 3MT ஆய்வுக்கட்டுரை விருது மற்றும் Cest 3MT ஆய்வுக்கட்டுரைக்கான பொதுமக்கள் தேர்வு எனும் இரு விருதுகளையும் வெற்றெடுத்தார்.

 பேராசிரியர் சிந்தக மல்லிகாரச்சியின் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட விஞ்ஞான மேம்பாட்டிற்கான இலங்கை சங்கத்தினால் அவரது இறுதி ஆண்டு ஆய்வு கருத்திட்டத்திற்காக தனிநபர் வகையின் கீழ் நன்மதிப்புமிக்க "மனம்பேரி விருதானது" சிவில் பொறியியல் திணைக்களத்தினை சேர்ந்த பல்கலைக்கழக மாணவர் ஒருவருக்கு வழங்கப்பட்டது.

 இலங்கை பொதியிடல் நிறுவனத்தின் மூலம் ஒழுங்செய்யப்பட்ட 'இலங்கை பொதியிடல் விருதுகள் 2023 - லங்கா நட்சத்திரம்' ('Sri Lanka Packaging Awards 2023 - Lanka Star) எனும் நிகழ்வில் ஒருங்கிணைந்த வடிவமைப்புத் திணைக்களத்தின் மாணவர் அணியொன்று ஆறு விருதுகளை வென்றெடுத்தனர்.

 இலங்கை கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் மற்றும் ஐக்கிய இராச்சியத்தைச் சேர்ந்த ஹடஸ்பீல்ட் பல்கலைக்கழகம் ஆகியவற்றினால் கூட்டிணைந்து ஒழுங்கமைக்கப்பட்ட இலங்கையில் அனர்த்த இடர் தணிப்பு மற்றும் முகாமைத்துவம் தொடர்பான அண்மைய சர்வதேச மாநாட்டில் (DRRM 2023) சிறந்த வாய்மொழி மூலமான சமர்ப்பணத்திற்கான விருது சிவில் பொறியியல் துறையை சேர்ந்த பல்கலைக்கழக மாணவர் ஒருவருக்கு வழங்கப்பட்டது.


 இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகத்தின் (SLIIT) மூலம் ஒழுங்குசெய்யப்பட்ட "RoboFest 2023" எனும் ரொபோ போட்டியில் இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பாடல் பொறியியல் திணைக்களத்தைச் சேர்ந்த பட்டதாரி மாணவர்கள் முதலாம் மற்றும் இரண்டாம் இடங்களை வென்றெடுத்தனர்.

### 6.3. ஆராய்ச்சி முயற்சிகள்

மொறட்டுவைப் பல்கலைக்கழகமானது சகல கல்விசார் பணியாளர்களுக்கும் ஆய்வு அத்தியாவசியமான செயற்பாடொன்றாக கருதுகின்றது. 2015 ஆண்டினுள் பணிப்பாளர்/ ஆய்வு அலுவலகம் மூலம் ஆதரவு தெரிவிக்கப்பட்ட குறிப்பாக ஆய்வு செயற்பாடுகளுக்காக கவனம் செலுத்தி பட்டமேற்படிப்பு கற்கைகள் பீடமொன்று உருவாக்க முடிந்தமை பல்கலைக்கழக ஆய்வு நடவடிக்கைகள் மற்றும் ஆய்வு கலாச்சாரம் குறிப்பிடத்தக்க வகையில் மேம்படுத்தப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகமானது மூன்று ஆய்வு பட்ட கற்கைகளை வழங்குகின்றது. விஞ்ஞான முதுமாணி (ஆராய்ச்சியை பிரதான கூறாகக் கொண்டு), தத்துவவியல் முதுமாணி (MPhil) மற்றும் தத்துவக் கலாநிதி (PhD) ஆகியவற்றை கட்டடக்கலை, வியாபார, பொறியியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப (IT) பீடங்களின் மூலம் வழங்குகின்றது. FGS இந் நிகழ்ச்சித்திட்டத்தின் நிருவாக நடைமுறைகளை ஒருமுகப்படுத்துதல், உயர் தரத்திலான மாணவர்களை ஈர்த்தெடுத்தல், புதிய ஆராய்ச்சி பங்காளர்கள் மற்றும் நிதியிடல் வாய்ப்புக்களை கண்டறிதல் மற்றும்

பல்கலைக்கழகத்தினுள் ஆராய்ச்சி திறனை உயர்த்துதல் சார்பாக மூலோபாயங்கள் மூலம் இந் நிகழ்ச்சித்திட்டங்களை அதிகரிக்க முற்படுகின்றது. FGS இம் முயற்சிகளில் ஆராய்ச்சி அலுவலகம் மற்றும் சர்வதேச உறவுகள் அலுவலகம் ஆகியவற்றுடன் நெருக்கமாகச் செயற்படுகின்றது. 2023 ஆம் ஆண்டில் 15 கலாநிதி (PhD) பட்ட மாணவர்கள் உட்பட 45 புதிய ஆராய்ச்சி மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.




படம் 2 - 2019-2023 குறியீட்டு இதழ்களில் வெளியீடுகளின் எண்ணிக்கை.

2023 ஆண்டில் மேலும் ஆய்வை அதிகரிப்பது மற்றும் ஆய்வு விளைவுகளை பரப்புதல் சார்பாக ஏனைய பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றில் உள்ளடங்குவன: சர்வதேச மாநாடுகளை ஒழுங்குசெய்வதற்கான மானியங்கள் (பட்டமேற்படிப்பு கற்கைகள் பீடத்தின் ஊடாக ரூ. 2 மில்லியன் நிர்வகிக்கப்பட்டது); கீர்த்திமிக்க வெளிநாட்டு கல்வியாளர்களை வரவழைத்து உபசரிப்பதற்கான மானியம் (பட்டமேற்படிப்பு கற்கைகள் பீடத்தின் ஊடாக ரூ. 1 மில்லியன்); மாநாடுகளுக்கு பங்குபற்றுவதற்காக உப வேந்தரவர்களின் திட்டம் மற்றும் உருவாக்கப்பட்ட நிதியைப் பயன்படுத்தி திறந்த அணுகுதல் வெளியீடு (செனட் ஆய்வு குழுவின் ஊடாக); மற்றும் மேம்படுத்தப்பட்ட தரப்புள்ளிகளுடன் மற்றும் தனி வருட செயல்திறன் அடிப்படையில் திருத்தப்பட்ட விருதுகள் திட்டம். இது தவிர, 2023 ஆண்டின் போது ஆய்வு நிருவாகம் மற்றும் முகாமைத்துவ முறைமை மேம்படுத்துதல், கல்வியாளர்களது ஆய்வு மற்றும் பரப்புதல் திறன் ஆகியவற்றை அதிகரிப்பதற்காக செயலமர்வுகள் மற்றும் கருத்தரங்குகள் பல நடாத்துதல் உட்பட பல்கலைக்கழக ஆய்வு கலாச்சாரத்தை மேம்படுத்துவதற்காக FGS மூலம் பல முயற்சிகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

சர்வதேச ரீதியாக மற்றும் உள்நாட்டு ரீதியாக எனும் இரண்டிலும் வெளிவாரி நிதியிடல் முகவராண்மைகள் மூலம் ஆய்வுக்கான நிதியளிப்பை பாதுகாப்பதற்கு கல்வியாளர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர். 2023 ஆண்டில் பல்கலைக்கழகமானது வெளிவாரி நிதியளிப்பு முகவராண்மைகள் மூலம் ரூ. 30.2 மில்லியனை பெற்றுக்கொண்டதுடன், இதற்குப் புறம்பாக, செனட் சபை ஆய்வு குழு (SRC) மூலம் கல்விசார் பணியாளர்களது பல்கலைக்கழக ஆய்வு கருத்திட்டங்களுக்கு நிதியளிப்பு செய்யப்பட்டது. 2023 ஆண்டின் போது SRC மூலம் ஒரு குறுங்கால மானியம் சார்பாக மொத்தம் ரூ. 0.3 மில்லியன் வழங்கப்பட்டது.

கல்வியாளர்களது 125 ஆய்வு சிறப்பு விருதுகளின் அதிகரிப்பு மூலம் மேலுள்ள முயற்சிகள் மற்றும் செயற்பாடுகள் ஆய்வு செயலாற்றலை குறிப்பிடத்தக்கவகையில் மேம்படுத்தியுள்ளது.

இம் முயற்சிகள் மற்றும் செயற்பாடுகள் ஆய்வு வெளியீடுகளில் – ஆய்வு பட்டங்கள் மற்றும் பிரசுரங்களின் எண்ணிக்கை, ஆய்வுகள் மற்றும் பிரசுரங்களின் தரம், ஆய்வு நிதியிடல் மற்றும் ஆய்வு ஒத்துழைப்புக்கள் என்பவற்றில் குறிப்பிடத்தக்க துரித அதிகரிப்பை உண்டாக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## 7. நிதிசார்ந்த வெற்றிகள்

2023 இல், மொறட்டுவை பல்கலைக்கழகமானது அரசாங்கத்திடமிருந்து மீண்டெழும் செலவினங்களுக்கான மொத்தத்தொகையாக ரூபா 3,576 மில்லியனையும், மூலதனச் செலவினங்களுக்காக ரூபா 350 மில்லியனையும் பெற்றதோடு, குறைநிரப்புத் தொகையாக AHEAD கருத்திட்டத்திலிருந்து ரூபா 118.9 மில்லியனும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடமிருந்து ரூபா 5 மில்லியனும் கிடைக்கப்பெற்றன. பல்கலைக்கழகம் மீண்டெழும் வருமானத்தில் குறிப்பிடத்தக்க 10% அதிகரிப்பை எதிர்கொண்டதோடு, அதிக ஈட்டல் கொண்ட நிலையான பணவைப்புகள் மற்றும் பணச் சந்தைகளிலான மூலோபாயம் மிக்க முதலீடுகளினால் வட்டி வருமானத்தில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பே பெரும்பாலும் இதற்கு காரணமாக விளங்கியது. இந்த மூலோபாயம் மிக்க நிதி முகாமைத்துவமானது, இலங்கை மத்திய வங்கியால் நிர்ணயிக்கப்பட்ட அதிகரித்து வரும் பணவைப்பு வட்டி வீதங்களின்

பின்னணியில், 2021 இல் ரூபா 57 மில்லியனாக இருந்த வட்டி வருமானத்தை 2023 இல் ரூபா 349 மில்லியனாக அதிகரிக்க வழிவகுத்தது. மேற்படி அடைவுகள் எட்டப்பட்ட போதிலும், மூலதனச் செலவினங்களில் அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் காரணமாக மூலதனம் தொடர்பான வருமானம் 2% வீழ்ச்சியை எதிர்கொண்டது. இருப்பினும், முன்னைய ஆண்டை விடவும் மூலதன நன்கொடைகளில் 88% அதிகரிப்புடன் பல்கலைக்கழகம் இந்தக் கட்டுப்பாடுகளை ஈடுசெய்ய முடிந்தது.

2023 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகத்தின் மொத்த செலவு 4% ஆல் அதிகரித்துள்ளதோடு, இயக்கப்பாட்டுச் செலவுகள் இந்தத் தொகையில் 88% ஆகும். இதற்கு இலங்கையின் சவால் மிக்கதாக விளங்குகின்ற பேரண்டப் பொருளாதார நிபந்தனைகள், அதிகரித்து வரும் பாவனையாளர் கட்டணப்பட்டியல் வீதங்கள் மற்றும் அதிகரித்த வெளியக ஆய்வு மானியச் செலவுகள் போன்றனவே மேற்படி இயக்கப்பாட்டுச் செலவுகளின் அதிகரிப்பு காரணமாக விளங்கின. மேற்படி அழுத்தங்களுக்கு மத்தியிலும், அரசாங்கத்தினால் பிரசுரிக்கப்பட்ட சுற்றறிக்கைகளைப் பின்பற்றி பல்கலைக்கழகமானது பணவீக்கத்துடன் தொடர்புடைய செலவுகளை வெற்றிகரமாக மட்டுப்படுத்தியது. பயண மற்றும் வாழ்வாதாரச் செலவுகளில், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 87% கணிசமான குறைப்பும் இதில் அடங்குகின்றது. தேய்மானம் மற்றும் கல்வி ஆராய்ச்சி செலவுகள் பெருமளவு குறைந்தமையினால், இயக்கப்பாட்டுச் செலவுகள் 11% ஆல் குறைந்தது. மூலோபாய முதலீடுகள் மற்றும் காத்திரமான பண முகாமைத்துவம் ஆகியவற்றின் துணையுடன், மொத்த சொத்துக்களில் 6% வளர்ச்சியையும் மற்றும் நிகர சொத்துக்களில் 8% வளர்ச்சியையும் கொண்டு பல்கலைக்கழகத்தின் நிதி நிலை வலுப்பெற்றதோடு, இது திரவத்தன்மை மற்றும் சொத்துப் பயன்பாடு ஆகியவற்றில் மேம்பாடு எட்டப்படுவதற்கு வழியமைத்தது.

## 8. நிலைபேறான நடைமுறைகள்

பூகோள நோக்கங்களுக்கு நெருக்கமாக இணங்குகின்ற வகையில் தனது 2022- 2026 உபாய ரீதியான திட்டங்களில், ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை மேம்படுத்துவதற்காக முன்னணி அரசாங்க பல்கலைக்கழகம் என்ற முறையில் மொறட்டுவை பல்கலைக்கழகமானது மிகுந்த அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது. கல்வி மூலமாக வாழ்க்கையை மேம்படுத்தல், உணவுப் பாதுகாப்பினை உறுதி செய்தல், சுகாதாரம் மற்றும் நல்வாழ்வினை ஊக்குவித்தல், உள்ளடக்கிய மற்றும் சமத்துவமான தரமான கல்வியை வழங்குதல், பால்நிலை சமத்துவத்தை ஊக்குவித்தல், தூய நீர் மற்றும் துப்பரவாக்கல் வசதிகள் பெற்றுக் கொள்வதை உறுதி செய்தல், நிலைபேறான சக்தி தீர்வுகளை மேம்படுத்தல், பொருளாதார வளர்ச்சிக்கு உதவுதல் போன்ற பிரதான விடயங்களுக்கு கவனத்தை செலுத்தி தனது தொழிற்பாடுகள் மற்றும் முன்னெடுப்புகள் முழுவதும் நிலைபேறான நடைமுறைகளை பல்கலைக்கழகம் ஒருங்கிணைத்துள்ளது. மாணவர்களுக்கான நிதி ரீதியான உதவிகள், மானிய அடிப்படையிலான உணவு நிகழ்ச்சித்திட்டங்கள், நிலைபேறான சக்தியில் புத்தாக்க ரீதியான ஆய்வுகள், உள்ளடக்குதல் மற்றும் பால்நிலை சமத்துவத்தை மேம்படுத்துதல் போன்ற இலக்கிடப்பட்ட நடவடிக்கைகள் மூலம் மொறட்டுவை பல்கலைக்கழகமானது இலங்கையின் நிலைபேறான அபிவிருத்திக்கு அர்த்தபுஷ்டியான முறையில் பங்களிப்புச் செய்வதுடன் அனைவருக்கும் சிறப்பான எதிர்காலத்தை உருவாக்கக்கூடிய தலைவர்களாக திகழ்வதற்கு ஏற்ற வகையில் தனது பட்டதாரிகளை தயார்படுத்தி வருகின்றது.

## 09. கட்டுப்படுத்தல்கள்

செயல்பாட்டுத் திட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள செயல்பாடுகள் நடைமுறைப் படுத்தப்பட்டிருப்பதுடன், 2022-2026 மூலோபாய முகாமைத்துவ திட்டத்தில் (SMP) 01 முதல் 06 வரையில் பல இலக்குகள் அடைந்துகொள்ளல் சம்பந்தமாக குறிப்பிடத்தக்க வகையில் பங்களிப்புச் செய்துள்ளன. ஆயினும், மொறட்டுவைப் பல்கலைக்கழகம் அரசாங்க நிதிகளில் தங்கியிருக்கும் விடயங்களில், மற்றும் தீர்மானம் எடுக்கும் தன்னாட்சி அதிகாரம் இல்லாததனால், குறிக்கோள்களும், நோக்கங்களும் முழுமையாக இன்னும் அடையப்பட வேண்டியுள்ளது.

## மனித வளங்கள் மற்றும் அபிவிருத்தி

உயர் கல்வித் துறையில் மாறிவரும் சூழ்நிலைகளை எதிர்கொள்வதற்காக அரச பல்கலைக்கழங்களில் ஏற்படும் தேவைகளை

# பல்கலைக்கழக செயல்பாடுகள் பற்றிய கண்ணோட்டம்

பூர்த்திசெய்ய புதிய பதவியணியினரை அறிமுகப்படுத்துவது அத்தியாவசியமானதாகும். பல்கலைக்கழக வியாபார தொடர்புகள், ஏற்பாட்டுவசதிகள் முகாமைத்துவம், தகவல் தொடர்பாடல் சேவைகளும் தலைமைத்துவமும், ஈ-கற்றல் ஊக்குவிப்பு, சந்தைப்படுத்தல் மற்றும் ஊடக அலுவல்கள் போன்ற புதிய பணிகள் சார்பாக திறன்வாய்ந்த தொழில்வாண்மையாளர்களின் தேவை இதில் உள்ளடங்குகின்றது. இவ்வாறு ஏற்படும் தேவைகள் சார்பாக பல்கலைக்கழகம் அத்தகைய பதவியணியினர் இன்றி பல்கலைக்கழகம் திணறி வருவதுடன் அலுவல்சார் அங்கீகரிப்புச் செயற்பாடுகளும் வலி மிகுந்ததாகவுள்ளது.

பீடங்களின் கல்விசார் பணியாட்தொகுதியினர் அல்லது ஆய்வாளர்கள் இதைவிடவும் வேறு சிறந்த தொழில்வாய்ப்புகளை நாடி செல்லும்போது, அது பல்கலைக்கழக சமூகத்திற்குள் புலமைச்சொத்து மூலதனம், நிபுணத்துவம் மற்றும் வழிகாட்டுதல் போன்றவற்றை இழக்க நேரிடக்கூடும். மேலும், இது பல்கலைக்கழகத்தின் ஆய்வு வெளியீடுகளையும் மற்றும் கல்விசார்ந்த நற்பெயரையும் பாதிக்கும்.

ஊதியங்கள் மற்றும் ஏனைய ஊக்கப்படுத்தல் கொடுப்பனவுகள் குறைவு காரணமாக கருத்திட்ட முகாமையாளர் மற்றும் வேலை பொறியியலாளர் ஆகிய பதவிகளுக்கு நிரந்தர தகைமைபெற்ற மற்றும் திறனுள்ள தொழில்வாண்மையாளர்களை ஆட்சேர்த்துக்கொள்ளல் சம்பந்தமாக பல்கலைக்கழகத்திற்கு அதிக சிக்கல்வாய்ந்ததாக இருக்கும் அதேவேளை, பராமரிப்பு பிரிவில் குறிப்பிடத்தக்க அளவில் பதவி வெற்றிடங்கள் காணப்படுவதுடன், கருத்திட்ட முகாமை மற்றும் பராமரிப்பு பணிகள் என்பவற்றை பயனுறுதிமிக்க வகையில் நிறைவேற்றுவது பாரிய சிரமமாகவுள்ளது.

கொள்வனவு முறை சம்பந்தமான பிரச்சினைகள், செயலாற்றல் சார் கண்காணிப்பு மற்றும் ஒப்பந்தக்காரர்களின் மோசமான செயற்பாடுகள் காரணமாக பல கட்டட நிர்மாணிப்பு மற்றும் புனரமைப்பு கருத்திட்டங்கள் குறிப்பிடத்தக்களவு பின்னடைந்துள்ளன. பல்வேறு பிரச்சினைகள் காரணமாக திறமையான நிர்மாண ஒப்பந்தக்காரரின் சேவையைப் பெற்றுக்கொள்வது கடினமாகவுள்ளது. ஆலோசனை-யாளர்களும் திறமையற்றவர்களாக உள்ளனர். பல்கலைக்கழகத்தின் தரப்பில் நல்ல கருத்திட்ட முகாமையாளரொருவர் இல்லாததனால் பிரச்சினைகள் குவிந்துள்ளதுடன், தவிர்க்க முடியாத காலதாமதங்களும் விளைவுகளாக உள்ளன.

### நியம நிலைகளுடன் விடுதிகள்

பராமரிப்பதற்கும், அதிக எண்ணிக்கையிலான மாணவர்களை தங்கவைப்பதற்காக விடுதி வசதி திறனை அதிகரிக்கவும் போதுமானளவு செயல்பாட்டு மற்றும் பராமரிப்பு நிதி இருத்தல் அவசியமாகும். அரசாங்கத்தினால் அவ்வாறான நிதி வழங்கப்படாவிட்டால், அத்தகைய பராமரிப்பு தேவைகளுக்காக குறைந்தபட்சம் பகுதியளவு நிதியை பூர்த்திசெய்து கொள்வதற்காக ஓரளவு விடுதிக் கட்டணங்களை உயர்த்துவதற்கு அதிகாரம் வாய்த்தவர்களால் கூட்டு தீர்மானமொன்றை எடுப்பது அவசியமாகும்.

### காணி கையகப்படுத்தல் மற்றும் விரிவுபடுத்தல்

பல்கலைக்கழகமானது மொறட்டுவையிலுள்ள கட்டுப்பெத்தையில் 55 ஏக்கர் காணியில் அமைந்துள்ளது. பல வருடங்களாக நடைபெற்றுவரும் விரிவாக்கத்துடன், முக்கியமாக புதிதாக வியாபார மற்றும் மருத்துவ பீடங்கள் உருவாக்கப்பட்டதைத் தொடர்ந்து இக் காணியின் இடவசதி நிறைவடையும் நிலையில் உள்ளது. இடவசதி தொடர்பாக காணப்படும் சங்கடங்களை நிவர்த்தி செய்வதற்காக பல்கலைக்கழகம் நிலைக்குத்தான கட்டடங்களை நிர்மாணிக்கும் உபாய முறையை செயற்படுத்த முயற்சியெடுத்துள்ளது. பல்கலைக்கழகத்தின் உகந்த சூழலினை பேணிச்செல்லும் தேவைப்பாடு மற்றும் பல்கலைக்கழகம் இரத்மலானை விமான நிலையத்துக்கு அருகாமையில் அமைந்திருப்பதனால் செங்குத்தான விரிவாக்கம் சம்பந்தமாக சிவில் விமான போக்குவரத்து அதிகாரசபையினால் விதிக்கப்படும் கட்டுப்பாடுகளை பின்பற்றவேண்டிய தேவைப்பாடு ஆகிய சூழ்நிலைகளின் கீழ் இவ் உபாய முறையானது அப்பிரச்சினைக்கு முழுமையான தீர்வொன்றினை வழங்குமென எதிர்பார்க்க முடியாது. இருப்பினும், விடுதி வசதிகள் விரிவாக்கம் செய்தல் மற்றும் கல்விச் செயற்பாடுகள் இரண்டிலும் மொறட்டுவைப் பல்கலைக்கழகத்திற்கு புதிதாக காணி சுவிகரிப்புச் செய்தல் அத்தியாவசியத் தேவையாகும். கல்விசார் நிகழ்ச்சித் திட்டங்களின் விரிவாக்கல் சம்பந்தமாக குறைந்தது 10-15 ஏக்கர் பரப்பளவு

கொண்ட பெரியதொரு காணியொன்று நெருங்கிய சுற்றுவட்டாரத்தில் தேவைப்படுகிறது.

## நிதிசார் கட்டுப்படுத்தல்கள்

கடந்த சில வருடங்களில் மூலதன நிதிசார் ஒதுக்கீடுகள் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்துள்ளதால், வசதிகள் சம்பந்தமான இற்றைப்படுத்தலைச் செய்து பராமரிப்பது கடினமாகியுள்ளது. அரசாங்க செலவினங்கள் சார்பாக கட்டுப்பாடுகளை விதிக்கும் வகையில் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை ஆலோசனைகள் மூலம் புதிய நிர்மானிப்பு கருத்திட்டங்களை ஆரம்பிப்பது கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. இது, செயல்நுணுக்க முகாமைத்துவ திட்டத்துடன் (SMP) ஒப்பிடும் போது பல்கலைக்கழகத்தின் முன்னேற்றத்தை தாமதப்படுத்தவும் காரணமாகியுள்ளது. எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைந்துகொள்வதற்கு மேலதிக நிதியளிப்பு அத்தியாவசியமானதாகும்.

## புதுமையாக்கம் மற்றும் வணிகமயமாக்கம்

துரித பொருளாதார வளர்ச்சிக்கான உபாயங்களாக துவக்க நிலைகளை புதுமையாக்குதல், அதனோடு இணைந்த தொழில்நுட்பங்களை அபிவிருத்தி செய்தல், வணிகமயமாக்குதல் மற்றும் மேம்படுத்துதல் தொடர்பாக பல்கலைக்கழகங்களுக்கு சர்வதேச புகழ் பெற்ற ஏனைய பல்கலைக்கழகங்களில் காணப்படுவது போன்ற வளர்ச்சிமையங்கள் நிறுவக் கூடியதாக இருத்தல் வேண்டும். பல்கலைக்கழகங்களில் உள்ள வளர்ச்சிமையங்களுக்கு நட்டங்களை ஏற்க முடியாதபடியால் அவற்றுக்கு சட்டபூர்வமாக அனுமதி தரப்படுவதில்லை. வித்து நிதிகள் மற்றும் வெற்றிகள் தொடர்பான உத்தரவாதமில்லாமல் ஆதரவு, சொந்த உடமைக்கான சட்டப்பொறி ஆகியன வளர்ச்சிமையங்களுக்குத் தேவையாகவுள்ளன. இலங்கை கண்டுபிடிப்பாளர்கள் ஆணைக்குழு மாத்திரமே இடர்களை ஏற்கலாம்.

அதேபோல், பல்கலைக்கழகங்கள் அவைகளின் சொந்த வணிகமயமாக்கப்பட்ட தொழில்நுட்பங்களைக் கொண்டு வணிகமுயற்சி பணிகளுக்கு பல்கலைக்கழகங்களே பங்காளராக இருக்கமுடியாது. அவ்வாறான கண்டுபிடிப்பு-களுக்கான உரிமைக் கொடுப்பனவைப் பெறவோ அல்லது தொழில்நுட்பங்களை விற்கவோ மட்டுமே அவைகளால் முடியும். புதிய பிரதான முன்னேற்ற குறிகாட்டிகளாக பெருமளவான ஆக்கவுரிமைகள், வணிகமயப்படுத்தப்பட்ட தொழில்நுட்பம் மற்றும் வணிகங்களை ஆரம்பித்தல் என்பன பல்கலைக்கழகத்தினால் செயற்படுத்தப்பட்டதனால் கொள்கை ரீதியான மாற்றமொன்று அவசியமாகும்.

## ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி (R & D)

விசேடமாக ஆய்வு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை அடிப்படையாகக்கொண்ட ஆய்வுகளையும், அபிவிருத்தி நடவடிக்கைகளையும் மேற்கொள்ள பல்கலைக்கழகங்களால் ஊக்கப்படுத்தப்படுகின்றன. கைத்தொழில் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை இலக்காகக் கொண்ட ஆய்வுகளுக்கும், அபிவிருத்திகளுக்கும் அதிகமான கேள்விகள் உள்ளன. எவ்வாறிருப்பினும், பல்கலைக்கழகங்கள் அநேகமாக தாமதங்களுக்காக விமர்சிக்கப் படுவதுடன், சில சந்தர்ப்பங்களில் உரிய நேரத்தில் விநியோகிப்பதில் ஏற்படும் சிக்கல்களினால் அவ்வாறான கருத்திட்டங்கள் பல்கலைக்கழகங்களுக்கு கையளிக்கப் படுவதில்லை. அதிகமான நேரத்தை எடுக்கும் அரசாங்க கொள்வனவு செயல்முறைமைகளை கடைப்பிடித்தல் இதற்கான காரணங்களில் ஒன்றாகும். ஆய்வு செயற்பாடுகளுக்கான கொள்வனவுகள் சார்பாக முன்கூட்டியே திட்டமிட முடியாததால், அதனை அச் சந்தர்ப்பங்களிலே கொள்வனவு செய்வதற்கான தேவையேற்படுகின்றது. வழமையான வழிகாட்டல்களிலிருந்து விலகிச் செயற்படுவதனால் அதிகமான கணக்காய்வு விசாரணைகள் தோன்றுகின்றன. ஆய்வு செயற்பாடுகளுக்கு கொள்வனவு செய்வதற்கான விசேட வழிகாட்டல்கள் பல நாடுகளில் காணப்படுகின்றன.

# பகுப்பாய்வு

## சாதகமானவை

S

பலங்கள்

- 50 வருடங்களுக்கும் மேலான வரலாறு மற்றும் அனுபவம்
- ஆகியவற்றுடன் தாபிக்கப்பட்ட நற்பெயர்
  பலதுறை ஆராய்ச்சிகள் சார்ந்த வலுவான கலாச்சாரம்
  பல்கலைக்கழக ஆலோசனை சேவைகளுக்காக
- அர்ப்பணிக்கப்பட்ட தனிப்பட்ட சங்கம்
- தொழில்நுட்ப வலுவூட்டுதல் சார்பான கவனம் செலுத்தல் உயர்
- திறன் கொண்ட கல்விசார் பணியாளர்கள்
  புதிய பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகப்படுத்துதல்
  கைத்தொழில்துறை தேவைகளுக்கு ஏற்ப ஒழுங்கான
- பாடத்திட்ட திருத்தப்படுத்தல்
  நன்கு நிறுவப்பட்ட ஆளுகை பொறிமுறைகள்
- கைத்தொழில்துறை பங்காளர்களுடன் வலுவான
- ஒத்துழைப்பு
  ஆரோக்கியமான மாணவர் பீடம் சார்ந்த தொடர்பு
  பரந்தளவான முன்னாள் மாணவர் வலையமைப்பு புதிதாக
- வெளியேறிய பட்டதாரிகள் சார்பான 90% வேலைவாய்ப்பு
- வீதம்
- செயலூக்கமுள்ள சர்வதேச ஒத்துழைப்புகள் இலங்கையிலுள்ள
  ஒரேயொரு கட்டடக்கலை பீடம் இலங்கையில் மருத்துவ
- தொழில்நுட்பத்துடன் கூடிய ஒரே மருத்துவ பீடம்
- குறைந்தபட்ச மாணவர் அமைதியின்மை

உள்ளகச் சூழல்

## பாதகமானவை

W

- வரையறுக்கப்பட்ட பொது நிதியளிப்பு
  அரசாங்க ஒழுங்குவிதிகள் அல்லது கொள்கைகள் சார்பாக
  எதிர்பாராத மாற்றங்கள் உட்பட அரசியல் மாற்றங்களும்
- உறுதியற்றதன்மைகளும்
- ஆராய்ச்சி மானியங்களுக்கான அதிகரித்த போட்டி
- தொற்று நோய்கள் பரவுதல்
  நிலவுகின்ற பொருளாதார நெருக்கடிகள்

## சாதகமானவை

O

### வாய்ப்புகள்

- தொழில்நுட்பம் சார்ந்த கல்விக்கான கேள்வி
- அதிகரித்தல் பல்வேறு மாதிரிகள் மற்றும்
  பொறிமுறைகள் மூலம்
  கைத்தொழில்துறையுடனான இணைப்புக்களை
- விருத்திசெய்தல்
  யுனெஸ்கோ மதன்ஜீத் சிங் தெற்காசிய நீர்
- முகாமை நிலையத்துடனான ஒத்துழைப்பு
  வெளியக மூலங்களிலிருந்து நிதியளிப்பு
- பெறுவதற்கான சந்தர்ப்பம்
  பட்டப்படிப்பு மற்றும் பட்டமேற்படிப்பு மாணவர்கள்
  மத்தியில் வேலையில் அமர்வது சம்பந்தமாக
- அதிகமான கேள்வி
- ஒன்லைன் கல்வி மற்றும் ஈ-கற்றல் தளங்களின்
  வளர்ச்சி நிலைபேறான தொடக்க
  முயற்சிகளுக்கான கேள்வி அதிகரித்தல்

வெளிப்புறச்

## பாதகமானவை

T


### அச்சுறுத்தல்கள்

- வரையறுக்கப்பட்ட பொது நிதியளிப்பு
- அரசாங்க ஒழுங்குவிதிகள் அல்லது கொள்கைகள் சார்பாக
  எதிர்பாராத மாற்றங்கள் உட்பட அரசியல் மாற்றங்களும்
  உறுதியற்றதன்மைகளும்
- ஆராய்ச்சி மானியங்களுக்கான அதிகரித்த
- போட்டி தொற்று நோய்கள் பரவுதல்
- நிலவுகின்ற பொருளாதார நெருக்கடிகள்



# 02

# மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின நிலைபேறான அபிவிருத்தி




பெறுமதி உருவாக்க மாதிரி - 62
நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான வழி - 64
நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுடன் (SDGs) UoM இன் மூலோபாய இலக்குகளை சீரமைத்தல் - 74
பல்கலைக்கழகத்தில் இடர் பகுப்பாய்வும் முகாமைத்துவமும் - 76

# பெறுமதி உண்டாக்கும் செயற்பாடு

## உள்ளீடுகள்

மனித மூலதனம்
கல்விசார் பணியாளர்கள்
கல்விசாரா பணியாளர்கள்
ஏனைய துணை பணியாளர்கள் வருகைதரும்
விரிவுரையாளர்கள்
அதிதி சொற்பொழிவாளர்கள்
நிறுவன பயிற்றுவிப்பாளர்கள்



உற்பத்தியாக்கல் மூலதனம்
காணியும் கட்டடங்களும்
ஆய்வுகூடங்கள்
விரிவுரை மண்டபங்கள்
கணினி ஆய்வாகங்கள்
தொழில்நுட்பம்



நிதிசார் மூலதனம்
அரசாங்க நிதிகள்
சுய ஈட்டல் நிதிகள்
பிற நன்கொடைகளும் மானியங்களும்



புலமைசார்ந்த மூலதனம்
நிபுணர்களது அறிவு
ஆராய்ச்சிசார்ந்த அறிவு
மென் திறன்கள்



சமூக மூலதனம்
கைத்தொழில்துறை பங்காளர்கள்
முன்னாள் மாணவர் வலையமைப்பு



இயற்கை மூலதனம்
நீர்
சக்தி
சூரிய சக்தி
மர நிழல்



## செயலாக்கம்

**கல்வி**
கைத்தொழில் தேவைகளுக்கு இசைவுறும் வகையில் பல்வேறு கல்விசார்ந்த நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குதல் மற்றும் கல்விசார்ந்த விளைவுகளை மேம்படுத்துவதற்கும் மற்றும் வாழ்க்கையின் நிலைமாற்றத்திற்காகவும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல்.

**ஆராய்ச்சி**
தற்போதுள்ள அறிவினை மேம்படுத்துவதற்கும், புதிய உள்ளார்ந்த விடயங்களை உருவாக்கவும், ஒரு ஆய்வுக் கலாச்சாரத்தை ஊக்குவித்து பல்துறை முன்னெடுக்க

**திறன் அபிவிருத்தி**
மாணவர்களின் எதிர்காலத் தொழில்வாய்ப்புகளுக்கான மென்மையான மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த திறன்களை மையப்படுத்திய நிகழ்ச்சித்திட்டங்களை ஏற்பாடுசெய்தல்.

**பயிற்சி மற்றும் அபிவிருத்தி**
மாணவர்கள் நடைமுறைசார்ந்த அறிவைப் பெறுவதை உறுதிசெய்யும் வகையில், மாணவர்களுக்கு குறுங்கால மற்றும் உள்ளக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குதல் மற்றும் பணியாட்தொகுதியினரின் தொழில்வாண்மை அபிவிருத்திக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை அவர்களுக்கு ஏற்பாடுசெய்துக் கொடுத்தல்.

**நிர்வாகம் மற்றும் ஆளுகை**
தந்திரமான நீளாந்த செயற்பாடுகள், வெளிப்படைத்தன்மை மற்றும் உறுதிப்படுத்தும் வகையில், நிர்வாகப் பணிகளை முகாமைத்துவம் செய்து ஆளுகைப் பொறிமுறைப்படுத்த

நிர்வாகம் மற்றும் ஆளுகை
தந்திரமான நீளாந்த செயற்பாடுத்தன்மை பொறுப்புக்கூறல் ஆகியவற்றை உறுதிப்படுத்தும் வகையில், பணிகளை முகாமைத்துவம் செய்து ஆளுகைப நிடைமுறைப்படுத்தல்.

**சமுதாய ஈடுபாடு**
ஒரு பொறுப்புவாய்ந்த அரச நிறுவனம் பல்வேறு சமுதாய நடவடிக்கைகள் ஊடாக கூட்டுறவுச் சமூக பொறுப்புப்புக்கான தீர்வினை வழங்கல்

## வெளியீடு

ஆற்றல்மிக்க
மற்றும்
திறன்வாய்ந்

திருப்தியான
பணியாளர்க
ள்



ஆய்வு வெளியீடுகள்
மற்றும்
மானியங்கள்

ஒத்துழைப்புக்கள்
மற்றும்
பங்காண்மைகள்



புத்தாக்கங்கள்
சார்பான

திருப்திகரமா
ன

## பெறுபேறுகள்

உயர்
வேலைவாய்ப்பு
விகிதம்

பணியாளர் உயர்
அர்ப்பணிப்பு மற்றும்

சர்வதேச
அங்கீகாரம்
மற்றும்

பயன்மிக்க
கூட்டாண்மைகள்

நிலைபேறான
அபிவிருத்தி



நன்மதிப்பு மற்றும்
அங்கீகாரம்

# நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான வழிமுறைகள்




இலங்கையில் முன்னணி அரசாங்க பல்கலைக்கழகம் என்ற முறையில், அதன் பங்கீட்டுபாட்டாளர்கள் மற்றும் சமூகம் ஆகியவற்றிற்கு சிறப்பான எதிர்காலத்தை உருவாக்கும் முகமாக ஐக்கிய நாடுகள் சபையினால் குறிப்பிடப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (SDGs) முன்னெடுத்துச் செல்வதில் அர்ப்பணிப்புடன் மொறட்டுவை பல்கலைக்கழகம் செயற்படுகின்றது. இதன் பிரகாரம் 2022 – 2026 ஆம் வருடத்திற்கான பல்கலைக்கழகத்தின் உபாய ரீதியான திட்டமானது இந்த இலக்குகளுக்கு ஏற்ப உருவாக்கப்பட்டது. உயர்கல்வி அமைச்சு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, தேசிய திட்டமிடல் திணைக்களம் ஆகியவற்றின் கூட்டிணைந்த உபாயமுறைகளை இத்திட்டம் பின்பற்றி வருகின்றது.

நிலைபேறான அபிவிருத்திக்கான பல்கலைக்கழகத்தின் அர்ப்பணிப்பானது இத்தகைய இலக்குகளை அதன் தொழிற்பாடுகள் மற்றும் முன்னெடுப்புகளில் ஒருங்கிணைப்பதற்கான பூரணத்துவமிக்க அணுகுமுறையில் பிரதிபலிக்கப்பட்டுள்ளது. இத்தகைய நோக்கங்களை அடைவதற்கான பல்கலைக்கழகத்தினரல் பொறுப்பேற்கப்பட்ட திட்டவட்டமான நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் அதனோடு தொடர்புடைய செயற்பாடுகள் ஆகியன கீழே விபரமாக குறிப்பிடப்பட்டுள்ளன, இலங்கையில் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பில் அர்த்தபுஷ்டியான முறையில் பங்களிப்புச் செய்வதற்கான இதனது தற்போதைய முயற்சிகளை இது பிரதிபலிக்கின்றது.

1

## நிலைபேறான அபிவிருத்தி இலக்கு 01 : கல்வியின் மூலமாக வாழ்க்கையை வலுவூட்டல் மற்றும் நிலைபேறான வாழ்வாதாரங்களை தோற்றுவித்தல்.

நுண் கண்ணோட்ட அடிப்படையில் விரிவான சலுகை மற்றும் புலமைப் பரிசில் நிகழ்ச்சித்திட்டங்கள் ஆகியவற்றின் மூலம் அவசியமான மாணவர்களுக்கான நிதி உதவிகளை பல்கலைக்கழகம் வழங்கி வருகின்றது. இதன் மூலம் நிதி ரீதியான பிரச்சினைகளின் காரணமாக எந்த மாணவனும் கல்வியை விட்டு விலகிச் செல்வதை தடுப்பதற்காக இது மேற்கொள்ளப்படுகின்றது.
இந்த நோக்கத்திற்காக தொடர்ச்சியாக நிதிப் பாய்ச்சல்களை உறுதிப்படுத்தும் முகமாக பல்கலைக்கழகமானது தாராளத் தன்மைமிக்க பெருநிறுவனங்கள், தனிப்பட்ட நன்கொடையாளர்கள், நலன் விரும்பிகள் ஆகியோருடன் கூட்டிணைந்து செயற்படுகின்றது மேலும் தங்குமிட வசதிகள் போன்ற சிறிய சிறிய உதவிகளுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் நேரத்தை சேமித்தல் மற்றும் பாதுகாப்பான சுற்றாடல் உள்ளடங்கலாக பல்வேறு விதமான மேலதிக உதவிகளை குறைவான நிதிச் செலவுடன் வழங்கி வருகின்றது.

பாரியளவில் நோக்குகையில், சமூக அசைவியக்கத்தை உயர் திசையில் இட்டுச் செல்வதற்கான அடிப்படை கருவியாக கல்வியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் முகமாக இந்த இலக்கு செயற்படுவதுடன் நிலைபேறான வருமான ஈட்டல்கள் மூலம் வறுமையை இல்லாதொழித்தல் மற்றும் நிதி ரீதியான சுயாதீனத்தன்மை ஆகியவற்றை இது இலகுபடுத்துகின்றது நிலைமாற்று கல்வி மற்றும் சுயமாக நிலைத்து நிற்கின்ற ஆற்றல் கொண்ட தேர்ச்சிமிக்க பட்டதாரிகளை உருவாக்குதல் ஆகியவற்றின் மூலம் வாழ்வை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அர்ப்பணிப்புடன் மொறட்டுவை பல்கலைக்கழகம் மேற்கொண்டு வருகின்றது.
தொழில்முயற்சியை மையமாகக் கொண்ட பட்டதாரி நிகழ்ச்சித்திட்டங்கள், தொழில்களை நாடுபவர்களுக்கு பதிலாக தொழில்களை உருவாக்கக்கூடியவர்களை உற்சாகப்படுத்துவதை இலக்காகக் கொண்ட முன்னெடுப்புகள், தொழில் சந்தையில் வளர்ந்து வருகின்ற தேவைகளுக்கு ஏற்ப தொழில்நுட்ப மேம்படுத்தலை மையமாகக் கொண்ட தொடர்ச்சியான பாடத்திட்ட மீளாய்வுகள் ஆகியன உள்ளடக்கப்பட்டுள்ளன. கடந்த வருடங்களில் புதிதாக பட்டதாரிகளாக வெளியேறியவர்களுள் 90 வீதமானமானவர் வேலைக்கு அமர்த்துவதற்கான ஆற்றல்களை பெற்றுள்ளமையானது இது தொடர்பான பல்கலைக்கழகத்தின் பங்களிப்புகளை பிரதிபலிக்கின்றது.

2

## நிலைபேறான அபிவிருத்தி இலக்கு 02 : அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பினை உறுதி செய்தல்

மானிய விலையில் உணவை வழங்குவதன் மூலமாக உணவுப் பாதுகாப்பு மற்றும் போசாக்குமிக்க உணவுகளை சகல மாணவர்களும் பெற்றுக் கொள்ளுதல் ஆகியவற்றை உறுதி செய்வதற்கு அவசியமான நடவடிக்கைகளை பல்கலைக்கழகம் மேற்கொண்டுள்ளது. உணவின் தன்மையை தொடர்ச்சியாக சோதித்துப் பார்த்தல், சிற்றுண்டிச்சாலைகளில் அறிவிக்கப்படாமல் திடீரென மேற்கொள்ளப்படும் சோதனைகள், தரமான பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன என்பதனை உறுதி செய்தல் ஆகியன தரமான பொருட்களினால் தயாரிக்கப்படுகின்றன என்பதை
உறுதி செய்தல் ஆகியன இவ்விலக்கை அடைவதற்காக மேற்கொள்ளப்பட்ட சில காத்திரமான நடவடிக்கைகளாகும் மேலும் மாணவர்களின் பல்வேறு வகையான உணவுத் தேவைகள் மற்றும் போசாக்குத் தேவைகள் ஆகியன நிறைவேற்றுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதை பல்கலைக்கழகம் உற்சாகப்படுத்துகின்றது.

உணவு தொடர்பான ஏற்பாடுகளுள், சிற்றுண்டிச்சாலை கழிவுகளை ஆக்கபூர்வமான முறையில் பயன்படுத்துவதற்கான முன்னெடுப்புகளை பல்கலைக்கழகம் மேற்கொண்டுள்ளது. இதன் அடிப்படையில் உணவு
மற்றும் உயிர் இரசாயனவியல் சார்ந்த பொறியியல் துறை, உணவுப் பொறியியல், ஆரோக்கியமான பொறித்தொகுதி ஆகியன சமூகத்தின் உணவுப் பாதுகாப்பை இலக்காகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளன. அத்தோடு இவை பல்வேறு வகையான பட்டதாரி நிகழ்ச்சித்திட்டங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

# நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான

## 3

### நிலைபேறான அபிவிருத்தி இலக்கு 03 : சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு சார்ந்த கலாசாரத்தை ஏற்படுத்துவதன் மூலம் அனைவரது நலனையும் உறுதி செய்தல்.

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்கு ஏற்ப தனது மாணவர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோரது சுகாதாரம் மற்றும் நலன் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான பல்வேறு விதமான முன்னெடுப்புகளை மொறட்டுவை பல்கலைக்கழகம் மேற்கொண்டுள்ளது.
பல்கலைக்கழகத்தின் மருத்துவ நிலையமானது தடுத்தல் மற்றும் குணப்படுத்தல் சேவைகள் உள்ளடங்கலாக சுகாதார பராமரிப்பு
சேவைகளை வழங்குவதுடன் தனது மாணவர்கள் மற்றும் பணியாட்டொகுதியனர் ஆகியோருக்கான உளவியல் நோய் சார்ந்த சேவைகளையும் இலவசமாக வழங்கி வருகின்றது. இந்த நிலையத்தில் தங்கியிருப்பதற்கான வார்ட் தொற்றுநோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான தனிமைப்படுத்தல் அறைகள், ஆய்வுகூடம் ஆகியன காணப்படுகின்றன. இவ்ஆய்வுகூடத்தில் நோய் சார்ந்த சோதனைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அத்தோடு இந்த மருத்துவ நிலையத்தில் பல் மருத்துவ சிகிச்சைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உள சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு ஆகியவற்றின் முக்கியத்துவத்தை கருத்திற் கொண்டு, மாணவர்களுக்கு உதவுதல், அவர்களது வாழ்வினை மேம்படுத்தல் மற்றும் அவர்களது ஆலோசனை சார்ந்த சேவைகளை வலுப்படுத்தல் ஆகிய நோக்கங்களுக்காக தனித்துவமான மாணவர் மைய ஆலோசனை சேவைகள்
இங்கு காணப்படுகின்றன. அத்தோடு சேவை பெறுநர்களது இரகசியத்தன்மையும் பேணப்படுகின்றது. மற்றும் ஒவ்வொரு பீடத்திலும் பல்வேறு வகையான மாணவர் ஆலோசகர்கள் காணப்படுகின்றார்கள். இவர்களுள் கல்வியியல் சார் பணியாளர்களும் உள்ளடங்குகின்றனர் (பல்கலைக்கழகத்தில் பிரதான மாணவ ஆலோசகர்களுக்கு மேலதிகமாக இருக்கின்றனர்). தமது மாணவர்களுக்கு சிறப்பான பராமரிப்பு சேவைகளை வழங்குவதற்கு
ஏற்ற விதத்தில் இவர்கள் பயிற்றப்பட்டுள்ளனர். மேலும் திறன்களை வளர்த்தல், மன அழுத்தத்தை விடுவித்தல், உறுதியான சமூக வலையமைப்புகளை உருவாக்குதல் ஆகிய நோக்கங்களுக்காக பல்வேறு வகையான கழகங்கள் மற்றும் சங்கங்கள் மூலமாக மேலதிக இணை பாடவிதான செயற்பாடுகளில் பங்குபற்றுவதற்கு மாணவர்கள் உற்சாகப்படுத்தப்படுகின்றனர்.

பாரியளவில் நோக்குகையில் பல்கலைக்கழகத்தில் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட பீடமான மருத்துவ பீடமும் இலங்கை சமூகத்திற்கு பாரியளவில் சேவையாற்றும் முகமாக தனது சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு சார்ந்த சேவைகளை மேம்படுத்தியுள்ளது.
அதேவேளை மருத்துவம் மற்றும் உள சுகாதாரத்திற்கான திணைக்களமானது பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பட்ட பின்படிப்பு கற்கையில் ஈடுபடுபவர்கள் தொடர்பாக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது. அதேவேளை மருத்துவ தொழில்நுட்ப திணைக்களமானது இலங்கை மருத்துவ கல்வியில் சேர்க்கப்பட்ட புத்தாக்க ரீதியான மேலதிக விடயமாகும். சிறப்பான மற்றும் மிகவும் செலவுச் சிக்கனம்மிக்க சுகாதார பராமரிப்பு தீர்வுகளை வழங்கும் முகமாக புதிய தொழில்நுட்பத்தை விருத்தி செய்து மேம்படுத்துகின்ற தொலைநோக்குடன் மருத்துவ பாடத்திட்டத்தில் தொழில்நுட்பத்தை கூட்டிணைத்துள்ளது. மேலும் சுகாதார பராமரிப்பு புத்தாக்கங்கள் மற்றும் பொது சுகாதாரத்துடன் தொடர்புடைய ஆய்வுகள் ஆகிய பணிகளில் இப்பீடம் ஈடுபட்டுள்ளது.

## 4

### நிலைபேறான அபிவிருத்தி இலக்கு 04 : பூரணத்துவம் மற்றும் சமத்துவம் கொண்ட தரமான கல்வியை உறுதிப்படுத்தல் மற்றும் அனைவருக்கும் நீண்டகால கற்றல் வாய்ப்புக்களை ஊக்குவித்தல்

நாட்டின் பிரதான அரசாங்க பல்கலைக்கழகம் என்ற முறையில், நாட்டின் பல்வேறு பாகங்களிலிருந்தும் வருகை தருகின்ற மாணவர்களுக்கு உள்ளடக்கிய மற்றும் சமத்துவமிக்க தரமான கல்வியை வழங்குவதற்கு மிகவும் அர்ப்பணிப்புடன் மொறட்டுவை பல்கலைக்கழகம் செயற்பட்டு வருகின்றது. நாட்டின் பல மாவட்டங்களில் உள்ளடக்கிய மாணவர்களைக் கொண்ட அமைப்பொன்று பல்கலைக்கழகத்தில் பெருமையுடன் செயற்பட்டு வருகின்றது. மேலும் சலுகைகள் மற்றும் புலமைப் பரிசில் சார்ந்த செயற்பாடுகள் மற்றும் கற்றல் வளங்கள் (கணினி ஆய்வுகூடங்கள் மற்றும் நூலகங்கள் போன்றன) சகல விதமான பின்புலங்களையும் கொண்ட மாணவர்கள்
சமத்துவமான மற்றும் உள்ளடக்கிய கற்றல் அனுபவங்களை பெற்றுக் கொள்வதை உறுதி செய்கின்றது.

உயர்ந்த தரமிக்க கல்வியை வழங்குவது தொடர்பில் தன்மை உறுதிப்படுத்தல் பிரிவானது ஒவ்வொரு பீடத்திலும் முக்கிய வகிபாகத்தை வகித்து வருகின்றது. இதனது ஆளுகையின் கீழ் வருகின்ற சகல பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பட்டப் பின் படிப்பு கல்வியியல் நிகழ்ச்சித்திட்டத்தில் ஈடுபடுபவர்கள் ஆகியோரது தன்மையை மேம்படுத்துவது தொடர்பில் இது அர்ப்பணிப்புடன் இயங்கி வருகின்றது. நற்பெயர் கொண்ட வெளிநாட்டு பல்கலைக்கழகங்களிலிருந்தான அனுபவமிக்க கல்வியாளர்களினால் பட்டப் படிப்பு தொடர்பில் தொடர்ச்சியாக மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுவதானது சர்வதேச தராதரங்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் மற்றும் தற்போதைய பூகோள பாய்ச்சல் ஆகியவற்றுக்கு ஏற்ப செயற்படல் ஆகியவற்றை உறுதி செய்கின்றது. மேலும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்ற பாடத்திட்ட மீளாய்வுகளானது சந்தை கேள்விகளுக்கு ஏற்ப இருப்பதனை முன்னுரிமைப்படுத்துகின்றது. அத்தோடு, கல்வியில் பொருத்தப்பாடு மற்றும் நடைமுறைத் தன்மை ஆகியவற்றை உறுதிப்படுத்துவதுடன், மாணவர்களது பின்னூட்டல்களை இலகுபடுத்துவதுடன், சம்பந்தப்பட்ட பின்னூட்டல் செயற்பாடுகள் மற்றும் கற்பித்தல் தொடர்பான சகபாடி மீளாய்வுகள் ஆகியன கல்வியின் தன்மையை மேம்படுத்துகின்றது.

உள்ளக மாணவர்கள் மாத்திரம் தரமான கல்வியை அணுகிப் பெற்றுக் கொள்வதை மட்டுப்படுத்தாமல், பல்கலைக்கழகமானது இலவசமாக ஒன்லைன் மூலமான கற்கைகளை வழங்குவதுடன் பொதுமக்களுக்கான விரிவுரைகள் மற்றும் சமுதாய கற்றல் நிகழ்வுகள் உள்ளடங்கலாக பொதுமக்களுடைய நலனுக்காக பல நிகழ்வுகளை நடாத்தி வருகின்றது. உதாரணமாக, திறந்த கற்றல் தளமானது தகவல் தொழில்நுட்பம் தொடர்பான மாறுபட்ட தொழில்களை மேற்கொள்வதற்கான கற்றல் வழிமுறைகளை வழங்குகின்றது. சகல விதமான கற்றல்களும் ஒன்லைன் மூலமாக நடைபெறுவதுடன் பங்குபற்றுநர்களது சௌகரியத்திற்கு ஏற்ற விதத்தில் தெரிவுகளை மேற்கொள்ளலாம். இவற்றுள் முக்கியமாக வாழ்நாள் முழுவதுமான கற்றல் வாய்ப்புகள் வழங்கப்படுவதுடன் ஸ்டீம் கல்வி முறையையும் பகிரங்கமாக கற்க முடியும். இதனை open.uom.lk பிளெட்போம் மூலமாகவும் மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் தொலைக்கல்வி கற்றல் நிலையம் வழங்குவதுடன் இதற்கான அனுசரணைகளை DP கல்வி வழங்குகின்றது.

## 5

### நிலைபேறான அபிவிருத்தி இலக்கு 05 : பால்நிலை சமத்துவம் மற்றும் உள்ளடக்கிய வாய்ப்புகள் ஆகியவற்றை ஊக்குவித்தல்.

பல்கலைக்கழகத்தின் சமுதாயத்தை சேர்ந்த சகல உறுப்பினர்களும் சமத்துவ வாய்ப்புகள், பால்நிலை சமத்துவம், சகலரையும் உள்ளடக்குதல் ஆகியவற்றை பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புகளை அர்ப்பணிப்புடன் மொறட்டுவை பல்கலைக்கழகம் மேற்கொண்டு வருகின்றது. மரபு ரீதியான நோக்குகையில் பொறியியல் மற்றும் தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் ஆண்களே அதிகமாக காணப்படுகின்றனர். இருப்பினும் பல்கலைகழகத்தினால் மேற்கொள்ளப்பட்ட பெண்கள் பிரதிநிதித்துவம் தொடர்பான பகுப்பாய்வொன்றிலிருந்து பட்டதாரி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு தம்மை பதிவு செய்யும் மாணவர்களில் 40% ஆனவர்கள் பெண்கள் என கண்டறியப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டில் 37% ஆன பட்டதாரிகள் பெண்கள் ஆகும் அதேவேளை நிரந்தர சேவையிலுள்ள கல்வியியல் பணியாட்டொகுதியினர், ஒப்பந்த மற்றும் தற்காலிக ஊழியர்களில் சுமார் 48% ஆனவர்கள் பெண்கள். பல்கலைக்கழகத்தில் பால்நிலை சமத்துவம் அர்ப்பணிப்புடன் பேணப்படுவதை இந்த புள்ளிவிபரங்கள் எடுத்துக் காட்டுகின்றன, அதேவேளை போதியளவு தங்குமிட வசதிகளை வழங்குதல், துப்புரவாக்கல் மற்றும் கழிப்பறை வசதிகளை வழங்குதல், இரு பாதையும் சேர்ந்த மாணவ ஆலோசகர்களை நியமித்தல் ஆகியன மாணவர்களது சகல மட்டங்களிலும் உள்ளடக்குதலை மேம்படுத்துவதை இலக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பாரபட்சமற்ற வேலை கலாசாரத்தை உருவாக்குவதற்கு அர்ப்பணிப்புடன் பல்கலைக்கழகம் செயற்பட்டு வருகின்றது. ஆட்சேர்த்தல், பதவி உயர்வுகள், தொழில்வாண்மை அபிவிருத்தி வாய்ப்புகள் ஆகியன திறமை மற்றும் செயலாற்றுகை ஆகியவற்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன. இதன் பொழுது பால்நிலை அல்லது இனம் போன்ற பரிமாணங்கள் கருத்திற் கொள்ளப்படுவதில்லை. மெய்நிகர் பால்நிலை பிரிவானது பால்நிலை தொடர்பான கலந்துரையாடல்களை ஊக்குவித்து, துன்பங்களை முகாமைத்துவம் செய்வதுடன் விழிப்பூட்டல் அமர்வுகளையும் ஒழுங்கமைத்து வருகின்றது. மேலும் ஆறாம் இலக்க இலக்கினை அடையும் முகமாக: பல்கலைக்கழகத்தில் உபாய ரீதியான முகாமைத்துவ திட்டத்தில் பாரபட்சம் காட்டாமை, சமத்துவம் ஆகியன உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், இயலாமையுடன் கூடிய நபர்கள் அணுகல் வசதிகளை பெற்றுக் கொள்வதற்கேற்ற விதத்தில் பல்கலைக்கழகமானது நிர்மாண செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளது இதன் காரணமாக பல்கலைக்கழகமானது உள்ளடக்கிய நிறுவன ரீதியான கலாசாரங்களை செழுமைப்படுத்தி வருவதுடன் பல்வகைமை தன்மையின் சிறப்பம்சத்தை இவை கருத்திற் கொள்வதுடன் சமத்துவ வாய்ப்புகளையும் உறுதிப்படுத்தி வருகின்றது.

## 6

### நிலைபேறான அபிவிருத்தி இலக்கு 06 : சகலருக்கும் நீர் மற்றும் உடல்நலவசதிகள் கிடைப்பதை உறுதிசெய்தல்.

பல்கலைக்கழகமானது தூய்மையான மற்றும் நிலையான நீர் மற்றும் துப்பரவாக்கல் வசதிகளை வழங்கி வருகின்றது முக்கிய வளங்களை பொறுப்புடன் முகாமைத்துவம் செய்வதன் மூலம் பல்கலைக்கழக சமுதாயத்தை சேர்ந்தவர்களது சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு ஆகியவற்றை மேம்படுத்துவது தொடர்பிலான இதனது அர்ப்பணிப்புகளை இவை புலப்படுத்துகின்றன இத்தகைய ஒருங்கிணைக்கப்பட்ட அணுகுமுறையானது பல்கலைக்கழகத்தில் நம்பகமான மற்றும் நிலைபேறான நீர் விநியோகத்தினை உறுதிப்படுத்துவதுடன் பொது நீர் வளங்களை பாதுகாப்பதற்கான பங்களிப்புகளையும் புலப்படுத்துகின்றது. ஆகவே பரந்த சமுதாய தேவைகளுக்கு உதவுவதுடன், ஒட்டுமொத்த நீர் முகாமைத்துவத்தை வினைத்திறன்மிக்க முறையில் மேம்படுத்துவதற்கும் பங்களிப்புச் செய்கின்றது. பல்கலைக்கழகம் முழுவதும் தூய்மையான தராதரம்மிக்க சுகாதார சுற்றாடல் காணப்படுவதை உறுதி செய்யும் முகமாக வெளிநிலை சேவை வழங்குநர்களினால் தொடர் முறையில் துப்பரவாக்கல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன இதன் காரணமாக பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோருக்கு மிகவும் ஆரோக்கியமான மிதமான சூழ்நிலையை உருவாக்குகின்றது

நீர் சுத்திகரிப்பு மற்றும் விநியோகம், கழிவுநீர் முகாமைத்துவம், மேம்பட்ட நீர் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக பல்கலைக்கழகமானது பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இலங்கையில் நீர் வளங்கள் மற்றும் பொறியியல் முகாமைத்துவம் ஆகியவற்றை வலுவூட்டுவதற்காக, இதன் நேர மைய நிகழ்ச்சித்திட்டத்தின் ஓர் அங்கமாக நீர் வளங்கள் பொறியியல் மற்றும் முகாமைத்துவத்தில் பட்டப் பின் படிப்பு டிப்ளோமா நெறியொன்றினை பல்கலைக்கழகம் அறிமுகம் செய்துள்ளது. இதன் மூலம் வேலை செய்கின்ற தொழில்வாண்மைமிக்கவர்கள் இந்தத் துறையில் மேலதிக அறிவினையும் தகைமையும் பெற்றுக் கொள்ள முடியும் மேலும் தென்ஆசிய நீர் முகாமைத்துவத்திற்கான யுனெஸ்கோ மதன்ஜீத் சிங் நிலையமானது (UMCSAWM) தெற்கு ஆசிய நீர் முகாமைத்துவம் தொடர்பான முதலாவது உலக தராதர வசதியாகும். இது மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தின் கூட்டிணைவுடன் தொழிற்பட்டு வருகின்றது. நிலைபேறான நீர் வளங்கள் முகாமைத்துவ துறையில் உயர் கல்வியை பெற்றுக் கொள்வதன் மூலம் பிராந்திய ஒத்துழைப்பை அடைவதற்கு இந்த முன்னெடுப்பின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. அத்தோடு பிராந்திய ஒத்துழைப்பிற்கான தெற்கு ஆசிய அமைப்பு (SAARC) உறுப்பு நாடுகளின் மாணவர்களுக்கு முழுமையான புலைமைப் பரிசில்களை வழங்கி வருகின்றது. (SAARC)

# 7

## நிலைபேறான அபிவிருத்தி இலக்கு 07 : நிலைபேறான மற்றும் அணுகிப் பெறக் கூடிய சக்தி தீர்வுகளை மேம்படுத்துதல்.

இலங்கையில் நிலைபேறான சக்தி தீர்வுகள் பற்றிய ஆய்வுகள் மற்றும் கல்வி ஆகிய துறைகளில் முன்னணியில் மொறட்டுவை பல்கலைக்கழகம் திகழ்கின்றது.

| | போக்குவரத்து சார் எம்.எஸ்சி/பீஜீ திப்ளோ. | ஆங்கிலம் | 9 | - | 7 | 2 | 2 | - | 2 |
| | கருத்திட்ட முகாமை சார் எம்.பிஏ/ பீஜீ திப்ளோ. | ஆங்கிலம் | - | - | 48 | - | - | - | - |
| | இலத்திரனியல் மற்றும் தன்னியக்கம் சார் எம்.எஸ்சி/பீஜீ திப்ளோ. | ஆங்கிலம் | 33 | 29 | 152 | 3 | 1 | 5 | 7 |
| | சூழல் பொறியியலும் முகாமைத்துவமும் சார் எம்.எஸ்சி/ பீஜீ திப்ளோ. | ஆங்கிலம் | 33 | - | 38 | 3 | - | 11 | 1 |
| | வழங்கல் சங்கிலி முகாமை. சார் எம்.பிஏ. | ஆங்கிலம் | 23 | 14 | 125 | 6 | 2 | - | - |
| | புவி தொழில்நுட்ப பொறியியல் பற்றிய எம்.எஸ்சி/பீஜீ திப்ளோ. | ஆங்கிலம் | - | - | 52 | - | - | - | - |
| | சூழல் முகாமை. பற்றிய எம்.எஸ்சி/ பீஜீ திப்ளோ. | ஆங்கிலம் | 9 | - | 28 | 6 | 1 | 5 | - |
| | கட்டமைப்பு பொறியியல் வடிவமைப்பு சார் எம்.பொறியி./பீஜீ | ஆங்கிலம் | - | - | 45 | 10 | - | 17 | 1 |
| | நிர்மாண கருத்திட்ட முகாமைத்துவ எம்.எஸ்சி/ பீஜீ திப்ளோ. | ஆங்கிலம் | - | - | 55 | 18 | 9 | 2 | 7 |
| | நிதிசார் கணிதம் பற்றிய எம்.எஸ்சி/ பீஜீ திப்ளோ. | ஆங்கிலம் | 40 | 40 | 204 | 11 | 7 | 3 | 1 |
| | உற்பத்தி முறைமை பொறியியல் சார் எம்.பொறியி./பீஜீ | ஆங்கிலம் | 25 | 24 | 71 | 2 | 9 | - | 10 |
| | பொலிமர் தொழில்நுட்ப எம்.எஸ்சி/ பீஜீ திப்ளோ. | ஆங்கிலம் | - | 11 | 10 | - | - | - | 1 |

பட்டமேற்படிப்பு பட்டங்கள் பாடநெறி சார்பாக

| பீடம் | பாடநெறி | மொழி | உள்வாங்கல் (மாணவர்கள் எண்.) | | தற்போதுள்ள மாணவர் எண் | பூர்த்திசெய்தோர் எண்ணிக்கை | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | எம்.எஸ்சி./எம்.பொறி. / எம்.பிஏ. | | எம்.எஸ்சி./எம்.பொறி. / எம்.பிஏ. | |
| | | | 2022 | 2023 | | 2022 | 2023 | 2022 | 2023 |
| | அகழ்தல் மற்றும் கனிப்பொருள் ஆராய்ச்சி சார் எம்.எஸ்சி/பீஜீ டிப்ளோ. | ஆங்கிலம் | - | - | - | - | - | - | - |
| | மின் பொறியியல் சார் எம்.எஸ்சி/ பீஜீ டிப்ளோ. | ஆங்கிலம் | 18 | 4 | 148 | 8 | 5 | 26 | 22 |
| | மின் நிறுவுதல் சார் எம்.எஸ்சி/பீஜீ டிப்ளோ. | ஆங்கிலம் | 22 | 27 | 169 | 2 | 5 | 50 | 48 |
| | கைத்தொழில் தன்னியக்கம் சார் எம். எஸ்சி./பீஜீ டிப்ளோ. | ஆங்கிலம் | 25 | 14 | 160 | 5 | 5 | 30 | 16 |
| | கட்டமைப்பு பொறியியல் சார் எம். எஸ்சி/ பீஜீ டிப்ளோமா | ஆங்கிலம் | - | - | 35 | - | 1 | - | 2 |
| | பொருட்கள் விஞ்ஞானம் பொறியியல் சார் எம்.எஸ்சி/ பீஜீ டிப்ளோ. | ஆங்கிலம் | 19 | 19 | 65 | 3 | 2 | 2 | 9 |
| | நிலைபேறான செயல்முறை பொறி. சார் எம்.எஸ்சி/பீஜீ டிப்ளோ. | ஆங்கிலம் | - | 36 | 78 | - | 2 | - | - |
| பொறியியல் | ஈ-ஆட்சி சார் எம்.பி.ஏ/பீஜீ டிப்ளோ. | ஆங்கிலம் | 5 | - | 14 | 3 | - | - | - |
| | கட்டட சேவைகள் பொறியியல் சார் எம்.எஸ்சி/ பீஜீ டிப்ளோ. | ஆங்கிலம் | 44 | 29 | 61 | 5 | - | 10 | 10 |
| | சக்தி தொழில்நுட்பம் சார் எம். பொறி/பீஜீ டிப்ளோ. | ஆங்கிலம் | - | - | 37 | 6 | 6 | 3 | 1 |
| | புடைவை மற்றும் ஆடை முகாமை சார் எம்.எஸ்சி/ பீஜீ டிப்ளோ. | ஆங்கிலம் | - | - | 31 | - | 4 | 1 | - |
| | உட்கட்டமைப்பு சார் சார் எம்.பி.ஏ/ பீஜீ டிப்ளோ. | ஆங்கிலம் | - | - | - | - | - | - | - |
| | தொடர்பாடல் சார் எம்.எஸ்சி/பீஜீ டிப்ளோ. | ஆங்கிலம் | 21 | 11 | 91 | 6 | 3 | 3 | 5 |
| | இலத்திரனியல் மற்றும் தொடர்-பாடல் சார் எம்.எஸ்சி/பீஜீ டிப்ளோ. | ஆங்கிலம் | - | - | - | - | - | - | - |
| | நீர் வள பொறியியல் சார் எம்.எஸ்சி/ பீஜீ டிப்ளோ. | ஆங்கிலம் | 28 | - | 60 | 12 | 3 | 6 | - |
| | தரவு விஞ்ஞானம் மற்றும் செயற்கை மதிநுட்பம் சார் எம். எஸ்சி/பீஜீ டிப். | ஆங்கிலம் | | 45 | 45 | | | | |

# உள்நாட்டு மாணவர்கள்

## பட்டமேற்படிப்பு பட்டங்கள் (பாடநெறி சார்பாக)

| பீடம் | பாடநெறி | மொழி | உள்வாங்கல் (மாணவர்கள் எண்) | | தற்போதுள்ள மாணவர் எண் | பூர்த்திசெய்தோர் எண்ணிக்கை | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | எம்.எஸ்சி./எம். பொறி. / எம்.பிஏ | | எம்.எஸ்சி./எம். பொறி. / எம். பிஏ. | |
| | | | 2022 | 2023 | | 2022 | 2023 | 2022 | 2023 |
| தகவல் தொழில்நுட்ப பீடம்Information Technology | செயற்கை மதிநுட்பம் சார் எம். எஸ்சி./பீஜீ திப்ளோ. | ஆங்கிலம் | 27 | 46 | 214 | 15 | 14 | 4 | - |
| | கல்விசார்ந்த தகவல் தொழில்நுட்ப பீஜீ திப்ளோமா | ஆங்கிலம் | - | - | - | - | - | - | - |
| | தகவல் தொழில்நுட்பம் சார் எம். எஸ்சி./பீஜீ திப்ளோ. | ஆங்கிலம் | 26 | 30 | 118 | 16 | 30 | - | - |
| வியாபார பீடம் | தொழில்நுட்ப முகாமை சார் எம். பி.ஏ./பீஜீ திப்ளோ. | ஆங்கிலம் | 51 | 53 | 309 | 35 | 6 | 2 | 4 |
| | தொழில்முனைவு சார் எம்.பி.ஏ./பீஜீ திப்ளோ. | ஆங்கிலம் | 8 | - | 65 | 5 | 6 | - | - |
| | வியாபார பகுப்பாய்வு சார் எம்.பி.ஏ./ பீஜீ திப்ளோ. | ஆங்கிலம் | | 41 | 32 | | | | |
| | மொத்தம் | | **837** | **650** | **4374** | **295** | **236** | **216** | **189** |

குறிப்பு:
எம்.எஸ்சி./எம். பொறியி./எம்.பி.ஏ. மற்றும் பட்டப்பின்படிப்பு திப்ளோமா கற்கைநெறிகள் என்பன வழக்கமாக பகுதி நேர பாடநெறிகள் என்பதுடன், முறையே இரு வருட, ஒரு வருட காலப்பகுதியினை சாதாரணமாக கொண்டுள்ளன.

பட்டமேற்படிப்பு பட்டங்கள் (ஆராய்ச்சி சார்பாக; (பட்டமேற்படிப்பு கற்கைகள் பீடம் வழங்குகிறது)

| உள்வாங்கப்பட்ட மாணவர்கள் எண். | | | | | | தற்போதுள்ள மாணவர்கள் எண். | | | | | | பட்டம்பெற்றோர் எண்ணிக்கை | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| எம்.எஸ்சி. | | எம்.பில். | | பீ.எச்டீ. | | எம்.எஸ்சி. | | எம்.பில். | | பீ.எச்டீ. | | எம்.எஸ்சி. | | எம்.பில். | | பீ.எச்டீ. | |
| | | | | | | | | | | | | | | | | | |
| 54 | 26 | 11 | 4 | 27 | 15 | 235 | 211 | 135 | 130 | 136 | 141 | 30 | 50 | 15 | 9 | 12 | 10 |

# வெளிநாட்டு மாணவர்கள்

வெளிநாட்டு பட்டதாரி மாணவர்கள் பற்றிய விபரம் (புலமைப்பரிசில் பெற்றவர்கள் உட்பட)

புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான வெளிநாட்டு பட்டதாரி மாணவர்கள் பற்றிய விபரம்

| பீடம் | பாடநெறி | 1-ஆம் வருட மாணவர்கள் | | 2-ஆம் வருட மாணவர்கள் | | 3-ஆம் வருட மாணவர்கள் | | 4-ஆம் வருட மாணவர்கள் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2022 | 2023 | 2022 | 2023 | 2022 | 2023 | 2022 | 2023 |
| பொறியியல் பீடம் | பொறியியல் சார் விஞ்ஞான இளமாணி (MPR) | 2 | - | - | 2 | - | - | - | - |
| | **மொத்தம்** | **2** | - | - | **2** | - | - | - | - |

வெளிநாட்டு பட்டதாரி மாணவர்கள் பற்றிய விபரம் (வெளிநாட்டு தகைமைகளைக் கொண்ட ஏனைய மாணவர்கள்)

| பீடம் | பாடநெறி | | | 1-ஆம் வருட மாணவர்கள் | | 2-ஆம் வருட மாணவர்கள் | | 3-ஆம் வருட மாணவர்கள் | | 4-ஆம் வருட மாணவர்கள் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2022 | 2023 | 2022 | 2023 | 2022 | 2023 | 2022 | 2023 | 2022 | 2023 |
| பொறியியல் பீடம் | பொறியியல் சார் விஞ்ஞான இளமாணி (MPR) | - | - | 6 | - | - | 4 | - | - | 1 | -- |
| கட்டடக்கலை பீடம் | கட்டடக்கலை இளமாணி | - | - | - | - | - | - | - | - | 1 | |
| | மொத்தம் | - | - | **6** | - | - | **4** | - | - | **2** | - |

பட்டமேற்படிப்பு வெளிநாட்டு மாணவர்கள் பற்றிய விபரம்

| பீடம் | பாடநெறி | மொழி | மாணவரின் நாடு | உள்வாங்கல் | | தற்போதுள்ள மாணவர் எண் | | பட்டம்பெற்ற மாணவர்கள் எண். | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2022 | 2023 | 2022 | 2023 | 2022 | 2023 |
| கட்டடக்கலை பீடம் | நிர்மான சட்டம் மற்றும் பிணக்குத் தீர்வு பற்றிய எம்.எஸ்சி/ பீஜீ திப்ளோ. | ஆங்கிலம் | சீனா | - | | - | - | 1 | - |
| பொறியியல் பீடம் | நீர் வள பொறியியல், முகாமை சார் எம்.எஸ்சி / பீஜீ திப்ளோ. | ஆங்கிலம் | பூட்டான் | - | | - | - | 2 | - |
| | | | | - | | - | - | 3 | - |
| | | | பாகிஸ்தான் | - | | - | - | - | - |
| | | | இந்தியா | 2 | | - | 2 | 3 | - |
| | | | நேபாளம் | 1 | | - | 1 | 1 | - |
| | | | பங்களாதேஷ் | 1 | | - | 1 | 1 | - |
| | **Total** | | | **4** | | - | **4** | **11** | - |

# மாணவர் நலன்புரி மற்றும் பிற

நலன்புரிப் பிரிவினால் மேற்கொள்ளப்படும் நிர்வாகத்தின் கீழ், பல்கலைக்கழகமானது மாணவர் சமூகத்திற்கு நிதி சார்ந்த உதவிகள், தங்குமிட வசதிகள், சமூகச் செயற்பாடுகளிலான ஈடுபாடு, சிற்றுண்டிச்சாலைக்கான வசதிகளை வழங்கல், மற்றும் போக்குவரத்து போன்ற விடயங்கள் தொடர்பில் வசதிகளை வழங்குகின்றது.

## நிதி சார்ந்த உதவி

### மஹபொல உயர் கல்விப் புலமைப்பரிசில் பற்றிய ஒத்துழைப்பு நடவடிக்கை

மஹபொல புலமைப்பரிசிலானது மஹபொல நம்பிக்கை நிதியத்தினால் வழங்கப்பட்டு வருவதோடு, குறித்ததொரு ஆண்டில் வழங்கப்படுவதற்கான புலமைப்பரிசில்களின் எண்ணிக்கை இந் நிதியத்தின் மூலமே தீர்மானிக்கப்படுகின்றது. மாதாந்த உதவித்தொகையாக ரூபா 5,000/- (சாதாரண சித்தி) மற்றும் ரூபா 5,050/- (திறமைச் சித்தி) வழங்கப்படுகிறது. நலன்புரிப் பிரிவானது, இதற்கான பதிவுகளைப் பேணி வருவதோடு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அனுப்பிவைக்கும் பெயர்ப் பட்டியலுக்கு இணங்க மஹபொல புலமைப் பரிசில் பெறுவதற்குத் தகுதியான மாணவர்களுடன் தொடர்பினைப் பேணுகின்றது. மாதாந்த நிதியிடல் தேவைப்பாடு பற்றி மஹபொல நம்பிக்கை நிதியம் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஆகியவற்றுடன் தொடர்புகொள்ளப்பட்டு, பல்கலைக்கழகமானது சம்பந்தப்பட்ட புலமைப்பரிசில் பெறுவோரின் புதிய வங்கிக் கணக்கு விபரங்களின் பிரகாரம் அவர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவினை வழங்குகின்றது. மஹபொல புலமைப்பரிசில் குறித்தான முன்னேற்ற அறிக்கைகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு மாதாந்தம் அனுப்பப்பட்டு வருகின்றன.

பீடம் / பாடநெறி அடிப்படையில் மஹபொல புலமைப்பரிசில் பெறுநர்கள் – 2023

| பட்டதாரி பாடநெறி | புலமைப்பரிசில் பெறுவோர் எண். |
|---|---|
| பொறியியல் பீடம் | |
| பொறியியல் | 942 |
| நில மூலவளங்கள் முகாமைத்துவம் | 72 |
| புடைவை முகாமைத்துவம் | 78 |
| போக்குவரத்து, தேவை ஒழுங்க. விநியோக முகாமைத்துவம் | 67 |
| நவநாகரீக வடிவமைப்பும் உற்பத்தி அபிவிருத்தியும் | |
| கட்டடக்கலை பீடம் | 44 |
| தரைத்தோற்ற கட்டடக்கலை | 44 |
| வசதியேற்பாடுகள் முகாமைத்துவம் | 44 |
| பட்டினமும் நாடும் திட்டமிடல் | 141 |
| கணிய அளவையியல் | 34 |
| வடிவமைப்பு | 91 |
| கட்டடக்கலை | |
| தகவல் தொழில்நுட்ப பீடம் | 205 |
| தகவல் தொழில்நுட்பம் | 144 |
| தகவல் தொழில்நுட்பமும் முகாமைத்துவமும் | |
| வியாபார பீடம் | 132 |
| வியாபார விஞ்ஞானங்கள் | |
| மருத்துவ பீடம் | |
| மருத்துவமும் சத்திரசிகிச்சையிலும் | 44 |
| மொத்தம் | 2116 |

## மாணவர் உதவிப்பணம் செலுத்துகை

பல்கலைக்கழக மாணவர் உதவிப்பணமானது மஹபொல புலமைப்பரிசில் கிடைக்கப்பெறாத வசதி குறைந்த மாணவர்களுக்கு வழங்கப்படுகின்ற மற்றுமொரு நிதி உதவித் திட்டமாகும். நலன்புரிப் பிரிவானது அதற்கான விண்ணப்பங்களைக் கோருவதோடு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 03/2019 ஆம் இலக்க சுற்றுநிருபத்திற்கு ஏற்றதொரு நடைமுறையில் அதற்கான மாணவர் தெரிவும் இடம்பெறுகிறது. மாதாந்த உதவித் தொகை ரூபா 4,000.00 ஆகும். மாணவர் உதவிப்பணத்தைப் பெறுகின்றவர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவுகள், நலன்புரிப் பிரிவில் பேணப்பட்டு வருகின்ற அதன் பெறுனர்களின் புதிய வங்கிக் கணக்குகளுக்கு செலுத்தப்படுகிறன.

பீட/ பாடநெறி ரீதியிலான மாணவர் உதவிப்பணம் பெறுநர்கள் - 2023

| பட்டதாரி பாடநெறி | மாணவர் உதவிப்பணம் பெறுவோர் எண். |
|---|---|
| பொறியியல் பீடம் | |
| பொறியியல் | 146 |
| நில மூலவளங்கள் முகாமைத்துவம் | 30 |
| புடைவை முகாமைத்துவம் | 43 |
| போக்குவரத்து, தேவை ஒழுங்க. விநியோக முகாமைத்துவம் | 35 |
| நவநாகரீக வடிவமைப்பும் உற்பத்தி அபிவிருத்தியும் | 62 |
| கட்டடக்கலை பீடம் | |
| தரைத்தோற்ற கட்டடக்கலை | 44 |
| வசதியேற்பாடுகள் முகாமைத்துவம் | 69 |
| பட்டினமும் நாடும் திட்டமிடல் | 46 |
| கணிய அளவையியல் | 57 |
| வடிவமைப்பு | 57 |
| கட்டடக்கலை | 37 |
| தகவல் தொழில்நுட்ப பீடம் | |
| தகவல் தொழில்நுட்பம் | 104 |
| தகவல் தொழில்நுட்பமும் முகாமைத்துவமும் | 36 |
| செயற்கை மதுநுட்பம் | 36 |
| வியாபார பீடம் | |
| வியாபார விஞ்ஞானங்கள் | 67 |
| மருத்துவ பீடம் | |
| மருத்துவமும் சத்திரசிகிச்சையிலும் | 20 |
| மொத்தம் | 865 |

## ஏனைய புலமைப்பரிசில்கள்

பல்கலைக்கழகத்திலுள்ள வறிய மாணவர்களுக்கு நிதி சார்ந்த உதவி வழங்க விரும்புகின்ற பல்வேறு நன்கொடையாளர்களுடன் (தனிநபர் / சங்கங்கள் / நிறுவனங்கள்) பல்கலைக்கழகம் உடன்படிக்கைகளைச் செய்கின்றது. புலமைப்பரிசிலைப் பெறுகின்ற மாணவர்கள் பூர்த்திசெய்ய வேண்டிய அளவுகோலை அல்லது அதற்கான ஏதேனும் நிபந்தனைகளை நன்கொடையாளர்கள் முன்வைப்பதோடு, பல்கலைக்கழகம் விண்ணப்பங்களைக் கோரி குறித்த அளவுகோலின் பிரகாரம் மாணவர் தெரிவினைச் செய்கின்றது. தவணைப் பணத் தொகையும் அதனைச் செலுத்தும் தடவைகளின் எண்ணிக்கையும் உடன்படிக்கையின் பிரகாரம் மாறுபடுவதோடு, நலன்புரிப் பிரிவானது புலமைப்பரிசிலைச் செலுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்கின்றது.

# மாணவர் நலன் மற்றும் பிற வசதிகள்

| புலமைப்பரிசிலின் பெயர் | மாணவர் எண். | தொகை |
|---|---|---|
| ஜுபிலி (Jubilee) புலமைப்பரிசில் | 15 | மாதாந்தம் ரூ. 5000.00 |
| 75 PEAKC இன் புலமைப்பரிசில் | 08 | மாதாந்தம் ரூ. 1500.00 |
| காலஞ்சென்ற Dr. எல்.எச். சுமனதாச புலமைப்பரிசில் | 02 | மாதாந்தம் ரூ. 2000.00 |
| வீ-கெயார் (We-Care) ஸ்ரீலங்கா ஜய்மினி புலமைப்பரிசில்) | 08 | மாதாந்தம் ரூ. 2500.00 |
| ஜோன் கீல்ஸ் சமூக பொறுப்பு பவுண்டேஷன் புலமைப்பரிசில் | 21 | மாதாந்தம் ரூ. 4,000.00 |
| என்.ஈ. வீரசூரிய புலமைப்பரிசில் | 02 | மாதாந்தம் ரூ. 10,000.00 (ஆண்டுக்கு 10 தவணை – ஒரு கல்வியாண்டுக்கு மாத்திரம்) |
| பேராசி. எஸ். களுஆரச்சி புலமைப்பரிசில் | 01 | மாதாந்தம் ரூ. 10,000.00 (ஆண்டுக்கு 10 தவணை – ஒரு கல்வியாண்டுக்கு மாத்திரம்) |
| அதுகல்புர புலமைப்பரிசில் | 03 | மாதாந்தம் ரூ. 5,000.00 (ஆண்டுக்கு 10 தவணை – ஒரு கல்வியாண்டுக்கு மாத்திரம்) |
| எக்ஸ்போ கிரபிஃக் (Expo Graphic) புலமைப்பரிசில் | 02 | மாதாந்தம் ரூ. 10,000.00 (ஆண்டுக்கு 10 தவணை – ஒரு கல்வியாண்டுக்கு மாத்திரம்) |
| பேராசி. படுவதவிதான புலமைப்பரிசில் | 20 | மாதாந்தம் ரூ. 500.00 (ஆண்டுக்கு 10 தவணை – ஒரு கல்வியாண்டுக்கு மாத்திரம்) |
| பி.எஸ்சி. சிவில் பொறியியலுக்கான பேராசி. எஸ்.ஆர். த எஸ். சந்தரகீர்த்தி மாணவர் உதவிப்பணம் | 4 | ஆறு மாதத்திற்கு ரூ. 10,000.00 |

## சிற்றுண்டிச்சாலை வசதிகள்

மாணவர்களுக்கு சலுகை விலையில் உணவுகளை வழங்கும் நோக்கில் வெவ்வேறு இடங்களில் அமையப்பெற்ற 06 சிற்றுண்டிச்சாலைகளையும் குளிர்பானக் கடைகளையும் பல்கலைக்கழகம் பேணி வருகிறது. சிற்றுண்டிச் சாலைகளில் விற்பனை செய்யப்படுகின்ற உணவுகளின் தரம் மற்றும் அவற்றின் வகைகள் பற்றிய மேற்பார்கைகளை பல்கலைக்கழக பொது சுகாதாரப் பரிசோதகர்கள் ஒழுங்குமுறையாக முன்னெடுத்து வருகின்றனர். மேற்படி நலன்புரி சிற்றுண்டிச்சாலைகள் தவிர, பல்கலைக்கழகத்தில் சென்ட்ரா கோட் எனும் பெயருடைய நான்கு உணவு விற்பனை நிலையங்களும் காணப்படுகின்றன. இது மிகவும் அறியப்பட்ட வெளியக உணவு விநியோகத்தர்களினால் முன்னெடுக்கப்பட்டு வருவதோடு, இவர்கள் சந்தையிலுள்ள ஏனைய உணவு விநியோகத்தர்களுடன் ஒப்பிடுகையில் குறைவான விலையில் உணவுகளை விநியோகித்து வருகின்றனர்.

## மாணவர் தங்குமிட வசதிகள்

பல்கலைக்கழகமானது போக்குவரத்துச் சிரமங்களைக் கொண்ட ஆண், பெண் மாணவர்களுக்கான தங்குமிட வசதியை வழங்கும் வகையில் அதன் சொந்த விடுதிகளைக் கொண்டுள்ளது. தற்போது, 1 ஆம் வருட மற்றும் 2 ஆம் வருட மாணவர்கள் மற்றும் இறுதி வருடத்திலுள்ள மாணவர்கள் ஆகியோர் விடுதி வசதிக்காக விண்ணப்பிக்கலாம். பல்கலைக்கழகம் வருடாந்தம் ஒவ்வொரு கற்கை நிகழ்ச்சித்திட்டத்தின் தொடக்கத்திலும் மற்றும் இறுதியாண்டிற்கு முன்னரான கல்வி ஆண்டின் முடிவிலும் அதற்கான விண்ணப்பங்களைக் கோருகின்றது. வசிக்கும் இடத்திற்கான தூரம், மாதாந்திர குடும்ப வருமானம், உடன்பிறந்தவர்கள் பற்றிய விபரங்கள், விசேடமான குடும்பச் செலவு விபரங்கள், பல்கலைக்கழகத்தில் விளையாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுவதல் பற்றிய விபரங்கள் பொன்றன உள்ளிட்ட பல்வேறு அம்சங்களைக் கருத்தில் கொண்டு பல்கலைக்கழகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட அளவுகோல்களின் அடிப்படையில் மாணவர்கள் இதற்காகத் தெரிவுசெய்யப்படுகின்றனர்.

விடுதி வசதி வழங்கப்பட்டுள்ள மாணவ, மாணவிகளின் எண்ணிக்கை - 2023

| பீடம் | விடுதிகளுக்கான தேர்வு அளவுகோல்களை பூர்த்தி செய்யும் மாணவர்களின் எண்ணிக்கை | விடுதி வசதி பெற்றுக்கொண்டுள்ள மாணவ, மாணவிகளின் எண் | | |
|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | மொத்தம் |
| பொறியியல் பீடம் | 1140 | 640 | 252 | 892 |
| தகவல் தொழில்நுட்ப பீடம் | 396 | 144 | 170 | 314 |
| வியாபார பீடம் | 121 | 35 | 58 | 93 |
| கட்டடக்கலை பீடம் | 519 | 178 | 235 | 413 |
| மருத்துவ பீடம் | 36 | 08 | 18 | 18 |
| மொத்தம் | 2212 | 1005 | 733 | 1738 |

## மற்ற மாணவர் வசதிகள்

### புகையிரத / பேருந்து பருவகால சலுகைப் பயணச்சீட்டுக்கான பரிந்துரை

மாணவர்களின் வேண்டுகோளின் அடிப்படையில், புகையிரத / பேருந்து பருவகால சலுகைப் பயணச்சீட்டுக்களை வழங்குவதற்காக அதனுடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு பல்கலைக்கழகம் அதன் பரிந்துரைகளை வழங்குகின்றது.

### மடிக்கணினி கடன் திட்டம்:

மொரட்டுவை பல்கலைக்கழக மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளுக்கு வசதியளிக்கும் நோக்கில் மடிக்கணினிகளை வாங்குவதற்கு மக்கள் வங்கியும் இலங்கை வங்கியும் ஒரு விசேட கடன் திட்டத்தை வழங்குவதற்கு உடன்பட்டுள்ளன. தேவையுடைய மாணவர்களுக்கு பல்கலைக்கழகம் உரிய பரிந்துரைகளை வழங்குகிறது.

### தனியார் தங்குமிடங்கள் குறித்தான தரவுத்தளம்

நலன்புரிப் பிரவானது பல்கலைக்கழகத்திலிருந்து 2 கி.மீ சுற்றுவட்டத்தில் அமைந்துள்ள தனியார் தங்குமிடங்கள் பற்றியதொரு ஆய்வினை அங்கு நேரடி விஜயம் செய்து நடத்துவதோடு, அந்த தங்குமிடங்களில் கிடைக்கும் வசதிகள் பற்றிய விபரங்கள் உள்ளடங்கலானதொரு விரிவான தரவுத்தளத்தையும் பராமரிக்கின்றது.

### மாணவர் உளவளத்துணைப் பிரிவு

மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் மாணவர் உளவளத்துணைப் பிரிவானது 2018 இல் நிறுவப்பட்டதோடு, இது கல்வி மற்றும் வாழ்க்கை சார்ந்த இலக்குகளை அடைவதற்கான மாணவர்களின் புரிதல்களை பாரியளவில் மேம்படுத்துவதி அவர்களை வலுவூட்டும் வகையில் தாபிக்கப்பட்டதாகும். எங்களது அர்ப்பணிப்பும் பேணுதலும் கொண்ட குழுவில் ஆண் மற்றும் பெண் உளவளத்துணை ஆலேசகர்கள் சேவையாற்றி வருவதோடு, மொரட்டுவை பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் தங்கி கல்வி கற்கும் காலத்தினை இனிமையான, அர்த்தமுள்ள, பயனுள்ள மற்றும் மறக்கமுடியாத ஒன்றாக மாற்றுவதே இதன் முக்கிய நோக்கமாகும். நாங்கள் மாணவர்களின் கல்வி, பிரத்தியேக, சமூக, நிதி மற்றும் உளவியல் சார்ந்த சவால்களை ஒரு கூட்டுப் பயணத்தின் மூலம் தீர்ப்பதற்கு உதவிசெய்து அதற்கான வழியையும் காட்டுகின்றோம். இது உளவளத்துணை ஆலோசகர்கள் தங்கள் சவால்களை இன்னும் தெளிவாக ஆராய்ந்து, அவற்றை முகாமை செய்து தீர்வளிப்பதற்கான வேறுபட்ட கண்ணோட்டத்தில் இருந்து ஆராயவும் உதவுகிறது.

# பணியாட்தொகுதியினர் விபரம்

பொழிப்பு (முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலமான ஊழியர்கள் வகைப்படுத்தலுக்கு ஏற்ப)

| சேவை வகை | | | 2022 | 2023 |
|---|---|---|---|---|
| ஆரம்ப மட்டம் | ஆரம்ப தரம் - தேர்ச்சி அற்ற | U-PL 1 | 72 | 71 |
| | ஆரம்ப தரம் - பகுதி தேர்ச்சி பெற்ற | U-PL 2 | 65 | 65 |
| | ஆரம்ப தரம் - தேர்ச்சி பெற்ற | U-PL 3 | 125 | 116 |
| | மொத்தம் | 262 | 252 | |
| இரண்டாவது மட்டம் | முகாமை. உதவியாளர் - தொழில்நுட்பம் சாரா | U-MN 1 | 175 | 162 |
| | முகாமை. உதவியாளர் - தொழில்நுட்பம் சார் | U-MT 1 | 98 | 81 |
| | இணைந்த அலுவலர்கள் - பிரிவு 1 | U-MN 2 | 9 | 7 |
| | இணைந்த அலுவலர்கள் - பிரிவு 2 | U-MN 3 | 7 | 7 |
| | பதவிநிலை உதவி அலுவலர்/ அதியுயர் மற்றும் சிரேஷ்ட பதவிநிலை உதவி அலுவலர்கள் | U-MN 4 | 79 | 90 |
| | மொத்தம் | 368 | 347 | |
| மூன்றாவது மட்டம் | கல்விசார் துணை பதவிநிலை - பிரிவு 2 | U-AS 1 | 5 | 5 |
| | கனிஷ்ட நிறைவேற்றுநர்/ முகாமையாளர் | U-EX 1 | 17 | 19 |
| | கல்விசார் துணை பதவிநிலை - பிரிவு 1 | U-AS 2 | 38 | 35 |
| | மொத்தம் | 60 | 59 | |
| சிரேஷ்ட மட்டம் | மருத்துவ அலுவலர்கள் | U-MO 1 | 1 | 1 |
| | சிரேஷ்ட மருத்துவ உத்தியோகத்தர் | U-MO 2 | 1 | 1 |
| | இடை நிலை நிறைவேற்றுநர்கள் | U-EX 2/ U-EX 2 (a) | 16 | 15 |
| | சிரேஷ்ட நிலை நிறைவேற்றுநர்கள் | U-EX 3 | 1 | 2 |
| | விரிவுரையாளர்கள் | U-AC 3 | 325 | 294 |
| | இணை பேராசிரியர்கள் | U-AC 4 | 2 | 2 |
| | பேராசிரியர்கள்/ சிரேஷ்ட பேராசிரியர்கள் | U-AC 5 | 78 | 85 |
| | மொத்தம் | 424 | 400 | |
| | மொத்தம் | | **1114** | **1058** |

## அங்கீகரிக்கப்பட்ட மற்றும் ஈடுபடுத்தப்பட்டுள்ள ஆளணியினர்

| பணியாளர் வகை | சம்பள அளவுத் திட்டம் | | தற்போதுள்ள பணியாளர்கள் | | | | | | | | | | | | | | | [illegible] | [illegible] ஆளணி [illegible] மொத்த |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | நிரந்தரம் | | | தற்காலிகம் | | | ஒப்பந்தம் | | | வருகைதரல் | | | ஒப்படைப்பு | | | | |
| | | | ஆண் | பெண் | மொத். | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | | |
| | | | | | (2) | | | (3) | | | (4) | | | (5) | | | (6) | (1)-(2) | (1)-(2)-(3)-(4)-(5)-(6) |
| கல்விசார் பணியாளர் | U-AC 3 to U-AC 5 | 653 | 230 | 144 | 374 | | | | 42 | 45 | 87 | | | | | | | 279 | 192 |
| | U-AC 1 to U-AC 2 | 293 | | | | 56 | 113 | 169 | | | | | | | | | | 293 | 124 |
| நூலகப் பணியாளர் | U-AC 5 | 1 | | 1 | 1 | | | | | | | | | | | | | - | - |
| | U-AC 4 | | | | | | | | | | | | | | | | | - | - |
| | U-AC 3 | 6 | 3 | 3 | 6 | | | | | | | | | | | | | - | - |
| நிர்வாக பணியாளர் மற்றும் நிதி பணியாளர் | U-EX 3 | 2 | 2 | | 2 | | | | | | | | | | | | | - | - |
| | U-EX 2 | 15 | 3 | 10 | 13 | | | | | | | | | | | | | 2 | 2 |
| | U-EX 1 | 15 | 2 | 10 | 12 | | | | | | | | | | | | | 3 | 3 |
| ஏனைய நிறைவேற்றுப் பணியாளர் | U-EX 2, U-EX 1 | 7 | 3 | | 3 | | | | | | | | | | | | | 4 | 4 |
| | U-EX 2 | 3 | | | | | | | | | | | | | | | | 3 | 3 |
| | U-EX 1 | 3 | 1 | 1 | 2 | | | | | | | | | | | | | 1 | 1 |
| மருத்துவ உத்தியோகத்தர் | U-MO 2 | 1 | | 1 | 1 | | | | | | | | | | | | | - | - |
| | U-MO 1 | 4 | | 1 | 1 | | | | | | | | | | | | | 3 | 3 |
| கல்விசார் துணை பணியாளர் | U-AS 2, U-AS 1 | 8 | 4 | 1 | 5 | | | | | | | | | | | | | 3 | 3 |
| | U-AS 2 | 64 | 22 | 13 | 35 | | | | | | | | | | | | | 29 | 29 |
| | U-AS 1 | 4 | | | - | | | | | | | | | | | | | 4 | 4 |
| தொழில்நுட்ப பணியாளர் | U-EX 2 | புதிய சம்பள அளவு திட்டம் | 189 | 2 | | 2 | | | | | | | | | | | | | 55 | 55 |
| | U-EX 1 | | | 2 | | 2 | | | | | | | | | | | | | | |
| | U-MN 4 | | | 23 | 20 | 43 | | | | | | | | | | | | | | |
| | U-MN 3 | | | | | | | | | | | | | | | | | | | |
| | U-MN 2 | | | 2 | | 2 | | | | | | | | | | | | | | |
| | U-MN 1 | | | 4 | | 4 | | | | | | | | | | | | | | |
| | U-MT 1 | | | 53 | 28 | 81 | | | | | | | | | | | | | | |
| எழுதுவினைஞர், இணைந்த சேவை பணியாளர் | U-MN 4 | | 11 | 36 | 47 | | | | | | | | | | | | | 45 | 45 |
| | U-MN 3 | 13 | 5 | 2 | 7 | | | | | | | | | | | | | | |
| | U-MN 2 | 4 | 2 | 3 | 5 | | | | | | | | | | | | | | |
| | U-MN 1 | 245 | 56 | 102 | 158 | | | | | | | | | | | | | | |
| ஆரம்ப பணியாளர் | U-PL 3 | 89 | 112 | 4 | 116 | | | | | | | | | | 1 | | 1 | 182 | 166 |
| | U-PL 2 | 139 | 60 | 5 | 65 | | | | | | | | | | | | | | |
| | U-PL 1 | 206 | 63 | 8 | 71 | | | | 3 | 4 | 7 | | | | 7 | 1 | 8 | | |
| ஏனையன | | | | | | | | | | | | | | | | | | | |
| சிரே. விரிவுரையாளர் (ஒப்பந்தம்) | Fixed | 5 | | | | | | | | | | | | | | | | 5 | 5 |
| பணிப்பாளர் பல்கலைக்கழக வியாபார இணைப்பக்கள் அல்லது தொழில் முயற்சிகள் | Fixed | 1 | | | | | | | | | | | | | | | | 1 | 1 |
| மொத்தம் | | 1970 | 665 | 393 | 1058 | 56 | 113 | 169 | 45 | 49 | 94 | 0 | 0 | 0 | 8 | 1 | 9 | 912 | 640 |

# கல்விசார் ஆளணியினர்

| பீடம் | சிரேஷ்ட பேராசிரியர் | | பேராசிரியர் | | இணை பேராசிரியர் | | சிரேஷ்ட விரிவுரையாளர் | | விரிவுரையாளர் [illegible] | | விரிவுரையாளர் தகுதிகாண் | | கல்விசார் ஒப்பந்த பணியாளர் | | போதனாசிரியர் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2022 | 2023 | 2022 | 2023 | 2022 | 2023 | 2022 | 2023 | 2022 | 2023 | 2022 | 2023 | 2022 | 2023 | 2022 | 2023 |
| கட்டடக்கலை | 1 | - | 8 | 10 | - | - | 54 | 54 | - | - | 32 | 22 | 5 | 19 | 35 | 31 |
| வியாபாரம் | 2 | 2 | 1 | 1 | - | - | 12 | 13 | 1 | 2 | 6 | 4 | 9 | 6 | 11 | 12 |
| பொறியியல் | 16 | 14 | 48 | 55 | 2 | 2 | 135 | 119 | 7 | 7 | 28 | 21 | 30 | 50 | 98 | 96 |
| பட்ட மேற்படிப்பு கற்கை | | | | | | | | | | | | | | | | |
| தகவல் தொழில்நுட்பம் | 1 | 1 | - | 1 | - | - | 21 | 22 | 1 | | 9 | 7 | 2 | 6 | 18 | 16 |
| மருத்துவம் | - | - | - | - | - | - | 6 | 7 | 4 | 4 | 3 | 6 | 2 | 6 | 10 | 14 |
| மொத்தம் | **20** | **17** | **57** | **67** | **2** | **2** | **228** | **215** | **13** | **13** | **78** | **60** | **48** | **87** | **172** | **169** |

| நூலகம் | நூலகர் | | சிரேஷ்ட உதவி நூலகர் தரம் II | | சிரேஷ்ட உதவி நூலகர் தரம் I | | உதவி நூலகர் தரம் II | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2022 | 2023 | 2022 | 2023 | 2022 | 2023 | 2022 | 2023 |
| நூலக பணியாளர் * | 1 | 1 | 2 | 2 | 4 | 4 | - | - |
| மொத்தம் | **1** | **1** | **2** | **2** | **4** | **4** | **-** | **-** |

குறிப்பு:
* கல்விசார் ஆளணி வகையின் கீழ் கணிப்பிடப்பட்டுள்ளனர்.

# நிருவாகப் பிரிவுகள் மற்றும் பணியாளர்கள்கணிப்பிடப்பட்டுள்ளனர்.

## மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் நிர்வாகப் பிரிவுகள் / அலகுகள்/நிலையங்கள்

உப-வேந்தரின் அலுவலகம்

உப-வேந்தர் பல்கலைக்கழகத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரியும், பிரதான கல்விசார் அதிகாரியும், மற்றும் கணக்கீட்டு அதிகாரியாகவும் திகழ்வதோடு, பல்கலைக்கழக கவுன்சில் மூதவையின் (செனட்) பதவி வழித் தலைவரும் ஆவார். உப-வேந்தருக்கு பிரதி உப-வேந்தர் உதவியாக இருப்பதோடு, அவர் பல்கலைக்கழக மாணவர்கள் தொடர்பான விடயங்களுக்குப் பொறுப்பாகவும், மற்றும் மூதவையின் உயர்மட்டங்கள் போன்ற பல்வேறு பொதுவான குழுக்களின் தலைவராகவும் செயல்படுகிறார். உப-வேந்தரின் அலுவலக பணியாட்டொகுதியினர் உப-வேந்தருக்கும் பிரதி உப-வேந்தருக்கும் நிர்வாக மற்றும் அலுவலக உதவிகளை வழங்குகிறனர். கூட்டங்கள் மற்றும் சந்திப்புகளை திட்டமிடும் போது, உள்ளக மற்றும் வெளியக தரப்பினரிடமிருந்து உப-வேந்தருக்கும் பிரதி உப-வேந்தருக்கும் அனுப்பப்படுகின்ற கடிதப் போக்குவரத்து மற்றும் தொடர்பாடல்களை அலுவலகம் முகாமைத்துவம் செய்கின்றது.

பதிவாளரின் அலுவலகம்

பதிவாளரின் அலுவலகமானது பல்கலைக்கழகத்தின் பொதுவான நிர்வாக நடவடிக்கைகளின் மையப்புள்ளியாக விளங்குவதோடு, பதிவாளரின் நோக்கெல்லையின் கீழ் அனேக நிர்வாக/நிதிசார்ந்த பிரிவுகள் காணப்படுகின்றன.

பதிவாளரின் அலுவலகத்தின் பிரதான செயற்பாடுகள் பின்வருமாறு:

- பல்கலைக்கழகக் கவுன்சில் தொடர்பான விடயங்களை மேற்கொள்ளல், குறிப்பிட்ட தினத்தில் பல்கலைக்கழகக் கவுன்சிலின் கூட்டங்களைக் கூட்டுதல் மற்றும் பல்கலைக்கழகக் கவுன்சிலின் தீர்மானங்கள் குறித்தான பின்தொடர் நடவடிக்கைகளை அமுல்படுத்தல்.
- பொது தொழில்முயற்சிகள் பற்றிய குழுக் கூட்டம் தொடர்பான விடயங்களை மேற்கொள்வதோடு, அது குறித்தான பின்தொடர் நடவடிக்கைகளை அமுல்படுத்தல்.
- உப -வேந்தரின் நியமனம் தொடர்பான விடயங்களை மேற்கொள்ளல்.
- பொதுவான நிர்வாக விடயங்கள் தொடர்பில் வழிகாட்டுவதோடு அவற்றை ஒருங்கிணைத்தல்.
- நலன்புரி, மாணவர் சேவைகள், மருத்துவ நிலையம்/சுகாதாரச் செயற்பாடுகள், தோட்ட முகாமைத்துவச் செயற்பாடுகள் போன்றவற்றை ஒருங்கிணைத்தல்.
- கொள்கை விடயங்களை திட்டமிட்டு அவற்றைக் கண்காணித்தல் மற்றும் பல்கலைக்கழகத்தின் மூலோபாயத் திட்டங்களுக்கும் செயற்றிட்டங்களுக்கும் பங்களிப்புச் செய்தல்.
- மனித வளங்கள் குறித்தான விடயங்களுக்க வழிகாட்டுதல், ஒருங்கிணைத்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் – அங்கீகாரங்கள், ஆட்சேர்ப்புகள்/செயலாற்றுகை பற்றிய மதிப்பீடு மற்றும் கல்வி சாரா ஊழியர்களின் லீவு மற்றும் ஓய்வு சம்பந்தமான விடயங்கள்.
- ஒழுங்குறுத்துகை நிறுவனங்களுடன் தொடர்பினைப் பேணுதல்.

### நிர்வாகச் செயற்பாடுகளைக் கையாளுகின்ற பிரிவுகள்

### கல்வி மற்றும் பிரசுரங்கள் பற்றிய பிரிவு

இந்தப் பிரிவானது ஒரு பிரதிப் பதிவாளரின் தலைமையின் கீழ் இயங்குவதோடு, ஒரு சுருக்கெழுத்தாளர், ஒரு கணினி பிரயோகங்கள் உதவியாளர் மற்றும் ஒரு இயந்திர இயக்குனர் ஆகியோர் இங்கு உள்ளனர். இப் பிரிவானது பிரதானமாக பல்கலைக்கழகத்தின் மூதவை (செனட்) தொடர்பான விடயங்களைக் கையாளுகின்றது. மூதவையின் கூட்டங்கள் மற்றும் நிலையியற் குழுக்கள் மற்றும் உப குழுக்களின் கூட்டங்களைக் கூட்டுதல் இப் பிரிவின் பிரதான பணிகளுள் ஒன்றாகும். மூதவை ஆய்வுக் குழு (SRC) மூலம் சிறந்த ஆய்வுச் செயலாற்றுகைகளுக்கான விருதுகள் மற்றும் கற்பித்தல் சிறப்பு விருதுகள் தொடர்பில் ஒருங்கிணைப்புச் செயற்பாடுகளை முன்னெடுத்தல் ஏனைய இரு செயற்பாடுகளாகும். SRC மூலமாக தகுதிவாய்ந்த பணியாட்டொகுதியினருக்கான SRC மானியங்களுக்கான நிர்வாக ஆதரவும் இப் பிரிவினாலேயே வழங்கப்படுகிறது. பொதுப் பட்டமளிப்பு மற்றும் வருடாந்த விருது வழங்கல் போன்ற விழாக்களுக்கான ஒருங்கிணைப்பு மற்றும் வசதியளித்தல் போன்றவற்றுக்கான பொறுப்பினையும் இப் பிரிவே கொண்டுள்ளது. இவை தவிர, தகுதிவாய்ந்த பணியாட்டொகுதியினருக்கான ஆராய்ச்சி மானியக் கொடுப்பனவு பற்றிய செயன்முறை, ஆய்வு முகாமைத்துவக் குழுவின் கீழ் இப் பிரிவினால் கையாளப்படுகிறது. பல்கலைக்கழகத்தின் உள்ளக தரச் சான்றுப் பிரிவு (IQAU), புலமைச் சொத்து பற்றிய ஆலோசனைக் குழு (IPAC) மற்றும் புலமைச் சொத்து மதிப்பாய்வுக் குழு (I Pac) ஆகியவற்றின் கூட்டங்களும் இப்பிரிவினாலேயே ஏற்பாடு செய்யப்படுகின்றன.

# நிர்வாகப் பிரிவுகள் மற்றும் பணியாளர்கள்

## மூலதனப் பணிகள் மற்றும் சேவைகளுக்கான பிரிவு

மூலதனப் பணிகள் மற்றும் சேவைகளுக்கான பிரிவானது ஒரு சிரேஷ்ட உதவிப் பதிவாளரின் தலைமையின் கீழ் இயங்கி வருகிறது. இப் பிரிவானது பிரதானமாக பல்கலைக்கழகத்தின் ஒப்பந்தப் பணிகள் தொடர்பான கொள்முதல் பணிகளைக் கையாளுவதோடு, பாரிய மற்றும் சிறிய அனைத்துக் கட்டுமானக் கருத்திட்டங்கள் மற்றும் புனர்நிர்மானப் பணிகள் போன்றவற்றின் நிர்வாக நடவடிக்கைகளையும் கையாளுகின்றது. இப் பிரிவின் பணியாட்டொகுதியினர் கேள்வுமனு பற்றிய ஆவணங்களைத் தயாரித்தல், கேள்வுமனு பற்றிய மதிப்பீடுகளை மேற்கொள்ளல் மற்றும் நிர்வாகச் சேவைகளுக்கான ஒப்பந்தங்களை மேற்கொள்ளல் போன்றன குறித்தான தமது கடமைகளை மேற்கொள்ளும் பொழுது, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, கல்வி அமைச்சு மற்றும் திறைசேரி ஆகியவற்றின் வழிகாட்டல்களின் படி, தேசிய பெறுகை ஆணைக்குழுவினால் வெளியிடப்படுகின்ற பெறுகை வழிகாட்டல்கள் மற்றும் கையேடுகள், ICTAD இனால் வெளியிடப்படுகின்ற நியமதர கேள்வுமனு ஆவணங்கள் அத்துடன் ஏனைய சம்பந்தப்பட்ட சட்ட ஆவணங்கள் போன்ற, பணிகள்/சேவைகளை கொள்முதல் செய்வதுடன் தொடர்புடைய பிரசுரங்களின் பிரகாரம் ஆலோசனை வழங்குகின்றனர். மேலும், தொலைபேசி/இன்டர்காம் வசதிகளைத் தாபித்து அவற்றைப் பராமரித்தல், ஏற்புடைய பணியாட்டொகுதியினருக்கு இணைய டொங்கிள்களை வழங்குதல், ஏற்புடைய பணியாட்டொகுதியினருக்கு தொடர்பாடல் கொடுப்பனவுகளைச் செலுத்துதல், துப்புரவு சேவை ஒப்பந்தங்களைக் கொள்முதல் செய்து அவற்றுக்கான செலவுகளைச் செலுத்துதல், மறைப்புத்திரைகள் மற்றும் திரைச்சீலைகளைப் பொருத்துதல் தொடர்பில் கொள்முதல் செய்து அவற்றுக்கான செலவுகளைச் செலுத்துதல் மற்றும் பல்கலைக்கழகத்தின் வளாகத்திலுள்ள சென்ட்ரா உணவக விற்பனை நிலையங்களின் சேவைகளை நிர்வகித்தல் போன்ற பணிகளையும் இந்தப் பிரிவு மேற்கொள்கிறது.

## தகவல் தொழில்நுட்பச் சேவைகளுக்கான நிலையம் (CITeS)

தகவல் தொழில்நுட்பச் சேவைகளுக்கான நிலையமானது (CITeS) மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் தகவல் தொழில்நுட்பச் சேவை வழங்குனராக பல்லாண்டு காலமாக வளர்ச்சியடைந்து வருகிறது. தற்போது இது இரண்டு பிரிவுகளைக் கொண்டு செயற்படுகிறது. அதாவது, மென்பொருள் முறைமைகள் அபிவிருத்தி மற்றும் பராமரிப்புப் பணிகளுக்குப் பொறுப்பாக முகாமைத்துவ தகவல் முறைமைகள் குழுவும், மற்றும் தரவு மையம் உள்ளிட்ட பல்கலைக்கழகத்தில் கணினி உட்கட்டமைப்புக்களை நிறுவுதல் மற்றும் பராமரித்தலுக்குப் பொறுப்பாக உட்கட்டமைப்புக் குழுவும் காணப்படுகிறன. பல்கலைக்கழகத்திற்குள்ளான கணினி வசதிகளின் அறிமுகத்துடன், இந் நிலையமானது பொறியியல் பீடத்தின் பீடாதிபதியின் கீழ் கணினிச் சேவை நிலையமாக ஆரம்பிக்கப்பட்டதோடு, இது மாணவர்களுக்கும் பணியாட்டொகுதியினருக்கும் பொது கணினி ஆய்வக வசதிகளை வழங்கி வந்த அதேவேளை, அவர்களுக்கான இலக்குப்படுத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாக தகவல் தொழில்நுட்பத்தின் உபயோகம் ஊக்குவிக்கப்பட்டு வந்தது. கணினி ஆய்வக வசதிகள் உள்ளக மற்றும் வெளியகப் பங்கேற்பாளர்களுக்கு பாடநெறிகளை நடத்துவதற்காக பல்வேறு திணைக்களங்களினால் உபயோகிக்கப்பட்டன. CITeS ஆனது இலங்கைப் பல்கலைக்கழகமொன்றின் மாணவர் பதிவு முறைமையினை முதன்முதலில் விருத்தி செய்துவதில் முக்கிய பங்காற்றியதோடு, தொடர்ந்தும் மாணவர்களினதும் பணியாட்டொகுதியினரினதும் சேவைகள் தொடர்பில் இம் முறைமையில் பதிவுசெய்யப்பட்டு வந்தன. CITeS ஆனது பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள தரவு மையத்தின் ஊடாக பல்தரப்பட்ட தகவல் தொழில்நுட்பச் சேவைகளை, பெரும்பாலும் இலவச மற்றும் திறந்த மூல மென்பொருளை உபயோகித்து வழங்குகின்றது. இந்தச் சேவையில் மின்னஞ்சல், கற்றல் உள்ளடக்கங்கள், ஆவண முகாமைத்துவம், பல் காணொளிக் கலந்துரையாடல் சேவைகள், வைஃபை அணுகல், கணினி வலைப்பின்னல் பற்றிய பயிற்சி போன்றன உள்ளடங்குகின்றன. CITeS ஊடாக வணிக கல்விசார் உரிம விருப்பத்தொ ிவுகளை உபயோகித்து மென்பொருள் உரிமங்களும் வழங்கப்படுகின்றன. மேலும் CITeS ஆனது எனைய திணைக்களங்கள் தகவல் தொழில்நுட்ப முறைமைகளைக் கொள்வனவு செய்யும் போது அது குறித்தான ஆலோசனைச் சேவைகளையும் அவற்றுக்கு வழங்குகின்றது. அத்துடன், மாணவர்கள் மற்றும் பணியாட்டொகுதியனருக்கான தகவல் தொழில்நுட்பம் சார்ந்த பிரச்சனைகளை இனங்கண்டு அவற்றைத் தீர்ப்பதற்கான உதவிக் கருமபீட அனுமதி முறைமை ஒன்றினையும் பராமரித்து வருகிறது.

## தாபனப் பிரிவு கல்விசார்

மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் இலக்குகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் தகைமை வாய்ந்த பணியாளர்களை ஆட்சேர்ப்புச் செய்து அவர்களை சேவையில் தக்கவைத்துக்கொள்வதே தாபனப் பிரிவின் பிரதான தொழிற்பாடாகும். தாபனப் பிரிவானது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதிமுறைகள், ஒழுங்குவிதிகள், தாபனக் கோவை மற்றும் மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் நிர்வாகக் கொள்கை போன்றவற்றுக்கு இசைவாக மனித வளங்கள் முகாமைத்துவ நடைமுறைகளை அபிவிருத்தி செய்தல், பராமரித்தல் மற்றும் அவை பற்றிய பொருள்கோடல்களை வழங்கல் போன்ற விடயங்களிலும் பல்கலைக்கழகக் கவுன்சிலுக்கு உதவியாக இருந்து வருகிறது. மனித வள நடைமுறைகளில் பணியாட்டொகுதியினரை ஆட்சேர்த்தல், லீவுகளை நிர்வகித்தல், பணியாளர்களின் ஒழுக்காற்று நடவடிக்கை மற்றும் பணிநீக்கம், மற்றும் பிரத்தியேக பதிவுகளை நிர்வகித்தல் போன்றனவும், வரையறை இன்றி உள்ளடங்குகின்றன. தாபனப் பிரிவானது, அத்தகைய அனைத்து நடைமுறைகளையும் எந்தவொரு பாகுபாடும் இன்றி சமமான அடிப்படையில் நடைமுறைப்படுத்துவதற்கான பொறுப்பினைக் கொண்டுள்ளது. இப் பிரிவு அனைத்து கல்விசார், நிர்வாக மற்றும் கல்விசாரா ஊழியர்களுடனும் நெருக்கமான பணி உறவைப் பேணிவருவதுடன், பல்கலைக்கழகத்தில் மனிதவளக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் எவ்வாறு அமுல்படுத்தப்படுகின்றன என்பது குறித்து அவர்களுக்கு தெளிவான புரிதல் இருப்பதை உறுதிசெய்வதற்கும் அர்ப்பணிப்புடன் பணியாற்றி வருகிறது.

## தாபனப் பிரிவு (கல்விசாரா)

பல்கலைக்கழகத்தின் கல்விசாரா கடமைகளை முன்னெடுப்பதற்குத் தேவையான மனித வளங்களைப் பேணி அதனைத் தக்கவைத்துக்கொள்ளல் இந்த தாபனப் பிரிவின் (கல்விசாரா) பணியெல்லையாக விளங்குகின்றது. இந்த இலக்கினை அடைவதற்கு இப் பிரிவானது பல்வேறு கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை காத்திரமான முறையில் வடிவமைத்து அவற்றை அமுல்படுத்துவதற்கான பொறுப்பினைக் கொண்டுள்ளது. மனித வளங்கள் திட்டமிடல், நபர்களை பணியமர்த்தல் (ஆட்சேர்ப்பு மற்றும் தேர்வு), பயிற்சித் தேவைகளைக் கண்டறிதல், வெகுமதிகள் மற்றும் அங்கீகாரத்தை வழங்குதல், அலுவலர்களின் மனக்குறைகளைக் கையாளுதல், சட்ட நடைமுறைகளை முன்னெடுத்தல் போன்றன இந்தப் பிரிவின் பொறுப்புகளில் அடக்குகின்றன. சுருங்கக் கூறுவதாயின், பணியிடத்தில் இணக்கமான உறவுகளை வளர்த்து அவற்றை முகாமைத்துவம் செய்தல், மற்றும் நிறுவனத்தின் குறிக்கோள்களுக்கும் கல்விசாரா ஊழியர்களின் குறிக்கோள்களுக்கும் இடையில் சமநிலையைப் பேணுதல் போன்றன இப் பிரிவின் வகைப்பொறுப்பாகும்.

## பரீட்சைகள் மற்றும் பதிவுசெய்தல் பிரிவு

பரீட்சைகள் மற்றும் பதிவுசெய்தல் பிரிவானது சிரேஷ்ட உதவிப் பதிவாளரொருவரால் செயற்படுத்தப்படுகிறது. இப் பிரிவானது செயற்றிட்ட வரைவு மற்றும் முறைமை பகுப்பாய்வாளரொருவர், எழுதுவினைஞர்கள் 5 பேர், கணினி பயன்பாட்டு உதவியாளர்கள் 5 பேர், அலுவலக இயந்திர இயக்குநர்கள் 2 பேர் மற்றும் தொழிலாளிகள் 4 பேர் ஆகிய பணியாளர்களை கொண்டமைந்துள்ளது. இப் பிரிவு பின்வரும் செயற்பாடுகளுக்குப் பொறுப்பாக இருப்பதுடன் அவற்றை செயற்படுத்துகிறது.

- மாணவர்கள் அனுமதிக்கப்படும் போது மற்றும் வருடாந்த அடிப்படையில் பதிவுசெய்தல்.
- கால அட்டவணைகளுக்கு ஏற்ப பரீட்சைகளை நடாத்துதல், புள்ளிகளை பெற்றுக்கொள்ளல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல்.
- பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவை ஒழுங்குசெய்து நடாத்துதல்.
- கற்கைசார் பாடவிவர ஆவணம் மற்றும் பட்டச் சான்றிதழ் என்பவற்றை வழங்குதல்.
- பரீட்சை பிரிவுக்கு சேவை வழங்குநர்களுக்கு செலுத்தவேண்டிய கொடுப்பனவுகளை மேற்கொள்ளல். அதாவது, பரீட்ச்சகர்கள், வினாத்தாள் தயாரிப்பாளர்கள், மதிப்பீட்டாளர்கள், மேற்பார்வையாளர்கள், பரீட்சை கண்காணிப்பாளர்கள், மண்டபம் சார், உதவியாளர்கள் போன்றன.
- பட்டச்சான்றிதழ்களை வெளியக அமைப்புக்களுக்கு சரிபார்த்து உறுதிப்படுத்தல்.

# நிர்வாகப் பிரிவுகள் மற்றும் பணியாளர்கள்

## வெளியக அலுவல்கள் மற்றும் விளம்பரப்படுத்துகை மற்றும் சர்வதேச மாணவர் ஊக்குவிப்புப் பிரிவு

Tஇந்தப் பிரிவானது (EAP), வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கான பொருள் ஆதரவினை வழங்கல், கூட்டங்களுக்கான வசதிகளை செய்து வழங்கல், வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களின் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பினைப் பேணல் மற்றும் HEIs உடனான ஒப்பந்தங்கள், புரிந்துணர்வு உடன்படிக்கைகளைக் கைச்சாத்திடுவதற்கான முன் அங்கீகாரச் செயன்முறைக்கு உதவுதல் போன்ற நடவடிக்கைகள் ஊடாக பிரபல்யம் பெற்ற வெளிநாட்டு உயர் கல்வி நிறுவனங்கள் / பல்கலைக்கழகங்களுடன் சிறந்த உறவுகளை ஏற்படுத்தி அவற்றைத் தொடர்ந்தும் பேணுவதற்கான வசதிவாய்ப்புக்களை கல்விசார் திணைக்களத்திற்கு வழங்கி உதவுகிறது. பல்கலைக்கழக நிகழ்வுகள் மற்றும் சாதனைகள் பற்றி
பிரபல்யம் செய்யும் நோக்கில் ஊடகங்களையும் பிற தளங்களையும் பயன்படுத்தி விளம்பரங்களைச் செய்வதற்கு இந்தப் பிரிவு சரியான நேரத்தில் நடவடிக்கைகளை எடுப்பதோடு, அதன் மூலம் பல்கலைக்கழகத்தின் புகழை வெளிகொணர்ந்து பல்கலைக்கழக தரவரிசை நிலையை மேம்படுத்தவும் உதவுகிறது. பல்கலைக்கழக தர உறுதிப்பாட்டுப் பிரிவின் செயல்பாடுகள், தரச் சான்றுப்படுத்துகைப் பணிப்பாளரின் வழிகாட்டுதலின் கீழ், EAP பிரிவின் உதவிப் பதிவாளரால் ஒருங்கிணைக்கப்படுகின்றன. தரச் சான்றுப்படுத்துகை பற்றிய நிலையியற் குழு மற்றும் அதன் உப-குழுக்களைக் கூட்டுவது EAP இன் முக்கிய பொறுப்புகளில் ஒன்றாகும். இவை தவிர, தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப மூலோபாயக் குழு, பல்கலைக்கழக தரவரிசைக் குழு மற்றும் தொழில்முயற்சிச் செயற்பாட்டுக் குழு போன்றவற்றின் குழுக் கூட்டங்களையும் இப் பிரிவே கூட்டுகிறது. மேலும், விளம்பரப்படுத்துகை
மற்றும் வெளியக விவகாரங்களுடன் தொடர்புடைய மூலோபாய முகாமைத்துவத் திட்டக் குழு மற்றும் ICT இணையக் குழு போன்ற தற்காலிகக் குழுக்கள் உப-வேந்தரின் வழிகாட்டுதலின் கீழ் EAP பிரிவால் கூட்டப்படுகின்றன. பல்கலைக்கழகத்தின் பழைய மாணவர் சங்கத்தின் கூட்டு நடவடிக்கைகள் யாவும் இப்பிரிவினாலேயே நடத்தப்பட்டு அதற்கு வசதியளிக்கப்படுகின்ற அதேவேளை, அனைத்துப் பழைய மாணவர்களினதும் தகவல்களையும்/ பதிவுகளையும் பராமரித்து வருகிறது. இந்தப் பிரிவால் வழங்கப்படும் சேவைகள், தெற்காசியாவில் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனமாக மாற்றுதல் எனும் பல்கலைக்கழகத்தின் தொலைநோக்கினை அடைய உதவுகின்றன என்றால் அது மிகையாகாது.

## தோட்ட முகாமைத்துவப் பிரிவு

- தற்போதுள்ள நிலத்தோற்ற வடிவினைப் பராமரித்தல்.
- விருத்தி குன்றிய பிரதேசங்களில் நிலத்தோற்ற வடிவினை மேம்படுத்தல்.
- தாவர நாற்றுமேடை முகாமைத்துவம்.
- எதிர்கால நிலத் தோற்ற வடிவமைப்புத் திட்டமிடல் நடவடிக்கைகளுக்கானதொரு தாவர முகாமைத்துவக் கருவியாக உபயோகிக்கும் நோக்கில், பல்கலைக்கழக தாவரங்கள் மற்றும் அவற்றின் மண் பற்றிய தரவு சேகரிப்பு மற்றும் பகுப்பாய்வு.
- பசுமையான சூழலொன்றை நோக்கி பல்கலைக்கழக சமூகத்தினைத் திசைப்படுத்தல்.
- தற்போதுள்ள தாவரங்களைப் பாதுகாத்துப் பேணல் மற்றும் வளாகத்தின் உயிர்ப் பல்வகைமையினை மேம்படுத்துதல்.

## பொது நிர்வாகப் பிரிவு

பொது நிர்வாகப் பிரிவானது, பல்கலைக்கழக பணியாட்டொகுதியினருக்கும் மாணவர்களுக்குமான உத்தியோகபூர்வ போக்குவரத்து வசதிகளை வழங்குவதோடு பல்கலைக்கழகத்தின் வாகனத் தொகுதியையும் பேணிவருகிறது. இந்தப் பிரிவு பேருந்துகள், வேன்கள், கார்கள், வாடகை வண்டிகள், ஒரு ஜீப் வண்டி, ஒரு லாரி, முச்சக்கர வண்டிகள், கை உழவு இயந்திரம் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் உள்ளிட்ட வாகனத் தொகுதியிலுள்ள 39 வாகனங்களை நிர்வகித்து வருகிறது. கல்விசார் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் பல்கலைக்கழக LMS முறைமையூடாக வாகன முன்பதிவுகளை ஆன்லைனில் மேற்கொள்ளலாம். இந்தப் பிரிவு, முகவர்கள் அல்லது பதிவுசெய்யப்பட்ட சேவை வழங்குநர்கள் மூலம் பல்கலைக்கழகத்தில் உள்ள அனைத்து அலுவலக உபகரணங்கள் மற்றும் ஆய்வக உபகரணங்களின் பழுதுபார்க்கும் பணியை கையாள்வதோடு, உபகரணங்களுக்கான பராமரிப்பு/சேவை ஒப்பந்தங்கள் தொடர்பிலும் ஏற்பாடுகளையும் செய்கிறது. பல்கலைக்கழகத்தின் நிலையான சொத்துக்களின் இருப்பினை உறுதிசெய்வதற்கான வருடாந்த பொருள் கணக்கெடுப்பினை நடத்துகின்ற அதேவேளை, பல்கலைக்கழகத்திலிருந்து பயன்படுத்த முடியாத பொருட்களை அப்புறப்படுத்துவதற்கான ஏலம் விடுதல் அல்லது கேள்வுமனுவினை இப் பிரிவே நடத்துகிறது. மேலும் இப்பிரிவானது தேசிய செய்தித்தாள்களில் பிரசுரிக்கப்படுவதற்கான திணைக்களங்கள்/பிரிவுகள் மூலம் அனுப்பப்படுகின்ற விளம்பரங்கள் மற்றும் அறிவிப்புகளையும் பெறுகிறது. பணியாட்டொகுதியினருக்கும் மற்றும் மாணவர்களுக்கும் வாகன அனுமதிச் சீட்டு வழங்குதல் மற்றும் பணியாட்டொகுதியினருக்கு சீருடைக்கான துணி மற்றும் பாதுகாப்பு காலணிகள் வழங்குவதை ஒருங்கிணைத்தல் போன்றனவும் பொது நிர்வாகப் பிரிவு வழங்கும் சேவைகளுள் உள்ளடங்குகின்றன. இப் பிரிவானது பல்கலைக்கழகத்திற்கான அஞ்சல் சேவைகளை வழங்குவதோடு பல்கலைக்கழகத்தின் பதிவேட்டு அறையையும் பராமரிக்கின்றது. பல்கலைக்கழகத்தின் வருடாந்த அறிக்கையானது பொது நிர்வாகப் பிரிவால் தொகுக்கப்பட்டு, அச்சிடப்பட்டு பிரசுரிக்கப்படுவதோடு, அவசியமாயின் பல்கலைக்கழகத்தின் திணைக்களங்கள்/பிரிவுகளுக்கு உள்ளக அச்சிடும் வசதிகளையும் வழங்குகிறது. இந்தப் பிரிவிற்கு பிரதிப் பதிவாளர் ஒருவர் தலைமை தாங்குகின்றார்.

## நிறுவன அலுவல்கள் பிரிவு

நிறுவன அலுவல்கள் பிரிவானது பிரதி பதிவாளரொருவர் தலைமைதாங்குவதுடன், பின்வரும் குழுக்களின் கூட்டங்களை கூட்டுவார்.

- வதிவிட மற்றும் ஒழுக்காற்றுக் குழு (BRD)
- மாணவர்களின் ஒழுக்கம் தொடர்பான விடயங்கள் பற்றிய விசாரணைக் குழுக்கள் (COI)
- முகாமைத்துவ தகவல் முறைமைகள் சார் குழு (MIS)
- 5S வழிகாட்டல் குழு
- பிரிவுத் தலைவர்களுடனான பதிவாளரின் கூட்டங்கள்
- பிரிவுத் தலைவர்களுடனான துணை வேந்தரின் கூட்டங்கள்
- திணைக்களத் தலைவர்களினம் பிரிவுத் தலைவர்களினதும் இணைந்த கூட்டம்
- பணியாளர் அபிவிருத்தி ஆலோசனைக் குழு
- நெருக்கடி சார் முகாமைத்துவக் குழு

## சட்டம் மற்றும் ஆவணச் சான்றுப் பிரிவு

சட்டம் மற்றும் ஆவணச் சான்றுப் பிரிவானது, கடுமையான உழைப்புடன் உரிய நடவடிக்கைகள், சட்டப்பூர்வ பிணை ஆவணங்களைத் தயாரித்துக் கைச்சாத்திடுதல், (ஒப்பந்தங்கள், முறிகள் மற்றும் புரிந்துணர்வு உடன்படிக்கை), கடன் மீட்பு விடயங்கள், புலமைச்சொத்து விடயங்கள், வழக்கு விடயங்கள், ஊழியர் நியாயசபை சார்ந்த விடயங்கள், ஊழியர் திணைக்களத்திலான விசாரணைகள், பல்கலைக்கழகச் சேவைகள் பற்றிய மேன்முறையீட்டுச் சபை வழக்குகள், நடுவர்மன்ற விசாரணைகளுடன் சம்பந்தப்பட்ட மாணவர் விடயங்கள், பணியாட்டொகுதியினர் மற்றும் மாணவர்களின் ஒழுக்காற்று நடவடிக்கைகள் மற்றும் துணைச் சட்டக் குழு மற்றும் புலமைச்சொத்து ஆலோசனைக் குழுவைக் கூட்டுதல் போன்ற விடயங்களைக் கையாளுகிறது.

# நிர்வாகப் பிரிவுகள் மற்றும் பணியாளர்கள்

## பராமரிப்புப் பிரிவு

பராமரிப்புப் பிரிவானது, பொதுவாக பல்கலைக்கழகத்தின் உட்கட்டமைப்பு தொடர்பான தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் சரிசெய்து பராமரிக்கும் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் வகையில் அவசியமான சாதனங்களைக் கொண்டு எப்போதும் தயார் நிலையிலேயே உள்ளது. இது தவிர, புனரமைப்புக் கருத்திட்டங்களின் ஒப்பந்தங்களை நிர்வகித்தல் மற்றும் அவற்றின் முன்னேற்றங்களைக் கண்காணித்தல் நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருவதோடு, பல்கலைக்கழகத்தின் மூலதனக் கருத்திட்டங்களின் ஒப்பந்த நிர்வாகம் மற்றும் கருத்திட்ட முகாமைத்துவம் பற்றியதொரு உறுப்பினராகவும் செயற்பட்டு உதவுவதோடு, பல்கலைக்கழகத்தில் நிறுவப்பட்டுள்ள பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களைச் சுத்தமாகப் பேணுதல், அவற்றின் இயக்கம் மற்றும் பராமரிப்பு மற்றும் ஒழுங்குமுறையான பராமரிப்பு ஆகியவற்றுக்கான ஒப்பந்த நடவடிக்கைகளை நிர்வகித்து அவற்றைக் கண்காணித்தும் வருகிறது. பல்கலைக்கழகத்தின் வருடாந்திர நிகழ்வு முகாமைத்துவக் கருத்திட்டங்களின் அடிப்படைத் தேவைகளையும் இப்பிரிவே நிறைவேற்றுகிறது. மேலும், கழிவு முகாமைத்துவ துணைக் குழு, வலு முகாமைத்துவ துணைக் குழு, பிரதான திட்டக் குழு போன்ற சில குழுக்களுக்கான செயலாளராகவும் செயற்படுவதோடு, பணி கொள்முதல் நடைமுறைக்கான அனேக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களில் உறுப்பினராகவும் செயல்பட்டு வருகிறது. மேற்படி பணிகளை நிறைவேற்றிச் செயலாற்றும் வகையில் பராமரிப்புப் பிரிவானது, அரசாங்க ஒழுங்குவிதிகள் மற்றும் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் பொறியியல் துறைகளின் கீழ் கட்டுமானம், தச்சு வேலை, மின்சாரம், நீர்க்குழாய் பொருத்துகை, வெல்டிங், பொருட்கொள்முதல், ஓவியம் மற்றும் மெருகூட்டல், இயந்திர இயக்கம் போன்ற பல குழுக்களையும் கருவிகளையும் மற்றும் உபகரணங்களையும் கொண்டுள்ளதோடு, அத்தியட்சகர்கள், மேற்பார்வையாளர்கள், முகாமைத்துவ உதவியாளர்கள், இயந்திர இயக்குனர்கள், திறனுடைய மற்றும் திறனிலா ஊழியர்கள் உள்ளிட்ட நன்கு பயிற்சி பெற்ற அலுவலக பணியாட்டொகுதியையும் கொண்டுள்ளது.

## பாதுகாப்புப் பிரிவு

பல்கலைக்கழகத்தின் பாதுகாப்புப் பிரிவானது பிரதான பாதுகாப்பு அதிகாரியின் தலைமையில் இயங்கி வருவதோடு, பல்கலைக்கழக ஊழியர்கள் மற்றும் மாணவர்கள், பல்கலைக்கழகத்திற்கு விஜயம் செய்வோர் மற்றும் பார்வையாளர்கள் உள்ளிட்ட நபர்களின் பாதுகாப்பையும், மற்றும் பல்கலைக்கழக சொத்துக்களின் பாதுகாப்பு, பத்திரப்படுத்துகை மற்றும் அவற்றின் தடைகாப்பு நிலையினையும் உறுதி செய்கிறது. அவசரகாலநிலை அல்லது ஏனைய சூழ்நிலைகளுக்கு பதிலளிப்பதற்கும், உதவி வழங்குவதற்கும் அல்லது சட்ட வரையறையினுள் எந்தவொரு நெருக்கடி சூழ்நிலையையும் நிர்வகிப்பதற்குப் பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதற்குமான பொறுப்பினை இப் பிரிவு கொண்டுள்ளது. பல்கலைக்கழகத்தின் ஒட்டுமொத்த பாதுகாப்பினையும் உறுதிசெய்யும் வகையில், பல்கலைக்கழக சொத்துக்களில் அல்லது பல்கலைக்கழக மேற்பார்வையின் கீழ் உள்ள அனைத்து வாகனப் போக்குவரத்து மற்றும் வாகன நிறுத்துமிட வசதிகளையும் இந்தப் பிரிவு கண்காணிக்கிறது.

## புள்ளிவிபரவியல் பிரிவு

மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தின் புள்ளிவிபரவியல் பிரிவானது பல்கலைக்கழகத்தின் புள்ளிவிபரவியல் சார்ந்த அனைத்து விடயங்களையும் கையாளும் வகையில் 2017 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டது. இப்பிரிவனாது, பல்கலைக்கழக வருடாந்த அறிக்கைக்கான தரவுகளை வழங்குவதற்குப் பொறுப்பாக விளங்குவதோடு, தொழில் திணைக்களம், மத்திய வங்கி, தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம், பல்கலைக்கழக மானியங்கள் அணைக்குழு மற்றும் சர்வதேச பல்கலைக்கழகத் தரப்படுத்தல் அதிகாரசபை போன்ற வெளியக நிறுவனங்களுக்கான தரவுகளை வழங்குகின்றதொரு பிரதான நிலையமாகவும் செயற்படுகின்றது. இப் பிரிவானது புள்ளிவிபரவியல் கையேடு மற்றும் பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்பு என்பன போன்ற பல்வேறு அறிக்கைகளை வெளியிட்டு வருகின்ற அதேவேளை, பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவின் போதான பட்டதாரி வேலைவாய்ப்பு ஆய்வினை எளிதாக்கி அதற்கான வசதியையும் வழங்குகின்றது. இந்த புள்ளிவிபரவியல் பிரிவானது நம்பகமான மற்றும் துல்லியமான தரவுகளை வழங்கி பல்கலைக்கழகத்தின் தீர்மானம் மேற்கொள்ளல் மற்றும் அதன் மூலோபாயத் திட்டமிடுகை போன்ற விடயங்களிலும் பங்களிப்புச் செய்கிறது.

## நிதி / கணக்காய்வுச் செயற்பாடுகளைக் கையாளும் பிரிவுகள்

### நிதிப் பிரிவு

இப் பிரிவின் பிரதான நோக்கம் யாதெனில், சம்பந்தப்பட்ட அனைத்து விதிமுறைகள் மற்றும் ஒழுங்குவிதிகளைக் கடைப்பிடிக்கின்ற அதேவேளை, மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் இலக்குகளையும் அதன் நோக்கங்களையும் எட்டும் வகையில், வினைத்திறனும், பயனுறுதியும் உடைய நிதிப் பயன்பாட்டினை உறுதி செய்வதற்கான நிதி சார்ந்த நடவடிக்கைகளைத் திட்டமிடுதல், ஒழுங்கமைத்தல், வழிகாட்டுதல் மற்றும் கட்டுப்படுத்துதல் ஆகும்.

பல்கலைக்கழக நிருவாகத்தினுள் நிதிப் பிரிவு பின்வரும் பணிகளை நிறைவேற்றுவதன் மூலம் முக்கியமான வகிபாத்திரத்தை வகிக்கிறது:

 பெறுவனவுகளையும் கொடுப்பனவுகளையும்
கையாளுதல்  நிதிசார் அறிக்கையை தயாரித்தல்
 சொத்துக்கள் முகாமைசெய்தல்
 சம்பளங்கள் மற்றும் கடன்கள் என்பவற்றை செயலாக்குதல் மற்றும்
தயாரித்தல்  நிதிசார் பதிவுகளைப் பேணுதல்
 கணக்கீட்டு மற்றும் நிதிசார் கொள்கைகளை
உருவாக்குதல் வெளியக ஆராய்ச்சி மானியங்களின்
நிதிசார் தொழிற்பாடு
 அரசாங்க கணக்காய்வு மற்றும் ஊ.ந.நி. (ETF), உண்ணாட்டு இறைவரி திணைக்களம் போன்ற ஏனைய சம்பந்தப்பட்ட சட்டநியாதிக்க அமைப்புக்கள் போன்றவற்றுடன் தொடர்பை பேணுதல்.

### வழங்கல் பிரிவு

ஒரு பிரதி பல்கலைக்கழகப் பொருளாளரின் தலைமையின் கீழான இப் பிரிவானது, மூலதனப் பொருட்கள் மற்றும் நுகர்வுப் பொருட்கள் எனும் இரண்டு வகைகளின் கீழ் பெறுகைத் தொழிற்பாடுகளை பிரதானமாக செய்து வருகிறது.
ஒவ்வொரு வருடமும் பல்கலைக்கழகத்திற்கான பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக அரசின் திறைசேரியிலிருந்து மூலதன ஒதுக்கீடுகளும் மற்றும் மீண்டெழும் ஒதுக்கீடுகளும் பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்படுகின்றன. வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு பொருள் விநியோகத்தர்களிடமிருந்து அவசியமான உபகரணங்கள், மென்பொருள், நுகர்வுப்பொருட்கள் மற்றும் பிற உபகரணங்களை கொள்முதல் செய்வதாக வழங்கல் பிரிவின் பணியெல்லையாக விளங்குகின்றது.
இப் பிரிவின் பிரதி நிதியாளர் அனைத்து
கொள்முதல் குழுக்களினதும் குழுக்கூட்டுனராகப் பணியாற்றுகின்றார். இதற்கிணங்க, பல்கலைக்கழகத்தின் இலக்குகளையும் மற்றும் அதன் குறிக்கோள்களையும் நிறைவேற்றுவதற்காக வருடாந்த கொள்முதல் திட்டத்தின் அடிப்படையில், பெறுகை வழிகாட்டுதல்கள்/கையேடு, அரசாங்கத்தின் விதிமுறைகள்
மற்றும் ஒழுங்குவிதிகள், நடைமுறைகள், சுற்றுநிரூபங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் வெளியிடப்படும் தொடர்புடைய பணிப்புரைகளைப் பின்பற்றி, நிதி ஒதுக்கீட்டை சிக்கனமாகவும், மற்றும் வினைத்திறனும் பயனுறுதியும் உடையதாகவும் பயன்படுத்துவதற்கான பொறுப்புகளையும் இப்பிரிவு ஏற்றுக்கொண்டுள்ளது.

### உள்ளக கணக்காய்வுப் பிரிவு

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவானது, பல்கலைக்கழகத்தின் சிறந்த இயக்கத்திற்காக இடர்களைக் குறைத்து செயல்பாடுகளின் வினைத்திறனை மேம்படுத்தும் வகையில் முறைமைகள் மற்றும் நடைமுறைகளை வலுப்படுத்துகின்ற மிகவும் பிரதான தொழிற்பாட்டினை மேற்கொள்கின்றது. நிறுவனத்தை சிறந்த இணக்கப்பாடுகளை நோக்கித் திருப்புவதற்கும், விலகல்களைத் தடுப்பதற்கான பரிந்துரைகளை வழங்குவதன் ஊடாக, அரசாங்கத்தின் விதிமுறைகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு ஏற்ப நிறுவனம் சார்ந்த செயற்பாடுகளை சீரமைப்பதில் இந்தப் பிரிவு மைய அவதானம் செலுத்துகிறது. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவானது துணை வேந்தரின் நேரடியான மேற்பார்வை மற்றும் அறிவுறுத்தல்களின்
கீழ் பல்கலைக்கழகத்தினுள் தனது பணியை மேற்கொண்டு வருகிறது. இப் பிரிவானது பிரதி உள்ளக் கணக்காய்வாளரின் தலைமையின

# நிர்வாகப் பிரிவுகள் மற்றும் பணியாளர்கள்

கீழ் ஒரு உதவி உள்ளக் கணக்காய்வாளர், ஐந்து கணக்காய்வு உதவியாளர்கள் மற்றும் ஒரு அலுவலக உதவியாளர் ஆகியோரைக் கொண்டு இயங்கி வருகிறது. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவானது முன்-கணக்காய்வு மற்றும் பின்- கணக்காய்வு என இரண்டு முறையான கணக்காய்வுகளை மேற்கொள்கின்றது. இதில் முன்-கணக்காய்வுச் செயற்பாடு முக்கியமாக UPF, ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடை செலுத்தல் படிவங்களை, பணம் செலுத்துவதற்கு முன் கணக்காய்வு செய்வதில் கவனம் செலுத்துகிறது. இது பயனாளிகள் UGC க்கு படிவங்கள் சமர்ப்பிக்கப்பட்டவுடன் தாமதத்திற்கு வழிவகுக்கும் வகையில் தேவையற்ற சிக்கல்களுக்கு ஆளாக வேண்டியதில்லை என்பதை உறுதிசெய்கிறது. மேலும் இது பல்கலைக்கழகத்திற்கும் பணம் செலுத்துனருக்கும் சமமான தொகை கணக்கிடப்படுவதை உறுதி செய்யும் வகையில் பிணைப்பத்திர மீறல்களின் அடிப்படையில் மீட்டெடுக்கக்கூடிய தொகையைக் கணக்கிடுகிறது. அதேவேளை, பின்- கணக்காய்வானது, ஏற்புடைய விதிமுறைகள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணங்குவதை மதிப்பீடு செய்யும் நோக்கில் பல்கலைக்கழகத்தின் ஏனைய தொழிற்பாட்டுப் பிரதேசங்களை பரீட்சித்தல் மற்றும் முன்னேற்றத்திற்கான பகுதிகளை பரிந்துரைதல் போன்றன தொடர்பானதாகும்.

## பிற பிரிவுகள்

### தொழில்முயற்சியாண்மை / பல்கலைக்கழக வணிக இணைப்பு அலகு

மொரட்டுவை பல்கலைக்கழகமானது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 10/2016 ஆம் இலக்கச் சுற்றுநிரூபத்தின் பிரகாரம், துரிதம் மிக்க உயர் கல்வி விரிவாக்கம் மற்றும் மேம்பாடு (AHEAD) திட்டத்தின் நிதியுதவியுடன், தொழில்முயற்சியாண்மை / பல்கலைக்கழக வணிக இணைப்பு அலகு (UBLC) என்ற பிரிவை தாபித்தது. UBLC ஆனது கல்வி மற்றும் முகாமைத்துவத்துடன் கூடிய ஒரு விஞ்ஞானம் மற்றும் ஒரு வணிகம் எனும் இரட்டை அடையாளத்தைக் கொண்டுள்ளது. மேலும் இலங்கையில் உள்ள அனைத்து அரச பல்கலைக்கழகங்களுக்கும் மத்தியில் இறுதி மதிப்பீட்டு கட்டத்தை வெற்றிகரமாக நிறைவுசெய்த முதல் அலகு இதுவாகும். மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் UBLC ஆனது, பல்கலைக்கழகத்திற்குள் ஒரு புத்தாக்கம் மிக்க சுற்றுச்சூழல் முறைமையினைத் தாபித்து, புலமைச்சொத்துரிமையைப் பாதுகாப்பதற்கான ஒரு பொருத்தமான பொறிமுறையை உருவாக்கியது. UBLC ஆனது ஆக்கவுரிமை, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப தரவுத்தளங்களுக்கான (வணிக தரவுத்தளங்கள் உள்ளிட்டவை) அணுகல், IP முகாமைத்துவம் (காப்புரிமை வரைவு, வணிகமயமாக்கல், உரிமம் வழங்குதல் மற்றும் தொழில்நுட்ப பரிமாற்றம்), மற்றும் செயற்படுத்துவதற்கான சுதந்திரம், அனுமதிச்சான்று, புத்தாக்கம், ஆக்கவுரிமை பெறுதல் மற்றும் அதிநவீன தொழில்நுட்பம் உள்ளிட்ட தேடல் போன்றவற்றுக்கு உதவி வழங்குகிறது. UBLC ஆனது பல்கலைக்கழகத்திற்குள் ஒரு தொடக்கநிலைப் பரிபாலப் பொறிமுறையினை உருவாக்கியது, இது ஒரு கைத்தொழில் துறை சார்ந்த நிபுணத்துவக் குழுவின் ஒரு தொழில்நுட்ப மதிப்பீட்டிற்குப் பின் இரண்டு ஆண்டுகளுக்கு தொடக்கநிலை நிறுவனங்களை பரிபாலனம் செய்கிறது. பரிபாலனக் காலப் பகுதியில், நிறுவனத்தைப் பதிவுசெய்யும் சேவைகள், தேவைக்கேற்றவாறான செயலகச் சேவைகளை இணைப்பதன் மூலமும், மற்றும் நிதி மற்றும் சந்தைப்படுத்தல் சார்ந்த உதவிகளை வழங்கல் மற்றும் நிபுணர்களுடன் நெருக்கமான வழிகாட்டுதலை வழங்கல் போன்றன மூலம் UBLC ஆனது தொடக்கநிலைக் குழுக்களுக்கு உதவுகிறது. கண்டுபிடிப்பாளர்கள் மற்றும் கைத்தொழில்கள் போன்ற வணிகமயமாக்கல் செயல்பாட்டில் ஈடுபட்டுள்ள தரப்பினரிடையே மத்தியஸ்தம் செய்தல், எதிர்கால உரிமம் பெறுனர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துதல், கண்டுபிடிப்பை அமுல்படுத்துவதை அல்லது அது தொடர்பில் பணியாற்றுவதை உறுதி செய்வதற்காக உரிமம் பெறுனரை ஊக்குவித்தல், ஆதரித்தல் மற்றும் தொடர்ச்சியான தொடர்புகளைப் பேணல், அத்துடன் நம்பிக்கையை உருவாக்கி அதனைக் கட்டியெழுப்புதல் போன்றவற்றிலும் UBLC கவனம் செலுத்துகிறது. இறுதியாக, மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் UBLC ஆனது, பல்கலைக்கழக கண்டுபிடிப்புகளைப் பாதுகாத்து அவற்றை முகாமைத்துவம் செய்வதற்கும் உதவுவதோடு, பல்கலைக்கழகமும் சமூகமும் பரஸ்பரம் பயனடையும் வகையிலான பொருளாதார மதிப்பை உருவாக்குவதற்கான கல்வி அறிவை வணிகமயமாக்குவதிலும் அர்ப்பணிப்பினைக் கொண்டுள்ளது.

# நிர்வாகப் பிரிவுகள் மற்றும் பணியாளர்கள்

நூலகத்தில் இரவல் பிரிவு, நிரந்தர உசாத்துணைப் பிரிவு மற்றும் விசேட தொகுப்புக்கள் ஆகிய பிரிவுகளில் சுமார் 130,000 க்கும் மேற்பட்ட புத்தகங்கள் வைக்கப்பட்டுள்ளன. மல்டிமீடியா சேகரிப்பில் பல்வேறு விடயப் பிரிவுகளில் DVD/ CD கள் உள்ளன. நூலகமானது ஆண்டுதோறும் சுமார் 2000 புதிய விடயங்களைச் சேர்த்து வருவதோடு, 18 அச்சு மற்றும் இலத்திரனியல் செய்தி இதழ்களுக்கு பங்களிப்புச் செய்கின்றது. தரவுத்தளங்கள், இலத்திரனியல்-ஆய்வுச் சுருக்கங்கள், ஆய்வு மற்றும் மாநாட்டு அறிக்கைகள் உள்ளிட்ட மிகவும் பெறுமதியான தகவல்களைக் கொண்டதொரு விருத்தியடைந்து வரும் தகவல் களஞ்சியத்தினை இலத்திரனியல் நூலகத்தின் நிகழ்நிலை ஊடாக அணுக முடியும். நூலகத்தின் கல்விசார் பணியாட்டொகுதியினர் அனேக செயலமர்வுகள், கருத்தரங்குகள் போன்றவற்றில் வளவாளர்களாக பங்களித்துள்ளதோடு, பல பல்கலைக்கழகங்கள் மற்றும் நிறுவனங்களில் வழிகாட்டியாகவும், ஆலோசகராகவும் மற்றும் வருகை தரும் விரிவுரையாளராகவும் தமது வகிபாகங்களை வழங்கியுள்ளனர். தேசிய நீரகவள ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிறுவனம் (NARA), கௌதமி பாலிகா வித்யாலயாம், வனவிலங்கு மற்றும் இயற்கை பாதுகாப்பு சங்கம், லங்கா ஹைட்ராலிக் நிறுவனம்,

## நூலகம்

மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் நூலகமானது நாட்டின் மிகவும் பிரபயல்யம் வாய்ந்த தொழில்நுட்பத்துடன் கூடியதொன்றாகும்.
இதன் முக்கிய விசேட பிரிவுகளாக பொறியியல், கட்டிடக்கலை, தகவல் தொழில்நுட்பம், வணிக ஆய்வுகள் மற்றும் மருத்துவம் போன்றன விளங்குகின்றன. பல்கலைக்கழக நூலகம் உள்நாட்டு அறிவு களஞ்சியமாகவும், தற்போதைய தகவல் மற்றும் அறிவார்ந்த பதிவுகளுக்கான முக்கிய நுழைவாயிலாகவும் செயல்படுகிறது. நூலகம் அனைத்து வகை மாணவர்கள் மற்றும் பணியாட்டொகுதியினருக்கும் உதவுவதோடு, புத்தகங்கள், சஞ்சிகைகள், மல்டிமீடியா மற்றும் பிற தகவல் வளங்களைக் கொண்ட தொகுப்புகள் ஊடாக அறிவுறுத்தல் மற்றும் ஆய்வுக்கான வலுவான ஆதரவை வழங்குகிறது. தற்போது ராயல் கல்லூரி, WP/PIU/ ஸ்ரீ ராகுலா மகா வித்யாலயாம், லொயோலா கல்லூரி, நீர்கொழும்பு மற்றும் ரோயல் ஆசிய சங்கம் ஆகியவற்றின் நூலகங்களில் உள்ள நூலகத் தொகுப்புக்களைப் பட்டியலிடுவதில் உதவி வழங்கப்பட்டது. சில கல்விசார் பணியாட்டொகுதியினர் பதில் நூலகர்களாகவும் மற்றும் சிரேஷ்ட நூலக உதவியாளர்களாகவும், தென்கிழக்கு பல்கலைக்கழகம், கட்புல அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழகம், கொழும்பு றோயல் இன்ஸ்டிரியூட் ஆகியவற்றின் நூலகங்களிலும் மற்றும் ஆர்தர் சி. கிளார்க் ஆய்வு மையம் மற்றும் துபாயில் மருத்துவமனை நூலகத்திலும் பிரதான தொழிற்பாடுகளை விருத்தி செய்வதற்குப் பங்களிப்புச் செய்தனர்.

## சுகாதார நிலையம்

சுகாதார நிலையமானது பல்கலைக்கழகத்தின் அனைத்து மாணவர்கள், பணியாட்டொகுதியினர் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு சுகாதார பராமரிப்பு வசதிகளை வழங்குகிறது. மாணவர்களுக்கு இலவசமாக சிகிச்சை வழங்கப்படுகிறது. நிலையத்தினால் வழங்கப்படுகின்ற விரிவான சுகாதாரப் பராமரிப்புச் சேவைகளில் உடல் மற்றும் உள நோய்களுக்கான தடுப்பு மற்றும் குணப்படு த்தல் சேவைகளும் அடங்குகின்றன. ஏர்ப்பு வலி நோய்க்கு எதிரான தடுப்பூசியும் இந் நிலையத்தில் வழங்கப்படுகின்றது. நோய்த் தொற்றுக்கள் மற்றும் தொற்று நோய்கள் பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் நோய்த் தடுப்புப் பிரிவினால் எடுக்கப்படுகின்றன. சுகாதார நிலையத்திலுள்ள உள்ள ஆய்வகத்தின் மூலம் பொதுவான நோயியல் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. தொற்று நோய்களுக்கான நோயாளர் அறை மற்றும் தனிமைப்படுத்தல் அறைகளும் இங்கு உள்ளன. பற்சிகிச்சைப் பிரிவினால் பற் கால்வாய் நிரப்புதல் மற்றும் கூட்டு நிரப்புதல் உள்ளடங்கலான அனைத்து பற் சிகிச்சை நடைமுறைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. கோவிட்-19 தடுப்புப் பராமரிப்பு மற்றும் தடுப்பூசி ஆகியவை அப் பிரதேசத்தின் MOH உடன் ஒருங்கிணைந்து முன்னெடுக்கப்படுகின்றன.

## உடற்கல்விப் பிரிவு

இந்தப் பிரிவானது ஒரு உடற்கல்விப் பணிப்பாளரின் தலைமையின் கீழ் செயற்படுவதோடு, இதற்கு உடற்கல்வித் துறையைச் சார்ந்த பயிற்றுவிப்பாளர்களும் மற்றும் ஏனைய துணைப் பணியாளர்களும் உதவி வருகின்றனர். இந்தப் பிரிவு இரண்டு பிரதான குறிக்கோள்களைக் கொண்டுள்ளது. முதலாவது, ஆண்டு முழுவதும் மாணவர்களுக்கான பொழுதுபோக்கு விளையாட்டு மற்றும் உடற்கல்வி சார்ந்த நிகழ்ச்சித் திட்டங்களிலான செயல்பாடுகளை இலகுவாக்குதல், நடாத்துதல் மற்றும் ஒழுங்கமைத்தல் ஆகுமென்பதோ, இதில் கூடுதலான பங்களிப்பு எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் பல்கலைக்கழக விளையாட்டு அணிகளுக்கு பயிற்சியளிக்கப்பட்டு, பல்கலைக்கழக, தேசிய மற்றும் சர்வதேச அளவில் ஆண்டு முழுவதும் போட்டி விளையாட்டு நிகழ்வுகளில் போட்டியிடும் வகையில் வசதியளித்தல் இதன் இரண்டாவத குறிக்கோளாகும். இந்தப் பிரிவினால் பின்வரும் செயல்பாடுகள் முன்னெடுக்கப்படுகிறது:

- புதிய மாணவர்களுக்கிடையிலான நிகழ்வுகள், திணைக்களங்களுக்கு இடையிலான நிகழ்வுகள், பீடங்களுக்கிடையிலான நிகழ்வுகள் மற்றும் அழைப்புச் சார்ந்த போட்டிகள் போன்ற பல்கலைக்கழகத்திற்குள்ளான நிகழ்வுகளை நடத்துதல்.
- பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான சாம்பியன்ஷிப் போட்டிகள் மற்றும் இலங்கை பல்கலைக்கழக விளையாட்டுகளை ஏற்பாடு செய்தல். போட்டி மட்டத்தில் ஆண்கள் மற்றும் பெண்கள் பிரிவுகளில் 36 அணிகள், 23 விளையாட்டுகளுக்கான வசதிகளை வழங்குதல்.
- ஒருங்கிணைந்த பல்கலைக்கழக அணிகள், தேசிய அணிகள், ஆசிய பல்கலைக்கழக சாம்பியன்ஷிப், ஆசிய பல்கலைக்கழக விளையாட்டுகள், உலக பல்கலைக்கழக சாம்பியன்ஷிப் மற்றும் உலக பல்கலைக்கழக விளையாட்டுகளில் பங்கேற்பதற்குத் தொிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு ஆதரவளித்தல்.
- கடந்த ஆண்டு விளையாட்டுகளில் தனது திறமைகளை சிறப்பாக வெளிக்காட்டிய மாணவர்களைப் பாராட்டுவதற்காக வருடாந்த வண்ண விருது வழங்கும் விழா நடத்தப்படுகிறது.
- விளையாட்டுச் சங்கங்கள், இலங்கை பல்கலைக்கழக விளையாட்டுச் சங்கம் மற்றும் விளையாட்டு தொடர்பான பிற அமைப்புகளுக்கு இடையிலான அனைத்து தொடர்பாடல் நடவடிக்கைகள்.
- விளையாட்டுகளுக்கான வசதிகளைப் பராமரித்து அவற்றை விருத்தி செய்வதோடு, விளையாட்டுக்கான உபகரணங்களைக் கொள்வனவு செய்தல்.
- பூப்பந்து, கிரிக்கெட், கரப்பந்து, கெரம், மேசைப் பந்து, வலைப்பந்து, யோகா மற்றும் சீருடலாக்க நிகழ்ச்சித்திட்டங்கள் என்பன போன்றவை பொழுதுபோக்கு விளையாட்டுகள் மற்றும் செயல்பாடுகளுக்கு வசதியளித்தல் (மாணவர்களுக்கும் பணியாட்டொகுதியினருக்கும்).
- மாணவர்களின் தலைமைத்துவப் பண்புகளையும் ஆளுமையையும் விருத்தி செய்வதற்கு வசதிகளை வழங்குதல்.

பல்கலைக்கழகத்திலுள்ள அனைத்து மாணவர்களுக்கும் மற்றும் அனைத்து பணியாட்டொகுதியினருக்கும் உடற்கல்வி, பொழுதுபோக்கு விளையாட்டுக்கள் மற்றும் விளையாட்டுப் போட்டிகளை அறிமுகப்படுத்தி (புதிய நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்கி நிகழ்வுகளை ஒழுங்குபடுத்தல்) அவற்றை ஊக்குவிக்கும் நோக்கிலேயே இப்பிரிவு தாபிக்கப்படுகிறது. இவை அனைத்தும் உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட பட்டதாரிகளை பல்கலைக்கழகத்திலிருந்து உருவாக்க உதவும்.

# கல்வி சாரா ஊழியர்கள்

## நிர்வாக ஆளணியினர் பற்றிய விபரம்

| நிர்வாக | பதிவாளர்/நிதியாளர் | | பிரதி பதிவாளர்/ நிதியாளர் | | சிரேஷ்ட உதவி பதிவாளர்/நிதியாளர் | | உதவி பதிவாளர்/ நிதியாளர் | | ஏனைய நிர்வாக [illegible] | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2023 | 2022 | 2023 | 2022 | 2023 | 2022 | 2023 | 2022 | 2023 |
| பொது நிர்வாகம் | 1 | 1 | 5 | 5 | 4 | 4 | 7 | 7 | 10 | 8 |
| நிதி நிர்வாகம் | 1 | 1 | 2 | 2 | 1 | 1 | 4 | 5 | - | - |
| **மொத்தம்** | **2** | **2** | **7** | **7** | **5** | **5** | **11** | **12** | **10** | **8** |

குறிப்பு:

* பிரதி உள்ளக கணக்காய்வாளர், சிரேஷ்ட உதவி உள்ளக கணக்காய்வாளர், பணிப்பாளர்/ உடற் கல்வி, சுகாதார சேவை உத்தியோகத்தர், வேலை பொறியியலாளர், காப்பாளர், பிரதம பாதுகாப்பு உத்தியோகத்தர்

## கல்விசாரா ஆளணியினர்

| பீடம் / கிளை | சிரேஷ்ட பணியாளர்* | | கனிஷ்ட பணியாள** | | சிற்றூழியர்கள் | | ஒப்பந்த பணியாளர்கள்*** | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2022 | 2023 | 2022 | 2023 | 2022 | 2023 | 2022 | 2023 |
| கட்டிடக்கலை பீடம் | 11 | 13 | 29 | 26 | 23 | 23 | - | - |
| பொறியியல் பீடம் | 34 | 40 | 81 | 66 | 84 | 80 | - | - |
| ஆசிரியர்/கிளை | 6 | 7 | 18 | 17 | 16 | 17 | - | - |
| பட்டதாரி ஆய்வுகள் பீடம் | - | - | 2 | 2 | - | - | - | - |
| வணிக பீடம் | 1 | 1 | 3 | 3 | 2 | 1 | - | - |
| மருத்துவ பீடம் | - | - | 5 | 5 | - | - | 4 | 6 |
| மூலதன பணிகள் & சேவைகள் | - | - | 6 | 6 | - | - | - | - |
| தொழில் வழிகாட்டல் பிரிவு | 1 | 1 | - | - | 1 | 1 | - | - |
| தகவல் தொழில்நுட்ப சேவைகளுக்கான மையம் | - | - | 3 | 2 | 1 | 1 | - | - |
| மின்சாரம் வழங்கல் | - | - | 2 | 2 | 3 | 3 | - | - |
| மின்சாரம் வழங்கல் | 2 | 2 | 13 | 12 | 5 | 5 | - | - |
| நிதி நிர்வாகம் | 7 | 8 | 15 | 13 | 3 | 3 | - | - |
| பொது நிர்வாகம் | 5 | 4 | 35 | 36 | 6 | 7 | 1 | 1 |
| சுகாதார சேவைகள் | 1 | 1 | 6 | 6 | 8 | 7 | 2 | 2 |
| தங்கும் விடுதிகள் | - | 1 | 7 | 6 | 6 | 5 | 7 | 7 |
| உள் தணிக்கை | - | - | 5 | 5 | 1 | 1 | - | - |
| காணியும் கட்டடங்களும் | 1 | 2 | 8 | 7 | 25 | 25 | - | - |
| நூலக சேவைகள் | 3 | 5 | 19 | 18 | 8 | 6 | - | - |
| உடற்பயிற்சிக் கல்வி | 1 | 1 | 1 | 1 | 5 | 5 | - | - |
| பாதுகாப்பு சேவைகள் | 4 | - | 10 | 10 | 7 | 7 | - | - |
| களஞ்சியங்களும், விநியோக சேவைகளும் | - | 6 | 5 | 2 | 1 | 1 | - | - |
| மாணவர், ஊழியர் நலன்புரி | - | - | 4 | 3 | - | 0 | - | - |
| போக்குவரத்துச் சேவைகள் | - | - | - | - | 29 | 27 | - | - |
| நீர் விநியோகம் | - | - | - | - | 5 | 5 | - | - |
| வேலைத் தளம் | - | 1 | 8 | 5 | 21 | 21 | - | - |
| சட்டம், ஆவணங்கள் அலகு | - | - | 1 | 1 | 1 | 1 | - | - |
| CODL | - | - | 1 | 1 | 1 | 1 | - | - |
| பிரசுரங்களும் மற்றும் ISP | - | - | 1 | 1 | - | - | - | - |
| பணியாளர் அபிவி. நிலையம் | - | - | 2 | 2 | - | - | - | - |
| மொத்தம் | **77** | **93** | **290** | **258** | **262** | **253** | **14** | **16** |

குறிப்பு

* சிரேஷ்ட கல்விசாரா பணியாளர்கள்

** சிற்றூழியர்கள் தவிர்ந்த கல்விசாரா பணியாளர்கள்

*** அனைத்து வகையான கல்விசாரா ஒப்பந்தப் பணியாளர்கள்

# கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்கள்

## அங்கீகாரமளிக்கப்பட்ட பட்டதாரி நிகழ்ச்சித்திட்டங்கள்

| பீடம் | திணைக்களம் | பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டம் | அங்கீகாரமளிக்கும் அமைப்பு | சர்வதேசம்/ உள்நாடு |
|---|---|---|---|---|
| கட்டடக்கலை பீடம் | கட்டடக்கலை திணைக்களம் | கட்டடக்கலை (கௌரவ) இளமாணிப்பட்டம் | பிரித்தானிய கட்டடக்கலைஞர்களின் றோயல் நிறுவனம் (RIBA), இலங்கை கட்டடக்கலைஞர்களது நிறுவனம் (SLIA), பொதுநலவாய நாடுகளது கட்டடகலைஞர்களின் சங்கம் (CAA), ITPSL – நகர திட்டமிடலாளர்களது சங்கம் – இலங்கை. | சர்வதேசம் |
| | பட்டணமும் நகரமும் திட்டமிடல் திணைக்களம் | பட்டணமும் நகரமும் திட்டமிடல் சார் விஞ்ஞான (கௌரவ) இளமாணிப்பட்டம் | ITPSL – நகர திட்டமிடலாளர்களது சங்கம் – இலங்கை | உள்நாடு |
| | கட்டட பொருளியல் திணைக்களம் | கணிய அளவையியல் சார் விஞ்ஞான (கௌரவ) இளமாணிப்பட்டம் | இலங்கை கணிய அளவையாளர்களது நிறுவகம், இலங்கை (IQSSL) | உள்நாடு |
| | | | பசுபிக் கணிய அளவையாளர்களது நிறுவகம், இலங்கை. பின்வருவனவற்றின் மூலம் இது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது ஆஸ்திரேலிய கணிய அளவையாளர்கள் நிறுவகம் (AIQS) கனடாவின் கணிய அளவையாளர்களது நிறுவகம் (CIQS), ஹொங்கொங் கணிய அளவையாளர்களது நிறுவகம் (HKIS), [illegible] கணிய அளவையாளர் இந்தோனேசியா (IQSI), நியுசிலாந்து கணிய அளவையாயர்களது நிறுவகம் (NZIQS), பிலிப்பைன்ஸ் சான்றுபடுத்தப்பட்ட கணிய அளவையாளர்களது நிறுவகம் (PICQS) அளவையாளர்கள், பொறியியலாளர்கள் மற்றும் கட்டடக்கலைஞர்கள் ஆகியோரது நிறுவனம், புருணை (PUJA), றோயல் அளவையாளர்களின் நிறுவனம் மலேசியா (RISM), அளவையாளர்கள் மற்றும் மதிப்பீட்டாளர்களது சிங்கப்பூர் நிறுவகம் (SISV) | சர்வதேசம் |
| | | | றோயல் பட்டய அளவையாளர்களது நிறுவனம் (RICS) | சர்வதேசம் |
| | | | பட்டய சிவில் பொறியியல் அளவையாளர்களது நிறுவனம் (CICES) | சர்வதேசம் |
| | வசதியேற்பாட்டு முகாமைத்துவ திணைக்களம் | வசதியேற்பாட்டு முகாமைத்துவம் சார் விஞ்ஞான (கௌரவ) இளமாணிப்பட்டம் | றோயல் பட்டய அளவையாளர்களது நிறுவனம் (RICS) | சர்வதேசம் |
| | | | சர்வதேச வசதியேற்பாட்டு முகாமைத்துவ சங்க பவுண்டேஷன் (IFMA Foundation) | சர்வதேசம் |
| | | | பொறியில் மற்றும் தொழில்நுட்பம் பற்றி அங்கீகார சபை (ABET) | சர்வதேசம் |

| பீடம் | திணைக்களம் | பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டம் | அங்கீகாரமளிக்கும் அமைப்பு | சர்வதேசம்/ உள்நாடு |
|---|---|---|---|---|
| பொறியியல் பீடம் | பொருட்கள் விஞ்ஞானம் மற்றும் பொறியியல் திணைக்களம் | பொருட்கள் விஞ்ஞானம் மற்றும் பொறியியல் சார் விஞ்ஞான பொறியியல் (கௌரவ) இளமாணிப்பட்டம் | வொசிங்டன் உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட இலங்கை பொறியியலாளர்களின் நிறுவகத்தினால் (IESL) அங்கீகரிக்கப்பட்டுள்ளது | சர்வதேசம்/ உள்நாடு |
| | நில மூலவளங்கள் பொறியியல் திணைக்களம் | நில மூலவளங்கள் பொறியியல் சார் விஞ்ஞான (கௌரவ) இளமாணிப்பட்டம் | வொசிங்டன் உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட இலங்கை பொறியியலாளர்களின் நிறுவகத்தினால் (IESL) அங்கீகரிக்கப்பட்டுள்ளது | சர்வதேசம்/ உள்நாடு |
| | இரசாயன மற்றும் செயல்முறை பொறியியல் திணைக்களம் | இரசாயன மற்றும் செயல்முறை பொறியியல் சார் விஞ்ஞான (கௌரவ) இளமாணிப்பட்டம் | இலங்கை பொறியியலாளர்களின் நிறுவகம் (IESL) வொசிங்டன் உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட இலங்கை பொறியியலாளர்களின் நிறுவகத்தினால் (IESL) அங்கீகரிக்கப்பட்டுள்ளது | சர்வதேசம்/ உள்நாடு |
| | கணினி விஞ்ஞானம் மற்றும் பொறியியல் திணைக்களம் | கணினி விஞ்ஞானம் மற்றும் பொறியியல் சார் விஞ்ஞான (கௌரவ) இளமாணிப்பட்டம் | வொசிங்டன் உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட இலங்கை பொறியியலாளர்களின் நிறுவகத்தினால் (IESL) அங்கீகரிக்கப்பட்டுள்ளது | சர்வதேசம்/ உள்நாடு |
| | சிவில் பொறியியல் திணைக்களம் | சிவில் பொறியியல் சார் விஞ்ஞான பொறியியல் (கௌரவ) இளமாணிப்பட்டம் | வொசிங்டன் உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட இலங்கை பொறியியலாளர்களின் நிறுவகத்தினால் (IESL) அங்கீகரிக்கப்பட்டுள்ளது | சர்வதேசம்/ உள்நாடு |
| | சிவில் பொறியியல் திணைக்களம் | மின் பொறியியல் சார் விஞ்ஞான பொறியியல் (கௌரவ) இளமாணிப்பட்டம் | வொசிங்டன் உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட இலங்கை பொறியியலாளர்களின் நிறுவகத்தினால் (IESL) அங்கீகரிக்கப்பட்டுள்ளது | சர்வதேசம்/ உள்நாடு |
| | இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பு பொறியியல் திணைக்களம் | இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பு பொறியியல் சார் விஞ்ஞான பொறியியல் (கௌரவ) இளமாணிப்பட்டம் | வொசிங்டன் உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட இலங்கை பொறியியலாளர்களின் நிறுவகத்தினால் (IESL) அங்கீகரிக்கப்பட்டுள்ளது | சர்வதேசம்/ உள்நாடு |
| | புடைவை மற்றும் ஆடை பொறியியல் திணைக்களம் | புடைவை மற்றும் ஆடை பொறியியல் சார் விஞ்ஞான பொறியியல் (கௌரவ) இளமாணிப்பட்டம் | புடைவை நிறுவகம் | சர்வதேசம் |
| | | நலநாகரீக வடிவமைப்பு மற்றும் உற்பத்தி விருத்தி சார் விஞ்ஞான பொறியியல் (கௌரவ) இளமாணிப்பட்டம் | புடைவை நிறுவகம் | சர்வதேசம் |
| | இயந்திரப் பொறியியல் திணைக்களம் | இயந்திரப் பொறியியல் சார் விஞ்ஞான பொறியியல் (கௌரவ) இளமாணிப்பட்டம் | வொசிங்டன் உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட இலங்கை பொறியியலாளர்களின் நிறுவகத்தினால் (IESL) அங்கீகரிக்கப்பட்டுள்ளது | சர்வதேசம்/ உள்நாடு |
| | போக்குவரத்து முகாமை மற்றும் தேவை ஒழுங்கமை விநியோக பொறியியல் திணைக்களம் | போக்குவரத்து முகாமை மற்றும் தேவை ஒழுங்கமை விநியோக பொறியியல் சார் விஞ்ஞான (கௌரவ) இளமாணிப்பட்டம் | இலங்கை தேவை ஒழுங்கமை விநியோக மற்றும் போக்குவரத்து சார் பட்டய நிறுவகம் | உள்நாடு |

குறிப்பு:

வியாபார பகுப்பாய்வு சார் வியாபார விஞ்ஞான (கௌரவ) இளமாணிப்பட்ட மற்றும் நிதிசார் சேவைகள் முகாமைத்துவம் சார் வியாபார விஞ்ஞான (கௌரவ) இளமாணிப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களானது பட்டய நிதிசார் பகுப்பாய்வு (CFA) இணைப்பு பெறுப்பட்டுள்ளது.

மருத்துவ இளமாணி மற்றும் சத்திரசிகிச்சையியல் இளமாணி பட்டத்திற்கு (MBBS) 2023 ஆம் ஆண்டில் இலங்கை மருத்துவ சபையினால் முன் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

உயிரியல் மருத்துவப் பொறியியல் சார் விஞ்ஞான இளமாணி (கௌரவ) பட்டம் மற்றும் புடைவையும் ஆடையும் பொறியியல் சார் விஞ்ஞான இளமாணி (கௌரவ) பட்டம் ஆகியவற்றுக்கான இலங்கை பொறியியலாளர்களது நிறுவகம் (IESL)/ வொசிங்டன் உடன்படிக்கை சார் அங்கீகாரம் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

# கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்கள்

## ஏனைய பட்டதாரி நிகழ்ச்சித்திட்டங்கள்

| Faculty | Undergraduate Degree Programmes |
|---|---|
| பொறியியல் பீடம் | கட்டடக்கலை சார் (கௌரவ) இளமாணிப்பட்டம் |
| வியாபார பீடம் | தறைத்தோற்ற கட்டடக்கலை சார் (கௌரவ) இளமாணிப்பட்டம் |
| பொறியியல் பீடம் | வடிவமைப்பு சார் (கௌரவ) இளமாணிப்பட்டம் |
| | பட்டணமும் நகரமும் திட்டமிடல் சார் விஞ்ஞான (கௌரவ) இளமாணிப்பட்டம் |
| மருத்துவ பீடம் | கணிய அளவையியல் சார் விஞ்ஞான (கௌரவ) இளமாணிப்பட்டம் |
| | வசதியேற்பாட்டு முகாமை சார் விஞ்ஞான (கௌரவ) இளமாணிப்பட்டம் |
| | வியாபார விஞ்ஞானம் சார் (கௌரவ) இளமாணிப்பட்டம் |
| | பொறியியல் சார் விஞ்ஞான (கௌரவ) இளமாணிப்பட்டம் |
| | சிறப்பு: இரசாயன மற்றும் செயல்முறை பொறியியல் |
| | சிறப்பு: சிவில் பொறியியல் |
| | சிறப்பு: கணினி விஞ்ஞானம் மற்றும் பொறியியல் |
| | சிறப்பு: நில மூலவளங்கள் பொறியியல் |
| | சிறப்பு: மின் பொறியியல் |
| | சிறப்பு: இலத்திரணியல் மற்றும் தொலைத்தொடர்பு பொறியியல் |
| | சிறப்பு: உயிரியல் மருத்துவப் பொறியியல் |
| | சிறப்பு: பொருட்கள் விஞ்ஞானம் மற்றும் பொறியியல் |
| | சிறப்பு: இயந்திரப் பொறியியல் |
| | சிறப்பு: புடைவை மற்றும் ஆடை பொறியியல் |
| | சிறப்பு: போக்குவரத்து முகாமை மற்றும் தேவை ஒழுங்கமை விநியோக பொறியியல் |
| | நவநாகரீக வடிவமை மற்றும் உற்பத் விருத்தி சார் விஞ். பொறியி. (கௌரவ) இளமாணி. |
| | போக்குவ. முகாமை மற்றும் தேவை ஒழு. விநி. பொறி. சார் விஞ். (கௌரவ) இளமாணி. |
| | தகவல் தொழில்நுட்பம் சார் விஞ்ஞான (கௌரவ) இளமாணிப்பட்டம் |
| | தகவல் தொழில்நுட்பம் மற்றும் முகாமை சார் விஞ்ஞான (கௌரவ) இளமாணிப்பட்டம் |
| | செயற்கை மதிநுட்பம் சார் விஞ்ஞான (கௌரவ) இளமாணிப்பட்டம் |
| | தகவல் தொழில்நுட்பம் சார் (கௌரவ) இளமாணிப்பட்டம் |
| தகவல் தொழில்நுட்ப பீடம் | தகவல் தொழில்நுட்பம் சார் விஞ்ஞான (கௌரவ) இளமாணிப்பட்டம் |
| | தகவல் தொழில்நுட்பம் மற்றும் முகாமை சார் விஞ்ஞான (கௌரவ) இளமாணிப்பட்டம் செயற்கை மதிநுட்பம் சார் விஞ்ஞான (கௌரவ) இளமாணிப்பட்டம் தகவல் தொழில்நுட்பம் சார் (கௌரவ) இளமாணிப்பட்டம் |
| மருத்துவ பீடம் | மருத்துவ இளமாணிபட்டமும் சத்திரசிகிச்சையில் இளமாணிப்பட்டமும் |

### பட்டமேற்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்

தத்துவக் கலாநிதி
தத்துவவியல் முதுமாணி
எம்.எஸ்சி. (ஆராய்ச்சி சார்பாக)
பொறியியல் முதுமாணி
வியாபார நிருவாக முதுமாணி
விஞ்ஞான முதுமாணி
பட்டப்பின்படிப்பு திப்ளோமா

### 2023 ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட புதிய பாடநெறிகள்

| பீடம் | மொழி | பாடநெறி வகை | காலம் | பாடநெறியின் பெயர் |
|---|---|---|---|---|
| வியாபாரம் | ஆங்கிலம் | முதுமாணிப் பட்டம் | 1.5 வருடங்கள் | வியாபார பகுப்பாய்வு சார் முதுமாணி |

* ஏற்கனவே உள்ள பாடநெறிகளுக்கு புதிதாக உள்வாங்கப்பட்டவையல்ல, ஆண்டினுள் முழுமையாக ஆரம்பிக்கப்பட்ட புதிய பாடநெறிகள்

# நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள் &

## பல்கலைக்கழகத்தால் நடத்தப்பட்டது

| விபரம் | கட்டடக்கலை பீடம் | | வியாபார பீடம் | | பொறியியல் பீடம் | | தகவல் தொழில்நுட்ப பீடம் | | மருத்துவ பீடம் | | பட்டமேற்படிப்பு கற்கைகள் பீடம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2022 | 2023 | 2022 | 2023 | 2022 | 2023 | 2022 | 2023 | 2022 | 2023 | 2022 | 2023 |
| அ. குறுங்கால பாடநெறிகளின்/ சான்றிதழ் பாடநெறிகளின் எண். | - | 1 | - | - | 1 | 3 | 1 | - | - | 1 | 1 | - |
| ஆ. கருத்தரங்குகள்/ பயிற்சிப்பட்டறைகள்/ வெபினர்கள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் எண். | 25 | 27 | 15 | 10 | 38 | 33 | 2 | 11 | 1 | 6 | 13 | 15 |
| இ. மாநாடுகளின் எண்ணிக்கை | 2 | 3 | 1 | 1 | 2 | 7 | 1 | 2 | - | - | - | - |
| மொத்தம் | **27** | **31** | **16** | **11** | **41** | **43** | **4** | **13** | **1** | **7** | **14** | **15** |

## பல்கலைக்கழக ஊழியர்கள் பங்கேற்றனர்.

| | பதிவு செய்யப்பட்டவை/ பங்குபற்றியவை | | பூர்த்தி | | சமர்ப்பிக்கப்பட்டவை | |
|---|---|---|---|---|---|---|
| | 2022 | 2023 | 2022 | 2023 | 2022 | 2023 |
| a. பட்டமேற்படிப்பு பட்ட நிகழ்ச்சித்திட்டங்க. எண். | 47 | 36 | 17 | 8 | | |
| b. பட்டப்பின்படிப்பு டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டங்களின் எண். | - | - | - | - | | |
| c. பட்டதாரி நிகழ்ச்சித்திட்டங்களின் எண். | - | - | - | - | | |
| d. டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டங்களின் எண். | - | - | - | 1 | | |
| e. சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டங்களின் எண். | 22 | 9 | 21 | 11 | | |
| f. ஏனையன (கருத்தரங்கு/ பயிற்சிப்பட்டறைகள்) | 71 | 32 | 71 | 28 | 12 | 60* |
| மொத்தம் | 140 | 77 | 109 | 48 | 12 | 60 |

குறிப்பு:
** பங்குபற்றுபவராக
*** வளவாளர்களாக பங்கேற்பு

# பணியாட்தொகுதியினர் அபிவிருத்தி நிலையம்

## பணியாட்தொகுதியினர் அபிவிருத்தி நிலையத்தின் பணியெல்லை

மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் பணியாட்தொகுதியினர் அபிவிருத்தி நிலையத்தின் (SDC) ஒட்டுமொத்த குறிக்கோள் யாதெனில், பல்கலைக்கழகத்தின் மனித வளத் திறனை தொடர்ச்சியாக மேம்படுத்துவதில் ஈடுபட்டு, அதன் மூலம் பல்கலைக்கழகத்தின் மீதான பணியாட்டொகுதியினரின் கடப்பாடு, அர்ப்பணிப்பு மற்றும் விசுவாசத்தை ஊக்குவித்தல், அனைத்து பதவி வகையினையும் சேர்ந்த பணியாட்டொகுதியினர்களின் முக்கிய அறிவு மற்றும் திறன்களை மேம்படுத்துதல், மற்றும் பல்கலைக்கழகத்தின் முக்கிய விவகாரங்களில் நவீன மற்றும் புத்தாக்கம் மிக்க தொழில்நுட்பங்களையும் கருவிகளையும் அறிமுகப்படுத்துவதாகும்.

பணியாட்தொகுதியினர் அபிவிருத்தி நிலையமானது,

- பதவியில் உறுதிப்படுத்தல் மற்றும் பதவியுயர்வுகளை வழங்குதல் போன்ற விடயங்களில் பரிந்துரைக்கப்படுகின்ற ஆட்சேர்ப்பின் பின்னரான தகைமைகளைப் பெறுவதற்கு வசதியளித்தல்.
- சேவையில் பயிற்சி அளிப்பதன் ஊடாக சேவை மைய முன்னேற்றகரமான அறிவு மற்றும் திறன்களைப் பெறுவதற்கு வசதியளித்தல்.

SDC நிதியைப் பெற்றுக்கொள்வதற்கான இலக்கு ஊழியர்கள் குழுக்கள்;

- உயர் முகாமைத்துவம்
- கல்விசார் பணியாளர்கள்
- நிறைவேற்றுநர் மற்றும் பதவிநிலை வகையினர்
- கல்விசார் துணை பணியாளர்கள்
- தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள்
- ஏனைய கல்விசாரா, நிர்வாகம்சாரா பணியாளர்கள்

2023 ஆம் ஆண்டுக் காலத்தின் போது அரசாங்கம் நிதி கட்டுப்பாடுகளை விதித்த காரணத்தினால், SDC யினால் நடத்தப்படுகின்ற பாடநெறிகள்/ நிகழ்ச்சித்திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதும், பணியாட்டொகுதியினர் பின்பற்ற பாடநெறிகளுக்கு நிதி வசதிகளை வழங்குவதும் ஒரு சவாலாக விளங்கியது. இருப்பினும், சில தன்னார்வ வளவாளர்களின் பெரும் பங்களிப்புடன், SDC யின் சில திட்டமிடப்பட்ட செயல்பாடுகளை மேற்கொள்ள முடிந்ததோடு, மேலும் சில பயிற்சித் திட்டங்கள் பல்கலைக்கழகத்தின் பிற பிரிவுகளின் ஒத்துழைப்புடன் நடத்தப்பட்டன.

பணியாட்தொகுதியினர் அபிவிருத்தி நிலையத்தின் வழக்கமான நிர்வாகமானது பல்கலைக்கழகத்தால் நியமிக்கப்படுகின்ற கல்விசார் பணியாட்டொகுதி உறுப்பினரான ஒரு பணிப்பாளரின்/SDC தலைமையில் நடைபெறுகிறது. 2023 ஆம் ஆண்டின் தொடக்கத்தில், பேராசிரியர் (திருமதி) பி.ஏ.கே.எஸ். பெரேரா பதில் பணிப்பாளராக/SDC சேவையாற்றியதோடு, அவரது சேவைக்காலம் முடிவடைந்த பிறகு, 2023 ஜூன் முதல் டாக்டர் சி.பி. விஜேசிறிவர்தன பணிப்பாளராக/SDC நியமிக்கப்பட்டுள்ளார். பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட நிர்வாக அதிகாரிகளில் ஒருவரான நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர், பணிப்பாளரின் வழிகாட்டுதலுடன் சம்பந்தப்பட்ட பணியாட்தொகுதியினருக்கான இனங்காணப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பில் அவற்றைத் திட்டமிடுதல், ஒருங்கிணைத்தல், ஒழுங்கமைத்தல் மற்றும் நடத்துதல் போன்ற விடயங்களுக்குப் பொறுப்பாக இருப்பார்.

பணிப்பாளர்/SDC தலைமையின் கீழ், பதிவாளர், நிதியாளர், அனைத்து பீடங்களினதும் கல்விசார் பிரதிநிதிகள், தொழில் வழிகாட்டுதல் பிரிவின் பணிப்பாளர், மொழிகள் திணைக்களத்தின் தலைவர் மற்றும் நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் ஆகியோரை உள்ளடக்கிய SDC இன் பணியாட்டொகுதியினருக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டக் குழுவானது (PC/ ST) மாதந்தோறும் ஒன்றுகூடுவதோடு, பல்வேறு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்/ செயலமர்வுகள் போன்றவற்றில் பங்கேற்பதற்கான பணியாட்டொகுதியினரின் கோரிக்கைகளின் அடிப்படையில் அதற்கான நிதியை மதிப்பீடு செய்து, ஒப்புதலை வழங்கி, தீர்மானங்களையும் மேற்கொள்கின்றது. PC/ST ஆனது, சம்பந்தப்பட்ட பணியாட்டொகுதி உறுப்பினரின் உடனடி பதவி உயர்வுக்குத் தேவையான நிகழ்ச்சித்திட்டங்களுடன் தொடர்புடைய தேவைப்பாடுகள் மற்றும் நிதிகளைப் பற்றிக் கலந்துரையாடி ஒப்புதல் அளிக்கும் வகையில் காலாண்டுக்கு ஒரு தடவை விசேட கூட்டத்தை நடத்துகிறது.

உபவேந்தரின் தலைமையிலான பணியாட்தொகுதி அபிவிருத்தி நிலைய ஆலோசனைக் குழுவானது, கொள்கை அளவிலான தீர்மானங்கள்/ மாற்றங்கள் பற்றிக் கலந்துரையாட வேண்டிய தேவை ஏற்படும்போது கூடுகிறது.

# பணியாளர் நலன் மற்றும் வசதிகள்

## பணியாட்தொகுதி நலன்புரி மற்றும் வசதிகள்

நலன்புரிப் பிரிவின் நிர்வாக ஆதரவுடன் பல்கலைக்கழகமானது அதன் பணியாட்தொகுதி உறுப்பினர்களுக்கான பல்வேறு நலன்புரி வசதிகளை வழங்குகின்றது.

### அக்ரஹாரா காப்புறுதித் திட்டம்

நலன்புரிப் பிரிவானது, அரசாங்க ஊழியர்களுக்கென அறிமுகம் செய்யப்பட்டதொரு விசேட காப்புறுதித் திட்டமாகிய, தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தினால் வழங்கப்படுகின்ற அக்ரஹாரா சுகாதார காப்புறுதித் திட்டத்துடன் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கின்றது. இந்தக் காப்புறுதித் திட்டத்தில் இணைந்துள்ள ஒவ்வொரு பணியாளருக்கும் பல்கலைக்கழகம் ஒரு பகுதி நிதியை வழங்குகின்றது. இக் காப்புறுதித் திட்டத்தின் அனுகூலங்களைக் கோரும் வகையில் மேற்கொள்ளப்படும் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் நடவடிக்கைகள் நலன்புரிப் பிரிவினூடாக இடம்பெற்று வருகிறது.

மருத்துவப் பரிசோதனைத் திட்டம் கொள்முதல் நடைமுறை ஒன்றைப் பின்பற்றுவதன் மூலம், பல்கலைக்கழகமானது தெரிவுசெய்யப்பட்ட மருத்துவப் பரிசோதனைகளுக்கான விசேட கட்டணங்களை வழங்குகின்ற பிரபலமான மருத்துவமனைகளை வருடந்தோறும் தேர்ந்தெடுத்துப் பதிவு செய்கின்றது. பல்கலைக்கழகத்தின் WELCONREF நிதியானது நிரந்தரமாக்கப்பட்ட பணியாளர்கள் பெறும் மருத்துவப் பரிசோதனைக்கான கொடுப்பனவுகளுக்கு ஒரு பகுதி நிதியை வளங்குவதோடு, மீதிக் கட்டணத்தினை குறித்த பணியாளரே பொறுப்பேற்க வேண்டும். இவ் வசதியின் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை நலன்புரிப் பிரிவு முன்னெடுக்கின்றது. 2023-ஆம் ஆண்டின் போது பின்வரும் மருத்துவமனைகள் பணியாளர் அங்கத்தவர்களுக்கு அத்தகைய மருத்துவ வசதியை வழங்க பல்கலைக்கழகத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டன:

- நியூ பிலிப் ஹொஸ்பிடல் பிரை. லிமி.
- ஹேமாஸ் ஹொஸ்பிடல்ஸ்
- டாக்டர் நெவில் பெர்னாண்டோ போதனா வைத்தியசாலை
- மெடிஹெல்ப் ஹொஸ்பிடல் பிலியந்தலை (பிரை.) லிமி.
- சிலோன் ஹொஸ்பிடல்ஸ் பிஎல்சி (டேர்டன்ஸ் மருத்துவமனை)
- லங்கா ஹொஸ்பிடல்ஸ் கூட்டுத்தாபனம் பிஎல்சி
- சென்ட்ரல் ஹொஸ்பிடல் லிமி. (ஆசிரி மருத்துவமனை, ஆசிரி சர்ஜிக்கல் மருத்துவமனை, ஆசிரி சென்ட்ரல் மருத்துவமனை)

மருத்துவக் காரணங்களால் ஏற்படும் இடர் சூழ்நிலையில் பணியாளர்களுக்கு நிதி உதவி வழங்கப்படுகிறது.

பல்கலைக்கழகத்தின் WELCONREF நிதியமானது, மருத்துவ நோக்கங்கள் மற்றும் விபத்துக்கள் காரணமாக இடர் நிலையினை எதிர்கொள்ளும் பல்கலைக்கழகத்தின் நிரந்தர பணியாளர்களுக்கு நிதி உதவிகளை வழங்குவதற்காக ஒரு வருடத்திற்கு ரூபா 1 மில்லியன் ஆன தொகையினை ஒதுக்குகிறது. நலன்புரிப் பிரிவானது ஆண்டுதோறும் மேற்படி தேவையுள்ள பணியாட்டொகுதியினரிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருவதோடு, அந்த விண்ணப்பங்கள் பல்கலைக்கழகத்தால் நியமிக்கப்படுகின்ற நிபுணர் குழுவினால் மதிப்பீடு செய்யப்படுகின்றன. தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர் ரூபா 250,000/= வரையான நிதி உதவியைப் பெறுவார்.

### பணியாட்தொகுதியினருக்கான சிற்றுண்டிச்சாலை வசதிகள்

பல்கலைக்கழகத்தின் பணியாட்தொகுதியினருக்கு உணவு மற்றும் சாப்பாட்டு வசதிகளை வழங்குவதற்காகவென்றே பல்கலைக்கழகத்தின் மத்தியில் ஒரு பிரத்தியேக சிற்றுண்டிச்சாலை பராமரிக்கப்படுகிறது. மேலும், பல்கலைக்கழகத்தில் ஸென்ட்ரா கோர்ட் என்ற பெயரில் ஒரு உணவகம் காணப்படுவதோடு, இது நான்கு உணவு விற்பனை நிலையங்களையும் கொண்டுள்ளது (பழச்சாறு, சீன முறை உணவு, இந்திய முறை உணவு மற்றும் இலங்கை முறை உணவு). இது நன்கு அறியப்பட்ட வெளியக உணவு விநியோகத்தர்களால் நடத்தப்படுவதோடு, அவர்கள் சந்தையில் உள்ள பிற உணவு விற்பனை நிலையங்களின் விலையுடன் ஒப்பிடும்போது விசேட கழிவு விலையில் தங்கள் உணவு வழங்கல் சேவையினை செய்து வருகின்றனர்

## இணையத் தரவு வசதிகள்

நிரந்தர கல்விசார் மற்றும் நிர்வாக பணியாட்தொகுதி உறுப்பினர்கள், இணையத் தரவு சேவைகளைகளுக்கான சிம் கார்டுடன் கூடிய USB டாங்கிளைக் கோருவதற்கு தகுதியுடையவர்களாவர் என்பதோடு, இவர்களுக்கான மாதாந்த கட்டணப் பட்டியல் பல்கலைக்கழக நிதியினால் செலுத்தப்படுகிறது. மேற்படி சேவையை டயலொக் ஆக்சியாட்டா பிஎல்சி மற்றும் மொபிடெல் (பிரைவேட்) லிமிடெட் ஆகியவற்றின் கூட்டுறவுத் தரவுச் சேவை வழங்குநர்கள் 2023 ஆம் ஆண்டில் வழங்கியுள்ளார்கள்.

## வெளியக விற்பனையாளர்களின் மூலமான விற்பனை ஊக்குவிப்புக்கள்

பணியாட்தொகுதியினரின் சங்கங்களின் கோரிக்கைகளின் அடிப்படையில், பல்கலைக்கழக வளாகத்திற்குள், பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட திகதியில்/ திகதிகளில் பணியாட்டொகுதியினருக்கு நன்மை பயக்கும் வகையிலான ஊக்குவிப்பு விலைகளில் விசேட விற்பனை நிலையங்களை நடத்துவதற்காக பல்கலைக்கழகமானது வெளியக விற்பனையாளர்கள்/நிறுவனங்களை அனுமதிக்கிறது. 2023 ஆம் ஆண்டில் இது போன்ற மொத்தம் 58 ஊக்குவிப்பு விற்பனை நிலையங்களைக் கொண்டு இது முன்னெடுக்கப்பட்டது.

# தொழில் வழிகாட்டல் பிரிவு

## மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் தொழில் வழிகாட்டல் பிரிவு

சர்வதேச ரீதியில் போட்டித்தன்மையும், சர்வதேச தரமும் வாய்ந்த பட்டதாரிகளை உருவாக்க இளம்பட்டதாரி மாணவர்களுக்கு உதவுவதே தொழில் வழிகாட்டுதல் பிரிவின் (CGU) முக்கிய நோக்கமாகும்.

கூட்டுறவுத் துறையானது கல்வி மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த திறன்களுக்கு மேலதிகமாக, உயர்ந்த அளவிலான பிரத்தியேக அபிவிருத்திப் பண்புகள், மென்மையாக நடந்துகொள்ளும் திறன்கள் மற்றும் தலைமைத்துவப் பண்புகளை எமது மாணவர்களிடமிருந்து எதிர்பார்க்கிறது.

எனவே, இன்றைய பட்டதாரிகள் வெற்றிபெற வேண்டுமாயின், கூட்டுறவுச் சந்தையில் தமது போட்டித்தன்மையின் அனுகூலங்களை வளர்த்துக் கொள்ளும் வகையில் சிறந்த தொடர்பாடல் திறன்கள் மற்றும் ஒரு குழுவாகச் செயற்படும் திறன்களுடன் கூடிய பிரத்தியேக அபிவிருத்தியில் உயர்ந்த நிலையில் இருக்க வேண்டியது அவசியமாகும்.

இளம்பட்டதாரிகள், தமது வருங்கால தொழில் வழங்குனரின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையிலான நியமதரங்களை அடைவதற்கு உதவும் பண்புகளையும் மென்மையான திறன்களையும் பெறுவதில் அவர்களுக்கு உதவுவதே தொழில் வழிகாட்டல் பிரிவின் குறிக்கோளாகும்.

இதற்காக, தொழில் வழிகாட்டல் பிரிவானது பொதுவாக ஆளுமை விருத்தி, தலைமைத்துப் பண்புகள், தொடர்பாடல் மற்றும் விடயங்களைச் சமர்ப்பித்தல் போன்றவற்றில் மென்மைத் திறன்களை அதிகரிப்பதனை இலக்காக் கொண்ட தொழில் துறைகளின் பல்வேறு விடயங்கள் குறித்தான நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துவதோடு, பயன்றுதிமிக்க சுயவிபரக் கோவையைத் தயாரித்தல், நேர்முகப் பரீட்சைகளை எதிர்கொள்ளல் போன்றவற்றில் நடைமுறை பயிற்சியளித்தல், தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ளல் மற்றும் கூட்டுறவுத் துறையில் இணைந்து முற்போக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் போன்ற விடயங்களிலும் பயிற்சி வழங்குகின்றது.

மேலும், இப்பிரிவானது, பெருநிறுவன துறையைச் சார்ந்த பிரபல்யம் பெற்ற கம்பனிகளில் தொழில்வாய்புக்களைப் பெறுக்கொள்வதற்கான வாய்ப்புக்களை எமது பட்டதாரிகளுக்கு வழங்குவதோடு, இதன் மூலம் பட்டதாரிகளும் தொழில்துறையும் பரஸ்பரம் பயனடைவதற்கான களம் உருவாகின்றது.

ஒரு பணிப்பாளரின் தலைமையின் கீழுள்ள இப் பிரிவு தொழில் வழிகாட்டல் ஆலோசகர் ஒருவரையும், சிரேஷ்ட பணியாட்டொகுதி முகாமைத்துவ உதவியாளர் ஒருவரையும் மேலும் ஒரு பணி உதவியாளரையும் கொண்டுள்ளது.

மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் இளம்பட்டதாரி மாணவர்களுக்காக மேற்படி பிரிவு நடத்துகின்ற சில வடிவமைக்கப்பட்ட செயலமர்வுகள் பற்றிய விபரம் பின்வருமாறு:

### இளம்பட்டதாரி மாணவர்களுக்காக தொழில் வழிகாட்டல் பிரிவினால் முன்னெடுக்கப்பட்ட

| நிகழ்ச்சித்திட்டத்தின பெயர் | கால அளவு | இலக்கு குழு |
|---|---|---|
| பட்டப்படிப்பு சார்பான பரீட்சைகளில் திறன்மிக்க வகையில் செயல்படுங்கள் | 02 மணித். | 01-வது மட்டம் |
| உணர்ச்சி மதிநுட்பம் | 1 நாள் | 02-வது மட்டம் |
| தொழில்சார் ஒழுக்கம் மற்றும் ஆளுமை | 02 மணித். | 02-வது மட்டம் |
| வேலைசெய்யும் சூழலில் உங்களது தொழில்சார்ந்த பாதை | 04 மணித். | 02-வது மட்டம் |
| எதிர்கால தொழில்சார் வாழ்க்கைக்கான உங்களது வலையமைப்புக்களை விருத்திசெய்தல் | 04 மணித். | 03-வது மட்டம் |
| உங்களது எதிர்கால தொழில்சார் ரீதியியில் ஆட்களுக்கிடையிலான திறன்கள் | 04 மணித். | 03-வது மட்டம் |
| வேலை சந்தைக்கான கலாச்சார உணர்திறனை தழுவிக்கொள்ளும் இயலுமை மற்றும் தொழில்சார் அபிவிருத்தி | 03 மணித். | 04-வது மட்டம் |
| பாதுகாப்பு மற்றும் இடர் முகாமைத்துவம் | 04 மணித். | 04-வது மட்டம் |
| பயனுள்ளதொரு CV-ஐ எழுதுவது எவ்வாறு? | 04 மணித். | 04-வது மட்டம் |
| நேர்முகப்பரீட்சையொன்றை எவ்வாறு எதிர்கொள்வது? | 04 மணித். | 04-வது மட்டம் |
| தனியார் துறைசார்ந்த சவால்களுக்கு முகம்கொடுப்பதன் மூலம் வெற்றியாளராக ஆகுதல் | 02 மணித். | 04-வது மட்டம் |
| உங்கள் கற்றல்கள் மற்றும் பாடவிதானதுக்கு புறம்பான செயல்பாடுகளை சமநிலைப்படுத்துவது எவ்வாறு? மற்றும் பாடவிதானத்துக்கு புறம்பான செயல்பாடுகளின் முக்கியத்துவம் என்ன? | 02 மணித் | சகலரும் பங்குபற்றலாம் |

| | | |
|---|---|---|
| உங்களது திறமைகள் மற்றும் மனப்பாங்குகள் என்பன உங்களுக்கு கிடைக்கும் வாய்ப்புகளுடன் பொருந்தச்செய்கிறீர்களா? | 03 மணித். | சகலரும் பங்குபற்றலாம் |
| நவீன வேலை உலகிற்குத் தேவையான மனப்பாங்குகள் | 03 மணித். | சகலரும் பங்குபற்றலாம் |
| நேர்மறையான சிந்தனை / நேர்மறையான மனங்பாங்கு | 1day/2 மணித். | சகலரும் பங்குபற்றலாம் |
| உளவியல் மற்றும் சுய வளர்ச்சி | 02 மணித். | சகலரும் பங்குபற்றலாம் |
| நேர முகாமைத்துவம் மற்றும் சரியான நேரத்தில் செயலாற்றுதல் | 02 மணித். | சகலரும் பங்குபற்றலாம் |
| நெகிழ்ச்சித் தன்மை மற்றும் தழுவக்கூடிய தன்மை | 02 மணித். | சகலரும் பங்குபற்றலாம் |
| தன்னம்பிக்கை | 03 மணித். | சகலரும் பங்குபற்றலாம் |
| சிக்கல் தீர்த்தல் | 02 மணித். | சகலரும் பங்குபற்றலாம் |
| தனிப்பட்ட சீர்ப்படுத்தல் | 03 மணித். | 4-வது மட்டம் |
| குழுவை கட்டியெழுப்புதல்/ ஒருவரையொருவர் அறிந்து கொள்ளுங்கள் | 03 மணித். | திசைமுகப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் |

# பல்கலைக்கழகத்தில் உள்ள திறந்த மற்றும் தொலைக் கல்விப் பாடநெறிகள்

பல்கலைக்கழகத்தில் உள்ள திறந்த மற்றும் தொலைக் கல்விப் பாடநெறிகள்

மொறட்டுவை பல்கலைக்கழகமானது அனைவருக்கும் அதிக கற்றல் வாய்ப்புகளை வழங்கும் வகையில் உழைத்து வருகிறது. அனைத்தும் உள்ளடங்கிய மற்றும் சமத்துவம் மிக்க தரமான கல்வியை உறுதி செய்து அனைவருக்கும் வாழ்நாள் முழுவதும் கற்றல் வாய்ப்புகளை ஊக்குவித்தல் குறித்தான SDG 4 இலக்கினை அடைவதை நோக்காக் கொண்டு, பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையமானது (CODL) நாட்டிற்குத் தேவையான தொழில்நுட்பத்துடன் கூடிய கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்துவதில் பல முன்னெடுப்புக்களை மேற்கொண்டுள்ளது.


இலங்கையிலுள்ள தகவல் தொழில்நுட்பத் துறையானது திறமையான தொழில்வாண்மையாளர்களுக்கான கேள்வி அதிகரிப்பை உணர்ந்து வருகிறது. தற்போதுள்ள பல்கலைக்கழக பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்படி தேவையை நிவர்த்தி செய்ய உதவுகின்ற போதிலும், மட்டுப்படத்தப்பட்ட வளங்கள் மற்றும் விநியோகத்திற்கும் தொழில்துறைக் கேள்விக்கும் இடையிலான அதிகரித்து வரும் இடைவெளி காரணமாக குறிப்பிடத்தக்க சவால் இருக்கவே செய்கின்றது. திறந்த மற்றும் தொலைக்கல்வி முறையில் நடத்தப்படும் வெளியக பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டமான தகவல் தொழில்நுட்ப பட்டம் (BIT) நாட்டிற்கு மிகவும் தேவையான தகவல் தொழில்நுட்பப் பணியாளர்களை உருவாக்க உதவுகிறது. பல்கலைக்கழக நுழைவுக்கான குறைந்தபட்சத் தேவைகளைப் பூர்த்தி செய்துள்ள எந்தவொரு மாணவருக்கும் மிகவும் குறைவான செலவில் வெளிப்படையாகவே காணப்படுகின்ற இந்தப் பட்டப்படிப்பானது, நாடு முழுவதிலுமிருந்தான பல இனக்குழுக்களையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற மாணவர்களை கிட்டத்தட்ட சமமான பாலின அடிப்படையில் பொதும் கவர்ந்து வருகிறது.


பல்கலைக்கழகத்தின் திறந்த கற்றல் தளமான open.uom.lk மூலம் ஃபுல் ஸ்டேக் டெவலப்பர் நிகழ்ச்சித்திட்டத்தை வழங்குவதற்காக, தொழில்துறையுடன் இணைந்து மற்றுமொரு மட்டத்தில் தகவல் தொழில்நுட்பத் துறையிலுள்ள மனிதவளத் தேவைக்கு தீர்வளிக்கும் முகமாக பல்கலைக்கழகமானது ஒரு வெளிக்களத் திட்டமொன்றை தொடங்கியது. இந்த நிகழ்ச்சித்திட்டமானது, நிகழ்நிலை ஊடான பலதரப்பட்ட பாடநெறிகளை ஆர்வமுள்ள எந்தவொரு மாணவருக்கும் இலவசமாக வழங்குகின்றது. இந்த நிகழ்ச்சித்திட்டமானது 2022 பெப்ரவரியில் தொடங்கியது முதற்கொண்டு 280,000 இற்கும் கூடுதலான மாணவர்களைக் கொண்டுள்ளதோடு, கிட்டத்தட்ட 50,000 பாடநெறிகளை நிறைவுசெய்துள்ளது.


திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையங்களும் தகவல் தொழில்நுட்ப சேவைகளும், அளவிட்டுத் தன்மையினை முகாமைத்துவம் செய்ய தொழில்நுட்பத்தை திறம்பட பயன்படுத்துகின்றன. பாடநெறியின் உள்ளடக்கமும் மதிப்பீடுகளும் பல்கலைக்கழக கல்விசார் பணியாளர்கள் மற்றும் தொழில் வல்லுநர்கள் மூலம் உருவாக்கப்படுவதனால், இது நிபுணத்துவ கல்வியாளர்களிடமிருந்து சமீபத்திய தொழில்நுட்பங்களைக் கற்றுக்கொள்ள மாணவர்களுக்கு வாய்ப்பளிக்கிறது. அறிவை வழங்குவதற்கும் மேலதிகமாக, மாணவர்களின் திறன்களை வளர்ப்பதையும் மனப்பான்மையை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு பாடநெறிகளில் தொழில்துறை சார்ந்த வல்லுநர்கள் மற்றும் கல்வியாளர்களால் வடிவமைக்கப்பட்ட நடைமுறை பயிற்சிகளும் உள்ளடங்குகின்றன.

open.uom.lk இற்கான இலக்குச் சந்தையாக விளங்குவோர், இலங்கையில் க.பொ.த. உயர் தரப் பரீட்சையை நிறைவு செய்துவிட்டு அதன் பெறுபேறுகளையும் பல்கலைக்கழக அனுமதியையும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் மாணவர்களாவர். மாணவர் தொகை பற்றிய விபரமானது புவியியல் இருப்பிடம், சமூக-பொருளாதார நிலை மற்றும் ஆங்கில மொழித்தேர்ச்சி போன்ற விடயங்களின் அடிப்படையில் வேறுபடுகிறது. கல்வியில் சமத்துவத்தை அடைந்துகொள்ளும் நோக்குடனேயே எமது கல்வித் தளமானது கற்றல் நடவடிக்கைகளை இலவசமாக வழங்குகிறது. இந்தப் பாடநெறிகள் நிகழ்நிலை ஊடாக ஒத்திசைவற்ற முறையில் வழங்கப்படுவதோடு, பங்கேற்பாளர்கள் தமது தொழில்/கல்வி நிலையைப் பொருட்படுத்தாமல் மேற்படி பாடநெறிகளைப் பின்பற்ற முடியும். எமது கல்வித் தளத்தில் உள்ள அனைத்து பாடநெறிகளும் ஆங்கிலத்தில் நடத்தப்படுகின்றன. இருப்பினும், முதல் இரண்டு மொடியூல்களிலுமுள்ள காணொளிகளுக்கான ஸ்கிரிப்டுகள் சிங்களம் மற்றும் தமிழில் கிடைக்கின்றன. ஒப்படைகள் ஆங்கிலத்திலேயே பதிலளிக்கப்படல் வேண்டுமென்பதோடு, பங்கேற்பாளர்கள் தங்கள் மொழித் தேர்ச்சியை மேம்படுத்துவதற்கு இது உதவுகிறது.

பங்கேற்பாளர்களை ஊக்குவித்து பாடசாலைகளும் மற்றும் பிற உள்நாட்டுக் குழுக்களும் இந்த முன்னெடுப்பினை ஆதரிப்பதானது எமக்கு மேலும் ஊக்கமளிப்பதாகவுள்ளது. இலங்கை தகவல் தொழில்நுட்பத் துறைகளின் கூட்டமைப்பான SLASSCOM இந்த திட்டத்தை ஊக்குவிக்கின்ற அதேவேளை, இலங்கை கணினிச் சங்கமும் இந்த திட்டத்தை அங்கீகரித்துள்ளது. நாடு முழுவதும் TFSD திட்டத்தை பிரபலப்படுத்தும் நோக்கில், தேசிய தொலைக்காட்சிச் சேவையானது, CODL உடன் இணைந்து "சேமட்ட IT" (அனைவருக்கும் தகவல் தொழில்நுட்பம்) என்ற தலைப்பில் வாராந்தம் 30 நிமிட நிகழ்ச்சியை அவர்களின் பிரதான அலைவரிசையில் நடத்தியது.






# 04

# நிலைபேறான மற்றும் தொழில்நுட்பம் ஊடாக வாழ்க்கையை




எதிர்கால புத்தாக்கம் மற்றும் தொழில்முனைவு உணர்வினை வளர்த்தல் - 133

ஆய்வு கருத்திட்டங்களும் ஆக்கவுரிமைகளும் - 136

ஆய்வுகள், புத்தாக்கங்கள் மற்றும் பிரசுரங்கள் - 137

கிடைத்த விருதுகள் பற்றிய விபரம் - 139

பல்துறைசார் ஆய்வு நிலையங்கள் - 140

கைத்தொழில்துறை அனுசரணை ஆராய்ச்சி ஆய்வகங்கள் - 141

# மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் புத்தாக்கங்கள், ஆய்வு மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகள்

மொறட்டுவை பல்கலைக்கழகமானது புத்தாக்கங்களையும் மற்றும் பொருளாதார வளர்ச்சியையும் ஏற்படுத்துவதற்கு அர்ப்பணிப்புடன் பணியாற்றி வருகிறது. தரமான கல்வியை ஊக்குவிப்பதன் ஊடாக, பல்கலைக்கழகம் அனைத்துமுள்ளடங்கிய மற்றும் சமத்துவமான கல்வியை வலியுறுத்துவதோடு, தொழில்முயற்சிக்கான மனப்பான்மையினையும் வாழ்நாள் முழுவதுமான கற்றலையும் உரமிட்டு வளர்த்துக் கொண்டிருக்கிறது. ஒழுக்கமான தொழில் மற்றும் பொருளாதார வளர்ச்சியை ஆதரிப்பதில், வேலைவாய்ப்பு உருவாக்கத்தையும் பொருளாதார வளர்ச்சியையும் தூண்டிவிடுவதற்கான புத்தாக்கம் மற்றும் தொழில்முயற்சிகளை ஊக்குவிக்கிறது. கைத்தொழில், புத்தாக்கம் மற்றும் உட்கட்டமைப்பு போன்றன மீது பல்கலைக்கழகம் முக்கியமாக அவதான செலுத்துவதானது, பல்கலைக்கழகத்தின் நிலையான தொழில்மயமாக்கல் மற்றும் தாக்குப்பிடிக்கும் உட்கட்டமைப்புக்கான அதன் அர்ப்பணிப்பினை எடுத்துக்காட்டுவதோடு, பல்வேறு குழுக்களுக்கு பொருளாதார நடவடிக்கைகளில் பங்கேற்பதற்கான வாய்ப்புகளை வழங்கும் ஆய்வு மற்றும் புத்தாக்கங்களை பல்கலைக்கழகம் ஆதரிக்கிறது. பல்கலைக்கழகமானது பல்வேறு கைத்தொழில் துறைகளின் ஆதரிவைக் கொண்ட ஆய்வு நிலையங்கள் மற்றும் ஆய்வகங்கள் ஊடான குழுப்பணியை ஊக்குவிக்கிறது. இது அதன் ஆய்வு முயற்சிகளின் தாக்கத்தை மேம்படுத்த உதவுகின்றது. ஒருமித்துப் பார்ப்பின், மேற்படி அனைத்து முன்னெடுப்புகளும் மொறட்டுவை பல்கலைக்கழகத்தை சமூக அபிவிருத்தி மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்கான இன்றியமையாத பங்காளராக நிலைநிறுத்துகின்றன. மொறட்டுவை பல்கலைக்கழகத்தில், கற்பித்தலுக்கும் மேலாக, அனைத்து கல்விசார் பணியாட்டொகுதி உறுப்பினர்களினதும் பொறுப்புகளில் ஒன்றாக ஆய்வு நடவடிக்கை விளங்குகின்றது. 2015 சனவரியில் பட்டமேற்படிப்பு கற்கைகள் பீடம் நிறுவப்பட்டதிலிருந்து, ஆய்வுப் பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை ஊக்குவிப்பதில் அர்ப்பணிப்புடனான அவதானம் செலுத்தி, ஆய்வு அலுவலகத்தின் ஆதரவுடன், பல்கலைக்கழகமானது அதன் ஆய்வு நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியையும் பலம்வாய்ந்த ஆய்வுக் கலாச்சாரத்தையும் அடைந்துள்ளது.

பல்கலைக்கழகமானது கட்டடக்கலை, வியாபார, பொறியியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப (IT) பீடங்களின் மூலம் விஞ்ஞானம் சார் முதுமாணி (ஆராய்ச்சியை பிரதான கூறாகக் கொண்டு), தத்துவவியல் முதுமாணி (MPhil), தத்துவக் கலாநிதி (PhD) எனும் பல்துறைகற்கை சார்ந்த பட்டங்களை வழங்குகின்றது. FGS இந் நிகழ்ச்சித்திட்டத்தின் நிருவாக நடைமுறைகளை ஒருமுகப்படுத்துதல், உயர் தரத்திலான மாணவர்களை ஈர்த்தெடுத்தல், புதிய ஆராய்ச்சி பங்காளர்கள் மற்றும் நிதியிடல் வாய்ப்புக்களை கண்டறிதல் மற்றும் பல்கலைக்கழகத்தினுள் ஆராய்ச்சி திறனை உயர்த்துதல் சார்பாக மூலோபாயங்கள் மூலம் இந் நிகழ்ச்சித்திட்டங்களை அதிகரிக்க முற்படுகின்றது. FGS இம் முயற்சிகளில் ஆராய்ச்சி அலுவலகம் மற்றும் சர்வதேச உறவுகள் அலுவலகம் ஆகியவற்றுடன் நெருக்கமாகச் செயற்படுகின்றது. 2023 ஆம் ஆண்டில் 15 கலாநிதி (PhD) பட்ட மாணவர்கள் உட்பட 45 புதிய ஆய்வு மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

2023 இல், பல கலாநிதிப் பட்ட மாணவர்கள், ஐக்கிய நாடுகள் சபையின் நிலையான அபிவிருத்தி இலக்குகளுடன் (SDGs) நேரடி சீராக்கல் கொண்ட பல்வேறு ஆய்வுத் துறைகளில் முன்னேற்றங்களுக்கு பங்களிப்புச் செய்தனர். அவர்களின் இத்தகைய பணியானது பூகோள ரீதியில் காணப்படுகின்ற முக்கிய சவால்களுக்குத் தீர்வினை வழங்குவதோடு, நிலையான நடைமுறைகள், தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள் மற்றும் சமூக நல்வாழ்வின் முன்னேற்றம் போன்றவற்றுக்கு துணையாகவும் விளங்குகின்றன. நிலையான நுகர்வு மற்றும் உற்பத்தியில் கவனம் செலுத்தும் ஒரு பங்களிப்புத் துறையாக குறிப்பாக ஆடையலங்காரத் துறை விளங்குகின்றது. ஆய்வு முன்னெடுப்புக்கள் வடிவமைப்புச் செயன்முறையில் சுற்றுச்சூழல் சார்ந்த அக்கறைமிக்க விடயங்களை ஒருங்கிணைக்கும் சாதனங்களை உருவாக்க இவை வழிவகுத்ததோடு, சுற்றாடல் நேயம் கொண்ட தீர்மானம் மேற்கொள்ளல்களை இயலச் செய்து, பொறுப்பான உற்பத்தி நடைமுறைகளை ஊக்குவிப்பும் செய்கின்றன. மற்றொரு முக்கியமான பகுதியாக நிலையான நகரங்கள் மற்றும் சமுதாயங்கள் விளங்குகின்றன.
அங்கு கட்டடத் தகவல் மாதிரியாக்கத்திலான (BIM) முன்னேற்றங்கள் பிராந்தியங்களை விருத்திசெய்வதிலுள்ள பொருத்தப்படுகளை மேம்படுத்துவதற்கான வேலைச்சட்டகத்தினை வழங்கியதோடு, உட்கட்டமைப்பின் வினைத்திறனும் நீடுறுதியும் மிக்க வளர்ச்சியை எளிதாக்குகின்றன. இவை தவிர, புராதனகால நீர் முகாமைத்துவக் கட்டமைப்புகளை மறுசீரமைப்புச் செய்தல் பற்றி ஆராயப்பட்டதோடு, நீரைப் பாதுகாத்தல் மற்றும் காலநிலை மாற்றத்திற்கு எதிரான தாக்குப்பிடிக்கும் தன்மையை மேம்படுத்தல் அவற்றின் வகிபாகம் பற்றியும் சுட்டிக்காட்டப்பட்டது. கைத்தொழில், புத்தாக்கம் மற்றும் உட்கட்டமைப்புக்கான பங்களிப்புகளில், வாகனத்தில் இருந்து அனைத்திற்கும் (V2X) எனும் கோட்பாடு பற்றிய தொடர்பாடல் தொழில்நுட்பங்களிலான புத்தாக்கங்கள் உள்ளடங்குவதோடு, இது போக்குவரத்துப் பாதுகாப்பை மேம்படுத்தி புகை வெளியாக்கத்தைக் குறைப்பதற்கான வாய்ப்பினை வழங்குகின்ற அதேவேளை, உடல் குறைபாடுகளைக் கொண்ட நபர்களின் இயக்கத்தை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டு அணியக்கூடிய உதவிச் சாதனங்களுக்கான மென்மையான நேரியல் இயக்கிகளை உருவாக்குவதற்கான சாத்தியத்தினையும் இது வழங்குகிறது. காலநிலை மற்றும் நீர் முகாமைத்துவம் போன்ற துறைகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வானது, கைத்தொழில்துறை கூட்டு வலையமைப்பிற்குள் நீர் ஓட்டத்தை மேம்படுத்துதல், நிலையான நீர் பயன்பாட்டை ஊக்குவித்தல் மற்றும் நன்னீர் நுகர்வைக் குறைத்தல் ஆகியவற்றுக்கான மாதிரிகளை உருவாக்கியது. இறுதியாக, குறைவான பிரதிநிதித்துவம் கொண்ட மொழிகளுக்கான மொழி செயலாக்க கருவிகளின் உருவாக்கம், டிஜிட்டல் பிளவுக்கான தீர்வு மற்றும் தொழில்நுட்பத்திற்கான அனைத்துமுள்ளடங்கிய அணுகலை உறுதி செய்தல் போன்றவற்றின் ஊடாக தரமான கல்வி மற்றும் சமத்துவமின்மைக் குறைப்பு போன்றவற்றுக்குப் பங்களிப்புச் செய்யப்பட்டன. மொத்தத்தில், இந்த கலாநிதி சார்ந்த ஆய்வுத் திட்டங்கள் புத்தாக்க, நீடுறுதிமிக்க மற்றும் சமூக ரீதியான தாக்கத்தை ஏற்படுத்தும் தீர்வுகள் மூலம் உலகளாவிய சவால்களை நிவர்த்தி செய்வதற்கான வலுவான அர்ப்பணிப்பை பிரதிபலிக்கின்றன.

2023-ஆம் ஆண்டில், மேலும் ஆய்வை அதிகரிப்பது மற்றும் ஆய்வு விளைவுகளை பரப்புதல் சார்பாக ஏனைய பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றில் உள்ளடங்குவன: சர்வதேச மாநாடுகளை ஒழுங்குசெய்வதற்கான மானியங்கள் (பட்டமேற்படிப்பு கற்கைகள் பீடத்தின் ஊடாக நிருவகிக்கப்படுகின்ற ரூ.

2 மில்லியன்); கீர்த்திமிக்க வெளிநாட்டு கல்வியாளர்களை வரவழைத்து உபசரிப்பதற்கான மானியம் (பட்டமேற்படிப்பு கற்கைகள் பீடத்தின் ஊடாக நிருவகிக்கப்படுகின்ற ரூ. 1 மில்லியன்); மாநாடுகளுக்கு பங்குபற்றுவதற்காக உப வேந்தரவர்களின் திட்டம் மற்றும் உருவாக்கப்பட்ட நிதியைப் பயன்படுத்தி திறந்த அணுகுதல் வெளியீடு (செனட் ஆய்வு குழுவின் ஊடாக); மற்றும் மேம்படுத்தப்பட்ட தரப்புள்ளிகளுடன் மற்றும் தனி வருட செயல்திறன் அடிப்படையில் திருத்தப்பட்ட விருதுகள் திட்டம். இது தவிர, 2023 ஆண்டின் போது ஆய்வு நிருவாகம் மற்றும் முகாமைத்துவ முறைமை மேம்படுத்துதல், கல்வியாளர்களது ஆய்வு மற்றும் பரப்புதல் திறன் ஆகியவற்றை அதிகரிப்பதற்காக செயலமர்வுகள் மற்றும் கருத்தரங்குகள் பல நடாத்துதல் உட்பட பல்கலைக்கழக ஆய்வு கலாச்சாரத்தை மேம்படுத்துவதற்காக FGS மூலம் பல முயற்சிகள் அறிமுகப்படுத்தப்பட்டன. சிக்கலான சவால்களைச் சமாளிப்பதற்கான பல்வேறு நிபுணத்துவத்தை ஒன்றிணைத்து புத்தாக்கங்களுக்கான உந்து சக்தியாக பல்துறை ஆய்வு நிலையங்கள் விளங்குகின்றன. DataSEARCH, CAR மற்றும் CEBI போன்ற நிலையங்கள் தரவு பற்றிய விஞ்ஞானம், ரோபாட்டிக்ஸ் மற்றும் உயிரியல் மருத்துவ கண்டுபிடிப்புகள் போன்ற அதிநவீன துறைகளில் கவனம் செலுத்துகின்ற அதேவேளை, NLP நிலையம் மற்றும் CITS போன்றன மொழி செயலாக்கம் மற்றும் அறிவுப் பரிமாற்ற முறைமைகளை மேம்படுத்துகின்றன. மேற்படி நிலையங்கள் நகர்ப்புறத் திட்டமிடல், அனர்த்த இடர் குறைப்பு மற்றும் விநியோகத் தொடர் உகப்பாக்கம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஆய்வின் தாக்கத்தினை மேம்படுத்துதல் மற்றும் தேசிய வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தல் மூலம் துறைகளுக்கு இடையே ஒத்துழைப்பை வளர்க்கின்றன. பல்கலைக்கழகமானது நிஜ-உலகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் முன்னணியில் இருப்பதை இந்த அணுகுமுறை உறுதிப்படுத்துகின்றது.

சர்வதேச ரீதியாக மற்றும் உள்நாட்டு ரீதியாக இரு முறை சார்ந்தும் வெளிவாரி நிதியிடல் முகவராண்மைகள் மூலம் ஆய்வுக்கான நிதியளிப்பை பாதுகாப்பதற்கு கல்வியாளர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர். 2023 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகமானது வெளிவாரி நிதியளிப்பு முகவராண்மைகள் மூலம் ரூ. 30.2 மில்லியனை பெற்றுக்கொண்டதுடன், இதற்குப் புறம்பாக, செனட் சபை ஆய்வு குழு (SRC) மூலம் கல்விசார் பணியாளர்களது பல்கலைக்கழக ஆய்வு கருத்திட்டங்களுக்கு நிதியளிப்பு செய்யப்பட்டது. 2023 ஆண்டு முழுவதும், SRC-யானது மொத்தம் ரூ. 20 மில்லியனுக்கும் அதிகமான குறுங்கால மற்றும் நீண்டகால ஆய்வு மானியங்கள் சம்பந்தமாக தொடர்ச்சியாக ஆதரவை வழங்கியது.

இந்த ஆய்வுத் திட்டங்கள் சுற்றாடலின் நீடுறுதித்தன்மை, புத்தாக்கம் மற்றும் சமூக நல்வாழ்வில் கவனம் செலுத்துகின்றன. அவை சுற்றாடல் நேய நடைமுறைகள், சுத்தமான எரிசக்தி உற்பத்தி மற்றும் கார்பன் குறைப்பு ஆகியவற்றை ஊக்குவிக்கின்ற அதேவேளை, பொறுப்பான நுகர்வு மற்றும் நிலையான நடைமுறைகளை வலியுறுத்துகின்றன. தொழில்நுட்பப் புத்தாக்கங்கள், குறிப்பாக AI இல், உள்கட்டமைப்பு மற்றும் செயல்திறனை மேம்படுத்த பல்வேறு தொழில்களில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. இத் திட்டங்கள் அனர்த்த தாக்குப்பிடிப்பு, சமூக சுகாதாரம் மற்றும் நிலையான நகர அபிவிருத்தி ஆகியவற்றுக்கும் தீர்வளிப்பதோடு, பொது நல்வாழ்வை மேம்படுத்துவதற்கும் தாக்குப்பிடிக்கும் தன்மை கொண்ட சமூகங்களை உருவாக்குவதற்கும் வலுவான அர்ப்பணிப்பைக் காட்டுகின்றன. இந்த பல்துறை முயற்சிகள் பூகோள நிலையான இலக்குகளுக்கான குறிப்பிடத்தக்க பங்களிப்பை எடுத்துக்காட்டுவதோடு, சக்தி, சுகாதாரம், உட்கட்டமைப்பு மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு போன்ற முக்கியமான விடயங்களில் கல்விசார் ஆய்வானது எவ்வாறு முன்னேற்றத்தை ஏற்படுத்துகின்றது என்பதையும் நிரூபிக்கின்றன. மேற்படி முயற்சிகளும் செயற்பாடுகளும் ஆய்வு குறித்தான செயலாற்றுகையினை மேம்படுத்தியுள்ளன. குறிப்பாக 150 கல்வியாளர்களுக்கான ஆய்வு பற்றிய சிறப்பு விருதுகளிலான அதிகரிப்பு மூலம் இது நிரூபனமாகின்றது. மேலும் இது சுட்டிகளைக் கொண்ட இதழ்களில் உயர்தர வெளியீடுகளை 2018 இல் 189 அகவிருந்த பிரசுரங்களை 2023 இல் 215 இற்கு மேம்படுத்தியுள்ளது.

2023 இல், மொறட்டுவை பல்கலைக்கழகம் பல்வேறு துறைகளில் குறிப்பிடத்தக்க சாதனைகளை அடைந்ததோடு சர்வதேச ஒத்துழைப்பு, புத்தாக்கம் மற்றும் நீடுறுதித்தன்மை போன்றவற்றையும்


வலியுறுத்தியது. பல்கலைக்கழகமானது, "ஒரு அடிமட்ட அனர்த்த இடர் இயக்கியாக காலநிலை மாற்றத்தை சமாளித்தல்" என்ற தலைப்பில் இங்கிலாந்தில் ERASMUS+ இனால் நிதியுதவி அளிக்கப்பட்ட ஆய்வு நிகழ்வில் பங்கேற்றதோடு, இது இலங்கைக்கான ஆய்வு வரைபடம் ஒன்றை உருவாக்குவதற்கு வழியமைத்தது. கட்டடப் பொருளாதாரத் திணைக்களமும் மற்றும் சிலோன் கட்டடவியலாளர் நிறுவனமும் இணைந்து ஏற்பாடு செய்த 11 வது சர்வதேச கட்டட நிர்மானம்
பற்றிய ஆய்வரங்கு, கட்டட நிர்மாணத் துறையில் நிலைத்தன்மையை எடுத்துக்காட்டுவதோடு, கிறீன் எவாட் நைட் நிகழ்வின் மூலம் சிறந்த பங்களிப்புகளுக்கான அங்கீகாரமும் கிடைத்தது. ஜப்பானின் ஹொக்கைடோ பல்கலைக்கழகத்தால் இணைந்து நடத்தப்பட்ட பூகோள வளங்கள் பற்றிய முகாமைத்துவமும் சுற்றுச்சூழலும் எனும் தலைப்பிலான 7வது சர்வதேச ஆய்வரங்கானது நீடுறுதிமிக்க வளங்களை முகாமத்துவம் செய்தல் தொடர்பில் கலந்தாராய்வதற்கான களத்தினை துறைசார்ந்த வல்லுனர்களுக்கு வழங்கியது. பல்கலைக்கழகத்தின் பிரதான தொழில்நுட்ப கண்காட்சியான EXMO 2023 ஆனது, பல்வேறு பீடங்களின் கண்டுபிடிப்புக்களைக் காட்சிப்படுத்தியதோடு, கல்வி, தொழில்துறை மற்றும் சமூகம் சார்ந்த விடயங்களுக்கு இடையில் வலுவான தொடர்புகளை வளர்த்தது. இவை தவிர, பல்கலைக்கழகமானது, நீடுறுதிமிக்க பொறியியல் கல்வி மற்றும் செய்முறைப் பயிற்சிகளில் கவனம் செலுத்தி AOTULE 2023 மாநாட்டுக்கான களத்தினை அமைத்தது.

8-வது சர்வதேச தகவல் தொழில்நுட்ப ஆய்வு மாநாடு (ICITR 2023) மற்றும் முன்னேற்றகரமான மூலப்பொருட்கள் மற்றும் அவற்றின் பயன்பாடுகள் குறித்தான சர்வதேச ஆய்வரங்கு போன்றன ஆய்வு மற்றும் அபிவிருத்திக்கான பல்கலைக்கழகத்தின் அர்ப்பணிப்பினை மேலும் கோடிட்டுக் காட்டின. IEEE ஆல் இணைந்து நடத்தப்பட்ட ICITR 2023 நிகழ்வானது, டிஜிட்டல் நிலைமாற்றம் பற்றிய கலந்துரையாடல்களைக் கொண்டிருந்த அதேவேளை, முன்னேற்றகர ஆக்கப்பொருள் பற்றிய ஆய்வரங்கானது ஆக்கப்பொருள் விஞ்ஞானம் பற்றிய சர்வதேச ஒத்துழைப்புச் செயற்பாடுகளுக்கு வசதியளித்தது. பல்கலைக்கழகத்தின் ஆய்வு வாரம்-2023 ஆனது, மாநாடுகள், செயலமர்வுகள் மற்றும் கண்காட்சிகளைக் கொண்ட பலதரப்பட்ட ஒத்துழைப்புச் செயற்பாட்டிற்கான தளத்தை வழங்கியது. உலகளாவிய நிபுணர்களின் பங்களிப்புகளுடன் இடம்பெற்ற வணிக ஆய்வுக்கான 6-வது சர்வதேச மாநாடு, புத்தாக்கம் ஊடான பெறுமதி உருவாக்கத்தை வலியுறுத்தியது. மொறட்டுவை பொறியியல் ஆய்வு மாநாடு (MERCon) 2023 ஆனது மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் பொறியியல் ஆய்வுப் பிரிவால் ஏற்பாடு செய்யப்பட்டதோடு, இது பல்கலைக்கழகத்தின் ஆய்வு பற்றிய
அதன் தோற்றவிபரத்தை மேம்படுத்துவதில் முக்கிய வகிபாகத்தினை வழங்கியது. இது தொழில்நுட்ப ரீதியாக இணை-அனுசரணை செய்யப்பட்டு ஸ்கோபஸில் சூசிகை செய்யப்பட்டது. பல்கலைக்கழகத்தின் பிரசுரங்களை வெளியிடுவதை அதிகரிப்பதில் MERCon குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்துள்ளது. மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் கட்டிடக்கலை ஆய்வுப் பிரிவுப் பீடத்தினால் (FARU) ஏற்பாடு செய்யப்பட்ட FARU மாநாடு-2023 ஆனது, கட்டடக்கலை மற்றும் கட்டட அமைப்பினைக் கொண்ட சுற்றுச்சூழல் ஆய்வுகளில் புத்தாக்கம் மிக்க சிந்தனைகளைக் பெற்றுக்கொள்ளும் வகையில் ஆய்வாளர்கள், வல்லுனர்கள்
மற்றும் கல்வியாளர்களை ஒன்றிணைத்தது. இந்த ஆண்டில் "நீடுறுதிமிக்க எதிர்காலங்கள்: தாக்குப்பிடிப்பு மற்றும் புத்தாக்கம்" எனும் தொனிப்பொருளில் இடம்பெற்ற மாநாடானது, மிகவும் முன்னேற்றகரமான ஆய்வினை முன்னெடுப்பதற்கும் மற்றும் பல்துறை ஒத்துழைப்பை வளர்ப்பதற்குமானதொரு தளத்தை வழங்கியது.


மேற்படி முன்னெடுப்புக்களும் செயற்பாடுகளும், ஆய்வுகளினதும் அது பற்றிய பிரசுரங்களினதும் எண்ணிக்கை மற்றும் தரம் போன்றன உள்ளிட்ட ஆய்வு பற்றிய அதன் வெளியீட்டையும், அத்துடன் ஆய்வுக்கான நிதி மற்றும் ஒத்துழைப்புகளையும் குறிப்பிடத்தக்களவு உயர்த்துமென எதிர்பார்க்கப்படுகிறது.

# முக்கிய அம்சங்கள்


## முக்கிய அம்சங்கள்




## ஆய்வு கருத்திட்டம் சார் கண்ணோட்டம்




## அங்கீகாரம் மற்றும் அடைவுகள்





விருதுகளின் எண்.


## பிரசுரங்கள் சார் பங்களிப்பு

- கட்டடக்கலை பீடம்
- வியாபார பீடம்
- பொறியியல் பீடம்
- தகவல் தொழில்நுட்ப பீடம்
- மருத்துவ பீடம்
- நூலகம்


### மாநாடுகள்




### பருவ சஞ்சிகைகள்




### புத்தகங்கள்



# எதிர்கால கண்டுபிடிப்புக்கள் மற்றும் தொழில்முயற்சிகளை வளர்த்தல்

மொறட்டுவை பல்கலைக்கழகமானது இங்கையில் தொழில்நுட்பம் சார்ந்த கண்டுபிடிப்புக்கள் தொழில்முயற்சி அபிவிருத்திகள் ஆகியவற்றுக்கான பிரசித்திபெற்றதொரு மையமாக விளங்குகின்றது. நடைமுறைப் பிரயோகங்களுடன் கல்வி சார்ந்த சிறப்பம்சங்களை ஒருங்கிணைக்கும் தொலைநோக்குடன் தாபிக்கப்பட்ட மொறட்டுவை பல்கலைக்கழகமானது, பல்வேறு முயற்சிகள் மற்றும் மூலோபாய உதவி அமைப்புகள் மூலம் கண்டுபிடிப்புக்களை அறிமுகம் செய்யும் கலாச்சாரத்திற்கு வெற்றிகரமாக வளமூட்டி விருத்தி செய்துள்ளது. இந்த முயற்சிகளுக்கு பல்கலைக்கழக வணிக இணைப்பு அலகு (UBLC) ஒரு மையமாக விளங்குவதோடு, இது கல்விசார் ஆய்வினை சந்தைத் தயார்நிலைக்கான தீர்வுகளாக மாற்றியமைப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

## வரலாற்றுச் சூழலும் அபிவிருத்தியும்

தொழில்நுட்ப பரிமாற்றம் மற்றும் வணிகமயமாக்கலுக்கான வலுவான கட்டமைப்பை நிறுவுவதற்கான மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் பயணமானது, 2010 இல் அதன் புலமைச்சொத்துரிமைக் கொள்கையின் அறிமுகத்துடன் தீவிரமாகத் தொடங்கியது. பேராசிரியர் கபில ஜெயசிங்க தலைமையிலான இந்தக் கொள்கையானது, பல்கலைக்கழகத்தின் புலமைச் சொத்துக்களை முகாமைத்துவம் செய்து அவற்றைப் பாதுகாப்பதற்கானதொரு கட்டமைக்கப்பட்ட அணுகுமுறையை உருவாக்க வடிவமைக்கப்பட்டது. இது தொழில்முயற்சிப் பிரிவுக்கான அடித்தளத்தை அமைத்து வழங்கிய, டாக்டர் துசிதா சுகதபால மற்றும் பேராசிரியர் ஆனந்த ஜெயவர்தன ஆகியோரின் விரிவான தொழில்முயற்சி எண்ணக்கரு பற்றிய ஆவணத்தினை அடுத்து இடம்பெற்றதாகும். 2016 இல், பல்கலைக்கழகமானது அதன் பீடத்தினையும் ஆய்வாளர்களையும் மேலும் தயார் நிலைப்படுத்தும் வகையில் தொழில்நுட்ப பரிமாற்ற பயிற்சியை அமுல்படுத்தியது. 2017 இல், தொழில்முயற்சிகள் பிரிவின் முறையான தாபிப்பு ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லை எட்டியதோடு, 2018 இல் UBLC ஐ உருவாக்குவதற்கு உச்சக்கட்ட பங்களிப்பினை வழங்கிய அதேவேளை, இது உலக வங்கியின் AHEAD திட்டத்தின் நிதியுதவியின் மூலம் ஆதரவளிக்கப்பட்டது.

UBLC: புத்தாக்கத்தையும் தொழில்முயற்சியாண்மையையும் ஊக்குவிக்கின்றது.
மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் புத்தாக்கத்துடன் கூடிய சூழல்

முறைமையின் ஒரு மூலக்கல்லாக UBLC உருவெடுத்துள்ளதோடு, புலமைச் சொத்துக்களைப் பாதுகாத்தல், வணிகமயமாக்கலை வலுவூட்டுதல் மற்றும் தொழில்முயற்சியாளர்களின் முயற்சிகளுக்கு துணை நிற்றல் என்பவற்றை அதன் பணி நோக்காகக் கொண்டு விளங்குகின்றது. அதன் முதன்மைத் தொழிற்பாடுகளில் பின்வருவன உள்ளடங்குகின்றன:

- **புலமைச்சொத்து பற்றிய பாதுகாப்பு: UBLC ஆனது, விரிவான புலமைச் சொத்து பற்றிய பாதுகாப்புச் சேவைகளை வழங்குவதோடு, கண்டுபிடிப்பாளர்கள் தமது புத்தாக்க வெளிப்படுத்தல் படிவங்களை (IDFs) சமர்ப்பிப்பதன் மூலம் அவர்களுக்கான வழிகாட்டுதல்களை வழங்கல், முன் கலை ஆய்வுகளை நடத்துதல் மற்றும் வரைவுக்கான உதவியை வழங்குதல் போன்ற பணிகளையும் முன்னெடுத்து வருகின்றது. இப் பிரிவானது 35 இகும் மேற்பட்ட ஆக்கவுரிமை விண்ணப்பங்கள், 18 கைத்தொழில் வடிவமைப்புகள் மற்றும் 11 வர்த்தகச் சின்னங்கள் மற்றும் மூன்று ஆக்கவுரிமைக் கூட்டுறவு ஒப்பந்த (PCT) விண்ணப்பங்களை கோவைப்படுத்தியுள்ளது. PCT அறிக்கைகள் சிறந்த தரங்களைப் பெற்றமையுடன், ஆறுக்கும் மேற்பட்ட ஆக்கவுரிமைகளையும் மற்றும் மூன்று கைத்தொழில் வடிவமைப்புகளையும் வழங்கியதில் மேற்படி முயற்சிகளின் வெற்றி பிரதிபலிக்கப்படுகின்றது.**

- **வணிகமயமாக்கலின் வழிகள்: UBLC ஆனது, உரிமமளிப்பதற்கான உடன்படிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் தொடக்கநிலையினை வடிவமைத்தல் போன்ற நடவடிக்கைகள் மூலம் ஆய்வுப் புத்தாக்கங்களை வணிகமயமாக்குவதற்கான வசதியை வழங்குகிறது. இந்த பிரிவானது மூன்று உரிமமளித்தல் உடன்படிக்கைகள் மற்றும் மூன்று தொடக்கநிலை உடன்படிக்கைகள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தி கையெழுத்திட்டுள்ளதோடு, மேலும், பல உடன்படிக்கைகளும் இடம்பெற்று வருகின்றன. எதிர்கால சாத்தியமிக்க கைத்தொழில் பங்காளர்களை இனங்கண்டு விதிமுறைகளின் பிரகாரம் பேச்சுவார்த்தை நடத்துவதன் மூலம், பல்கலைக்கழக புத்தாக்கங்கள் காத்திரமான முறையில் சந்தையை அடைவதை UBLC உறுதி செய்கிறது.**


- வணிக தொடக்கநிலைக்கான அபிவிருத்தி: தொழில்முயற்சிகள் பிரிவானது வணிக தொடக்கநிலையை விருத்திசெய்வதற்கு துணைநிற்பதோடு, நவீன வசதியுடன் கூடிய இணை- பணியிடங்கள் மற்றும் வழிகாட்டுதல் ஆதரவு போன்ற அத்தியாவசிய வளங்களை வழங்குகின்றது. நான்கு வணிகத் தொடக்கநிலைகள் தற்போது அபிவிருத்தி நிலையிலுள்ளதோடு, அவற்றில் ஒன்று வெற்றிகரமாக வேறாக்கித் தொடங்கப்பட்டுள்ளது. UBLC வழங்குகின்ற வணிகத் தொடக்க அபிவிருத்தி வசதிகள், அதிநவீன ஒன்றுகூடல் அறை மற்றும் கூட்டுப் பணியிடங்களை உள்ளடக்கி, AHEAD நிதியுதவியுடன் தரமுயர்த்தப்பட்டுள்ளது.

- வணிகத்தளம் மற்றும் போட்டிகளுக்கான ஆதரவு: மோரா வென்ச்சர்ஸ் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் SLESA எதிர்கால ஸ்தாபகர் தளத் திட்டம் போன்ற தொடக்கத் தளம் மற்றும் புத்தாக்கப் போட்டி ஆகியவற்றில் UBLC ஒரு முனைப்பான வகிபாகத்தினை வகிக்கிறது. இந்த முயற்சிகள் உள்ளூர் மற்றும் சர்வதேச அரங்குகளில் மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் புத்தாக்கங்களை வெளிப்படுத்த உதவுவதோடு, முதலீட்டாளர்கள் மற்றும் தொழில் நிபுணர்களுடனான தொடர்புகளுக்கும் வசதியளிக்கின்றது.


## மாணவர்களின் நடைமுறை திட்டங்கள்.


மொறட்டுவை பல்கலைக்கழகமானது, UBLC இற்கும் அப்பால் சென்று, அதன் பீடங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் மத்தியில் புத்தாக்கம் மற்றும் தொழில்முயற்சியாண்மை குறித்தானதொரு முனைப்பான கலாச்சாரத்தை விருத்தி செய்து வருகிறது. நடைமுறை பிரயோகம் மற்றும் கைத்தொழில் ஈடுபாடு பற்றிய பல்கலைக்கழகத்தின் அர்ப்பணிப்பானது பல முக்கிய முன்னெடுப்புக்களே அத்தாட்சியாகும்.


 தொழில்நுட்ப கண்காட்சிகள்: மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடமானது ஏனைய பீடங்களுடன் இணைந்து ஏற்பாடு செய்த EXMO 2023 எனும் கண்காட்சியின் பொழுது,
புத்தாக்கம் மிக்க கருத்திட்டங்கள் காட்சிப்படுத்தப்பட்டதோடு, கல்வி, கைத்தொழில் மற்றும் சமூகம் ஆகியவற்றுக்கிடையிலான தொடர்புகளை அபிவிருத்தி செய்தது. இக் கண்காட்சியில் பங்குபற்றியோர்கள் மத்தியில் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்துவதை இலக்காகக் கொண்ட கல்விசார்ந்த அமர்வுகளும் இடம்பெற்றன.



WIPO | PCT
(12) Internatio

பிரசுரிக்கப்பட்ட A தரங்களைக் கொண்ட சில PCT மற்றும் ISR அறிக்கைகள்



Biomass cook stove


A system and method for evaluating convolutional neural networks


MeasureUP – Anthropometric hei measuring device


Banana Fiber Extraction Machine


Smart socket


Hydrolink Device



Measure on air Project





EXMO – 2023 கண்காட்சி

 போர்மியுலா ஸ்ருடன்ட் மின்சார கார் கருத்திட்டம்: போர்மியுலா ஸ்ருடன்ட் போட்டியில் பல்கலைக்கழகத்தின் பங்களிப்பு, குறிப்பாக இலங்கையின் முதல் மின்சார போர்மியுலா காரான போல்கன் E1 இன் வளர்ச்சியானது, பிரயோகப் பொறியியல் மற்றும் சர்வதேச போட்டித்தன்மை மீதான அதன் கவனத்தை எடுத்துக்காட்டுகிறது. நிதி திரட்டுவதற்கான பிரச்சாரங்கள் மற்றும் பொறியியல் கண்காட்சிகளில் பங்கேற்றல்
உள்ளிட்ட இந்த கருத்திட்டமானது, மாணவர் கருத்திட்டங்களின் மூலம் தொழில்நுட்பத்தை முன்னேற்றுவதில் மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் அர்ப்பணிப்பை உறுதிசெய்கிறது.

# ஆய்வு கருத்திட்டங்களும்

## பொழிப்பு

### பொழிப்பு

| பீடம் | நடைபெற்றுவரும் ஆய்வு கருத்திட்டங்கள் | பூர்த்தியான ஆய்வு கருத்திட்டங்கள் | ஆக்கவுரிமைகள் பெற்றவை | ஆக்கவுரிமை விண்ணப்பக் கோரிக்கைகள் |
|---|---|---|---|---|
| கட்டடக்கலை பீடம் | 36 | 48 | - | - |
| வியாபார பீடம் | 22 | 14 | - | - |
| பொறியியல் பீடம் | 225 | 150 | - | 3 |
| தகவல் தொழில்நுட்ப பீடம் | 22 | 16 | - | - |
| மருத்துவ பீடம் | 13 | 6 | - | - |
| கூட்டு மொத்தம் | 318 | 234 | - | - |

### விபரம்

| பீடம் | திணைக்களம் | நடைபெற்றுவரும் ஆய்வு கருத்திட்ட | பூர்த்தியான ஆய்வு |
|---|---|---|---|
| கட்டடக்கலை பீடம் | கட்டடகலை திணைக்களம் | 11 | 24 |
| | கட்டடப் பொருளியல் திணைக்களம் | 12 | 20 |
| | வசதியேற்பாடுகள் முகாமைத்துவ திணைக்களம் | 3 | 1 |
| | ஒன்றிணைக்கப்பட்ட வடிவமைப்பு திணைக்களம் | 5 | |
| | பட்டினமும் நாடும் திட்டமிடல் திணைக்களம் | 5 | 3 |
| உப மொத்தம் | | உப மொத்தம் | 48 |
| வியாபார பீடம் | தீர்மானித்தல் விஞ்ஞானங்கள் திணைக்களம் | 2 | |
| | கைத்தொழில் முகாமைத்துவ திணைக்களம் | 4 | 6 |
| | தொழில்நுட்ப முகாமைத்துவ திணைக்களம் (FB) | 16 | 8 |
| உப மொத்தம் | | உப மொத்தம் | 14 |
| பொறியியல் பீடம் | இரசாயன மற்றும் செயல்முறை பொறியியல் திணைக்களம் | 34 | 12 |
| | சிவில் பொறியியல் திணைக்களம் | 49 | 37 |
| | கணினி விஞ்ஞானம், பொறியியல் திணைக்களம் | 17 | 21 |
| | நில வளங்கள் பொறியியல் திணைக்களம் | 15 | 8 |
| | மின் பொறியியல் திணைக்களம் | 24 | 13 |
| | இலத்திரனியலும் தொடர்பாடல் பொறியலும் திணைக்களம் | 12 | 5 |
| | மொழிகள் திணைக்களம் | 2 | |
| | பொருட்கள் விஞ்ஞானம் மற்றும் பொறியியல் திணைக்களம் | 35 | 10 |
| | கணிதவியல் திணைக்களம் | 4 | 4 |
| | எந்திர பொறியியல் திணைக்களம் | 14 | 19 |
| | புடவை மற்றும் ஆடை தொழில்நுட்ப திணைக்களம். | 17 | 7 |
| | போக்குவரத்தும், தேவை விநி. ஒழுங்க.முகா. திணைக்களம் | 2 | 14 |
| உப மொத்தம் | | உப மொத்தம் | 150 |
| தகவல் தொழில்நுட்ப பீடம் | கணிப்பீட்டு கணிதவியல் திணைக்களம் | 7 | 8 |
| | தகவல் தொழில்நுட்ப திணைக்களம் | 11 | 3 |
| | பல்துறைசார் கற்கைகள் திணைக்களம் | 4 | 5 |
| உப மொத்தம் I | | 22 | 16 |
| மருத்துவ பீடம் | | 13 | 6 |
| உப மொத்தம் | | 13 | 6 |
| கூட்டு மொத்தம் | | 318 | 234 |

# ஆய்வு, புத்தாக்கம் மற்றும் பிரசுரங்கள்

## ஆராய்ச்சி, புதுமை மற்றும் வெளியீடுகள்

பொழிப்பு

| பீடம் | சர்வதேச பருவ சஞ்சிகை வெளியீடுகள் | உள்நாட்டு பருவ சஞ்சிகை வெளியீடுகள் | புத்தக வெளியீடுகள் | மாநாட்டு சமர்பித்தல் |
|---|---|---|---|---|
| கட்டடக்கலை பீடம் | 81 | 33 | 3 | 121 |
| வியாபார பீடம் | 20 | 9 | 5 | 25 |
| பொறியியல் பீடம் | 175 | 28 | 18 | 331 |
| தகவல் தொழில்நுட்ப பீடம் | 11 | 4 | 2 | 58 |
| மருத்துவ பீடம் | 7 | 5 | 3 | 14 |
| நூலகம் | - | - | - | 3 |
| கூட்டு மொத்தம் | 294 | 79 | 31 | 552 |

## ஆய்வு, புத்தாக்கம் மற்றும் பிரசுரங்கள் பற்றிய விபரம்

| பீடம் | திணைக்களம் | சர்வதேச பருவ சஞ்சிகை வெளியீடு | உள்நாட்டு பருவ சஞ்சிகை வெளியீடு | புத்தகம்/ புத்தக அத்தி. வெளியீடு | மாநாட்டு சமர்பித்தல் |
|---|---|---|---|---|---|
| | கட்டடகலை திணைக்களம் | 9 | 12 | 1 | 21 |
| | பட்டினமும் நாடும் திட்டமிடல் திணை. | 12 | 10 | 1 | 24 |
| | ஒன்றிணைக்கப்பட்ட வடிவமைப்பு திணை. | 2 | - | 1 | 2 |
| | கட்டடப் பொருளியல் திணைக்களம் | 55 | 11 | - | 61 |
| | வசதியேற்பாடுகள் முகாமைத்துவ திணை. | 4 | - | - | 9 |
| உப மொத்தம் | | 82 | 33 | 3 | 117 |
| வியாபார பீடம் | தொழில்நுட்ப முகாமைத்துவ திணைக்களம் | 5 | 1 | 2 | 4 |
| | கைத்தொழில் முகாமைத்துவ திணைக்களம் | 5 | 7 | 2 | 8 |
| | தீர்மானித்தல் விஞ்ஞானங்கள் திணைக்களம் | 9 | 1 | 1 | 12 |
| உப மொத்தம் | | 19 | 9 | 5 | 24 |
| பொறியியல் பீடம் | இரசாயன, செயல்முறை பொறியியல் திணை. | 16 | 2 | 2 | 16 |
| | சிவில் பொறியியல் திணைக்களம் | 38 | 9 | 5 | 85 |
| | கணினி விஞ்ஞானம், பொறியியல் திணை. | 22 | 3 | 2 | 38 |
| | நில வளங்கள் பொறியியல் திணைக்களம் | 15 | 3 | 1 | 25 |
| | மின் பொறியியல் திணைக்களம் | 12 | 1 | 1 | 31 |
| | இலத்திரனி., தொடர்பாடல் பொறி. திணை. | 14 | 2 | - | 24 |
| | பொருட்கள் விஞ்ஞான, பொறியியல் திணை. | 6 | 1 | - | 32 |
| | கணிதவியல் திணைக்களம் | 1 | - | - | 3 |
| | எந்திர பொறியியல் திணைக்களம் | 16 | 1 | 4 | 20 |
| | புடைவை மற்றும் ஆடை தொழில்நுட்ப திணை. | 19 | 1 | 1 | 31 |
| | போக்குவர., தேவை விநி. ஒழுங். முகா. திணை. | 16 | 4 | 2 | 25 |
| | மொழிகள் திணைக்களம் | - | 1 | - | 2 |
| உப மொத்தம் | | 175 | 28 | 18 | 332 |
| தகவல் | தகவல் தொழில்நுட்ப திணைக்களம் | 5 | 2 | - | 23 |
| | பல்துறைசார் கற்கைகள் திணைக்களம் | 1 | - | - | 17 |
| | கணிப்பீட்டு கணிதவியல் திணைக்களம் | 5 | 2 | 2 | 18 |
| உப மொத்தம் | | 11 | 4 | 2 | 58 |
| மருத்துவ பீடம் | | 7 | 5 | 3 | 18 |
| உப மொத்தம் | | 7 | 5 | 3 | 18 |
| நூலகம் | | - | - | - | 3 |
| உப மொத்தம் | | - | - | - | 3 |
| கூட்டு மொத்தம் | | 294 | 79 | 31 | 552 |

# கிடைத்த விருதுகள் பற்றிய விபரம்

## கிடைத்த விருதுகள் பற்றிய விபரம்

| விடயம் | விருதுகளின் மொத்த எண். | | கல்வியாளர்கள் எண்ணிக்கை | | மாணவர் | |
|---|---|---|---|---|---|---|
| | | 2023 | 2022 | 2023 | 2022 | 2023 |
| அ. உள்நாட்டு விருதுகள் | 163 | 148 | 156 | 130 | 7 | 18 |
| (பல்கலைக்கழகம்/ SRC) | 24 | 32 | 4 | 5 | 20 | 27 |
| ஆ. தேசிய விருதுகள் (சனாதிபதி/ CVCD) | 17 | 11 | 7 | 3 | 10 | 8 |
| இ. சர்வதேச விருதுகள் | - | - | - | - | - | - |
| ஈ. ஏனையன | 204 | 191 | 167 | 138 | 37 | 53 |
| மொத்தம் | | | | | | |

# பல்துறை ஆய்வு நிலையங்கள்

பட்டதாரி ஆய்வுகள் பீடமானது பத்து பல்துறை ஆய்வு நிலையங்களுக்கு (MRCs) துணையக இருந்து வருகிறது. இவை பல்வேறு பீடங்கள் மற்றும் திணைக்களங்களுக்கு இடையிலும் மற்றும் பிற உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பல்கலைக்கழகங்கள் மற்றும் கைத்தொழில் துறைகளுடனும் ஒருங்கிணைந்த ஒத்துழைப்பிற்கு வசதியளிக்கின்றன. MRCs இன் ஆய்வுப் பிரதேசங்கள் பல்கலைக்கழகத்தின் நிபுணத்துவம் சார்ந்த அனைத்து அம்சங்களையும் பல்வேறு சேர்மானங்களில் ஒன்றிணைக்கின்றன. 2017 இல், MRCs இற்கு அதன் தொடக்கக் காலத்தில், பல்கலைக்கழகம் ஆரம்ப நிதியை வழங்கிய போதிலும், பின்னர் அவர்களால் வெளியக மூலங்களிலிருந்து ஆய்வுக்கான கணிசமான நிதியை ஈர்க்ககூடியதாக இருந்தது.

DataSEARCH – UoM-இன் தரவு அறிவியல் சார் தேசிய பல்துறை ஆராய்ச்சி

DataSEARCH

CFAMS –உயர் மெகட்ரொனிக்ஸ் முறைமை நிலையம்

CFAMS

CAR – உயர் ரொபோடிக்ஸ் மையம்

UoM நகர ஆய்வகம் – நகரங்களுக்கான மையம்

Centre for Cities

CEBI – உயரியல் மருத்துவத்துக்கான புத்தாக்க நிலையம்

DRR – இடர் அபாய குறைப்பு மையம்

DRR

NLP Center – தேசிய மொழி செயற்படுத்தல் நிலையம்

வழங்கல் சங்கிலி, தொழிற்பாடுகள் மற்றும் விநியோக ஒழுங்கமைப்பு தேர்வுமுறை சார்பான நிலையம்

SCOLO

மதிநுட்ப போக்குவரத்து முறைமைக்கான நிலையம்

CITS

பொதியிடல் வடிவமைப்பு புத்தாக்க கேந்திரநிலையம்

# கைத்தொழில் ஆதரவுடன் கூடிய ஆராய்ச்சி ஆய்வகங்கள்

கைத்தொழில் மற்றும் சமூகத்துடனான மேற்படி இடைத்தொடர்புகள், கைத்தொழில்களின் வளர்ச்சியையும் அதன் மூலமான நாட்டின் பொருளாதாரத்தையும் ஆதரிப்பதோடு மட்டுமல்லாது, பணியாட்டொகுதி உறுப்பினர்கள், மாணவர்கள் மற்றும் நிறுவனத்திற்கு நன்மை பயக்கும் என்பதால், பல்கலைக்கழகம் அவற்றை வலுவாக ஊக்குவிக்கிறது.

அதன் ஆய்வுப் பிரிவுகள், விசேடத்துவ நிலையங்கள் மற்றும் ஆலோசனை சேவைகள் ஊடாக, பல்கலைக்கழகமானது அரசு மற்றும் தனியார் துறைக்கு பல்வேறு துறைகளிலான நிபுணத்துவ ஆலோசனைகளை வழங்குகிறது. பல்கலைக்கழகத்திற்குள் பல கைத்தொழில்கள் ஆதரவுடன் கூடிய ஆராய்ச்சி ஆய்வகங்கள் இயங்குவதோ, அங்கு கைத்தொழில் துறைசார்ந்த பணியாளர்கள் புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் தயாரிப்புகள் குறித்து மொறட்டுவை பல்கலைக்கழகத்துடன் நெருக்கமாக பணியாற்றுகிறார்கள்.
செல்லிட தொடர்பாடல்களுக்கான Dialog UoM ஆராய்ச்சி ஆய்வகம் – இலங்கை பல்கலைக்கழக முறைமையில் கைத்தொழில்துறை அனுசரணையளிக்கப்பட்ட முதலாவது ஆய்வகம்.

1. Dialog UoM செல்லிட தொடர்பாடலுக்காக ஆராய்ச்சி ஆய்வகம்
   - பிரதான பணியெல்லை: தொடர்பாடல் துறையில் கைத்தொழில்துறை சார்ந்த ஆய்வும் உற்பத்தி அபிவிருத்தியும்
   - அனுசரணை: Dialog Axiata PLC

2. Zone 24X7 UoM ஸோன் ஆராய்ச்சி ஆய்வகம் பிரதான பணியெல்லை: இலத்திரனியல் தொடர்பான புதிய தொழில்நுட்பங்களில் ஆய்வு மற்றும் அபிவிருத்திகளை மேற்கொள்ளல். ஆய்வகத்தில் மேற்கொள்ளப்படும் ஆய்வுகள் இலத்திரனியல் முறைமைகள், உட்பொறிக்கப்பட்ட முறைமைகள், உயிரியல் மருத்துவ கருவிகள் மற்றும் கணினிப் பார்வை ஆகிய துறைகளை உள்ளடக்கியது.
   - அனுசரணை: கூட்டிணைக்கப்பட்ட சோன் 24X7 நிறுவனம் (Zone 24X7 Inc)

3. பிரீமியம் இன்டர்நேஷனல் – UoM ஆய்வகம் (Premium International-UoM)
   - பிரதான பணியெல்லை: உயிரியல் மருத்துவ தொழில்நுட்பங்களில் ஆய்வுகளையும் அபிவிருத்தி நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல், மற்றும் மருத்துவமனைகளில் பயன்படுத்தப்படுகின்ற மருத்துவ மற்றும் மருத்துவமனைச் சாதனங்களின் மென்பொருள் மற்றும் வன்பொருள் வடிவமைப்பு மற்றும் தனிப்பட்ட சுகாதாரப் பராமரிப்பு போன்ற துறைகளிலான கூட்டு ஆய்வினை மேற்கொள்ளல் மற்றும் உற்பத்திசார் அபிவிருத்தி நடவடிக்கைகளை எளிதாக்குதல், மருத்துவமனையின் தானிக்க முறைமைகளை வடிவமைத்து அவற்றை விருத்தி செய்தல் மற்றும் இளம்பட்டதாரி மாணவர்களுக்கான தொிவுசெய்யப்பட்ட பகுதிகளில் கைத்தொழில் சார்ந்த பயிற்சியை வழங்குதல்.
   - அனுசரணை: பிரீமியம் இன்டர்நேஷனல் (பிரை) லிமி.

4. INSEE – UOM ஆய்வகம்
   - பிரதான பணியெல்லை: பொருட்கள் சார்ந்த ஆராய்ச்சி
   - அனுசரணை: INSEE சீமெந்து

5. Epic-UoM புத்தாக்க ஆய்வகம் மேற்கொள்ளல்.
   - பிரதான பணியெல்லை: முழுமையாக அதிநவீன விடயங்களைக் கொண்ட ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க நிலையத்தை உருவாக்கி, பல்வேறு தொழில்நுட்பத் துறைகளில் ஆய்வு மற்றும் புத்தாக்கத்தை அனுசரணை: தொழில்நுட்பக் குழு

6. QBITS – செயற்கை மதிநுட்ப புத்தாக்க ஆய்வகம் பிரதான பணியெல்லை: இலங்கையில் முதல் முன்னெடுப்பாகத் திகழும் வகையில், செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தில் ஆய்வு மற்றும் அபிவிருத்திகளை மேற்கொள்ளல். இந்தக் கைத்தொழில்- கல்விசார் துறைகளின் ஒத்துழைப்பின் கீழ், கோட்ஜென் ஆனது ஒரு தாபிக்கப்பட்ட வேலைச்சட்டகத்தினுள் செயற்கை நுண்ணறிவு பற்றிய ஆய்வினைக் கூட்டாக மேற்பார்வை செய்வதோடு, அதற்கான முழுமையான நிதியையும் வழங்குகின்றது. பல துறைகளிலான அறிவுப் பகிர்வில் ஒத்துழைப்பு வழங்குவதில் கவனம்

QBITS – செயற்கை மதிநுட்ப புத்தாக்க ஆய்வகம் – இலங்கையின் முதலாவது செயற்கை மதிநுட்பம் சார்ந்த புத்தாக்க ஆய்வகம்

செலுத்தி, பல்கலைக்கழகத்தை தகவல் தொழில்நுட்பத் துறையுடன் இணைப்பதே மேற்படி கூட்டாண்மையின் முதன்மைக் குறிக்கோளாகும்.

- அனுசரணை: கோட்ஜென் இன்டர்நெஷனல் (பிறை) லிமிடட்.

7. SLIoT வடிவமைப்பு சார் புத்தாக்க ஆய்வகம் (SLIoT Design)

- பிரதான பணியெல்லை: மூலமுன்மாதிரி நிலை மற்றும் களத்தில்- பயன்படுத்தக்கூடிய நிலை ஆகிய இரு மட்டங்களிலும், இணைய வலைப்பின்னலுடைய சாதனங்கள் (IoT) மையத் தீர்வு விருத்தியில் மாணவர் பணியை ஆதரித்தல்.
- அனுசரணை: ஸ்ரீலங்கா ரெலிகொம்

8. மரப்பலகை வடிவமைப்பு சார் புத்தாக்க நிலையம் (TDIC)

- பிரதான பணியெல்லை: மொறட்டுமுல்லை மரப்பலகையை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்துறையை மேம்படுத்துதல்.
- அனுசரணை: கைத்தொழில்துறை அமைச்சு

9. Huawei ICT அகடமி புத்தாக்க ஆய்வகம்

- பிரதான பணியெல்லை: பல்கலைக்கழக ஆய்வு நிகழ்ச்சித்திட்டங்களுக்கு உதவுதல், அதிநவீன தொழில்நுட்பம் மற்றும் தளங்களை வழங்குதல், மற்றும் கைத்தொழில் மற்றும் பல்கலைக்கழக கூட்டுத் திட்டங்கள் மூலம் புத்தாக்கங்களை ஊக்குவித்தல்.
- அனுசரணை: Huawei டெக்னோலோஜீஸ் கம். லிமி.

10. LECO-UoM ஸ்மாட் கிறிட் ஆராய்ச்சி ஆய்வகம்

- பிரதான பணியெல்லை: பிரபல தயாரிப்பாளர்களின் ஸ்மார்ட் கிரிட் தொழில்நுட்ப அதிநவீன உபகரணங்கள் தொடர்பில் ஆய்வு மற்றும் அபிவிருத்தியை மேற்கொள்ளல். இந்த ஆய்வகமானது சூரிய PV முறைமைகள், மின்கல சக்தி சேமிப்பு முறைமைகள், கட்டுப்படுத்தக்கூடிய சுமைகள், மற்றும் அதிநவீன ஆய்வு மற்றும் அபிவிருத்தியில் பயன்படுத்தக்கூடிய அளவீட்டுச் சாதனங்கள் போன்றவற்றைக் கொண்டுள்ளது.
- அனுசரணை: இலங்கை மின்சாரக் கம்பனி (தனியார்) நிறுவனம் (LECO) - ஆசிய அபிவிருத்தி வங்கி நிதி உதவி செய்கிறது.

11. MAS Intimates INGENIUM தொழில்நுட்ப ஆய்வகம்

- பிரதான பணியெல்லை: பிணைப்புத் தொழில்நுட்பங்கள் மீதான பயிற்சித் திறனை மேம்படுத்துதல்.

அனுசரணை: MAS Intimates

12. KKYW பெரேரா மொபைல் தொடர்பாடல் ஆய்வகம்

- பிரதான பணியெல்லை: செல்லிட தொடர்பாடல் தொழில்நுட்பங்கள்.
- அனுசரணை: SLT- மொபிடெல் மற்றும்

- IntelliSense ஆய்வகம்

பிரதான பணியெல்லை: நுண்ணறிவு உணர்திறன் அளவீடு மற்றும் கட்டுப்பாட்டு ஆய்வகம் அல்லது இன்டெலிசென்ஸ் (IntelliSense) ஆய்வகம் என்பது, ஒரு ஆராய்ச்சி மைய ஆய்வகமாகும், இது அன்றாடப் பிரச்சினைகளுக்கு பயனுள்ள தீர்வுகளை உருவாக்கும் நேர்கிலான அதிநவீன தொழில்நுட்பங்களையும் வளர்ந்து வரும் கணினி அறிவியல் கருத்துகளையும் ஒன்றிணைப்பதில் மைய அவதானம் செலுத்துகிறது.



# 05

# மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் ஆலோசனை மற்றும் வெளியகச் செயற்பாடுகள்



கருத்திட்ட ஆலோசனை அலகு (PCU) - 149
கூட்டாண்மைச் சமூகப் பொறுப்பு சார்ந்த (CSR) செயற்பாடுகள் - 150
கழகங்கள் மற்றும் சங்கங்கள் - 151

# மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் ஆலோசனை மற்றும் வெளியகச் செயற்பாடுகள்

மொறட்டுவை பல்கலைக்கழகமானது, கழகங்கள் மற்றும் சமூகங்களில் அதன் மாணவர்களின் முனைப்பான ஈடுபாட்டின் மூலம் பல்வேறு பூகோள ரீதியான அபிவிருத்தி இலக்குகளுக்கான வலுவான அர்ப்பணிப்பை நிரூபித்துக் கொண்டிருக்கிறது. கற்றல் மற்றும் திறன் அபிவிருத்திச் செயற்பாடுகளை செழிப்பூட்டி வளர்ப்பதன் மூலம், பல்கலைக்கழகம் பல்வேறு செயல்பாடுகள் மற்றும் போட்டிகள் மூலம் கல்வியின் தரத்தை மேம்படுத்துகிறது. மேலும், தொழில்வாண்மைக் கழகங்களிலான மாணவர்களின் ஈடுபாடானது, கௌரவம் மிக்க தொழில் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு தேவையான திறன்களை அவர்கள் மத்தியில் ஊக்குவிக்கிறது. பல்வேறு மத மற்றும் கலாச்சாரம் சார்ந்த சங்கங்கள் உள்ளிட்ட பல வகையான கழகங்கள், அனைத்துமுள்ளடக்கத் தன்மையை மேலும் ஆதரிப்பதோடு, அனைத்து மாணவர்களும் ஈடுபடவும் பங்கேற்கவும் ஒரு தளத்தை வழங்குவதன் மூலம் சமத்துவமின்மையைக் குறைக்க உதவுகின்ற அதேவேளை, மொறட்டுவை பல்லைக்கழகத்தினால் தொடங்கப்பட்ட பெரும்பாலான கருத்திட்டங்கள் நிலையான நகரங்களையும் சமூகங்களையும் உருவாக்குவதற்கு பங்களிக்கின்றன.

மேலும், திறமையை வெளிக்காட்டும் நிகழ்வுகளினால் எடுத்துக்காட்டப்படுகின்ற பல்வேறு கழகங்களுக்கும் மற்றும் வெளியக அமைப்புகளுக்கும் இடையிலான ஒத்துழைப்புகள், கூட்டாண்மைகளின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகின்றன.

மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் சங்கங்களினால் வழிநடத்தப்படுகின்ற சுற்றுச்சூழல் சார்ந்த முன்னெடுப்புகள், காலநிலை மாற்றம் மற்றும் நிலைத்து நிற்கும் தன்மை போன்ற விடயங்கள் மீதான விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு, அவை சார்ந்த நடவடிக்கைகளையும் ஊக்குவிக்கின்ற அதேவேளை, இயற்கையைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்தும் செயல்பாடுகளும் முன்னெடுக்கப்படுகின்றன. மொறட்டுவை பல்கலைக்கழகமானது மாணவர்களின் ஈடுபாட்டை மேம்படுத்துவதில் மட்டுமல்லாமல், பரந்த சமூக மற்றும் பூகோள ரீதியிலான சவால்களுக்கான தீர்வை வழங்குவதிலும் முக்கிய பங்கு வகிக்கிறது.

மொறட்டுவை பல்கலைக்கழகமானது, பல்வேறு கழகங்கள் மற்றும் சமூகங்களிலான மாணவர்களின் முனைப்பான ஈடுபாட்டின் ஊடாக கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்கும், ஒரு முழுமையான அபிவிருத்திச் சூழலை வளர்ப்பதற்கும் தன்னை கடுமையாகவே அர்ப்பணித்துள்ளது. மாணவர்கள், வானியல் சங்கம், புத்த சங்கம், இயற்கை குழு, ரோட்ராக்ட் கழகம், ரோவிங் கழகம், பல்கலைக்கழக கலைச் சங்க மாணவர் சங்கம், IESL மாணவர் அத்தியாயம், கிறிஸ்தவ மாணவர் சங்கம் மற்றும் லியோ கழகம் உள்ளிட்ட 40 பதிவுசெய்யப்பட்ட கழகங்கள் மற்றும் சங்கங்களுடன் இணைந்து தொழில்வாண்மை, மத, கலாச்சார மற்றும் பொழுதுபோக்கு சார்ந்த நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். இந்த அமைப்புகள் மாணவர்கள் தங்கள் அறிவு, திறன்கள் மற்றும் இயலுமையை வளர்த்துக் கொள்வதற்கான தளங்களை அவர்களுக்கு வழங்குகின்றன.

"Brain Wave 22/23" கல்வியாண்டில் இடம்பெற்ற குறிப்பிடத்தக்க கருத்திட்டங்களும் நிகழ்வுகளும் மாணவர்களின் துடிப்பான பங்கேற்பை எடுத்துக்காட்டுகின்றன. எட்டு பல்கலைக்கழகங்களின் பங்கேற்புடன் போக்குவரத்து மற்றும் பொருள் கொள்முதல் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு விடய
ஆய்வுப் போட்டியான "அபினா'23"; இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பு பொறியியல் துறையுடன் இணைந்து இலத்திரனியல் கழகத்தினால் நடத்தப்பட்டதொரு திறமை வெளிகாட்டல் நிகழ்ச்சி; மற்றும் 17 நிலையான அபிவிருத்தி இலக்குகளை எதிர்கொள்ளும் வகையிலான ரோட்ராக்ட் கழகத்தின் 112 கருத்திட்டங்களின் தொடர் ஆகியவை, குறிப்பிடத்தக்க செயல்பாடுகளில் அடங்குகின்றன. இந்த சமூகங்களில் மாணவர்களின் அதிகரித்த ஈடுபாடும், 2023 ஆம் ஆண்டில் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்வுகளின் விரிவாக்கமும்
சமூக ரீதியான மற்றும் பூகோள ரீதியான பிரச்சினைகளுக்கான வளர்ந்து வரும் அர்ப்பணிப்பை பிரதிபலிக்கின்றன.

பொறியியல் துறைகளில் வல்லமை படைக்கப்பெற்ற மொறட்டுவை பல்கலைக்கழகமானது, அதன் ஆலோசனைச் சேவைகள் மூலம் தேசிய அபிவிருத்தித் திட்டங்களில் முக்கிய வகிபாகத்தினைக் கொண்டுள்ளது. பொதுத்துறையின் பாரியளவிலான கருத்திட்டங்களுக்கு பல்கலைக்கழகம்
இரண்டு முதன்மை ஆலோசனை முறைகளை வழங்குகிறது: பாரம்பரிய அளவீடு மற்றும் ஊதிய அடிப்படையிலான விரிவான ஆலோசனை சேவைகள், மற்றும் வடிவமைப்பு மற்றும் கட்டுமானக் கருத்திட்டங்களுக்கான பொறியாளராகச் செயல்படும் கருத்திட்ட முகாமைத்துவச் சேவைகள் ஆகும்.

குறிப்பிடத்தக்க திட்டங்களில் கொழும்பு தாமரை கோபுரம், கொழும்பு நிலபியச, SAARC கலாச்சார நிலையம், கம்பஹா மாவட்ட செயலகம், கேகாலை மாவட்ட செயலகம் மற்றும் ஜோன் டி சில்வா தியேட்டர் ஆகியவை அடங்குகின்றன. இந்தத் திட்டங்களில் பல 2019 ஆம் ஆண்டுக்கு முன்பே தொடங்கப்பட்டாலும், கோவிட்-19 தொற்றுநோய் மற்றும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி போன்ற காரணங்களினால் அவற்றின் முன்னேற்றம் பாதிக்கப்பட்டது. சில திட்டங்கள் நிறைவடையும் தருவாயில் உள்ள அதேவேளை, ஏனையவை பொருளாதார மீட்சியை எதிர்பார்த்த வண்ணம் தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. 2023 இல், மொறட்டுவை பல்கலைக்கழகமானது கூட்டாண்மைச் சமூகப் பொறுப்பு (CSR) மற்றும் சமூக அணுகலுக்கான வலுவான அர்ப்பணிப்பை நிரூபித்துள்ளது. சமூக நலன் மற்றும் அபிவிருத்திக்கான பல்கலைக்கழகத்தின் அர்ப்பணிப்பை வலியுறுத்தும் வகையில், கல்வித் துறைகள், மாணவர் கழகங்கள் மற்றும் சங்கங்கள் மற்றும் பழைய மாணவர்களால் இந்த முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. வழக்கமாக இடம்பெறுகின்ற CSR செயற்பாடுகளில், பின்தங்கிய மாணவர்களுக்கு ஆதரவளிக்கின்ற எலக்ட்ரானிக்ஸ் கிளப்பின் அத்வெலா புலமைப்பரிசில் உதவித்திட்டம், மற்றும் இயந்திரப்

பொறியியல் துறையின் பல்வேறு சுற்றுச்சூழல் திட்டங்கள் போன்றனவும் உள்ளடங்குகின்றன. சிவில் பொறியியல் துறையின் கீழ் உள்ள சிவில் பொறியியல் சங்கத்தால் (CES) நடத்தப்பட்ட "சுஹஸ்த நிகழ்ச்சித்திட்டம் 2023" ஆனது, பதுளை, மாத்தறை மற்றும் யாழ்ப்பாணம் உட்பட இலங்கையில் உள்ள ஏழு பாடசாலைகளில் கல்விக்கான வசதிகளை மேம்படுத்துவதில் மைய அவதானம் செலுத்துவதாகத் திகழ்ந்தது. இவை தவிர, மொறட்டுவை பல்கலைக்கழக நூலகத்தின் வெளியகத் தொடர்புச் சேவைகள் பிரிவு மதுகம வலய கல்விப் பிரதேசத்திற்கு கல்வி சார்ந்த உதவிகளை வழங்கியது.

இந்த முன்னெடுப்புக்கள் யாவும், மக்கள் மீதும் மற்றும் உலகம் மீதுமான அவதானத்தோடு இசைந்து செல்லுகின்ற அதேவேளை, சமூகத்தில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவதற்கான பல்கலைக்கழகத்தின் கடப்பாட்டினையும் பிரதிபலிக்கின்றன.

# கருத்திட்ட ஆலோசனைப் பிரிவு (PCU)

திட்ட ஆலோசனைப் பிரிவு (PCU) ஊடாக வழங்கப்படுகின்ற அரச துறையின் பாரிய-கருத்திட்டங்களுக்கான மொறட்டுவை பல்கலைக்கழக ஆலோசனைச் சேவைகள்

மொறட்டுவை பல்கலைக்கழகமானது, அதன் கருத்திட்ட ஆலோசனைப் பிரிவின் மூலம், அரச துறையின் பாரிய-கருத்திட்டங்களுக்கான கருத்திட்ட ஆலோசனைச் சேவைகளை வழங்குவதன் ஊடாக இலங்கையின் தேசிய வளர்ச்சிக்குத் தோள் கொடுக்கிறது. பொதுவாக, ஆலோசனை சேவைகள் அரச நிறுவனங்களின் அழைப்பின் பேரிலும், செலவு-மீட்பு அடிப்படையிலும், கட்டிடக்கலைப் பீடத்தின் தொழில்வாண்மைத் தகுதியுடை கல்வியாளர்களால், பொறியியல் பீடத்திடமிருந்து கோரப்படுகின்ற தொழில்வண்மை உள்ளீடுகளுடன் வழங்கப்படுகின்றன. சிறப்பு சேவைகளுக்கான தேவைகள் ஏற்படும் போதெல்லாம், பெரும்பாலும் மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் பழைய மாணவர்களைக் கொண்ட வெளியக ஊழியர்களிடமிருந்து உள்ளீடுகள் கோரப்படுகின்றன.

அரச துறையின் பாரிய அளவிலான கருத்திட்டங்களுக்கான மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் ஆலோசனைச் சேவைகள் இரண்டு முறைகள் மூலம் வழங்கப்படுகின்றன. அவற்றில் ஒன்று, சம்பிரதாய அளவீடு மற்றும் ஊதிய அடிப்படையில் கட்டுமானக் கருத்திட்டங்களுக்கான விரிவான ஆலோசனைச் சேவைகள்; மற்றையது, வடிவமைப்பு மற்றும் கட்டுமான அடிப்படையில் கட்டுமானக் கருத்திட்டங்களுக்கான கருத்திட்ட பொறியாளரின் வகிபாகத்தினைக் கொண்ட கருத்திட்ட முகாமைத்துவச் சேவைகள். மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் ஆலோசனைக் குழுவானது, கம்பஹா மாவட்ட செயலக கட்டிடத் தொகுதி (ரூபா 4000.0 மில்.); காலி மாவட்ட சர்வதேச கேட்போர்கூடம் (ரூபா 3,500.0 மில்.); மற்றும், பிரபல்யம் மிக்க கொழும்பு தாமரை கோபுரக் கருத்திட்டம் (US $ 114.0 மில்.) போன்றன உள்ளிட்ட பாரிய கருத்திட்டங்களுக்கான பொறியாளராக விளங்கியது.

சமீப காலங்களில், நெடுஞ்சாலைகள் அமைச்சின் தலைமைக் காரியாலயம் (மகநெகும-மஹாமேதுர – ரூபா 2000.0 மில்.); பொது நிர்வாக அமைச்சின் சிரேஷ்ட அரச அதிகாரிகளுக்கான பல அடுக்குமாடி குடியிருப்புத் தொகுதி (ரூபா 800.0 மில்.); பொலன்னறுவை மாவட்டச் செயலக கட்டத்தொகுதி (ரூபா 1800.0 மில்.); கேகாலை மாவட்ட செயலகம் (ரூபா 500.0 மில்.); அம்பாறை மாவட்ட செயலக விரிவாக்கக் கருத்திட்டம் (ரூபா 500.0 மில்.); நிதி ஆணைக்குழுக் கட்டிடம் (ரூபா 300.0 மில்.); SAARCH கலாச்சார நிலைய கட்டடத்தொகுதி (ரூபா 1800.0 மில்.); ஜோன் டி சில்வா நினைவு அரங்கம் (ரூபா 3000.0 மில்.); அனுராதபுரம் மாவட்ட செயலக விரிவாக்கக் கருத்திட்டம் (ரூபா 2000.0 மில்.); அரச அதிகாரிகளுக்கான ஹிங்குராக்கொட வீட்டுவசதி திட்டம் (ரூபா 500.0 மில்.) கட்டானையிலுள்ள தேசிய பொலிஸ் கற்கை நிலையம் (ரூபா 600.0 மில்.) போன்றன உள்ளிட்ட இன்னும் பல அனேக பிரபல்யம் மிக்க கட்டடக் கருத்திட்டங்களுக்கு விரிவான ஆலோசனை சேவைகள் வழங்கப்பட்டன.

மேற்படி கருத்திட்டங்களில் அனேகமானவை 2019 ஆம் ஆண்டுக்கு முன்னர் தொடங்கி வைக்கப்பட்டதோடு, கோவிட்-19 தொற்றுநோய் மற்றும் 2019 - 2022 ஆண்டுக் காலப்பகுதியில் இடம்பெற்ற பொருளாதார நெருக்கடி போன்ற காரணங்களினால் பணிகள் தடைபட்டன. அக் கருத்திட்டங்களில் சில தொடர்ந்து நடைபெற்று, நிறைவடையும் தருவாயில் உள்ள அதேவேளை, ஏனையவை நாட்டின் பொருளாதாரம் உறுதியான நிலைக்குத் திரும்பும் வரை தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

# கூட்டாண்மைச் சமூகப் பொறுப்பு சார்ந்த செயற்பாடுகள் (CSR)

2023 இல், மொறட்டுவை பல்கலைக்கழகமானது, சமூக நலன் மற்றும் அபிவிருத்திக்கான அதன் அர்ப்பணிப்பை வெளிப்படுத்தும் வகையில், பல்வேறு கூட்டாண்மைச் சமூகப் பொறுப்பு (CSR) மற்றும் சமூக நலனுக்கான முன்னெடுப்புக்களில் முனைப்பாக ஈடுபட்டுள்ளது. இந்த முன்னெடுப்புக்கள் கல்வித் துறைகள், மாணவர் கழகங்கள் மற்றும் சங்கங்கள் மற்றும் பல்கலைக்கழகத்தின் பழைய மாணவர்களால் வழிநடத்தப்பட்டதோடு, அவர்கள் அனைவரும் இந்த நிகழ்ச்சித்திட்டங்களைத் திட்டமிட்டு நிறைவேற்றுவதில் குறிப்பிடத்தக்க வகிபாகத்தினை வழங்கினர்.

பல்கலைக்கழகத்தின் குறிப்பிடத்தக்க பொதுவான CSR திட்டங்களில், பின்தங்கிய மாணவர்களுக்கான எலக்ட்ரானிக் கழகத்தின் அத்வெல புலமைப்பரிசில் உதவித் திட்டம், மற்றும் இயந்திரப் பொறியியல் துறையின் சுற்றுச்சூழல் கருத்திட்டங்கள் போன்றன உள்ளடங்குகின்றன. மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் பிரதான நலன்புரி மற்றும் சேவை வழங்குநராக விளங்குகின்ற உலக பல்கலைக்கழக சேவை (WUS), வருடாந்த சிங்கராஜா விழிப்புணர்வுச் செயலமர்வு உள்ளிட்ட பல்வேறு வெளியகச் செயற்பாடுகளையும் நடத்துகிறது.

"சுஹஸ்த நிகழ்ச்சித்திட்டம் 2023" ஆனது, சிவில் பொறியியல் திணைக்களத்தின் கீழ் சிவில் பொறியியல் சங்கத்தினால் (CES) நடத்தப்பட்ட ஒரு முக்கிய CSR செயற்பாடுகளில் ஒன்றாகும் என்பதோடு, இது பதுளை, மாத்தறை மற்றும் யாழ்ப்பாணம் உள்ளிட்ட இலங்கையின் பல்வேறு மாவட்டங்களிலுள்ள ஏழு பாடசாலைகளில் கல்வி வசதிகளை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தியது. 2020 தொகுதியைச் சேர்ந்த சிவில் பொறியியல் மாணவர்கள் கருத்தரங்குகளை நடத்தியதோடு, வகுப்பறைகளில் காணப்பட்ட பழுதுகளைத் திருத்தி, தீந்தைகள் பூசிப் பங்களித்தனர்.

மொறட்டுவை பல்கலைக்கழக நூலகத்தின் வெளியகத் தொடர்புச் சேவைகள் பிரிவால் மற்றொரு குறிப்பிடத்தக்க வெளிநடவடிக்கை முன்னெடுப்பு மேற்கொள்ளப்பட்டது. இது மத்துகம வலயக் கல்விப் பிரதேசத்திற்கான கல்விசார்ந்த உதவி ஆகும். திருமதி. ஆர். சி. கொடிகார மற்றும் சிரேஷ்ட உதவி நூலகர் திருமதி. உபேக்ஷா கொடித்துவக்கு ஆகியோரின் தலைமையின் கீழ், இந்தப் பிரிவு 40 ஆசிரிய நூலகர்களுக்கு நூலகப் புத்தகங்களைப் வகைப்பாடுத்தல் பற்றிய விரிவான செயலமர்வினை ஏற்பாடு செய்தது. இந்தச் செயலமர்வு திக்ஹென கல்லூரியில் நடத்தப்பட்டதோடு, பாடசாலை நூலகங்களை பயனுறுதிமிக்க முறையில் முகாமைத்துவம் செய்தல் தொடர்பில் நூலகர்களின் திறன்களை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டு, டீவ்யி தசம வகைப்பாடு முறைமையைப் பயன்படுத்துவது குறித்தான கோட்பாடு மற்றும் நடைமுறை சார்ந்த அமர்வுகள் இதன்போது இடம்பெற்றன. இந்த முன்னெடுப்பு பேராசிரியர் லக்தாஸ் பெர்னாண்டோவின் உதவியுடன் முன்னெடுக்கப்பட்டது.

நகர மற்றும் கிராம திட்டமிடல் திணைக்கத்தின் மாணவர்கள், பதுளை நகரத்தை மையமாகக் கொண்ட இடஞ்சார்ந்த திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு ஸ்டுடியோ கருத்திட்டத்தில் ஈடுபட்டு, பல்கலைக்கழகத்தின் CSR திட்டத்திற்கு பங்களித்தனர். இந்தக் கருத்திட்டமானது, நகர மற்றும் கிராம திட்டமிடல் கௌரவப் பட்ட நிகழ்ச்சித்திட்டத்தில் விஞ்ஞானமானிப் பட்டத்தின் ஒரு அங்கமாக விளங்குவதோடு, நகரத் திட்டமிடல் மற்றும் சமூக ஈடுபாட்டிலான நேரடி அனுபவத்தை மாணவர்களுக்கு வழங்கியது. நகர்ப் பிரதேசத்துச் சுற்றுச்சூழலை மேம்படுத்துவதற்கான அவர்களின் புத்தர்க்கம் மிக்க அணுகுமுறைகளும், அர்ப்பணிப்புக்களும் இலங்கை நகரத் திட்டமிடுனர்கள் நிறுவனத்தால் மிகவும் வரவேற்கப்பட்டது.

# கழகங்களும் சங்கங்களும்

மொறட்டுவை பல்கலைக்கழக மாணவர்கள் 40 இற்கும் மேற்பட்ட கழகங்கள் மற்றும் சங்கங்களை நடத்துகின்றனர். கலாச்சார மற்றும் மதக் குழுக்கள், கல்விக் கழகங்கள் மற்றும் பொது-நலன் சார்ந்த சங்கங்கள் போன்றன இவற்றுள் அடங்குகின்றன. மொறட்டுவை பல்கலைக்கழகத்திலுள்ள மேற்படி கழகங்களும் சங்கங்களும், கல்வி நோக்கங்களுடன் தனிப்பட்ட வளர்ச்சிக்கான வாய்ப்புகளை வழங்குவதன் மூலம் முழுமையான கல்வி அனுபவத்தை பெரிதும் மேம்படுத்துகின்றன. மேற்படி கழகங்கள் மற்றும் சங்கங்களின் பல்வேறு நடவடிக்கைகளில் பங்கேற்கும் மாணவர்கள் திறன் அபிவிருத்தி, கலாச்சார பரிமாற்றம், கல்வி சார் வளப்படுத்தல், தொடர்புபடுத்தல் வாய்ப்புகள், சமூக சேவை, விளையாட்டுகள் மற்றும் பொழுதுபோக்கு உள்ளிட்ட மேலதிக அனுகூலங்களையும் மற்றும் தலைமைத்துவ வாய்ப்புகளையும் பெறுகிறார்கள்.

- பொருளாதாரம் மற்றும் வணிகத்தகத்தில் ஈடுபட்டுள்ள மாணவர் பரிமாற்றத்திற்கான சர்வதேச ஒன்றியம் (AIESEC)
- வானியல் சங்கம்
- பௌத்த சங்கம்
- கட்டடப் பொருளாதார மாணவர் சங்கம்
- கத்தோலிக்க மாணவர் சங்கம்
- இரசாயனப் பொறியியல் மாணவர் சங்கம்
- பாரம்பரிய சங்கீத சங்கம்
- சிவில் பொறியியல் சங்கம்
- கணினி சங்கம்
- நாட்டிய சங்கம்
- நாடகச் சங்கம்
- புவி வளப் பொறியியல் சங்கம்
- மின் பொறியியல் சங்கம்
- இலத்திரனியல் கழகம்
- ஆங்கில இலக்கிய ஒன்றியம்
- தொழில்முயற்சியாண்மை சங்கம்
- ஆடை வடிவமைப்பு மாணவர் சங்கம்
- நடுவர் சங்கம்
- வடிவமைப்பு மாணவர் ஒன்றியம்
- நெடுஞ்சாலைப் பொறியியல் சங்கம்
- தொழில்நுட்ப அனுபவங்களுக்காக மாணவர் பரிமாற்றத்திற்கான சர்வதேச ஒன்றியம் (IAESTE)
- கண்டுபிடிப்பாளர்கள் மற்றும் புத்தாக்குனர்கள் சங்கம்
- தகவல் தொழில்நுட்பச் சங்கம்
- லியோ கழகம்
- மஜ்லிசுல் இஸ்லமியச் சங்கம்
- சமுத்திரச் சங்கம்
- கணிதவியல் சங்கம்
- வெகுசன ஊடகச் சங்கம்
- ஊடகக் கழகம்
- மூலப்பொருள் சார் பொறியியல் மாணவர் சங்கம்
- இயந்திரப் பொறியியல் சங்கம்
- மோரா ஹைகிங் கழகம்
- மோரா ஸ்பிரிட் மாணவர் கழகம்
- இயற்கை அணி
- ரோட்டராக்ட் கழகம்
- படகோட்டுதல் கழகம்
- சரசவி கலா சன்சதாய மாணவர் சங்கம்
- IESL மாணவர் கழகம்
- கிறிஸ்தவ மாணவர் கூட்டமைப்பு
- மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் தரைத்தோற்ற கட்டடக்கலை மாணவர் சங்கம் (SSLA)
- தமிழ் இலக்கச் சங்கம்
- ஆடைத்துணி பொறியியல் மாணவர் சங்கம்
- நகரம் மற்றும் கிராமத் திட்டமிடல் மாணவர் சங்கம்
- போக்குவரத்து மற்றும் கொள்முதல் முகாமைத்துவம்
- டோஸ்ட்மாஸ்டர்ஸ் கழகம்

2023 ஆம் ஆண்டின் சில முக்கிய நிகழ்வுகள்


ப்ரேய்ன் வேவ் 20/23 (Brain Wave 22/23) போக்குவரத்து மற்றும் பொருள் கொள்முதல் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட "BrainWave 22/23" விடய ஆய்வுப் போட்டியின் இறுதிப் போட்டி 2023 மார்ச் 22 ஆம் திகதி மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் TCP கேட்போர்கூடத்தில் வெற்றிகரமாக நடைபெற்றது. இந்த விடய ஆய்வு இலங்கையில் மரக்கறி விநியோகச் சங்கிலியை அடிப்படையாகக் கொண்டதாக விளங்கியதோடு, இந்த ஆண்டுக்கான போட்டிகளில் இலங்கை முழுவதிலுமிருந்தான எட்டு பல்கலைக்கழகங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் 45 இற்கும் கூடுதலான அணிகள் பங்கேற்றன.



அபினா '23 (Abhina '23)


இலத்திரனியல் கழகமானது, மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பு பொறியியல் திணைக்களத்துடன் இணைந்து, அபினா '23 நிகழ்வினை 2023 அக்டோபர் 10 ஆம் திகதி வெற்றிகரமாக ஏற்பாடு செய்தது. இலங்கையின் பாரம்பரிய நம்பிக்கையான "தோவில்" என்ற கருப்பொருளின் கீழ் மாணவர்கள் மற்றும் பணியாட்டொகுதியினரின் திறமைகளைக் கொண்டாடும் வகையில் இந்த நிகழ்வு காணப்பட்டது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பிரபல நடிகரான திரு. ஜனக் பிரேமலால் கலந்துகொண்டதோடு, கல்விசார் பணியாட்டொகுதியினர், பழைய மாணவர்கள், கைத்தொழில் பிரதிநிதிகள் மற்றும் பல்வேறு திணைக்களங்களைச் சேர்ந்த மாணவர்களும் இதில் கலந்து சிறப்பித்தனர். அபினாவில் பாடல்கள், நடனங்கள், இசை நிகழ்வுகள் மற்றும் " Doladuka.ai" போன்ற குறும்படங்கள் உட்பட மூன்று துறைகளின் நிகழ்ச்சிகளும் இடம்பெற்றதோடு, இவை அனைத்தும் பார்வையாளர்களைப் பொ ிதும் கவர்ந்தன. இந்த நிகழ்வானது அனைவரையும் சென்றடையும் வகையில் சமூக ஊடகங்களில் நேரடியாக ஒளிபரப்பப்பட்டது. பிரதம அதிதி, இதுபோன்ற நிகழ்வுகளின் முக்கியத்துவம் பற்றி தனது கருத்தினைத் தெரிவித்ததோடு, ENTC குழுவினரின் முயற்சிகளையும் மாணவர்களின் விதிவிலக்கான நிகழ்ச்சிகளையும் பாராட்டினார். அபினா '23 நிகழ்வானது, தொழில்நுட்பத் துறைகளுக்கும் அப்பால் மாணவர்கள் கொண்டுள்ள சிறப்பினை எடுத்துக் காட்டி, அவர்களின் பன்முகத் திறமைகளை வெளிப்படுத்தியது.





அனைத்து நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளையும் (SDG) உள்ளடக்கிய பரந்த அளவிலான கருத்திட்டங்கள் - மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் ரோட்டராக்ட் கழகமானது 2022-23 ஆம் ஆண்டுக் காலத்தில் 17 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளையும் வெற்றிகரமாக உள்ளடக்கியதன் மூலம் ஒரு அழியாத தடயத்தைப் பதித்தது. இந்த குறிப்பிடத்தக்க சாதனை, சமூக முன்னேற்றத்திற்கான கழகத்தின் அசைக்க முடியாத அர்ப்பணிப்பை மட்டுமல்லாது, அனைவருக்கும் நிலையான மற்றும் சமத்துவம் மிக்க எதிர்காலத்தை வடிவமைப்பதில் SDG களின் முக்கியத்துவத்தையும் அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. கழகமானது உப கருத்திட்டங்கள் மற்றும் பிரதான கட்டங்கள் உள்ளிட்ட மொத்தம் 112 கருத்திட்டங்களை நிறைவு செய்து ஒரு வியக்கத்தக்க சாதனையை செய்து நிரூபித்தது. கழகமானது, இத்தகைய பல்வேறு கருத்திட்டங்கள் ஊடாக, சமூக, சுற்றாடல் மற்றும் சமுதாயம் சார்ந்த முக்கிய சவால்களை முனைப்பாகக் கையாண்டு, தனிநபர்கள் மற்றும் சமூகங்களின் வாழ்க்கையில் நீடித்த மற்றும் உறுதியான அடையாளத்தைப் பதித்தது.





# 06

# மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் நிதிசார் கண்ணோட்டம்




1.ஒட்டுமொத்த நிதிசார் மீளாய்வு - 157

2கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை - 2023.12.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது - 161

3கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கைக்கான பதில் - 2023.12.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது - 168

4நிதிக் கூற்றுக்கள் - 2023.12.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது - 171

4.1 நிதி நிலைமைக் கூற்று - 171

4.2 நிதி செயலாற்றல் கூற்று - 172

4.3 தேறிய சொத்து மாற்றம் சார் கூற்று s - 173

4.4 காசுப்பாய்ச்சல் கூற்று - 174

4.5 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் - 175

4.6 பாதீட்டு ஒப்பீட்டு அறிக்கை - வருமானம் - 196

4.7 பாதீட்டு ஒப்பீட்டு அறிக்கை - செலவினம் - 197

4.8 மூலதன நிதி பகிர்வு சார்ந்த அறிக்கை - 202

5.வருமான விபரம் - 203

5.1 மீண்டெழும் வருமானம் - 203

5.2 மூலதன வருமானம் - 203

6.செலவின விபரம் - 204

6.1 மீண்டெழும் செலவினம் - 204

6.2 மூலதன செலவினம் - 208

7.நிதி முன்னேற்றம் சார் விபரம் - 209

7.1 நிர்மான கருத்திட்டங்கள் சார் முன்னேற்றம் - 209

7.2 செலவினம் சார் முன்னேற்றம் - 210

7.3 உருவாக்கப்பட்ட வருமான நிதிசார் முன்னேற்றம் - 210

7.4 மாணவருக்கான கிரயம் - 211

8.பத்தாண்டுகள் ஒரு பார்வையில் - 212

9.கணக்காய்வுக் குழு அறிக்கை - 214

நிறுவனத் தகவல்கள் - 218

# மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் நிதியியல் சார்ந்த கண்ணோட்டம்





மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் நிதி முகாமைத்துவம் மற்றும் வருமான மேம்பாட்டு முன்னெடுப்புக்கள் தரமான கல்வியை வழங்குவதற்கும் கல்விசார் வசதிகளை மேம்படுத்துவதற்குமான கணிசமான பங்களிப்பை வழங்குகின்றன. இது தவிர, நிறுவனத்தின் மூலோபாயம் மிக்க நிதி முகாமைத்துவ நடவடிக்கைகள் மூலம் நிலையான பொருளாதார வளர்ச்சி, உற்பத்தித்திறன் மேம்பாடுகள் மற்றும் அனைவருக்கும் கௌரவமான வேலைவாய்ப்புகள் போன்றவற்றை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் எடுத்துக்காட்டப்படுகின்றன. மேலும், ஆய்வு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் மீதான பல்கலைக்கழகத்தின் அவதானமானது, மூலோபாய முதலீடுகள், தாக்குப்பிடித்தல் மற்றும் புத்தாக்கம் ஆகியவற்றின் அபிவிருத்திக்கு உதவுகிறது. வளங்களை காத்திரமான முறையில் முகாமைத்துவம் செய்தல் மற்றும் மூலதன நன்கொடைகளை அதிகரித்துக் கொள்ளல் ஆகியவற்றின் அடிப்படையில், பின்தங்கிய குழுக்களுக்கான கல்வி மற்றும் வளங்களுக்கான அணுகலை மேம்படுத்தி, அதன் மூலம் சமத்துவம் இன்மையைக் குறைப்பதை நோக்காகக் கொண்டு செயல்படுகிறது. செலவுகளைக் கட்டுப்படுத்தும் வகையில் அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளைப் பொருந்திக் கொள்வதன் மூலம் நிலையான நடைமுறைகளுக்கான பல்கலைக்கழகத்தின் அர்ப்பணிப்பும் நிரூபிக்கப்படுகிறது. அரசாங்கத்தின் மானியம் மற்றும் AHEAD கருத்திட்டத்தின் மானியம் போன்றவற்றுக்கும் மேலாக, ஈட்டப்பட்ட வருமான மூலங்கள் மேற்படி இலக்குகளை அடைந்துகொள்வதில் கூட்டாண்மைகளின் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன. மொத்தத்தில், அதிகரித்து வரும் பொருளாதாரச் சவால்கள் மிக்க சூழல்களுக்கு மத்தியில், நிதியின் நீடுறுதித்தன்மை, கல்வியின் தரம் மற்றும் பொறுப்பான வள முகாமைத்துவம் போன்றவற்றுக்கான பல்கலைக்கழகத்தின் அர்ப்பணிப்பை இத்தகைய பிரயத்தனங்கள் பிரதிபலிக்கின்றன.

## ஒட்டுமொத்த நிதி பற்றிய மீளாய்வு

பல்கலைக்கழகமானது, 2023 ஆம் ஆண்டுக்கான மீண்டெழும் செலவினங்களுக்காக ரூபா 3,576 மில்லியனையும், மூலதனச் செலவினங்களுக்காக ரூபா 350 மில்லியனையும் அரசாங்கத்திடமிருந்து பெற்றுள்ளது. இது தவிர, AHEAD கருத்திட்டமும் (உயர் கல்வி விரிவாக்கல் மற்றும் அபிவிருத்திச் செயற்பாட்டை துரிதப்படுத்துதல் கருத்திட்டம்) மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் மூலதனச் செலவினங்களுக்காக முறையே ரூபா 118.9 மில்லியனையும், ரூபா 5 மில்லியனையும் வழங்கிப் பங்களிப்புச் செய்தன.

மீண்டெழும் வருமானங்களின் தொகுப்பு





| | 2023 | 2022 |
|---|---|---|
| அரசாங்க மானியம் | 75.369% | 76.949% |
| மாணவர் உதவிப்பணம் | 0.234% | 0.315% |
| நன்கொடைப் புலமைப்பரிசில் | 0% | 0.004% |
| வெளியக ஆய்வு மானிய வருமானம் | 1.060% | 0.663% |
| மாணவர்களிடமிருந்தான வருமானம் | 0.282% | 0.367% |
| வட்டி வருமானம் | 7.354% | 5.374% |
| ஏனைய வருமானம் | 0.744% | 0.526% |
| செலவு மீட்பு நடவடிக்கைகளிலிருந்தான வரும்படிகள் | 14.958% | 15.803% |

## வருமனப் பகுப்பாய்வு

பல்கலைக்கழகத்தின் மொத்த வருமானங்கள், மீண்டெழும் வருமானம் மற்றும் மூலதன வருமானம் என இரண்டு முக்கியமாக வகைகளாகப் பிரிக்கப்படுகிறன. மீண்டெழும் வருமானம் இங்கு மிகவும் குறிப்பிடத்தக்கதொன்றாகும் என்பதோடு, மொத்த வருமானத்தில் 90% ஐ இது கொண்டுள்ளது. மேலும், இதில் 76% ஆனவை அரசாங்க மானியங்களில் இருந்து கிடைக்கின்றன. மொறட்டுவை பல்கலைக்கழகமானது முன்னைய ஆண்டை விட,

2023 இல் மீண்டெழும் வருமானத்தில் 10% அதிகரிப்பை பெற்றது. வட்டி வருமானத்தில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பே இதற்குப் பிரதான காரணமாகுமென்பதோடு, இலங்கை மத்திய வங்கியினால் நிர்ணயிக்கப்பட்ட அதிகரித்துவரும் பணவைப்பு வட்டி வீதங்களின் விளைவாக, அதிக-ஈட்டலுடைய நிலையான பயவைப்புக்கள் மற்றும் நாளாந்த பணச் சந்தைகளில் அதிக பணத்தின் மூலோபாய முதலீடுகளும் காரணமாக அமைந்தன. இதன் விளைவாக, வட்டி வருமானம் 2021 இல் ரூபா 57 மில்லியனில் இருந்து 2022 இல் ரூபா 232 மில்லியனாகவும், 2023 இல் ரூபா 349 மில்லியனாகவும் உயர்ந்ததோடு, இது 2022 இல் 307% அதிகரிப்பையும் 2023 இல் 50% அதிகரிப்பையும் பிரதிபலிக்கிறது. மேலும், அரசாங்க மானியங்கள் மற்றும் வெளியக ஆய்வு நிதி ஆகியவற்றில் ஏற்பட்ட அதிகரிப்பும் தொடர்ச்சியான வருமான அதிகரிப்பிற்குப் பங்களிப்புச் செய்தது.

மூலதனம் தொடர்பான வருமானத்தில், பல்கலைக்கழகமானது 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது கிட்டத்தட்ட 2% வீழ்ச்சியை எதிர்கொண்டுள்ளதோடு, இதற்கு மூலதனச் செலவினங்களின் மீதான அரசாங்கக் கட்டுப்பாடுகளே பிரதான காரணமாக விளங்கின. மேலும், அரச நிறுவனங்களின் செலவினங்களைக் கட்டுப்படுத்தும் வகையில் அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளின் ஒரு விளைவாக, மூலதனக் கருத்திட்டங்களுக்கு உள்ளக ரீதியில் ஈட்டப்பட்ட நிதியைப் பயன்படுத்துவதை பல்கலைக்கழகம் கட்டுப்படுத்த வேண்டியிருந்தது. இத்தகைய சவால்களுக்கு மத்தியிலும், முன்னைய ஆண்டை விட இந்த ஆண்டில் பெறப்பட்ட மூலதன நன்கொடைகள் 88% ஆல் அதிகரித்துள்ளன.





## செலவு பற்றிய பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2023 ஆம் ஆண்டுக்கான மொத்த செலவினமானது 4% ஆல் அதிகரித்துள்ளது. இச் செலவினத்தில் 88% ஆன பெரும்பகுதியானது இயக்கப்பாட்டுச் செலவுகளுக்காக செலவிடப்பட்டதோடு, மிகுதிப் பங்கு இயக்கப்பாடு அல்லாத செலவுகளுக்காக பயன்படுத்தப்பட்டது. இலங்கையின் பேரண்டப் பொருளாதார நிபந்தனைகள், அத்தியாவசிய சேவைகளுக்கான விலை உயர்வு மற்றும் அரசாங்கத்தின் உத்தரவுக்கமைவாக பாவனையாளர் கட்டண உயர்வுகள் ஆகியவற்றால் பல்கலைக்கழகத்தின் இயக்கப்பாட்டுச் செலவுகள் மோசமாகப் பாதிக்கப்பட்டன. இதன் விளைவாக, இயக்கப்பாட்டுச் செலவுகள் வருடத்திற்கு வருடம் 7% அதிகரித்தன. குறிப்பாக, 2023 ஆம் ஆண்டின் இறுதியில் ஏற்பட்ட அமெரிக்க டாலருக்கு எதிரான இலங்கை ரூபாயின் பெறுமதி அதிகரிப்பைத் தொடர்ந்து, வெளிநாட்டு நாணயத்தால் குறிப்பிடப்பட்ட இருப்புத் தொகையினை அறிக்கையிடல் நாணயமாக மாற்றும் போது ஏற்பட்ட நாணய மாற்று இழப்பு காரணமாக நிதிச் செலவுகள் கணிசமாக அதிகரித்தன. ஒப்பந்தச் சேவைகளுடன் தொடர்புடைய செலவுகளுக்கு மேலதிகமாக, வெளியக ஆய்வு மானியச் செலவினங்களிலான கணிசமான அதிகரிப்பும் இயக்கப்பாட்டுச் செலவுகளின் அதிகரிப்புக்கு காரணமாக விளங்கியது.


இருப்பினும், அரச நிறுவனங்களின் செலவினங்களைக் கட்டுப்படுத்தல் குறித்தான அரச சுற்றுநிரூபத்திற்கு அமைவாக, பல்கலைக்கழகமானது பணவீக்கத்துடன் தொடர்புடைய செலவினங்களைக் கட்டுப்படுத்துவதை வெற்றிகரமாக மேற்கொண்டது. இதன் விளைவாக, ஒட்டுமொத்த பயண மற்றும் ஜீவனோபாயச் செலவுகளும், 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 87% ஆல் குறைக்கப்பட்டதோடு, 2023 இல் வெளிநாட்டுப் பயணச் செலவுகள் எதுவும் பதிவு செய்யப்படவில்லை. அதேவேளை, முந்தைய ஆண்டில் இது ரூபா 11.9 மில்லியன் ஆகும்.

இயக்கப்பாடல்லாத செலவுகள் வருடத்திற்கு வருடம் 11% ஆல் குறைந்துள்ளதோடு, இதற்கு தேய்மானம் மற்றும் கல்வி ஆராய்ச்சி செலவுகளிலான குறைவே பிரதான காரணமாகும்.





### தொழிற்பாட்டுச் செலவினப் பகுப்பாய்வு



நிதி அறிக்கை

2023 ஆம் ஆண்டில், பல்கலைக்கழகத்தின் மொத்த சொத்தில் நடைமுறையல்லாச் சொத்துக்கள் 73% உம், நடமுறைச் சொத்துக்கள் 27% உம் காணப்பட்டன. மொத்த சொத்துக்கள் 6% மிதமான வளர்ச்சியை வருடாந வரும் காட்டியதோடு, அறிக்கையிடல் காலத்தின் இறுதியில் குறுங்கால முதலீடுகள், காசு மற்றும் காசுக்குச் சமமானவை ஆகியவற்றின் அதிகரிப்பே இதற்கு காரணமாகும். பல்கலைக்கழகமானது அதிக ஈட்டல் மிக்க நிலையான வைப்புக்கள் மற்றும் நாளாந்த பணச் சந்தைகளில் அதிகப்படியான பணத்தை மூலோபாய ரீதியில் முதலீடு செய்தது. இது குறுங்கால முதலீடுகளில் 29% உயர்வுக்கு வழியமைத்ததோடு, முதுமானிப் பட்டத்திற்காக நுழையும் மாணவர்களின் எண்ணிக்கையிலான அதிகரிப்பு, ஆலோசனை சேவைகளிலிருந்தான வருமானம் மற்றும் AHEAD மானியத்தின் பயன்படுத்தப்படாத இருப்புத்தொகை போன்றன வங்கி இருப்புகளில் 49% அதிகரிப்பிற்கும் வழியமைத்தன.

2023 ஆம் ஆண்டில் நிகர சொத்துக்கள் 8% ஆல் அதிகரித்ததோடு, மொத்த பொறுப்புகள் முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் 3% ஆல் குறைந்துள்ளது. இந்தக் குறைவுக்கு இதர கடன் கொடுநர்களுக்குச் செலுத்தியமை, ஒப்பந்ததாரர்களின் நிலுவையிலுள்ள கட்டணப் படியல்களைச் செலுத்தியமை மற்றும் சுற்றுநிரூப வழிகாட்டுதல்களின் பிரகாரம் பொருட்களைக் கொள்வனவு செய்வதிலான கட்டுப்பாடுகள் போனறனவே பிரதான காரணங்களாக விளங்கி



## விகிதப் பகுப்பாய்வு

| பகுதி | விகிதம் | கணிப்புகள் | 2023 | 2022 | பகுப்பாய்வு |
|---|---|---|---|---|---|
| தொழிற்பாட்டு செயலாற்றல் | தொழிற்பாட்டு எல்லை | மீண்டுவரும் மிகை (பற்றாக்குறை) / மீண்டுவரும் வருமானம் | 7% | 5% | இயக்கப்பாட்டின் எல்லை சற்று அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதோடு, இது சிறந்த இயக்குபாட்டுச் செயலாற்றுகையினைச் சுட்டிக்காட்டுகிறது. ஒரு மாணவருக்கான மீள்டெழும் செலவானது முன்னைய வருடத்தை விடவும் இவ் வருடத்தில் அதிகரித்திருப்பினும், அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட மூலதனச் செலவினக் குறைப்பு காரணமாக மூலதனச் செலவு குறைந்துள்ளது |
| | மாணவர் ஒருவர்சார்மீண்டுவரும் செலவு | பட்டதாரி மாணவர் சார்ந்த மொத்த தொழிற்பாட்டுச் செலவு / மாணவர்கள் மொத்த எண்ணிக்கை | Rs. 419,256 | Rs. 412,867 | |
| | மாணவவர்ஒருவர்சார் மூலதன செலவு | பட்டதாரி மாணவர் சார்ந்த மொத்த மூலதனச் செலவு / மாணவர்கள் மொத்த எண்ணிக்கை | Rs. 59,385 | Rs. 67,661 | |
| பணத் திரவத்தன்மை நிலை | நடைமுறை விகிதம் | Current Assets / Current Liabilities | 2.95 : 1 | 2.12 : 1 | நடைமுறை விகிதம் |
| | விரைவு விகிதம் | Current Assets - Inventory / Current Liabilities | 2.95 : 1 | 2.12 : 1 | விரைவு விகிதம் |
| | காசு விகிதம் | Cash and cash equivalents | 0.64: 1 | 0.40: 1 | காசு விகிதம் |
| சொத்துப் பயன்பாடு | சொத்து புறள்வுவிகிதம் | மொத்த மீண்டுவரும் வருமானம் / மொத்த சொத்துக்கள் | 0.36 times | 0.35 times | மொத்த சொத்துக்களினது புரள்வுக்கும் மற்றும் நிலையான சொத்துக்களின் புரள்வுக்கும் இடையிலான விகிதங்கள் அறிக்கையிடல் காலத்தில் சிறிதளவு முன்னேற்றத்தைக் காட்டியுள்ளதோடு, இது சொத்துப் பயன்பாட்டில் சிறந்த வினைத்திறனைப் பிரதிபலிக்கின்றது. நடப்பு ஆண்டுக் காலத்தில் குறைந்தபட்ச மூலதன முதலீடு காரணமாக மூலதனச் செலவுக்கும் தேய்மானத்திற்கும் இடையிலான விகிதம் முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் மாறாதுள்ளது. |
| | நிலையான சொத்து புறள்வு | மொத்த மீண்டுவரும் வருமானம் / மொத்த நிலையான சொத்துக்கள் | 0.54 times | 0.49 times | |
| | மூலதன செலவினம் சார் தேய்மான விகிதம் | மொத்த செலவினம் / தேய்மான செலவு | 90% | 90% | |

## நிதி அறிக்கை

கணக்காய்வுத் தலைமையதிபதியவர்கள், 2023 ஆம் ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பில், முன்னைய நான்கு தொடர் வருடங்களுக்குமானதைப் போலவே, ஒரு திருப்தியான கணக்காய்வுக் கருத்தினைக் கூறியுள்ளர். இது அனைத்து முக்கிய விடயங்களிலுமான நிதிக் கூற்றுக்களின் பாரபட்சமின்மை மற்றும் இலங்கை அரச துறையின் கணக்கியல் தரநியமங்களைப் பின்பற்றுதல் ஆகியவற்றுக்கான அர்ப்பணிப்பினை இது சுட்டிக்காட்டுகின்ற அதேவேளை, பல்கலைக்கழக ஆளுகையின் ஒரு இன்றியமையாத கரம் என்பதையும் இது பிரதிபலிக்கின்றது.

2. 31.12.2023 ஆம் ஆண்டுடன் முடிவடைந்த ஆண்டுக்கான கணக்காய்வுத் தலைமை அதிபதியின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

My No. HED/C/UOM/6/23/1/FA    Your No.    Date 2024 யூன், 20

உப வேந்தர்,
மொறட்டுவை பல்கலைக்கழகம்.

மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் 2023 திசம்பர் 31-ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான 2018-இன் 19-ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை.

---

1. <u>நிதிக் கூற்றுக்கள்</u>

1.1 <u>அபிப்பிராயம்</u>

மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் 2023 திசம்பர் 31-இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதி செயலாற்றுகை கூற்று, தேறிய சொத்து மாற்றங்கள் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அளவுசார்ந்த கணக்கீட்டு கொள்கைகளுக்கு உரிய தகவல்கள் ஆகியவற்றையும் உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்கான குறிப்புக்களையும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2023 திசம்பர் 31-இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் 1978-இன் 16-ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 107(5) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1)-ஆம் உறுப்புரை மற்றும் 2018-இன் 19-ஆம் இலக்க இலங்கை தேசிய கணக்காய்வு சட்டம் ஆகியவற்றின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டன. அரசியலமைப்பின் 154(6)-ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

பல்கலைக்கழகத்தின் நிதிக் கூற்றுக்கள் மூலம் 2023 திசம்பர் 31-இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான அதனது நிதிசார் செயலாற்றலையும் காசுப்பாய்ச்சலையும் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க நான் கணக்காய்வினை மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இவ் அறிக்கையில் நிதிக் கூற்றுக்கள் சார் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றை வழங்குவதற்காக போதியளவானதும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகள் என்னால் பெற்றுக்கொள்ளப்-பட்டுள்ளது என நான் நம்புகிறேன்.

1.3 பல்கலைக்கழகத்தின் 2023 ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்ட ஏனைய தகவல்கள்

இக் கணக்காய்வு அறிக்கையின் திகதிக்குப் பின்னர் எனக்கு வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படும் பல்கலைக்கழகத்தினது 2023 வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஆனாலும், நிதிக் கூற்றுக்கள் மற்றும் அது தொடர்பான எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள், ஏனைய தகவல்கள் என்பதாக கருதப்படுகின்றது. இந்த ஏனைய தகவல்கள் சம்பந்தமாக முகாமைத்துவம் பொறுப்புக்கூறுதல் வேண்டும்.

நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது அபிப்பிராயமானது ஏனைய தகவல்களை உள்ளடக்காது என்பதுடன், நான் அது சம்பந்தமாக எவ்விதமான உறுதிப்படுத்தலையோ அல்லது அபிப்பிராயத்தையோ தெரிவிக்கவில்லை.

நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமான எனது கணக்காய்வுடன் தொடர்புபட்டதாக மேற்படி இனங்காணப்பட்ட ஏனைய தகவல்களை பெற்றுக்கொள்ள இயலுமான போது வாசித்தல் மற்றும் அவ்வாறு செய்யும் போது ஏனைய தகவல்களை நிதிக் கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின் போது அல்லது வேறு வகையில் பெற்றுக்கொண்ட எனது அறிவுக்கு ஏற்ப அளவுசார்ந்ததாக பொருந்தாது இருகின்றதா என கவனம் செலுத்துவதே எனது பொறுப்பாகும்.

பல்கலைக்கழகத்தின் 2023 ஆண்டறிக்கையை வாசிக்கும் போது, அதில் அளவு சார்ந்ததாக தவறாக் காட்டப்பட்டுள்ளது என நான் தீர்மானித்தால், திருத்தம் செய்வதற்காக நிருவாகத் தரப்பினருக்கு அவ் விடயங்களை தெரியப்படுத்துதல் வேண்டும். இன்னும் திருத்தம் செய்யப்படாமல் தவறாக் காட்டப்பட்டுள்ளன இருக்குமாயின், அவற்றை அரசியலமைப்பின் 154(6)-ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

1.4 நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்.

நிதிக் கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.
நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில், பல்கலைக்கழகம் தொடர்ந்தியங்கும் நிலையை தொடருவதற்கான இயலுமையை தீர்மானம் செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக இருப்பதுடன், முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை முடிவுறுத்துவதற்கு கருதுவதாயின் அல்லது ஏனைய மாற்றுவழி இல்லாதவிடத்து தொழிற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாயின் தவிர தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவின் அடிப்படையில் கணக்குகளை பேணுதல் மற்றும் பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்குவதுடன் தொடர்புடைய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை சம்பந்தமாக பரிசீலிக்கும் பொறுப்பு, நிருவகிக்கும் தரப்பினர்களால் பொறுப்பு ஏற்கப்படுகிறது.

2018-இன் 19-ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1)-ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக் கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தமது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சம்பந்தமாக ஒழுங்கான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் என்பவற்றை பேணிச்செல்லுதல் வேண்டும்.

1.5 நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புகள்

நிதிக் கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொடுப்பதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது நோக்கங்களாக உள்ளன. நியாயமான உறுதிப்படுத்துதல் உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை கண்டுபிடிக்கின்ற உறுதிப்படுத்துதல் ஒன்றாக அமையமாட்டாது. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாக அல்லது கூட்டான ரீதியில் தாக்கம் செலுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் ஏற்படக்கூடும் என்பதுடன், அதில் பொருண்மையான தன்மை இந் நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன் அடைவோர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதார தீர்மானங்கள் சார்பாக ஏற்படும் தாக்கத்தின் மீது தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வினது பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் தீர்ப்புக்களுடனும் மற்றும் தொழில்சார் ஐயப்பாட்டுடனும் கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும் என்னால்,

- தெரிவிக்கப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றைப் பெற்றுக்கொள்ளும் போது மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக்கூடிய அளவுசார் தவறான கூற்றுக்களால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்தல் சார்பாக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. தவறாக குறிப்பிடுவதன் காரணத்தினால் ஏற்படும் அளவுசார் பிறழ் கூற்றுக்களால் ஏற்படும் தாக்கத்தை விட மோசடியால் தாக்கம் வலிமை கூடியதாக அமைவது, அவை கூட்டுச்சதி, போலியான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல், பிழையாக காட்டுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளை விட்டுவிடுதல் போன்ற காரணங்களினால் ஆகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைதிறன் சம்பந்தமாக அபிப்பிராயமொன்றைத் தெரிவிக்கும் எண்ணத்துக்காக இல்லாவிடினும், சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுவதன் நிமிர்த்தமாக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பானதொரு விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் சார்பான பொருத்தப்பாடுகள், கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்கள் சார்பாக மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகளின் காரணமாக பல்கலைக்கழகமானது தொடர்ந்து இயங்குதல் சம்பந்தமாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் சார்ந்த அடிப்படையில் கணக்கீட்டு செயற்பாட்டுக்காக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்கும் எண்ணக்கருவை பயன்படுத்தும் பொருத்தப்பாடுகள் பற்றி தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பான வெளிப்படுத்தல்கள் பற்றி எனது கணக்காய்வு அறிக்கையானது கவனத்தைச் செலுத்துதல் வேண்டுமென்பதுடன், அவ் வெளிப்படுத்தல்கள் போதியளவாகக் காணப்படாது இருக்குமாயின் எனது கருத்தை வெளிப்படுத்துதல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகளின் அடிப்படையில் தொடர்ந்து இயங்கும் நிலையானது முடிவுறுத்தவும் படலாம்.

- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்கள் ஆகியவற்றுக்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்களும் நிகழ்வுகளும் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்களை உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்படுகின்ற முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக நிருவாக தரப்பினர்களுக்கு விழிப்புணர்வூட்டல் செய்கின்றேன்.

2. ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை.

2.1 2018-இன் 19-ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் பின்வரும் தேவைப்பாடுகளுக்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

2.1.1 2018-இன் 19-ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு ஏற்ப, கணக்காய்வுக்கு அவசியமான சகல தகவல்களும் விளக்கங்களும் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன், எனது பரீட்சிப்பின் மூலம் தெரியவருகின்றவாறு முறையான நிதிசார் பதிவேடுகள் பல்கலைக்கழகத்தினால் பேணிச்செல்லப்பட்டுள்ளன.

2.1.2 2018-இன் 19-ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (ஈ) (iii) பிரிவின் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப நிறுவகத்தினது நிதிக் கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் ஒத்திருக்கின்றன.

2.1.3 2018-இன் 19-ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (ஈ) (iv) பிரிவின் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப கடந்த ஆண்டில் என்னால் செய்யப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 கடைப்பிடிக்கப்பட்ட நடைமுறைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றுகளின் அடிப்படையிலும் பொருண்மையான விடயங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டு இருந்ததனால் கீழே குறிப்பிடப்படுவதைவிட வேறு எதுவும் எனது கவனத்திற்கு கொண்டு வரப்படவில்லை.

2.2.1 2018-இன் 19-ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஈ) பிரிவின் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப, பல்கலைக்கழகத்தின் நிருவாக சபையின் அங்கத்தவர் எவருக்காவது பல்கலைக்கழகம் சம்பந்தப்பட்ட ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பில் நேரடியாக அல்லது நேரடியற்ற வகையில் தொடர்புபட்டிருத்தல்.

2.2.2 2018-இன் 19-ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஊ) பிரிவின் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப கீழே குறிப்பிடப்படும் அவதானிப்புக்களை தவிர்த்து, ஏதேனும் ஏற்புடைய எழுத்திலான சட்டங்களுடன் அல்லது நிருவாக சபையினால் விடுக்கப்பட்ட வேறு பொது அல்லது விசேட ஏற்பாடுகளுடன் இணங்காதவாறு செயலாற்றியிருப்பதை குறிப்பிடுதல்.

| தொடர்புபட்ட சட்டங்கள், ஒழுங்குவிதிகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) 1980 ஆண்டின் 47-ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் 23(அ) பிரிவு | பல்கலைக்கழக வளவின் உட்புறம் மற்றும் ராகுல மாவத்தை, முதலாவது ஒழுங்கையில் அமைந்துள்ள தங்கும் விடுதிகளில் கழிவுநீரை சுத்திகரிப்பதற்காக ரூ.36,770,496 ஆன செலவில் கழிவுநீரை சுத்திகரிக்கும் முறைமைகள் 03, 2016 மற்றும் 2017 ஆண்டுகளில் நிர்மானிக்கப்பட்டு, சுத்திகரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் 2024 பெப்பிரவரி வரையிலும் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (ஆ) 2021 நவம்பர் 16-ம் திகதியும் 01/2021 இலக்கமும் கொண்ட அரச பொறுப்பு முயற்சிகள் சுற்றறிக்கையின் தொழிற்பாடுகள் பற்றிய கைநூலின் 6.6 பந்தி | கணக்கீட்டு ஆண்டு முடிவடைந்து 05 மாதங்களுக்குள் நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை, பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவேண்டியுள்ள போதிலும், பல்கலைக்-கழகத்தின் 2022 ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை 2024 மார்ச் 31-ஆம் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 1971 ஆண்டின் 38-ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ii-ம் பிரிவு மற்றும் 2019 யூலை 29 திகதியும் 04/2019 இலக்கமும் கொண்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உள்ளக கணக்காய்வு சுற்றறிக்கை கடிதம் | 2022 திசம்பர் 31-ஆம் திகதியில் ரூ. 1,902,499,871 ஆன மூதலீடுகள் மற்றும் மீளாய்வு ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்ட ரூ. 690,173,492 ஆன முதலீடுகள் சம்பந்தமாக நிதி அமைச்சரவர்களது அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை. | |
| i. 2022 சனவரி 03 திகதியும் 01/2022 இலக்கமும் கொண்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கையின் 4(ii) பிரிவு | 2023 திசம்பர் 31-ஆம் திகதியில் புத்தகங்கள் 114,868 காணப்படுகின்ற நூலகத்தில் 2013 ஆண்டிலிருந்து வருடாந்த புத்தகங்கள் கணக்கெடுப்பு நடத்தப்பட்டிருக்கவில்லை. |
| ii. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவகங்கள் சம்பந்தமான தாபனக்கோவை -யினது XX அத்தியாயத்தின் 3.1 பிரிவு | பல்கலைக்கழக கல்விசார் பணியாட்தொகுதியினரின் உள்வருகை மற்றும் வெளிச்செல்கை ஆகியன உறுதிப்-படுத்தப்படாமல் மீளாய்வு ஆண்டு சார்பாக ரூ. 1,986,839,051 ஆன சம்பளங்களும் படிகளுமாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது |
| (உ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசினது நிதி ஒழுங்குவிதிக் கோவையின் நிதி ஒழுங்குவிதி 211 | மீளாய்வு ஆண்டின் இறுதிக்கு 01 வருடம் - 02 வருடங்களுக்கு இடைப்பட்ட காலப்பகுதியிலிருந்து காணப்படும் மொத்தப் பெறுமதி ரூ. 120,389 மற்றும் 02 வருடங்கள் - 08 வருடங்களுக்கு இடைப்பட்ட காலப்பகுதியிலிருந்து காணப்படும் மொத்தப் பெறுமதி ரூ. 2,113,993 ஆன கடன்கொடுநர் நிலுவைகள் நிதி ஒழுங்குவிதிகளுக்கு இணங்க தீர்க்கப்படாமல் காணப்பட்டன. |
| (ஊ) 2023 சனவரி 18 திகதியும் BD/ HRD/126/214/19/2023 எனும் இலக்கமும் திறைசேரி செயலாளரினால் கல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்ட சுற்றறிக்கை கடிதத்தின் 5-வது பந்தி | பிணை உத்தரவாதங்களை மீறிய விரிவுரையாளர்கள் 20 பேரிடமிருந்து மீளாய்வு ஆண்டினுள் அறவிடப்பட்டிருந்த ரூ.45,696,764 -ஐ திறைசேரிக்கு அனுப்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

2.2.3 2018-இன் 19-ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (எ) பிரிவின் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப கீழே குறிப்பிடப்படும் அவதானிப்புக்களை விடுத்து, பல்கலைக்கழகத்தின் தத்துவங்கள், செயற்பணி மற்றும் இலக்குகள் என்பவற்றுக்கு இணக்கமின்றி செயலாற்றியிருப்பதை குறிப்பிடுதல்.

2.2.4 2018-இன் 19-ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஏ) பிரிவின் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப, பல்கலைக்கழகத்தின் வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் காலவரையறைகளுக்குள் ஏற்புடையதான சட்டதிட்டங்களுக்கு இணங்க பெற்றுக்கொள்ளப்பட்டு பயன்-படுத்தப்பட்டிருக்காமையை குறிப்பிடுதல்.

2.3 ஏனைய அவதானிப்புக்கள்

(அ) நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமான 12 பேர்ச் காணி சம்பந்தமாக ரூ. 1,400,000 ஆரம்பக் கொடுப்பனவாக செலுத்தப்பட்டு, 2009 அக்டோபர் மாதம் 50 வருட காலப்பகுதிக்கு குத்தகை ஒப்பந்தமொன்றின் கீழ் பல்கலைக்கழகத்திற்கு பெறப்பட்டிருந்தது. குத்தகை ஒப்பந்தத்தின் நிபந்தனைக்கு ஏற்ப 02 வருடங்களுக்குள் காணியில் அபிவிருத்திப் பணிகள் பூர்த்திசெய்ய தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தம் தன்னிச்சையாக இரத்தாகும் என்பதனால், 2017 நவம்பர் வரை காணியில் எவ்வித அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்படாததன் காரணமாக நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் இக் காணி வேறு நிறுவனமொன்றுக்கு வழங்கப்பட்டிருந்தது. அதற்கேற்ப, நகர அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து இந் நிதியை மீளப் பெற்றுக்கொள்வது நிச்சயமற்றதாக காணப்படுகிறது.

(ஆ) பிணை உத்தரவாதங்களை மீறிய விரிவுரையாளர்கள் 36 பேரிடமிருந்து மீளாய்வு ஆண்டின் திசம்பர் 31 வரை அறவிடவேண்டிய ரூ. 173,752,491 தொகையினுள் 21 வருடங்களுக்கும் 30 வருடங்களுக்கும் இடையிலான காலப்பகுதியிலிருந்து நிலவிவரும் உத்தியோகத்தர்கள் இருவரிடமிருந்து ரூ. 1,156,268 மற்றும் 31 வருடங்களுக்கும் 41 வருடங்களுக்கும் இடையிலான காலப்பகுதியிலிருந்து நிலவிவரும் உத்தியோகத்தர்கள் 09 பேரிடமிருந்து ரூ. 5,826,865 ஆகியன அறவிடப்படாமல் காணப்பட்டன.

(இ) திணைக்கள அபிவிருத்தி நிதியங்கள் மற்றும் பாடநெறி அபிவிருத்தி நிதியங்கள் என்பவத்தின் கீழ் காணப்படும் நிதியங்கள் 42 சார்பாக ரூ. 31,271,054 தொகை வருத்தினுள் பயன்படுத்தப்பட்டு, மீளாய்வு ஆண்டின் திசம்பர் 31-ஆம் திகதி வரையில் 91 நிதியங்கள் சார் கணக்குகளில் ரூ. 264,698,078 தொகையான மீதி காணப்பட்டது. நிதியங்கள் 15 இல் காணப்பட்ட ரூ. 5,602,090 மொத்தத் தொகையானது 07 வருடங்களாக பயன்படுத்தப்படாமல் இருந்தன.

(ஈ) நன்கொடை நிதியங்கள் 06 சம்பந்தமாக பெறப்பட்ட ரூ. 1,127,010 தொகை உட்பட மீளாய்வு ஆண்டின் திசம்பர் 31 ஆம் திகதிக்கு ரூ. 22,056,082 தொகை குறைவாக பயன் படுத்தப்பட்டிருந்தது.

(உ) 2015 திசம்பர் முதல் 2021 ஆண்டு வரை பல்கலைக்கழகத்தின் மூலம் 124 விரிவுரையாளர்கள் சார்பாக வழங்கப்பட்ட நீண்டகால ஆராய்ச்சி மானியங்கள் 155-இல் ரூ. 83,577,700 தொகையான 66 ஆராய்ச்சி மானியங்கள் 2023 திசம்பர் 31 திகதி திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன், அதில் 2016 ஆண்டினுள் அங்கீகரிக்கப்பட்ட ரூ. 4,112,000 பெறுமதி கொண்ட 06 ஆராய்ச்சி மானியங்களும் உள்ளடங்கியிருந்தன.

(ஊ) 2023 திசம்பர் 31 ஆம் திகதியில் 03 வருடங்கள் முதல் 13 வருடங்கள் வரையிலான காலமாக காணப்பட்ட மொத்தம் ரூ. 19,386,959 பெறுமதியான புலமைப்பரிசில் நிதியங்கள் 27 சார்பாக எவ்வித புலமைப்பரிசிலும் வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) பல்கலைக்கழக கவுன்சிலின் தீர்மானத்திற்கு ஏற்ப, நீண்ட காலமாக இயக்கமின்றி காணப்டும் புலமைப்பரிசில் நிதியங்கள் 22-இன் மொத்தம் ரூ. 3,356,683 தொகை 2020 திசம்பர் 31-ஆம் திகதி, விருதுகள் மற்றும் புலமைப்பரிசில்கள் கணக்கு (Award & Scholarship Account) எனும் புதிய நிதியக் கணக்கொன்றுக்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. இந் நிதியங்களால் புலமைப்பரிசில்களை வழங்குவதற்கு

அவசியமான அளவுகோள்கள் 2023 திசம்பர் 31 வரையிலும் தயாரிக்கப்படாததனால் அத்தினத்தில் காணப்பட்ட ரூ. 13,791,376 ஆன மீதி பயன்படுத்துவதற்கு இயலாமல் போயிருந்தது.

(ஏ) மருத்துவ பீடத்தின் இறுதியாண்டு மாணவர்களுக்கு அத்தியவசியமான பேராசிரியர் அலகில் சிகிச்சையக (கிளினிகல்) பயிற்சிகள 2025 சனவரி முதல் ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், தற்போது சிகிச்சையக பயிற்சிளை வழங்கும் நாகொட வைத்தியசாலையில் அவ் வசதிகள் இல்லாததால், 2023 நவம்பர் 15 ஆம் திகதி நடைபெற்ற அரசாங்க பொதுமுயற்சிகள் பற்றிய குழு மற்றும் அதற்கு முன்பு வழங்கப்பட்டிருந்த அமைச்சரவை தீர்மானத்திற்கு ஏற்ப இந்த சிகிச்சையக பயிற்சிக்காக நெவில் பெர்னாந்து வைத்தியசாலையை பயன்படுத்துவதற்கு பரிந்துரைக்கப்பட்டிருந்த போதிலும், அப் பரிந்துரையானது 2024 ஏப்பிரில் வரையிலும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க, 2025 சனவரி மாதமாகும் போது நெவில் பெர்னர்ந்து வைத்தியசாலை இப் பேராசிரியர் அலகுகளைக் கொண்ட அரசாங்க வைத்தியசாலையாக பேணிச்செல்லப்படத் தவறினால் இம் மருத்துவ பீடத்தின் இறுதியாண்டு மாணவ, மாணவிகளுக்கு விதிக்கப்பட்ட காலப்பகுதியினுள் மருத்துவ பட்டத்தைப் பெற்றுக்கொள்வதில் நிச்சயமற்ற நிலையொன்று காணப்படுகின்றது.

(கையொப்பம்)
டபிள்யூ.பீ.சி. விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் தலைமையதிபதி

මොරටුව විශ්වවිද්‍යාලය, ශ්‍රී ලංකාව
மொறட்டுவைப் பல்கலைக்கழகம், இலங்கை
University of Moratuwa, Sri Lanka

12.08.2024

கணக்காய்வாளர் தலைமையதிபதி,
தேசிய கணக்காய்வு அலுவலகம்,
இல. 306/72,
பொல்துவ வீதி,
பத்தரமுல்லை.

மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் 2023 திசம்பர் 31-ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான 2018-இன் 19-ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை.

தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் மூலம் அனுப்பப்பட்ட இல. HED/C/UOM/6/23/FA மற்றும் 2024 யூன் 20-ஆம் திகதியுடைய கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கையுடன் தொடர்பானது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக கீழே தெளிவுபடுத்தல்களை சமர்ப்பிக்கின்றேன்.

2.2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பனவற்றுடன் தொடர்புபடல்.

(அ) கழிவுநீரை சுத்திகரிப்பது சம்பந்தமாக சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளல் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான பரிசீலனை அறிக்கைகள் மற்றும் ஆவணங்கள் வழங்குதல் உட்பட விடய பரப்பைக் கொண்ட ஒப்பந்தமொன்றை பெறுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) வருடாந்த அறிக்கையை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்
2022 ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையை சமர்ப்பிப்பதற்கான அமைச்சரவையின் அங்கீகாரம் துணை வேந்தரவர்களுக்கு 2024.07.18 ஆம் திகதி கிடைத்தது. அவ் அங்கீகாரம் கிடைக்கும் வரை, அவசியமான சகல ஆவணங்களும் பல்கலைக்கழக மட்டத்தில் ஏற்கனவே முழுமையாக தயாரிக்கப்பட்டுள்ளன. எனவே, கல்வி அமைச்சினது குறிப்பிட்ட ஆலோசனையின் படி, 2022 ஆம் ஆண்டு அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றோம்.

(இ) முதலீடு சம்பந்தமாக நிதி அமைச்சரவர்களது அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமை

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் (UGC) உள்ளக கணக்காய்வு சுற்றறிக்கை இலக்கம் 02/2019 இற்கு ஏற்ப, பல்கலைக்கழகத்தின் நாளந்த மிகையான காசு மீதியின் அடிப்படையில் காசு ஒருநாள் முதலீடுகளில் முதலீடு செய்யப்படுகின்றது. அதுதவிர, அரசாங்க மானியத்தை தவிர்த்து, பல்கலைக்கழகத்தின் ஏனைய சுய நிதி அலுவல்களுக்கு உரிய நடைமுறைக் கணக்குகளில் காணப்படும் மேலதிக காசு மீதிகளை அடிப்படையாகக் கொண்டு அவ்வப்போது நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்படுகிறது. இம் முதலீடுகள் மேற்கொள்ளப்படும் போது, சில நாட்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும் வட்டி வீதங்கள் சம்பந்தமான அரச வங்கிகளில் விலை விபரங்கள் வழங்கப்படும். அதற்கேற்றவாறு, நாட்டில் நிலவும் பொருளாதார நிலைமையின் அடிப்படையில் வட்டி விகிதங்களில் அடிக்கடி நிகழும் மாற்றங்களின் காரணமாக சில தினங்களுக்குள் முதலீடுகளை மேற்கொள்ளுதல் வேண்டும். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் கல்வி அமைச்சு ஆகியவற்றின் ஊடாக நிதி அமைச்சிடமிருந்து அடிக்கடி மேற்கொள்ளப்படும் காசு முதலீடுகள் சம்பந்தமாக அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு எடுக்கும் குறிப்பிடத்தக்க காலம் மற்றும் மிகையான காசு மீதி மற்றும் வட்டி வீதத்தின் அடிப்படையில் எதிர்பார்க்கப்படும் முதலீட்டுப் பெறுமதி என்பனற்றில் தளம்பல் நிலைமையேற்பட வாய்ப்புள்ளதால், நிதிக் குழுவின் பரிந்துரை மற்றும் பல்கலைக்கழக கவுன்சிலின் அங்கீகாரம் ஆகியவற்றின் அடிப்படையில் முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

මොරටුව විශ්වවිද්‍යාලය, බණ්ඩාරනායක මාවත, කටුබැද්ද, මොරටුව 10400, ශ්‍රී ලංකාව
மொறட்டுவைப் பல்கலைக்கழகம், பண்டாரநாயக்க மாவத்தை, கட்டுபெத்த, மொறட்டுவை 10400, இலங்கை
University of Moratuwa, Bandaranayake Mawatha, Katubedda, Moratuwa 10400, Sri Lanka
Vice-Chancellor: +94 112 651259 Office: +94 112650188, 2650301, 2650340, 2650441, 2650534
Fax: +94 112 651671 Fax: +94 112650622
www.mrt.ac.lk

(ஈ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கைகள்

i. 2013 ஆம் ஆண்டிலிருந்து வருடாந்த புத்தகக் கணக்கெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருக்காமை. கணக்கெடுப்புச் சபையொன்று ஏற்கனவே நியமனம் செய்யப்பட்டிருப்பதுடன், அதன்படி கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

ii. கல்வி சார் பணியாட்டொகுதியினரின் உள்வருகை மற்றும் வெளிச்செல்கை சார்ந்த உறுதிப்படுத்தல். பல்கலைக்கழக கல்வி சார் பணியாட்டொகுதியினர் 8 மணி நேர இணங்கப்பட்ட அலுவலகக் கடமைகளை நிறைவேற்றும் ஊழியர்களாக வகைப்படுத்தப்பட்டிருக்காததுடன், கற்பித்தல், ஆராய்ச்சி, புத்தாக்கம் மற்றும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் போன்ற குறிப்பிடப்பட்ட துறைகள் சார்பாகவும் பங்களிப்புச் செய்கின்றனர். எனவே, உள்வருகை மற்றும் வெளிச்செல்கை பதிவேட்டில் குறிப்பிடப்படுவதால் மேற்படி விடயங்கள் சம்பந்தமாக வரையறைகளை ஏற்படுத்தல் பயனளிக்கத்தக்க சேவையினைப் பெற்றுக்கொள்ளல் சார்பாக சவாலாக அமையலாம் என்பதைச் சுட்டிக்காட்டுகிறேன். நிலவுகின்ற நிலைமையின் காரணமாக பல்கலைக்கழகத்திலிருந்து விலகிச் செல்லாமல் கல்வி சார் பணியாட்டொகுதியினரை நிறுத்தி வைத்திருப்பது மிகவும் சிரமமாக சந்தர்ப்பத்தில், மேலதிக கட்டுப்பாடுகளை விதிப்பதால் நிலவுகின்ற பணியாட்டொகுதியினரை நிறுத்தி வைத்திருக்கும் பிரச்சினையை மேலும் சிக்கலாக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன். எவ்வாறிருப்பினும் மாதந்தச் சம்பளம் கொடுக்கும் போது ஊழியர்களது உள்வருகை/ சேவையினை உறுதிப்படுத்துவதற்காக ஒவ்வொரு கல்வி சார் மற்றும் கல்வி சாரா பணியாட்டொகுதி அங்கத்தவர்களினதும் உள்வருகை/ சேவை அறிக்கை கற்கைத் திணைக்கள மற்றும் பிரிவுத் தலைவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படுகிறது என்பதையும் கற்கைத் திணைக்கள வேலைப் பழு உறுதிப்படுத்தல் ஊடாக அவர்களால் நிறைவேற்றப்பட வேண்டிய சேவைசார் பிரிவுத் தலைவர்கள் மூலம் உறுதிப்படுத்தப்படுகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(உ) நிதி ஒழுங்குவிதிகளுக்கு இணங்க, கடன்கொடுநர்களின் நிலுவைகள் தீர்க்கப்படாமை

இது தொடர்பாக உரிய பிரிவுகளுக்கு அறியப்படுத்தப்பட்டுள்ளதுடன், சம்பந்தப்பட்ட சிட்டைகள் மற்றும் தர அறிக்கைகள் பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின் கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்குத் தேவையான ஆலோசனைகள் வழங்கப்படும்.

(ஊ) பிணை உத்தரவாதங்களை மீறிய விரிவுரையாளர்கள் 20 பேரிடமிருந்து அறவிடப்பட்ட நிதியை திறைசேரிக்கு அனுப்பிவைக்கத்தவறியமை

கல்வி அமைச்சினது செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்ட திறைசேரியின் செயலாளரது இலக்கம் BD/ HRD/126/214/19/2023 கொண்ட கடிதத்தின் 5 வது வாக்கியம் மற்றும் 2023.01.18 ஆம் திகதியுடைய கடிதத்தில் பிணை உத்தரவாதங்களை மீறியதனால் கிடைக்கும் நிதிகள் திரட்டு நிதியத்திற்கு வரவு வைப்பது அவசியம் எனக் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், இது வரை இது தொடர்பாக சுற்றறிக்கை வெளியிடப்படாததுடன், மொறட்டுவை பல்கலைக்கழகமானது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மூலம் வெளியிடப்பட்ட பிணை உத்திரவாதங்களை மீறியதனால் அறவிடப்பட்ட நிதிப் பயன்பாடு சம்பந்தமான சுற்றறிக்கைகள் மற்றும் கடிதங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கேற்ப, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை இல. 737 இன் பிரகாரம், பிணை உத்தரவாதகங்கள் மீறப்பட்டதனால் அறவிடப்பட்ட நிதி நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்படுவதுடன், ஈட்டப்படும் வட்டி வருமானம் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்கள் மற்றும் விடயங்கள் சார்பாக பயன்படுத்தப்படுகிறது.

மேலும், 2023.04.03 ஆம் திகதியுடைய அமைச்சரவைத் தீர்மானத்தின் படி, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மூலம் வெளியிடப்பட்ட 2023.07.04 ஆம் திகதியுடையை நிதிச் சுற்றறிக்கை இல. 05/2023 இன் பிரகாரம், பிணை உத்திரவாத மீறல் விதியானது கல்வி சார் பணியாட்டொகுதியினருக்கான அவர்களது வருட ஒய்வு விடுவிப்புக் கற்கை விடுமுறைக்கு உரிய விமானப் பயணச் சீட்டுக்கள் கொள்வனவு செய்வதற்காகப் பயன்படுத்தப்படுகிறது.

2.3 ஏனைய விடயங்கள்

(அ) நகர அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 1,400,000.00 தொகை நினைவூட்டல் கடிதமொன்று அனுப்பிவைக்கப்படும் என்பதுடன், அத்தொகையை அறிவீடுசெய்ய இயலுமான அதிகபட்ச முயற்சிகளை மேற்கொண்டு, மேலதிக பின்தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

(ஆ) பிணை உத்தரவாதங்களை மீறிய விரிவுரையாளர்களிடமிருந்து பெறவேண்டிய தொகைகள்

பிணை உத்தரவாதங்களை மீறிய விரிவுரையாளர்களிடமிருந்து அறவிடுவதற்குத் தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் பிணை உத்தரவாதங்களை மீறிய விரிவுரையாளர்களிடமிருந்து நிதியை அறவீடு செய்ய செயல்திறன் மிக்க வகையில் செயலாற்றுதல் மற்றும் பிணை மீறல்களை அறவீடு

செய்வதற்கான மீளாய்வுக் குழுவினது பரிந்துரைகளை அமுலாக்குவதற்காக அதனது கூட்டங்களை அடிக்கடி நடத்துவதற்கும் ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது.

(இ) பயன்படுத்தப்படாத திணைக்கள அபிவிருத்திக் கணக்குகள் மற்றும் பாடநெறி அபிவிருத்திக் கணக்குகள்
இத் திணைக்கள அபிவிருத்திக் கணக்குகளுக்கான நிதி வழங்கப்படுவது சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் மூலம் சுய நிதியீட்டல் அடிப்படையில் நடத்தப்படுகின்ற பல்வேறு பாடநெறி ஆராய்ச்சிகள் மற்றும் ஆலோசனைச் சேவைகள் மூலமாகும். அதன் போது, இந்நிதி பணியாட்டொகுதியினர் மற்றும் மாணவர்கள் ஆகியோரின் செயற்பாடுகள் சார்பாகவும், ஆய்வுகூடம் மற்றும் கற்கைத் திணைக்கள உபகரணங்கள் கொள்வனவுக்காகவும் பயன்படுத்தப்படுகின்றது. இந்நிதியானது ஒரு வருடமோ அல்லது சில வருடங்களோ பயன்படுத்தப்படாமல் இருந்தாலும், அந்நிதி எதிர்காலத்தில் உரிய விடயங்களுக்காகப் பயன்படுத்தப்படும். எனவே, இத்திணைக்கள அபிவிருத்திக் கணக்குகள் சம்பந்தப்பட்ட கற்கைத் திணைக்களங்களின் அபிவிருத்திக்காக மற்றும் எதிர்காலத் தேவைகளுக்காக சுய நிதி சார் நடவடிக்கைகள் மூலம் ஈட்டப்பட்ட வருமானத்திலிருந்து ஒதுக்கமாகப் பேணிச்செல்லப்படுகிறது. அதற்கேற்றவாறு பல்கலைக்கழகத்தின் திணைக்களங்களும் காணப்படும் வளங்களைப் பேணுதலாகப் பயன்படுத்துவதன் ஊடாகவே அலுவல்களை நிறைவேற்றி வருகின்றன. இக்கணக்குகள் பயன்படுத்தப்படுவது அத்தியவசியமான வேளையில் மாத்திரமேயாகும். இக்கணக்குகள், குறிப்பிட்ட காலவரையறையினுள் பயன்படுத்த வேண்டிய வெளியக நிறுவனமொன்றின் மூலம் வழங்கப்படுகின்ற நிதியல்ல என்பதால், அதனைப் பயன்படுத்தாமல் சில வருடங்கள் வைத்திருப்பதனால் சிக்கல் எதுவுமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(ஈ) நன்கொடை நிதி குறைவான பயன்பாடு
இந்நன்கொடை நிதி தொடர்பில் முழுமையாக ஆராய்ந்து பார்த்து, அவசியமான மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

(உ) பூரணப்படுத்தப்படாத ஆராய்ச்சி மானியங்கள்
பூரணப்படுத்தப்படாமல் காணப்படும் ஆய்வு மானியங்களுக்குரிய செயற்பாடுகளை துரிதப்படுத்துவதற்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

(ஊ), (எ) புலமைப்பரிசில் நிதியங்களின் பயன்பாடு
நிகழ்கால தேவைப்பாடுகளுக்குப் பொருந்துகின்ற புதிய அளவுகோல்களை தயார்படுத்துவதன் மூலம் இந் நிதியங்களைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஏ) நெவில் பர்னாந்து வைத்தியசாலையை பேராசிரியர் அலகுகளைக் கொண்ட அரசாங்க வைத்தியசாலையொன்றாக தொடர்ந்தும் பேணிச் செல்லல்.
மொறட்டுவை பல்கலைக்கழக மருத்துவ பீட இறுதியாண்டு மருத்துவ மாணவ, மாணவிகளுக்கு அத்தியவசியமான பேராசிரியர் அலகினை நிறுவுதல் சம்பந்தமான சிக்கலைத் தீர்ப்பதற்கான சனாதிபதி அவர்களது செயலாளர், சுகாதார அமைச்சின் செயலாளர், கல்வி அமைச்சின் செயலாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர், திறைசேரி உத்தியோகத்தர்கள், பல்கலைக்கழக துணைவேந்தர் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் 2024.05.17 ஆம் திகதி சனாதிபதி செயலகத்தில் கலந்துரையாடலொன்று நடத்தப்பட்டது. அதில், நெவில் பர்னாந்து வைத்தியசாலையை அரசாங்கத்திற்கு கையேற்பதற்கும், ஆகஸ்ட் மாத ஆரம்பத்திலிருந்து மருத்துவ பீடத்தின் கற்கை சார் அலுவல்களை மேற்கொள்வதற்கும் அவசியமான வசதிகள் மற்றும் நிதி ஏற்பாடுகள் ஆகியவற்றை வழங்குவதற்கும் இணக்கம் காணப்பட்டுள்ளது. அதற்கிணங்க, இச் செயற்பாடுகள் தடையேதுமின்றி நிகழ்ந்தால், 2025 சனவரி அளவில் இறுதியாண்டு மருத்துவ மாணவ, மாணவிகளின் சிகிச்சையக (கிளினிகல்) செயற்பாடுகள் தொடர்பாக சிக்கல் எதுவும் ஏற்படமாட்டாது.

(கையொப்பம்)
பேராசிரியர் என்.டீ. குணவர்தன
துணை வேந்தர்.

## 4.1 நிதி நிலைமை அறிக்கை

| | குறிப்பு | 2023<br>ரூ.. | 2022<br>Restated<br>ரூ.. | 2022<br>Audited<br>ரூ. |
|---|---|---|---|---|
| ஆதனம், பொறி, உபகரணம் | 3 | 8,848,936,154 | 8,802,369,072 | 8,791,422,841 |
| கட்புலனாகாத சொத்துக்கள் | 4 | 10,230,066 | 10,476,153 | 10,476,153 |
| முடிவுறாத வேலை | 5 | 689,952,049 | 800,006,666 | 800,006,666 |
| | | **9,549,118,269** | **9,612,851,891** | **9,601,905,660** |
| நடைமுறைச் சொத்துக்கள் | | | | |
| இருப்புக்கள் | 6 | 28,586,053 | 26,432,041 | 26,432,041 |
| முதலீடுகள் | 7 | 2,458,798,235 | 1,902,499,871 | 1,902,499,871 |
| பணியாளர் கடன் மற்றும் முற்பணம் | 8 | 33,803,085 | 35,709,829 | 35,709,829 |
| பெறவேண்டியவைகள் | 9 | 173,755,105 | 171,757,849 | 171,757,849 |
| முற்கொடுப்பனவுகள் | | 3,951,504 | 8,314,917 | 8,314,917 |
| முற்கொடுப்பனவுகள் | 10 | 55,855,511 | 79,866,308 | 79,866,308 |
| முற்கொடுப்பனவுகள் | 11 | 765,431,461 | 512,233,716 | 512,233,716 |
| | | **3,520,180,953** | **2,736,814,531** | **2,736,814,531** |
| மொத்த சொத்துக்கள் | | **13,069,299,223** | **12,349,666,422** | **12,338,720,191** |
| பொறுப்புக்கள் | | | | |
| நடைமுறை பொறுப்புக்கள் | | | | |
| செலுத்தவேண்டியவைகள் | 12 | 124,294,064 | 212,158,575 | 209,108,434 |
| வைப்பு செலுத்தவேண்டியவை | 13 | 16,047,087 | 23,400,408 | 23,400,408 |
| அட்டுறுச் செலவுகள் | - | 156,404,608 | 136,735,421 | 136,735,421 |
| பிற்போடப்பட்ட வருமானம் | 14 | 895,225,148 | 919,769,273 | 919,769,273 |
| | | **1,191,970,908** | **1,292,063,676** | **1,289,013,535** |
| நடைமுறையல்லா பொறுப்புகள் | | | | |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | 15 | 849,310,313 | 807,324,732 | 807,324,732 |
| | | **849,310,313** | **807,324,732** | **807,324,732** |
| மொத்த பொறுப்புகள் | | **2,041,281,221** | **2,099,388,408** | **2,096,338,267** |
| தேறிய சொத்துக்கள் | | **11,028,018,002** | **10,250,278,013** | **10,242,381,924** |
| தேறிய சொத்துக்கள்/ சமபங்கு | | | | |
| மூலதன மானியம் - செலவிடப்படாத | 16 | 77,787,337 | - | - |
| திரண்ட நிதியம் - மீண்டுவரும் | | 3,137,854,274 | 2,730,378,591 | 2,730,378,591 |
| திரண்ட நிதியம் - மூலதனம் | 17 | 836,597,167 | 883,724,614 | 945,626,459 |
| ஆய்வு மானியங்கள் | 18 | 84,202,667 | 107,007,633 | 107,007,633 |
| | | **4,136,441,445** | **3,721,110,839** | **3,783,012,684** |
| ஒதுக்கங்கள் | | | | |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | | 5,238,349,291 | 5,238,349,291 | 5,168,551,357 |
| விளையாட்டு அபிவிருத்தி ஒதுக்கம் | | 1,963,719 | 1,624,664 | 1,624,664 |
| | | **5,240,313,009** | **5,239,973,955** | **5,170,176,021** |
| நிதியங்கள் | | | | |
| கட்டுப்படுத்தப்பட்ட நிதி | 19 | 1,604,234,424 | 1,245,050,981 | 1,245,050,981 |
| அறக்கட்டளை நிதி | 20 | 47,029,123 | 44,142,238 | 44,142,238 |
| | | **1,651,263,548** | **1,289,193,219** | **1,289,193,219** |
| மொத்த தேறிய சொத்து/ சமபங்கு | | **11,028,018,002** | **10,250,278,013** | **10,242,381,924** |

நிதிக் கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பகுதியாக பக் கம் 166 முதல் 185 வரையில் தரப்பட்டுள்ள குறிப்புக்களும் அமைதல் வேண்டும்.
இந் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் என்பவற்றுக்கு நிருவாக சபை பொறுப்பாக உள்ளது.
நிருவாக சபைக்காகவும் அது சார்பாகவும் எம்மால் அங்கீகரிக்கப்பட்டு, கையொப்பம் இடப்பட்டுள்ளது

| | | | |
|---|---|---|---|
| பேராசி. என்.டீ. குணவர்தன<br>உப வேந்தர் | Dr. டீ.பீ. சந்திரசேக்கர<br>பிரதி உப வேந்தர்<br>பிரதி கணக்குகூர் | டீ.எல்.டீ.ஜயந்த<br>பதிவாளர் | கே.ஏ.டீ. புஷ்பகீர்த்தி<br>நிதியாளர் |

## 4.2 நிதிச் செயலாற்றல் அறிக்கை

| | குறிப்பு | 2023<br>ரூ. | 2022<br>காட்டப்பட்டுள்ளது<br>ரூ. | 2022<br>கணக்காய்வு செய்யப்பட்டது<br>ரூ. |
|---|---|---|---|---|
| **(a). மீண்டெழும் வருமானம்** | | | | |
| நாணயமாற்று அல்லாத கொடுக்கல் வாங்கல் மூலம் | | | | |
| மீண்டெழும் வருமானம் | | 3,576,000,000 | 3,322,000,000 | 3,322,000,000 |
| மாணவர் உதவுதொகை | | 11,112,000 | 13,592,000 | 13,592,000 |
| அறக்கட்டளை புலமைப்பரிசில் | | - | 175,000 | 175,000 |
| வெளியக ஆய்வு மானிய வருமானம் | | 50,285,011 | 28,629,756 | 28,629,756 |
| | | **3,637,397,011** | **3,364,396,756** | **3,364,396,756** |
| நாணயமாற்று கொடுக்கல் வாங்கல் மூலம் மூலதன வருமானம் | | | | |
| மாணவர்கள் மூலம் வருமானம் | 21 | 13,399,143 | 15,824,533 | 15,824,533 |
| வட்டி வருமானம் | 22 | 348,907,512 | 231,987,174 | 231,987,174 |
| ஏனைய வருமானம் | 23 | 35,278,839 | 22,715,206 | 22,715,206 |
| கிரய மீள அறவீட்டு நடவடிக்கை மூலம் பெறுவனவு | 36 | 709,690,560 | 682,230,502 | 682,230,502 |
| | | **1,107,276,054** | **952,757,416** | **952,757,416** |
| மொத்த மீண்டெழும் வருமானம் | | **4,744,673,065** | **4,317,154,172** | **4,317,154,172** |
| **(b). மூலதன வருமானம்** | | | | |
| நாணயமாற்று அல்லாத கொடுக்கல் வாங்கல் மூலம் மூலதன வருமானம் | | | | |
| மூலதன மானியம் | 24 | 318,554,739 | 309,545,263 | 309,545,263 |
| மூலதன நன்கொடை | 25 | 143,039,380 | 75,892,809 | 75,892,809 |
| | | **461,594,119** | **385,438,071** | **385,438,071** |
| நாணயமாற்று கொடுக்கல் வாங்கல் மூலம் மூலதன வருமானம் | | | | |
| உருவாக்கப்பட்ட நிதி மூலதன பங்களிப்பு | 26 | 86,225,759 | 173,871,215 | 173,871,215 |
| | | **86,225,759** | **173,871,215** | **173,871,215** |
| மொத்த மூலதன வருமானம் | | **547,819,878** | **559,309,286** | **559,309,286** |
| மூலதன வருமானம் (a+b) | | **5,292,492,943** | **4,876,463,458** | **4,876,463,458** |
| **(C). தொழிற்பாட்டு செலவினம்** | | | | |
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 27 | (2,862,654,987) | (2,846,363,065) | (2,846,363,065) |
| பிரயாணச் செலவும், இணைந்த படியும் | 28 | (1,679,896) | (13,033,876) | (13,033,876) |
| நலன்புரி சேவைகள் | 29 | (64,932,303) | (48,813,508) | (48,813,508) |
| ஏனைய தொழிற்பாட்டு செலவுகள் | 30 | (188,622,743) | (144,557,240) | (144,557,240) |
| மாணவர்களுக்கு நிதி உதவிகள் | 31 | (12,448,000) | (13,767,000) | (13,767,000) |
| ஒப்பந்த சேவைகள் | 32 | (343,063,927) | (205,775,255) | (205,775,255) |
| வழங்கல்களும் நுகர்வுகளும் | 33 | (85,541,113) | (64,381,447) | (64,381,447) |
| பராமரிப்புகள் | 34 | (76,078,626) | (66,157,078) | (66,157,078) |
| நிதிச் செலவு | 35 | (2,865,736) | (6,500) | (6,500) |
| வெளியக ஆய்வு மானிய செலவினம் | | (50,285,011) | (28,629,756) | (28,629,756) |
| கிரய அறவீட்டு செயற்பாடு சார் செலவு | 36 | (709,690,560) | (682,230,502) | (682,230,502) |
| | | **(4,397,862,901)** | **(4,113,715,225)** | **(4,113,715,225)** |
| **(d). தொழிற்பாடு அல்லாத செலவினம்** | | | | |
| பெறுமானத்தேய்வு | | (571,525,398) | (623,866,237) | (621,526,459) |
| அருவ சொத்துக்களின் கடன்தொகை நீக்கம் | | (2,779,894) | (1,751,037) | (1,751,037) |
| புனரமைப்பு கருத்திட்டங்கள் சார் பராமரிப்பு செலவு | | (4,725,822) | - | - |
| கற்கைசார் ஆய்வுகள் | | (22,138,595) | (50,371,453) | (50,371,453) |
| | | **(601,169,709)** | **(675,988,728)** | **(673,648,950)** |
| மொத்த செலவினம் (b+d) | | **(4,999,032,611)** | **(4,789,703,954)** | **(4,787,364,176)** |
| (e) காலப்பகுதிக்கான மீண்டெழும் மிகை/ (பற்றாக்குறை) (a-c) | | **346,810,163** | **203,438,946** | **203,438,946** |
| (f) காலப்பகுதிக்கான மூலதன மிகை/ (பற்றாக்குறை) (b-d) | | **(53,349,831)** | **(116,679,442)** | **(114,339,664)** |
| காலப்பகுதிக்கான மொத்த மிகை/ (பற்றாக்குறை) (e+f) | | **293,460,333** | **86,759,504** | **89,099,282** |

| | | | |
|---|---|---|---|
| பேராசி. என்.டி. குணவர்தன<br>உப வேந்தர்<br>கணக்குக்கூர் அலுவலர் | Dr. டி.பி. சந்திரசேக்கர<br>பிரதி உப வேந்தர்<br>பிரதி கணக்குகூர் அலுவலர் | டி.எல்.டி.ஜயந்த<br>பதிவாளர் | கே.ஏ.டி. புஷ்பகீர்த்தி<br>நிதியாளர் |

## 4.3 தேறிய சொத்துக்கள் மாற்றல் கூற்று

| | சமபங்கு | | | | விளையாட்டு ஈ அபி. ஒதுக்கம்மக | மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | அறக்கட்டளை நிதி | சுடடுப்பாட்டு நிதி |
|---|---|---|---|---|---|---|---|---|
| | திரண்டநிதி மீண்டுவரும் | திரண்டநிதி மூலதனம் | மூலதன மானியம் செலவிடாத | ஆய்வு மானியம் | | | | |
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| 2022-01-01 இல் உள்ள படி மீதி | 2,398,881,998 | 1,000,404,056 | 98,496,274 | 111,040,968 | 1,541,168 | | 41,453,360 | 1,176,107,957 |
| (மீள காட்டப்பட்டுள்ளது) (மீள காட்டப்பட்டுள்ளது) | 86,759,504 | | | | | | | |
| மாற்றல் (மீள காட்டப்பட்டுள்ளது) | 116,679,442 | (116,679,442) | | | | | | |
| முந்திய ஆண்டு சார் வருமானம் | 137,609,674 | | | | | | | |
| முந்திய ஆண்டு சார் செலவு | (9,552,027) | | | | | | | |
| பெறுவனவுகள் | | | 196,048,988 | 30,248,852 | 19,500 | | 2,200,000 | 434,384,863 |
| வட்டி பெறுவனவுகள் | | | | | 63,996 | | 2,687,563 | |
| கடன்தீர் நிதி சீராக்கல் | | | | | | | | |
| சீராக்கல்கள் | | | | | | | | |
| சொத்துக்கள் | | | (239,295,549) | | | | | |
| கையகப்படுத்தல் | | | (153,464,625) | | | | | |
| SP இன் பிற மூலதன சொத்துக்கள் | | | (50,371,453) | | | | | |
| கொடுப்பனவுகள் | | | | (34,282,187) | | | (2,198,685) | (191,570,625) |
| அபிவி. நிதியம் மூலம் மாற்றல் நிதிகள் | | | 148,586,366 | | | | | (173,871,215) |
| **2022.12.31 இல் உள்ளபடி மீதி(மீள காட்டப்பட்டுள்ளது)** | **2,730,378,591** | **883,724,614** | - | **107,007,633** | **1,624,664** | | **44,142,238** | **1,245,050,981** |
| ஆண்டின் மிகை/ (பற்றாக்குறை) | 293,460,333 | - | | | | | | |
| மாற்றல்கள் | 53,349,831 | (53,349,831) | | | | | | |
| முந்திய ஆண்டு சார் வருமானம் (அட்டவணை 9+10 ) | 70,984,585 | 80,997,986 | | | | | | |
| முந்திய ஆண்டு சார் செவினம் (அட்டவணை 11+12 ) | (10,319,066) | (74,775,602) | | | | | | |
| பெறுவனவுகள் | | | 473,913,635 | 30,232,810 | 161,500 | | 50,000 | 948,396,079 |
| ıவட்டி பெறுவனவுகள் | | | | | 177,555 | | 4,206,626 | |
| கடன்தீர் நிதி சீராக்கல் | | | | | | | | |
| சீராக்கல் | | | | | | - | | |
| சொத்துக்கள் கையகப்படுத்தல் | | | (132,585,898) | (2,752,765) | | | | |
| கருத்திட்டச் செலவினம் | | | (163,830,246) | | | | | |
| பிற் மூலதன நடவடிக்கை சார் செலவு கொடுப்பனவுகள் | | | (22,138,595) | | | | | |
| அபிவி. நிதி மூலம் மாற்றல் | | | | (50,285,011) | | | (1,369,740) | (666,784,195) |
| 2023.12.31 இல் உள்ளபடி மீதி | | | (77,571,559) | | | | | 77,571,559 |
| 2023.12.31 இல் உள்ளபடி மீதி | **3,137,854,274** | **836,597,167** | **77,787,337** | **84,202,667** | **1,963,719** | | **47,029,123** | **1,604,234,424** |

## 4.4 காசுப்பாய்ச்சல் கூற்று

| | குறிப்பு | 2023<br>ரூ. | 2022<br>காட்டப்பட்டுள்ளது ரூ<br>ரூ. | 2022<br>கணக்காய்வு செய்யப்பட்டுள்ளது<br>ரூ. |
|---|---|---|---|---|
| செயற்பாட்டு நடவடிக்கை மூலமான காசுப்பாய்ச்சல் | | | | |
| சாதாரண நடவடிக்கைகளினால் மிகை/ (பற்றாக்குறை) | | 293,460,333 | 86,759,504 | 89,099,282 |
| சீராக்கல்கள் | | | | |
| தேய்மானம் | 3 | 571,525,398 | 623,866,237 | 621,526,459 |
| கட்புலணாகாத சொத்துகள் பணமதிப்பிழப்பு | 4 | 2,779,894 | 1,751,037 | 1,751,037 |
| மூலதன வருமானம் | 24/25/26 | (547,819,878) | (559,309,286) | (559,309,286) |
| கடந்த ஆண்டு சம்பந்தமான வருமானம் மற்றும் செலவினம் | | 59,652,882 | 131,108,992 | 131,108,992 |
| வட்டி வருமானம் | 22 | (348,907,512) | (231,987,174) | (231,987,174) |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | 15 | 147,177,711 | 107,782,891 | 107,782,891 |
| பழைய பொருட்கள் விற்பனை மூலம் இலாபம்/ நட்டம் | | (2,204,358) | - | - |
| நிதி செலவு | 35 | 2,660 | 6,500 | 6,500 |
| வெளிநாட்டு நாணயமாற்று நட்டம் | 35 | 2,863,076 | - | - |
| தொழிற்படு மூலதன அதிகரிப்பு/குறைவு | | | | |
| இருப்பு அதிகரிப்பு / குறைவு | 5 | (2,154,012) | (3,159,690) | (3,159,690) |
| ஏனைய நடைமுறைச் சொத்து அதிகரிப்பு / குறைவு | | 4,772,433 | (153,339,758) | (153,339,758) |
| நடைமுறை பொறுப்பு அதிகரிப்பு / குறைவு | | (97,042,627) | 104,239,790 | 104,239,790 |
| ஆய்வு மானியம் சார் அதிகரிப்பு / குறைவு | | (22,804,966) | (4,033,335) | (4,033,335) |
| பணியாளர் கடன் மற்றும் முற்பணம் மூலம் வட்டி | 22 | 1,431,836 | 1,512,822 | 1,512,822 |
| பணிக்கொடை செலுத்தியது | | (105,192,130) | (50,399,512) | (50,399,512) |
| நிதி செலவு செலுத்தியது | 35 | (2,660) | (6,500) | (6,500) |
| தொழிற்பாட்டு நடவடி மூலமான தேறிய காசுப்பாய்ச்சல் | | **(42,461,920)** | **54,792,518** | **54,792,518** |
| முதலீட்டு நடவடிக்கை மூலம் காசுப்பாய்ச்சல் | | | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் கையகப்படுத்தல் (அரச மானியம்) | 3 | (132,585,898) | (203,475,852) | (203,475,852) |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் கையகப்படுத்தல் (உருவா. நிதி) | 3 | (48,924,961) | (167,921,186) | (167,921,186) |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் கையகப்படுத்தல் (நன்கொடை) | 3 | (143,039,380) | (75,892,809) | (75,892,809) |
| முதலீடுகள் மீளப்பெறல் | 7 | 275,307,914 | - | - |
| முடிவுறாத வேலை அதிகரிப்பு / குறைவு | 5 | (159,190,749) | (149,993,653) | (149,993,653) |
| சொத்துக்கள் விற்பனை | | 3,069,819 | - | |
| புதிய முதலீடுகள் | 7 | (690,173,492) | (902,200,000) | (902,200,000) |
| முதலீடுகளிலிருந்து வட்டி திரண்டது (நீண்ட காலம்) | 7 | (141,432,786) | (33,410,300) | (33,410,300) |
| அறக்கட்டளை நிதி சார்பாக பெற்ற வங்கி வட்டி | 20 | 4,206,626 | 2,687,563 | 2,687,563 |
| முதலீடுகளிலிருந்து வட்டி | 22 | 347,475,676 | 230,474,353 | 230,474,353 |
| முதலீட்டு நடவடிக்கை மூலம் தேறிய காசுப்பாய்ச்சல் | | **(685,287,231)** | **(1,299,731,885)** | **(1,299,731,885)** |
| நிதியிடல் நடவடிக்கை மூலமான காசுப்பாய்ச்சல் | | | | |
| திறைசேரியிடமிருந்து மூலதன மானியம் | | 350,000,000 | 140,200,000 | 140,200,000 |
| மேலதிக உள்வாங்கல் சார்பான UGC மானியம் | | 5,000,000 | 15,000,000 | 15,000,000 |
| AHEAD கருத்த்திட்டம் மூலம் கிடைத்த நிதி | | 118,913,635 | 55,848,988 | 55,848,988 |
| PPE கொள்வனவுக்காக உருவாக்கப்பட்ட வருமானம் மூலம் நிதிE | 26 | 86,225,759 | 173,871,216 | 173,871,216 |
| PPE கைகொள்வதற்கான நன்கொடைகள் | 25 | 111,919,058 | 23,263,323 | 23,263,323 |
| PPE கையகப்படுத்துவதற்கான தேறிய மானியம் | 25 | 31,120,322 | 52,629,486 | 52,629,486 |
| அறக்கட்டளை நிதி மூலம் செலுத்திய வெகுமதி | 20 | (1,369,740) | (2,198,685) | (2,198,685) |
| அறக்கட்டளை நிதியத்திற்கு கிடைத்தவை | 20 | 50,000 | 2,200,000 | 2,200,000 |
| கட்டுப்படுத்தப்பட்ட நிதியத்திற்கு கிடைத்தவை | 19 | 948,396,079 | 434,384,863 | 434,384,863 |
| கட்டுப்படுத்தப்பட்ட நிதியத்திலிருந்து செலுத்தியது | 19 | (666,784,195) | (365,441,840) | (365,441,840) |
| வெளிநாட்டு நாணயமாற்று நட்டம் | | (2,863,076) | - | |
| விளையாட்டு அபிவிருத்தி ஒதுக்கம் சார் தேறிய அதிகரிப்பு | | 339,055 | 83,496 | 83,496 |
| நிதியிடல் நடவடிக்கை மூலம் தேறிய காசுப்பாய்ச்சல் | | **980,946,896** | **529,840,848** | **529,840,848** |
| காசும் காசுக்கு சமமானவை சார் தேறிய அதிகரிப்பு/ (குறைவு) | | 253,197,745 | (715,098,519) | (715,098,519) |
| காலப்பகுதி ஆரம்பத்தில் காசும் காசுக்கு சமமானவையும் | | 512,233,716 | 1,227,332,235 | 1,227,332,235 |
| காலப்பகுதியின் இறுதியில் காசும் காசுக்கு சமமானவையும் | 37 | **765,431,461** | **512,233,716** | **512,233,716** |

## 4.5 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

### 01. பதிலாள் உரிமைத்தத்துவம்

### 1.1 சட்ட மற்றும் இருப்பிட அமைப்பு

மொறட்டுவைப் பல்கலைக்கழகம், 1978-ஆம் ஆண்டின் 16-ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தினால் நிறுவப்பட்ட சட்டபூர்வமான நிறுவகமொன்று என்பதுடன், இலங்கையில் மொறட்டுவை, கடுபெத்த, பண்டாரநாயக்க மாவத்தை எனும் இடத்தில் அமைந்துள்ளது.

### 1.2 வெளியிடுவதற்கான அங்கீகாரமளிக்கும் திகதி

நிருவாக சபையின் மூலம் நிதிக் கூற்றுக்களை வெளியிடுவதற்கான அங்கீகாரம் 2024 யூன் 03 ஆம் திகதி வழங்கப்பட்டது.

### 1.3 பிரதான செயற்பாடுகள் மற்றும் தொழிற்பாடுகளின் தன்மை

- உலக சவால்களுக்கு முகங்கொடுக்கும் வகையில் ஆராய்ந்தறியும் மனோபாவத்தையும் அறிவு மற்றும் திறன்களை விருத்தி செய்வதனையும் போசிக்கக் கூடியதான தொழில்நுட்பம் மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைகளில் கல்வியை வழங்குதல்.

- கல்வி வரையறைகளை விருத்தி செய்வதற்காக மற்றும் தேசிய தொழில்நுட்பத் திறமைகளை உயர்வடையச்செய்வதற்காக தேசிய ரீதியில் பொருத்தமான மற்றும் உயர் விளைவுகள் கொண்ட ஆய்வினை மேற்கொள்ளுதல்.

- சர்வதேச ரீதியிலான இடத்தைக் கொண்டதொரு இலங்கைப் பல்கலைக்கழகமாக நாட்டிற்கும் கைத்தொழில் துறைக்கும் சமூகத்திற்கும் நிபுணத்துவ சேவைகளை வழங்குதல்.

- இலங்கையின் நிலைத்திருக்கும், விஞ்ஞான, தொழில்நுட்ப, சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிப்புச்செய்தல்.

### 1.4 நிதியாண்டு காலப்பகுதி

மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் நிதியாண்டு காலப்பகுதி, 2023 சனவரி 1-ம் திகதி முதல் 2023 திசம்பர் 31-ஆம் திகதி வரையிலான பன்னிரெண்டு மாதக் காலப்பகுதியை பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

## SIGNIFICANT ACCOUNTING POLICIES

### 02. முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள்

### 2.1 முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு

மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் நிதி சார் அறிக்கைகள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகள் மற்றும் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தினால் வெளியிடப்பட்ட இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்கள் (SLPSAS) ஆகியவற்றுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன.

நிதி அறிக்கைகள் தயாரிக்கும் போது பயன்படுத்தப்படும் பிரதான கணக்கீட்டு கொள்கைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. வேறு வகையில் குறிப்பிடப்படாதன தவிர இக் கொள்கைகள் நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கபடும் காலப்பகுதி முழுவதிலும் ஒத்த வகையில் பிரயோகிக்கப்பட்டுள்ளது.

### 2.2 நிதி அறிக்கைகள் தயாரிப்பதற்கான அடிப்படை

#### 2.2.1 தொடர்ந்து செல்லுதல் எண்ணக்கரு

மொறட்டுவைப் பல்கலைகழகம் தொடர்ச்சியாக நடாத்திச் செல்வதற்கான ஆற்றல் தொடர்பாக மதிப்பீடொன்று செய்யப்பட்டுள்ளது. பல்கலைக்கழகத்தின் வசம் எதிர்காலத்தில் தொடர்ச்சியாக தொழிற்பாடுகளை மேற்கொள்வதற்குப் போதுமான வளங்கள் இருக்கின்றன என்பது சம்பந்தமாக பல்கலைக்கழக கவுன்சிலுக்கு நியாயமான எதிர்பார்ப்பு உள்ளது. எதிர்காலம் தொடர்பாக நிலவும் சகல தகவல்களையும் கவனத்தில் கொண்டு, பல்கலைக்கழகம் கலைக்கப்படுவதற்கான அல்லது தொழிற்பாடுகளை இடைநிறுத்துவதற்கான அவசியமொன்று எழுமென எதிர்பார்க்கவில்லை. எனவே, பல்கலைக்கழகத்தின் நிதிக் கூற்றுக்கள் தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவின் அடிப்படையில் தொடர்ந்தும் தயாரிக்கப்படுகின்றன.

#### 2.2.2 ஒத்துப்போவது பற்றிய அறிக்கை

நிதிசார் அறிக்கைகளானது, நிதி நிலைமைக் கூற்று, நிதி செயலாற்றல் பற்றிய கூற்று, உரிமைப்பங்கு மாற்றல் பற்றிய கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதி அறிக்கைகளுக்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. இந் நிதி அறிக்கைகள் இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன.

#### 2.2.3 அளவீட்டு அடிப்படை

சந்தைப் பெறுமதிகள் தொடர்பாக சரியான வெளிப்படுத்தல்கள் சம்பந்தப்பட்ட குறிப்புக்களின் கீழ் காட்டப்பட்டுள்ளவை தவிர, வரலாற்றுக் கிரயத்தை அடிப்படையாகக் கொண்டு நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

#### 2.2.4 ஒப்பீட்டு ரீதியிலான தகவல்கள்

நடப்பாண்டு காலப்பகுதி சம்பந்தமான நிதிக் கூற்றுக்களை விளங்கிக் கொள்வதை உயர்த்துவதற்காகவும், காலப்பகுதிகளுக்கு இடையில் ஒப்பிட்டு பயன்களை உயர்த்துவதற்காகவும் கடந்த காலப்பகுதி சம்பந்தமாக அறிக்கையிடப்பட்ட அனைத்து தொகைகளுக்கும் தேவையானளவு மற்றும் விபரமான தகவல்கள் உட்பட ஒப்பீட்டு ரீதியிலான தகவல்கள் வெளிக்காட்டப்பட்டுள்ளன.

#### 2.2.5 தொழிற்பாட்டு மற்றும் அறிக்கையிடல் நாணய அலகு

பல்கலைக்கழகம் செயற்படும் பிரதான பொருளாதார சூழலில் பயன்படுத்துகின்ற மற்றும் அறிக்கையிடல் செய்யும் பண அலகான இலங்கை ரூபாவில் (SLR/LKR) நிதி அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

சகல நிதி தகவல்களும் இலங்கை ரூபாக்களில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், வேறு வகையில் குறிப்பிடப்பட்டவை தவிர கிட்டிய ரூபாவுக்கு மட்டந்தட்டப்பட்டுள்ளன.

#### 2.2.6 முக்கியமான கணக்கீட்டு மதிப்பீடுகளும் தீர்ப்புக்களும்

இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு (SLPSAS) இணங்க நிதி அறிக்கைகளை தயாரிப்பதற்கும் மற்றும் சமர்ப்பிப்பதற்கும் சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானங்கள் மற்றும் செலவினங்கள் சார்பாக அறிக்கையிடப்பட்டுள்ள பெறுமதிகள் மற்றும் கணக்கீட்டு கொள்கைகளை பயன்படுத்துவதில் தாக்கத்தை ஏற்படுத்தும் தீர்ப்புகள், மதிப்பீடுகள் மற்றும் கருதுகோள்களை மேற்கொள்ள முகாமைத்துவத்துக்கு அவசியமாகும். உண்மையான பெறுபேறுகள் மதிப்பீடுகள் மற்றும் தீர்ப்புக்களில் இருந்து வேறுபட்டுக் காணப்படலாம்.

தொடர்ந்து செல்லுதல் அடிப்படையில் மதிப்பீடுகளும் அடிப்படைசார் கருதுகோள்களும் மீளாய்வு செய்யப்பட்டன. மாற்றியமைக்கப்பட்ட மதிப்பீடுகள் அக் காலப்பகுதியில் மாத்திரம் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தாலோ அல்லது மாற்றியமைக்கப்பட்ட காலப்பகுதியினுள் மற்றும் எதிர்காலப் பகுதியில் அல்லது நிகழ்காலம் மற்றும் எதிர்காலம் ஆகிய இரண்டு காலப்பகுதிகளும் தாக்கத்தை உண்டாக்கினால் கணக்கீடுசார் மதிப்பீடுகளின் மாற்றியமைத்தலானது அக் காலப்பகுதியில் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக அமையும்.

நிதி அறிக்கைகளில் அங்கீகரிக்கப்பட்ட பெறுமதிகளில் மிக குறிப்பிடத்தக்க விளைவுகளை கொண்ட கணக்கீட்டு கொள்கைகளை பயன்படுத்தும் போது மதிப்பீடுகள், நிச்சயமற்ற தன்மை மற்றும் சிக்கலான தீர்ப்புக்கள் தொடர்பாக கவனத்தில் கொள்ளவேண்டிய முக்கியமான விடயங்கள் வருமாறு.

i) சொத்துக்களின் பொருளாதார பயன்தரும் ஆயுட்காலம்

சொத்துக்களினது பயன்தரும் பொருளாதார ஆயுள் காலம் முகாமைத்துவத்தினால் அவர்களின் சிறந்த மதிப்பீட்டின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுவதுடன், அவ்வாறு நடைமுறையில் செய்ய முடியாத சந்தர்ப்பங்களில் நிபுணர்களின் ஆலோசனை பெற்றுக் கொள்ளப்படுகிறது.

கட்டடங்களைத் தவிர்த்து 2017 ஆண்டு வரை கையகப்படுத்தப்பட்ட சொத்துக்களின் பயன்தரும் ஆயுட்காலம் 2020 ஆண்டின் போது மீளாய்வு செய்யப்பட்டதுடன், அதன் படி அச் சொத்துக்களின் பயன்தரும் ஆயுட்காலம் நீடிக்கப்பட்டு 2020 ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் சீராக்கப்பட்டுள்ளன. மேலும், 2018, 2019 மற்றும் 2020-ஆம் ஆண்டுகளில் கையகப்படுத்தப்பட்ட சொத்துக்கள் மற்றும் 2017 இல் சீராக்கம் செய்த மீள்மதிப்பீடு செய்யப்பட்டனவும் மீளாய்வு செய்யப்பட்டதுடன், அதற்கேற்ப 2023 இல் பயன்தரும் ஆயுட்காலம் நீடிக்கப்பட்டுள்ளன.

### 2.2.7 கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தீர்ப்புக்களில் மாற்றங்கள்

நிதி அறிக்கைகளில், ஒத்த பொருட்களின் ஒவ்வொரு பொருள் வகுப்பும் தனித் தனியாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அசாதாரண அல்லது வேறுபட்ட செயல்பாட்டைக் கொண்ட உருப்படிகள் அவை வேறாக சமர்ப்பிக்கப்படுகின்றன.

### 2.2.8 பொருள் தன்மை மற்றும் ஒன்று திரட்டுதல்

நிதி அறிக்கைகளில், ஒத்த பொருட்களின் ஒவ்வொரு பொருள் வகுப்பும் தனித் தனியாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அசாதாரண அல்லது வேறுபட்ட செயல்பாட்டைக் கொண்ட உருப்படிகள் அவை வேறாக சமர்ப்பிக்கப்படுகின்றன.

## 2.3 சொத்துக்கள் மற்றும் அதன் விலைமதிப்பு அடிப்படைகள்

### 2.3.1 ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் (PPE)

#### (a)இனங்காணுதல் மற்றும் அளவிடுதல்

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் யாவும் கிரயத்திலிருந்து திரண்ட தேய்மானம் மற்றும் ஏற்படக்கூடிய இழப்புக்கள் ஆகியவற்றை குறைத்து ஆரம்பத்தில் இனங்காணப்படுகின்றன.

அரசாங்க மானியம், உருவாக்கப்பட்ட நிதி என்பன ஊடாக கொள்வனவு செய்யப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் மற்றும் நன்கொடைகள் மூலம் கைகொள்ளப்பட்டவை ஆகியன நிதிச் செயலாற்றல் கூற்றில் பதியப்படுகிறன.

#### (b) கிரயம்

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றின் கிரயம் அவை கொள்வனவு செய்யப்படும் செலவு மற்றும் அதனைப் பயன்படுத்தும் நோக்கம் சம்பந்தமான நிலைக்கு கொண்டுவர நேரடியாக ஆகும் செலவையும் உள்ளடக்குகிறது.

ஆண்டின் போது பயன்படுத்தப்பட்ட அரசாங்க மூலதன மானியங்கள் மற்றும் ஏனைய மானியங்கள் உட்பட மொத்த மூலதன செலவினம் ரூ. 515,283,572.23 ஆகும்.

#### (c) பிற்காலத்திற்கான செலவினம்

சொத்துக்களின் உழைக்கும் திறனை பேணிச்செல்வதற்காக அல்லது அதிகரிப்பதற்காக அல்லது நிலையான தன்மையிலான சொத்துக்களை கைகொள்வதற்காக, விரிவாக்குவதற்காக அல்லது மேம்படுத்துவதற்காக செலவிடப்பட்ட பிற்காலத்திற்கான மூலதன செலவாகக் கருதப்படும்.

#### (d) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் சம்பந்தமான சீராக்கல்

2023 ஆண்டுக்கு முன்பு மூலதனமாக்கப்பட்ட கட்டடக் கருத்திட்டத்துக்காக 2023-ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவு மற்றும் 2.3.4-இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 2022 ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட புனரமைப்புக் கருத்திட்டங்கள் சார் கணக்கீட்டுக் கொள்கைக்கு ஏற்ப 2017 முதல் 2021 வரையிலான காலப்பகுதியினுள் மேற்கொள்ளப்பட்ட புனரமைப்பு கருத்திட்டங்களுக்கான சீராக்கல் காரணமாக ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் சார்பாக பிரதிபளிக்கும் ரூ. 2,235,843.31 தொகை சீராக்கல் செய்யப்பட்டுள்ளது.

#### (e) தேய்மானம்

அரசாங்க மானியம், உருவாக்கப்பட்ட நிதி ஊடாக கொள்வனவு செய்யப்பட்ட மற்றும் நன்கொடை மூலம் கையேற்புச் செய்யப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் மீதான தேய்மானம் மதிப்பீடு செய்யப்பட்ட பயன்தரும் ஆயுள்காலத்தினுள் அத்தகைய சொத்துக்களின் கிரயத்தை பதிவளிப்பதற்காக நிதி செயலாற்றல் கூற்றில் பதியப்படும்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் (UGC) இல. 649 மற்றும் 1995.10.05 திகதியும் கொண்ட சுற்றறிக்கை மற்றும் ப.மா.ஆ. (UGC)-இன் இல. 09/2022 மற்றும் 2020.05.05 திகதியும் கொண்ட சுற்றறிக்கை ஆகியவற்றின் படி 2.2.5-இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பயனுள்ள ஆயுட்காலம் சீராக்கம் செய்யப்பட்ட சொத்துக்களை விடுத்து, நேர்கோட்டு முறையைப் பயன்படுத்தி ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் மீதான தேய்மானம் கணக்கிடப்பட்டுள்ளது.

சொத்துக்களானது பயன்படுத்த கிடைக்கும் மாதத்திலிருந்து தேய்மானம் கணக்கிடப்படுகின்றது.
வருடாந்த தேய்மான விகிதங்கள் வருமாறு.

| சொத்து வகை | விகிதம் |
|---|---|
| கட்டடங்கள் (அமைப்புகளும் உட்பட) | 05% |
| அலுவலக உபகரணங்கள் | 20% |
| ஆய்வுகூட மற்றும் கற்பித்தல் உபகரணங்கள் | 20% |
| தளபாடங்களும் பொருத்துதல்களும் | 10% |
| நூலகப் புத்தகங்கள் | 20% |
| மோட்டார் வாகனங்கள் | 20% |
| பொறித்தொகுதியும் இயந்திரங்களும் | 10% |
| பாதுகாப்பு உபகரணங்கள் | 20% |
| விளையாட்டு உபகரணங்கள் | 25% |
| பட்டமளிப்பு ஆடைகள் | 20% |
| PABX முறைமை | 10% |
| நீர் வழங்கல் திட்டம் | 10% |
| விடுதி உபகரணங்கள் | 20% |
| சூரியசக்திப் பலகம் முறைமை | 10% |

#### (f) சொத்துக்களின மீள்மதிப்பீடு

அரசாங்க விலை மதிப்பீட்டு திணைக்களத்தின் மூலம் 2013.12.31-ஆம் திகதி வரை கொள்வனவு/கையகப்படுத்தப்பட்ட நூலகப் புத்தகங்களை தவிர்த்து, ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் அனைத்தும் மீள்மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. மதிப்பீட்டு பெறுமதிகள் 2017 ஆம் ஆண்டிலிருந்து மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக மீள்மதிப்பீட்டு மாதிரியை நூலகப் புத்தகங்கள் சம்பந்தமாக பயன்படுத்த முடியாதுள்ளது. அதனால், நூலகப் புத்தகங்கள் கிரய மாதிரியை பயன்படுத்தி கொண்டுசெல்லும் பெறுமதிகள் காட்டப்பட்டுள்ளன.

### (g) சொத்துக்களின் நீக்கம்

நீக்கம் செய்யப்பட்ட அல்லது பயன்படுத்துவதால் எதிர்கால பொருளாதார இலாபம் எதிர்பார்க்கப்படாத ஓர் ஆதனம், பொறி மற்றும் உபகரணம் சார்ந்த விடயமொன்று கணக்குகளிலிருந்து நீக்கப்படுகின்றது. சொத்துக்கள் நீக்கப்படுவதனால் அடையும் இலாபம் அல்லது நட்டமானது, தேறிய அகற்றல் பெறுமதி மற்றும் கொண்டு செல்லும் பெறுமதி ஆகியவற்றுக்கு இடையிலான வேறுபாட்டைக் கொண்டு கணக்கிடப்படுவதுடன், சொத்துக்கள் நீக்கப்படும் ஆண்டின் நிதி செயலாற்றல் கூற்றில் உள்ளடக்கப்படுகிறது.

மூலதனப் பொருட்களை நீக்குதல், இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு (SLPSAS 7) இணங்க கணக்குகளில் பதியப்பட்டுள்ளது.

### (h) ஏனைய மூலதன செயற்பாடுகள் மீதான செலவினம்

ஆராய்ச்சியும் அபிவிருத்தியும் சார்பாக ஏற்பட்ட செலவை மீண்டுவரும் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், நிதிச் செயலாற்றல் கூற்றில் பதியப்பட்டுள்ளது.

### *2.3.2* கட்புலனாகாத சொத்துக்கள்

சகல கட்புலனாகாத விடயங்களும் ஆரம்பத்தில் கிரயத்திலிருந்து திரண்ட பணமதிப்பிழப்பு மற்றும் ஏற்படக்கூடிய நட்டங்கள் என்பவற்றைக் குறைத்து இனங்காணப்படுகின்றன.

கட்புலனாகாத சொத்துகளின் கிரயமானது, அதன் கொள்வனவு விலை மற்றும் அதன் பயன்பாட்டு நோக்கத்திற்காக சொத்தை செயல்பாட்டு நிலைக்கு கொண்டு வருவதற்காக நேரடியாக செய்யப்படும் ஏதாவது செலவு ஆகியவற்றை உள்ளடக்கி இருக்கும்.

கட்புலனாகாத சொத்துக்கள் பணமதிப்பிழக்கம் செய்தல் 05 வருட காலப் பகுதியினுள் நிதி செயலாற்றல் கூற்றில் காட்டப்படுகிறது. இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் இல. 20-இற்கு ஏற்ப, கட்புலனாகாத சொத்துக்கள் இல்லாதொழிக்கப்படும் காலப்பகுதியானது ஒவ்வொரு அறிக்கையிடப்படும் காலப்பகுதி முடிவிலும் மீளாய்வு செய்யப்படுவதுடன், ஏதேனும் மாற்றங்கள் கணக்கீட்டு மதிப்பீடுகளில் ஏற்படும் மாற்றமாக கணக்கில் எடுக்கப்படும்.

### *2.3.3* முடிவுறாத வேலை

முடிவுறாத மூலதன வேலை கிரயத்தில் ஏதேனும் இழப்புக்கள் கழிக்கப்பட்டு காட்டப்படுகிறது. இவை மூலதனமாக்கலுக்காக ஆதனம், பொறி மற்றும் உபகரணம் ஆகியவற்றை கட்டுமாணிப்பதற்கு நேரடியாக செய்யப்படுகின்ற மூலதன வகையிலான செலவுகள் உள்ளன. முடிவுறாத மூலதன வேலை சம்பந்தப்பட்ட ஆதனங்கள், பொறி மற்றும் உபகரணங்கள் எனும் சொத்து வகைகளுக்கு, அவை பயன்படுத்துவதற்கு முடியுமானவாறு கொண்டுவரப்பட்டதும் மாற்றப்படுகிறது.

### *2.3.4* புனரமைத்தல் மற்றும் மேம்படுத்துல் கருத்திட்டங்கள்

புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல் வேலைகளை மூலதனமாக்கும் தற்போதுள்ள கொள்கைகள் 2017.01.01-ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் மாற்றப்பட்டன. புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல் வேலைகள் சம்பந்தப்பட்ட சகல கொடுப்பனவுகளும் நடைபெற்றுவரும் வேலைகளாக கருதப்படுகின்றன. ஆண்டினுள் பூரணப்படுத்தப்பட்ட புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல் கருத்திட்டங்கள் கட்டடக் கணக்குக்கு மூலதனமாக்கப்பட்டதுடன், தேய்மானமானது 2017 முதல் 2022 வரையிலான காலப்பகுதிக்குரிய இறுதிச் சிட்டைகளின் கொடுப்பனவும் பல்கலைக்கழகத்தினது தேய்மானமிடல் கொள்கைக்கு இணங்க கணக்கிடப்பட்டது. அதிகமான மாற்றங்கள் 2021.12.31 வரையிலான காலப்பகுதி சார்பாக பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதால் ஒப்பீட்டுத் தொகைகள் மீண்டும் தரப்பட்டுள்ளன.

### *2.3.5* இருப்புக்கள்

இருப்புக்களானது, குறைந்த கிரயம் மற்றும் காசாக்கக் கூடிய தேறிய பெறுமதி ஆகியவற்றில் மிகக் குறைவான பெறுமதியில் குறிப்பிடப்படுகிறது. களஞ்சியங்களில் உள்ள இருப்புக்கள் முதல் வந்தது முதல் செல்லல் (FIFO) முறையைப் பயன்படுத்தி கிரயத்தில் மதிப்பீடு செய்யப்படுகிறது.

பல்கலைக்கழகத்தின் இருப்புக்களில் புத்தகங்களும் எழுதுகருவிகளும், கல்விசார் மற்றும் பராமரிப்பு செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்படும் பாவணைப் பொருட்களும், முத்திரைகளும், மருந்துகள் மற்றும் சிகிச்சைப் பொருட்களின் மீதி கையிருப்புக்களும் உள்ளடங்குகின்றன.

## 2.4 பொறுப்புக்களும் ஏற்பாடுகளும்

### *2.4.1.* பொறுப்புகள்

2023-ஆம் ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது அறியப்பட்ட சகல பொறுப்புக்களும் கணக்குகளில் பதியப்பட்டுள்ளன.

### *2.4.2.* ஏற்பாடுகள்

நிதி நிலைமைக் கூற்றில் ஏற்பாடுகள் இனங்காணப்பட்டுள்ளதுடன், கடந்த கால நிகழ்வொன்றின் பெறுபேறாக பல்கலைக்கழகத்திற்கு சட்டபூர்வமாக அல்லது ஆக்கபூர்வமாக கடமைப்பாட்டை பெற்றிருந்தால், அப் பொறுப்பை தீர்ப்பதற்கு சொத்துக்களின் வெளிச்செல்லலொன்று அவசியப்படும் என்பதுடன், பொறுப்பை நம்பிக்கைத் தன்மையுடன் அளவீடு செய்யலாம்.

### *2.4.3.* ஊழியர் நலன்கள்

#### 2.4.3.1. ஊழியர் திட்டவட்டமான நலன்புரி திட்டம்

பணிக்கொடை என விவரிக்கப்பட்ட நலன்கள் திட்டமானது திட்டவட்டமான பங்களிப்புத் திட்டத்தை தவிர்த்து, தொழிலுக்கு பிந்திய நலன்கள் சார் திட்டமாகும். திட்டமிடப்பட்ட அலகு புள்ளி (Credit) (PUC) முறையைப் பயன்படுத்தி, திட்டவட்டமான நலன்களை சுயாதீன செயல்பாட்டின் மூலம் கணக்கீடு செய்யப்படுகின்றது. விவரிக்கப்பட்டுள்ள நலன்சார் கடப்பாட்டின் நிகழ்கால பெறுமதியை தீர்மானம் செய்வது, மதிப்பிடப்பட்ட எதிர்கால நிதி வெளிச்செல்வதை குறைத்தல், நலன்கள் செலுத்தப்படும் நிதியில் குறிப்பிடப்படும் வட்டி விகிதங்களை பயன்படுத்துதல் மற்றும் அது சம்பந்தமான பொறுப்பு சார்பான நிபந்தனைகளுக்கு அண்மித்த முதிர்ச்சி அடைகின்ற நிபந்தனைகளை இடுதல் மூலமாகும். கழிவு விகிதம், எதிர்கால சம்பள அதிகரிப்பு மற்றும் இறப்பு விகிதங்கள் பற்றிய பல அனுமானங்களைப் பயன்படுத்தி தீர்மானிக்கப்பட்ட நலன்கள் சார்ந்த கடப்பாடுகளின் நிகழ்கால பெறுமதி திட்டவட்டமான உள்ளபடி அடிப்படைக்கு ஏற்ப தீர்மானிக்கப்படுகின்ற காரணிகளின் மீதாகும். இத் திட்டங்களின் நீண்ட காலத்தன்மை காரணமாக அத்தகைய மதிப்பீடுகள் குறிப்பிடத்தக்க நிச்சயமற்ற தன்மைக்கு உள்ளாகியுள்ளன. சகல அனுமானங்களும் ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் மீளாய்வு செய்யப்படுகிறன. அதற்கேற்ப, இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 19 (SLAPSAS-19) - ஊழியர்

நலன்கள் மூலம் பரிந்துரைக்கப்பட்டுள்ளவாறு மதிப்பிட்டு முறையை பயன்படுத்தி 2023.12.31 திகதியில் பணிக்கொடையின் மொத்த கடமைப்பாடும் கணக்கிடப்பட்டது. அவை நிகழும் காலப்பகுதியில் உள்ளபடியான இலாபம் மற்றும் நட்டம் நிதிச் செயலாற்றல் கூற்றுக்களில் முழுமையாக இனங்காணப்படுகின்றது.

### 2.4.3.2 வரைவிலக்கணப்படுத்தப்பட்ட பங்களிப்புத் திட்டம் - பல்கலைக்கழக சேமலாப நிதி (UPF) பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியம் (PF) மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் (EPF)

சம்பந்தப்பட்ட சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்க பல்கலைக்கழக சேமலாப நிதியத்துக்கான பங்களிப்பு, பல்கலைக்கழக ஓய்வூதிய சம்பள நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றுக்கான பங்களிப்புக்களுக்கு ஊழியர்கள் தகைமை பெறுவர். இவற்றுக்காக மேற்கொள்ளப்பட்டவை நிதிச் செயலாற்றல் கூற்றில் செலவொன்றாக இனங்காணப்படுகின்றது. பல்கலைக்கழக ஊழியர்களது மொத்த சம்பளத்தில் (அடிப்படை சம்பளம் + COL + கற்கைசார் கொடுப்பனவு/ MCA) முறையே 7%, 8% மற்றும் 3% பல்கலைக்கழக சேமலாப நிதிக்கும், பல்கலைக்கழக ஓய்வூதிய சம்பள நிதிக்கும் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்துக்கும் பங்களிப்பு செய்யப்படுகிறது.

## 2.5 பேரேட்டுக் கணக்குகளின் மீள வகைப்படுத்தல்

சம்பந்தப்பட்டசெயற்பாட்டினது தன்மையின் அடிப்படையில் பின்வரும் பேரேட்டுக் கணக்குகள் மீள வகைப்படுத்தப்பட்டுள்ளன.

| பேரேட்டு குறியீடு | முன்னைய வகைப்படுத்தல் | மீள வகைப்படுத்தல் |
|---|---|---|
| OA-ZU-01 | ஏனைய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் | ஒப்பந்த ஆராய்ச்சியின் கீழ் |
| OA-ZU-03 | ஏனைய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் | ஒப்பந்த ஆராய்ச்சியின் கீழ் |
| OA-ZU-04 | ஏனைய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் | ஒப்பந்த ஆராய்ச்சியின் கீழ் |
| OA-ZU-05 | ஏனைய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் | ஒப்பந்த ஆராய்ச்சியின் கீழ் |
| OA-ZU-12 | ஏனைய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் | ஒப்பந்த ஆராய்ச்சியின் கீழ் |
| OA-ZU-13 | ஏனைய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் | ஒப்பந்த ஆராய்ச்சியின் கீழ் |
| OA-ZN-70 | பிற ஆராய்ச்சி மானியங்களின் கீழ் | தேசிய விஞ்ஞான மன்றத்தின் கீழ் |
| OA-ZN-02 | தேசிய விஞ்ஞான மன்றத்தின் கீழ் | பிற ஒப்பந்த ஆராய்ச்சியின் கீழ் |

## 2.6 நிதி செயலாற்றல் கூற்று

### *2.6.1* வருமானம்

வருமானத்தில் அரசாங்க (திறைசேரி) மானியம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) மற்றும் அமைச்சு மூலமான மானியம் மற்றும் உள்ளக மூலகங்கள் ஊடாக உருவாக்கப்பட்ட வருமானம், கணக்கிடப்பட்ட முதலீட்டின் மீதான வட்டி என்பன உள்ளடங்கும்.

#### (a)(a) அரசாங்க மீண்டெழும் மானியம்

அரசாங்க மானியங்களை கணக்குகளில் பதிதல் மற்றும் அரசாங்க நிதி உதவிகளை வெளிப்படுத்துவதற்காக வருமான அணுகு முறை பயன்படுத்தப்பட்டுள்ளது.

#### (b) (b) அரசாங்க மூலதன மானியம் மற்றும் நன்கொடை வழங்கப்பட்ட மூலதனம் உருவாக்கப்பட்ட நிதி மூலதன பங்களிப்பு

The Sri Lanka Public Sector Accounting Standard (SLPSAS) No 11 -Revenue from Non-Exchange Transactions (Taxes and Transfers) is applied for the Recognition and measurement of Government Capital Grant and Donated capital. Accordingly, the spent amount of the Government Capital Grant and donated value of capital nature are recognized as income from non-exchange transactions in the statement of Financial Performance.

Generated funds capital contribution is recognized as income from exchange transactions in the statement of Financial Performance.

#### (c) உருவாக்கப்பட்ட வருமானம்

பட்டமேற்படிப்பு பாடநெறிகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்/குறுகிய பாடநெறிகள் என்பன கிரய மீட்பு அடிப்படையில் நடாத்தப்படுகின்றன.

2023 ஆண்டுக்கான ஆலோசனை சேவை, பரிசோதனை ஒப்படைப்பு மற்றும் (பட்டமேற்படிப்பு பாடநெறிகள் உட்பட) சுய நிதியிடல் பயிற்சி பாடநெறிகள் தொடர்பான பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் வருமாறு.

| | | |
|---|---|---|
| பெறுவனவுகள் | ரூ. | 690,766,867.20 |
| கொடுப்பனவுகள் | ரூ. | (709,690,560.46) |
| நிலுவை | ரூ. | (18,923,693.26) |

ரூ. 919,769,273 பிற்போடப்பட்ட வருமானத்தில் ரூ. 709,690,560.46 தொகை 2023.12.31 திகதி முன் கொண்டு செல்லப்பட்டதுடன், 2023 ஆண்டின் போது ரூ.690,766,867.20 ஆன உள்ளபடியான பெறுவனவுகள் கிரய மீட்பு செயற்பாடுகளின் மூலமான வருமானமாக மற்றும் கிரய மீட்பு செயற்பாடுகள் மூலமான செலவினமாக கருதி நிதிச் செயலாற்றல் கூற்றுக்கு கொண்டு செல்லப்பட்டது. எஞ்சிய தொகை ரூ. 895,492,148 பிற்போடப்பட்ட வருமானமாக முன் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

நடவடிக்கையொன்றாக கடந்த 3 வருடங்களாக இயக்கமின்றி காணப்பட்ட பேரேட்டுக் கணக்குகள், பாடநெறி/ கருத்திட்ட ஒருங்கிணைப்பாளரின் பரிந்துரைக்கேற்ப, நிர்வாக சபையின் அங்கீகாரத்துடன் மூடப்பட்டன.

#### (d) வெளிவாரி ஆராய்ச்சி மானியங்கள்

வெளியக ஆய்வு மானியத்திலிருந்து ஏற்பட்ட மொத்த மீண்டுவரும் செலவினங்கள் வெளியக ஆய்வு வருமானமாகவும் செலவினமாகவும் நிதி செயலாற்றல் கூற்றில் இனங்காணப்பட்டுள்ளன. வெளியக ஆய்வு மானியங்களிலிருந்து ஏற்பட்ட மூலதன செலவினங்கள் சம்பந்தப்பட்ட நிலையான சொத்துக்கள் கணக்கிலும் நன்கொடை மூலதன கணக்கிலும் இனங்காணப்பட்டுள்ளன. வெளியக ஆய்வு மானியங்களின் செலவிடப்படாத இறுதி மீதி உரிமைப்பங்கு நிதிக் கணக்கொன்றாக நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டுள்ளது.

### (e) AHEAD தொழிற்பாடுகள் மூலம் செய்யப்பட்ட முதலீடு

2023-ஆம் ஆண்டில், உலக வங்கி நிதியளிப்பு செய்யப்பட்ட AHEAD எனும் கருத்திட்டம் மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தில் செயற்படுத்தப்பட்டது. இக் கருத்திட்டமானது 2018 இல் ஆரம்பிக்கப்பட்டது.

பல்கலைக்கழகத்திற்காக AHEAD கருத்திட்டத்தின் மூலம் கையகப்படுத்தப்-பட்ட நிலையான சொத்துக்கள் மற்றும் பூரணமாக்கப்பட்ட புரமைப்புக்கள் மற்றும் மேம்படுத்தல் கருத்திட்டங்கள் உரிய நிலையான சொத்துக்களுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதுடன், அவை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியம (SLPSAS) இல. 11-ற்கு இணங்க, நன்கொடையாக இனங்காணப்பட்டுள்ளது - நாணயமாற்றல்லாத கொடுக்கல் வாங்கல் மூலமான (வரிகள் மற்றும் மாற்றல்கள்) வருமானங்கள். குறிப்பு இல. 26 இல் விபரங்கள் காட்டப்பட்டுள்ளன.

### (f) பிணைகள் மற்றும் உடன்படிக்கைகள் மீறல் மூலம் பெறப்பட்ட வருமானம் சார் முதலீடுகளுக்கு கிடைத்த வட்டி வருமானம் ரூ. 59,398,085.02 ஆகும்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினது இல. 737 மற்றும் 1998 ஆகஸ்ட் 18-ஆம் திகதியும் கொண்ட சுற்றறிக்கைக்கு ஏற்ப பிணை மற்றும் உடன்படிக்கை மீறல்களால் கிடைத்த வட்டி எனும் ஏற்பாட்டுக் கணக்கில் இந்த வட்டி வருமானம் இனங்காணப்பட்டுள்ளது.

## 2.6.2 செலவினம்

செலவினங்கள், கருத்திட்டங்கள்/ பொருட்கள் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மூலம் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்கள் மற்றும் பொதுவான மாதிரி அறிக்கையிடல் முறைமை ஆகியவற்றின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்பட்டு செலவுத் தலைப்புக்களுக்கு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

2006 ஆண்டிலிருந்து ஆளுக்குரிய வேதனங்களின் கீழ் உள்ளடக்கப்பட்ட பணிக்கொடை ஏற்பாடுகள் கணக்காய்வாளரின் அறிவுறுத்தலுக்கேற்ப நிதிச் செயலாற்றல் கூற்றில் ஏனைய தொழிற்பாட்டு செலவுகளின் கீழ் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

## 2.7 காசுப்பாய்ச்சல் கூற்று

இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு (SLPSAS 2) இணங்க "நேரில் முறையை" பயன்படுத்தி காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது.

## 2.8 ஒப்பீடு பற்றிய அறிக்கை

வருமானம் மற்றும் செலவினம் தொடர்பான ஒப்பீட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டதுடன், பாதீடு படுத்தப்பட்ட மற்றும் திறைசேரியிலிருந்து பெற்றுக்கொண்ட மேலதிக மானியங்கள் சம்பந்தப்பட்டவை மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

குறிப்பு - 03

| | 2023<br>ரூ.. | 2022<br>ரூ.. |
|---|---|---|
| **ஆதனம், பொறி, உபகரணம்** | | |
| குறிப்பு - 03.1. - செலவு | | |
| சனவரி 1 இல் உள்ளபடி மீதி | 13,447,659,218 | 12,991,154,275 |
| வருடத்தின் போது சேர்த்தல்கள் | 327,242,243 | 425,146,113 |
| நீக்கல்கள் சீராக்கல் | (10,121,547) | (3,034,890) |
| வருடத்திற்கான சீராக்கல்கள் | (32,981) | - |
| முடிவுறாத வேலை மூலம் மாற்றல்/ AHEAD | 292,756,632 | 34,393,720 |
| திசம்பர் 31 இல் உள்ளபடி மீதி | **14,057,503,564** | **13,447,659,218** |
| **குறிப்பு - 03.2. - பெறுமானத்தேய்வு ஏற்பாடு** | | |
| சனவரி 1 இல் உள்ளபடி மீதி | 4,645,290,146 | 4,021,795,166 |
| ஆண்டுக்கான பெறுமானத்தேய்வு | 571,525,398 | 623,866,237 |
| நீக்கல்கள் சீராக்கல் | (9,256,087) | (2,618,551) |
| பெறுமானத்தேய்வு சீராக்கல் | 1,007,952 | 2,247,294 |
| திசம்பர் 31 இல் உள்ளபடி மீதி | **5,208,567,410** | **4,645,290,146** |
| திச. 31 ல் உள்ளபடி குறைத்தெழுதப்பட்ட பெறுமதி | 8,848,936,154 | 8,802,369,072 |

குறிப்பு - 03.3. - குத்தகை காணி

கிருலபனை, டீ.எம். கொழும்பகே மாவத்தையில் உள்ள இக் காணி ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் குத்தகைக்கு வழங்கப்பட்ட இடமொன்றாக இனங்காணப் படவில்லை. எவ்வாறிருப்பினும், செலுத்தப்பட்ட பெறுமதியை அறவீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதால், கவுன்சிலின் தீர்மானத்துக்கு இணங்க எடுக்கப்படுகின்ற செயற்பாடுகள் முடிவுக்கு வரும் வரை நிலுவைத் தொகையை நகர அபிவிருத்தி அதிகாரசபையிடம் இருந்து கிடைக்கவேண்டிய தொகையொன்றாக கணக்குகளில் பதியப்பட்டுள்ளது.

குறிப்பு - 03.4. - காணி - பிட்டிபான

ஹோமகம பிட்டிபான பிரதேசத்தில் அமைந்துள்ள ரூ. 960 மில்லியன் பெறுமதியான 20 ஏக்கர் காணி நகர அபிவிருத்தி அதிகார சபையினால் 2016.08.15 ஆம் திகதி மொறட்டுவை பல்கலைக்கழகத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. நில அளவைக் கட்டணத்தை மாத்திரமே பல்கலைக்கழகத்தினால் செலுத்த முடியுமானதுடன், அது மொத்த காணி பெறுமதியுடன் உள்ளடக்கப்பட்டுள்ளது. ப.மா.ஆ. மூலம் நிதி ஒதுக்கப்படாதனால், இக் காணி சம்பந்தமாக இணங்கப்பட்ட கொடுப்பனவை நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு மேற்கொள்ள முடியாமல் போனது. எனினும், பல்கலைக்கழகத்தின் வசம் காணி இருப்பதால், இக் காணிக்காக கொடுக்கப்பட்ட நில அளவீட்டுக் கட்டணம் கணக்குகளில் காட்டப்பட்டுள்ளது.

குறிப்பு - 03.5. - ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை பாதுகாப்பதற்கான காப்பு உறுதி

அறிக்கையிடும் போது பொறுப்பாக பிணை உறுதி என ஆதனங்கள், பொறி, மற்றும் உபகரணங்கள் எதுவும் வைக்கப்படவில்லை.

குறிப்பு - 03.6. - முழுமையாக தேய்மானம் இடப்பட்ட சொத்துக்களின் மொத்த கொண்டு செல்லும் பெறுமதி

முழுமையாக தேய்மானமிடப்பட்ட நூலகப் புத்தகங்கள் மற்றும் பருவ இதழ்களின் மொத்த கொண்டு செல்லும் பெறுமதி - ரூ. 326,615,864.73

குறிப்பு - 03.7. - தொடங்கொட காணிக்கு முள்வேலி வழங்கல் மற்றும் நிர்மானித்தல்

மருத்துவ பீடத்தை அமைப்பதற்காக தொடங்கொட பகுதியில் அமைந்துள்ள காணிக்கு முள்வேலி வழங்கல் மற்றும் நிர்மானித்தல் ஆகிய பணி சார்பாக ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவு. காணியின் உரிமை தொடங்கொட பிரதேச செயலாளர் அலுவலகத்தினால் வைத்திருப்பதனால் மீண்டுவரும் செலவினமொன்றாக இனங்காணப்பட்டுள்ளது.

குறிப்பு - 03.8. - ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் சம்பந்தமாக முன்னைய வருட சீராக்கல்கள்.

(அ) மீள்மதிப்பீட்டு மிகை

2017 ஆண்டின் போது கணக்குகளில் மீள்மதிப்பீட்டு பெறுமதிகளை சீராக்கும் போது பூரணப்படுத்தப்படாதிருந்த புனரமைப்பு கருத்திட்டங்களை சீராக்குவதற்காக மீள்மதிப்பீட்டு மிகைகள் ரூ. 69,797,933.97 ஆன தொகை சீராக்கல் செய்யப்பட்டது.

குறிப்பு - 03.9. - பயன்பாட்டுக்கு தயார்படுத்தப்படாத சொத்துக்கள்

2015 இல் கையகப்படுத்தப்பட்ட ரூ. 1,407,600.00 தொகையான கேட்போர்கூட கதிரைகள் 60 பாவணைக்கு தயார்படுத்தப்படாததால் தேய்மானம் கணக்கிடுவதற்காக கவத்தில் கொள்ளப்பட்டது.

குறிப்பு - 03.10. - பயனுள்ள ஆயுட்காலம் நீடிக்கப்பட்ட சொத்துக்கள்

2023.01.01 திகதிக்கு பயனுள்ள ஆயுட்காலம் நீடிக்கப்பட்ட சொத்துக்களது மீதமுள்ள வருடங்கள் பற்றிய பொழிப்பு கீழே தரப்பட்டுள்ளது.

| சொத்து வகை | கையகப்படுத்தப்பட்ட வருடம் | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2012 | மீள்மதிப்பிடப்பட்ட சொத்து | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 |
| அலுவலக உபகரணம் | - | 2 | 2 | 3 | 3 | 4 | 5 | 6 | 7 |
| ஆய்வுகூட மற்றும் கற்பித்தல் உபகரணம் | - | 2 | 2 | 3 | 3 | 4 | 5 | 6 | 7 |
| மோட்டார் வாகனங்கள் | - | 4 | - | 3 | 13 | - | - | - | - |
| பொறி மற்றும் இயந்திரம் | 3 | 4 | - | - | - | - | - | - | - |
| பட்டமளிப்பு ஆடைகள் | - | 2 | - | - | - | 9 | - | - | - |
| பாதுகாப்பு உபகரணம் | - | 2 | 2 | - | 3 | - | - | 6 | 7 |
| விளையாட்டு உபகரணங்கள் | - | 2 | 2 | 3 | 3 | 4 | 5 | 6 | 7 |
| விடுதி உபகரணங்கள் | - | 2 | 2 | 3 | 3 | - | 5 | 6 | 7 |
| PABX முறைமை | - | - | - | - | 3 | - | - | - | - |

குறிப்பு - 04

| | 2023 ரூ | 2022 ரூ |
|---|---|---|
| கட்புலணாகாத சொத்துக்கள் குறிப்பு - | | |
| 04.1. - செலவு | 13,373,437 | 8,273,820 |
| சனவரி 1 இல் உள்ளபடி மீதி | 2,533,807 | 5,538,538 |
| வருடத்திற்கான சீராக்கல்கள் | - | (438,921) |
| திசம்பர் 31 இல் உள்ளபடி மீதி | **15,907,244** | **13,373,437** |

குறிப்பு - 04.2. - மதிப்பு இல்லாதொழித்தல் ஏற்பாடுகள்

| | 2023 ரூ | 2022 ரூ |
|---|---|---|
| சனவரி 1 இல் உள்ளபடி மீதி | 2,897,284 | 1,197,454 |
| வருடத்திற்கான மதிப்பு இல்லாதொழித்தல் | 2,779,894 | 1,751,037 |
| மதிப்பு இல்லாதொழித்தல் சார் சீராக்கல்கள் | - | (51,207) |
| திசம்பர் 31 இல் உள்ளபடி மீதி | 5,677,178 | 2,897,284 |
| திச. 31 ல் உள்ளபடி குறைத்தெழுதப்பட்ட பெறுமதி | **10,230,066** | **10,476,153** |

குறிப்பு - 04.3. - பிணையாக வைக்கப்பட்டுள்ள கட்புலணாகாத சொத்துக்கள்

அறிக்கையிடும் திகதியின் போது பிணை வைக்கப்பட்டுள்ள கட்புலணாகாத சொத்துக்கள் எதுவுமில்லை.

குறிப்பு - 05

குறிப்பு 05.1 - முடிவுறதா வேலை - நிர்மாணக் கருத்திட்டங்கள்

| | 2023<br>ரூ | 2022<br>ரூ |
|---|---|---|
| ஆரம்ப மீதி | 795,922,749 | 639,943,510 |
| செலவிட்ட மூலதன மானியம் | 139,278,127 | 126,787,002 |
| | 935,200,875 | 766,730,511 |
| கூட்டு/கழி: தயார்படுத்தல் முற்பண சீராக்கல் | 22,564,490 | 29,192,237 |
| முன்னைய வருடங்களுக்கான சீராக்கல்கள் | (1,609,326) | - |
| கட்டடத்திற்கான மூலதனமாக்கல் | (275,284,831) | - |
| **இறுதி மீதி** | **680,871,208** | **795,922,749** |
| குறிப்பு 05.2- முடிவுறதா வேலை - புனரமைப்பு கருத்திட்டங்கள் | | |
| ஆரம்ப மீதி | 4,083,917 | - |
| செலவிட்ட மூலதன மானியம் | 24,552,120 | 17,256,622 |
| நன்கொடை மற்றும் உருவாக்கப்பட்ட நிதி | 4,764,493 | 5,950,029 |
| | 33,400,530 | 23,206,652 |
| கூட்டு/கழி: தயார்படுத்தல் முற்பணம் மூலமான அறவிடல்கள்<br>538,719 | | 946,776 |
| முன்னைய வருடங்களுக்கான சீராக்கல்கள் | (3,068,841) | (1,872,929) |
| மீண்டுவரும் செலவினங்கள் | (4,725,822) | - |
| கட்டடத்திற்கான மூலதனமாக்கல் | (17,471,800) | (17,788,524) |
| **இறுதி மீதி** | **9,080,841** | **4,083,917** |
| **கூட்டு மொத்தம்** | **689,952,049** | **800,006,666** |

குறிப்பு - 06

| | 2023<br>ரூ | 2022<br>ரூ |
|---|---|---|
| இருப்புக்கள் | | |
| பிரதான களஞ்சியம் | 17,562,529 | 14,204,885 |
| முத்திரைகள் | 247,725 | 194,610 |
| மருந்துப் பொருட்கள் | 1,132,658 | 1,069,597 |
| பராமரிப்பு இருப்பு | 7,220,890 | 9,511,209 |
| வேலைத்தள இருப்பு | 2,422,252 | 1,451,740 |
| மொத்தம் | 28,586,053 | 26,432,041 |

குறிப்பு - 06.1. - பல்கலைக்கழகத்தின் இயல்பான செயல்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள தேவையான விடயங்களை (எழுதுபொருட்கள், இரசாயனங்கள், நிர்மாண பொருட்கள், நுகர்வுப் பொருட்கள், முதலியன) பல்கலைக்கழக இருப்பு உள்ளடக்கியுள்ளது. இருப்புக்கள் விற்பனை செய்வதற்கல்ல.

குறிப்பு: 06.2 - காலப்பகுதியினுள் நுகரப்பட்ட இருப்புக்களின் பெறுமதி குறிப்பு - 33 இல் காட்டப்பட்டுள்ளது.

குறிப்பு - 06.3: அறிக்கையிடப்பட்ட திகதியின் போது பொறுப்புகள் சார்பாக பாதுகாப்பு பிணைகளாக வைக்கப்பட்ட பகுதிகள் எதுவும் இருக்கவில்லை.

குறிப்பு - 07

| | 2023<br>ரூ. | 2022<br>ரூ. |
|---|---|---|
| முதலீடுகள் | | |
| சனவரி 1 இல் உள்ளபடி மீதி | 1,902,499,871 | 966,889,570 |
| ஆண்டின் போது திரட்டப்பட்ட வட்டி | 141,432,786 | 33,410,300 |
| கூட்டுக: முதலீடுகள் | 690,173,492 | 902,200,000 |
| மீளப்பெறல்கள் | (275,307,914) | - |
| திசம்பர் 31 இல் உள்ளபடி மீதி | **2,458,798,235** | **1,902,499,871** |

குறிப்பு - 08

| | 2023<br>ரூ. | 2022<br>ரூ. |
|---|---|---|
| பணியாளர் கடன்கள் மற்றும் முற்பணங்கள் | | |
| பண்டிகை முற்பணம் | 131,000 | 129,750 |
| விசேட முற்பணம் | 19,750 | 21,750 |
| சம்பள முற்பணம் | 3,344 | 3,344 |
| விசேட சம்பள முற்பண மானியம் | 44,000 | 44,000 |
| இடர் கடன் | 32,991,618 | 34,813,750 |
| வாகன கடன் | 256,550 | 299,563 |
| பணியாளர் கடன் | 40,823 | 41,673 |
| கணினிக்கான கடன் | 316,000 | 356,000 |
| மொத்தம் | **33,803,085** | **35,709,829** |

குறிப்பு - 09

| | 2023<br>ரூ. | 2022<br>ரூ. |
|---|---|---|
| பெறவேண்டியவைகள் | | |
| வழங்கல்களுக்கான முற்பணம் | 443,462 | 301,804 |
| நானாவித முற்பணம் | 1,367,482 | 341,100 |
| பெறவேண்டிய வைப்புக்கள் | 1,372,530 | 1,372,530 |
| பெறவேண்டிய மாணவர் உதவிப் பணம் | 4,536,000 | 2,260,000 |
| அறவிடவேண்டிய மஹபொல மிகை செலுத்தல் | - | 29,900 |
| பெறவேண்டிய நூலக தண்டப்பணம் | 299,103 | 258,245 |
| மாணவர் உதவிப் பண முற்பணம் | 2,980,000 | - |
| மிகையாக செலுத். சம்பளம் மீளளிப்பு | 1,560,627 | 3,970,048 |
| பெறவேண்டிய வருமானம் | 159,717,261 | 163,224,223 |
| ஏனைய தரப்பினர்களின் மீளளிப்பு | 1,478,642 | - |
| மொத்தம் | **173,755,105** | **171,757,849** |

குறிப்பு - 10

| | 2023 | 2022 |
|---|---|---|
| | ரூ | ரூ |
| மூலதன முற்பணம் | | |
| தயார்படுத்தல் முற்பணம் | 55,855,511 | 79,366,777 |
| மூலதனப் விடயங்கள் சார் இறக்குமதி முற்பணம் | - | 499,532 |
| | **55,855,511** | **79,866,308** |

குறிப்பு - 11

| | 2023 | 2022 |
|---|---|---|
| | ரூ | ரூ |
| காசும் காசுக்கு சம்மானவைகளும் | | |
| இலங்கை வங்கி - க/கு இல. 0000306836 | 348,771,386 | 276,103,756 |
| இலங்கை வங்கி - க/கு இல. 0000307829 | 60,122,355 | 68,722,985 |
| இலங்கை வங்கி - க/கு இல. 0000307453 | 74,105,637 | 7,116,044 |
| இலங்கை வங்கி - க/கு இல. 0000307164 | 536,650 | 375,150 |
| இலங்கை வங்கி - க/கு இல. 0000307353 | 768,195 | 717,756 |
| இலங்கை வங்கி - க/கு இல. 70993353 | 238,885,289 | 124,907,995 |
| இலங்கை வங்கி - க/கு இல. 306795 (விடுதி) | 1,706,044 | 4,400,337 |
| இலங்கை வங்கி - க/கு இல. 71579813 | 219,300 | 167,300 |
| வெளிநாட்டு RFD/KAT/US$40 | 40,299,497 | 29,722,395 |
| சில்லறைக் காசு கட்டுநிதி | 17,109 | - |
| மொத்தம் | **765,431,461** | **512,233,716** |

குறிப்பு - 12

| | 2023 | 2022 |
|---|---|---|
| | ரூ | ரூ |
| செலுத்தவேண்டியவைகள் | | |
| ETF செலுத்தவேண்டியது | 4,518,193 | 4,742,818 |
| அறக்கட்டளை நிதி புலமைப்பரிசிலுக்கு செலுத்தவேண்டிய க/கு | 4,000 | 4,000 |
| ஏனைய பொறுப்புக்கள் | 48,014,108 | 54,292,967 |
| சில்லறை கடன்கொடுத்தோர் | 14,439,604 | 67,070,040 |
| தடுத்தல்வைத்தல் க/கு - வழங்குநர்கள் | 3,726,613 | 13,139,726 |
| ஒப்பந்தக்காரர் சார் தடுத்தல்வைத்தல் | 40,397,454 | 35,940,323 |
| ஒப்பந்தக்காரர்களுக்கு செலுத்தவேண்டியன (குறிப்பு 12.1.) | - | 32,536,306 |
| வெளிநாட்டு மாணவருக்கான மானியம் - உயர் கல்வி அமைச்சு மூலம் | 1,639,775 | 1,639,775 |
| செலுத்தப்படாத கூலிகள் | 123,865 | 319,875 |
| செலுத்தப்படாத மாணவர் உதவிதொகை | 75,900 | 75,900 |
| செலுத்தவேண்டிய பணிக்கொடை | 8,397,008 | 2,331,307 |
| செலுத்தவேண்டிய நிறுத்தி வைத்தல் வரி | 44,098 | - |
| செலுத்தவேண்டிய நிறுத்திவைத்துள்ள பணிக்கொடை | 2,910,520 | 62,813 |
| செலுத்தவேண்டிய முத்திரை தீர்வை | 2,925 | 2,725 |
| மொத்தம் | **124,294,064** | **212,158,575** |

குறிப்பு 12.1: நிர்மாணக் கருத்திட்டத்திற்கான ஏற்பாடு - நகரமும் பட்டினமும் திட்டமிடல் திணைக்களத்திற்கான கட்டடக்கலை பீட கட்டடத்தின் கட்டம் II சம்பந்தமான கட்டடம்.
மேற்படி கருத்திட்டத்தின் கொடுப்பனவு மற்றும் நிர்மாணப் பணிகள் சம்பந்தமாக ஒப்பந்ததாரர் R.E. வீரகோண்

கன்ஸ்ரக்சன் (பிரை.) கம்பனி மற்றும் பல்கலைக்கழகம் ஆகியவற்றுக்கு இடையில் பிணக்கொன்று ஏற்பட்டுள்ளது. அப் பிணக்கை தீர்க்கும் வரை பல்கலைக்கழகத்தின் மூலம் சிட்டைகள், தடுத்துவைத்தல் வைப்பு என்பன சார்பாக பணம் செலுத்தப்பட்டிருக்காததுடன், தற்போது பிணக்கு தீர்க்கப்பட்டுள்ளதுடன், வழக்கில் ரூ. 32,536,306 ஒப்பந்ததாரருக்கு செலுத்துவதற்கு உத்தரவிடப்பட்டது. அதற்கிணங்க, 2022.12.31 ஆம் திகதியில் ரூ. 32,536,306 ஆன ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட தொகை 2023-ஆம் ஆண்டில் பல்கலைக்கழக அபிவிருத்தி கணக்கை பயன்படுத்தி கொடுத்து தீர்க்கப்பட்டது. அது சம்பந்தப்பட்ட வட்டிக் கட்டணம் மற்றும் தீர்ப்பாளர் கட்டணம் ஆகியன மூலதனமாக்கப்படாததுடன், பல்கலைக்கழக அபிவிருத்தி கணக்குக்கு செலவினமொன்றாக கணக்கு வைக்கப்பட்டது.

குறிப்பு - 13

| | 2023<br>ரூ. | 2022<br>ரூ. |
|---|---|---|
| செலுத்த வேண்டிய வைப்புக்கள் | | |
| விலைமனு | 1,000 | 154,200 |
| சில்லறை | 1,091,050 | 7,165,808 |
| நம்பிக்கை உத்தரவாதம் | 15,062 | 12,500 |
| சிற்றுண்டிச்சாலை | 390,000 | 170,000 |
| ஆய்வுகூடம் மற்றும் நூலகம் | 12,061,475 | 13,818,100 |
| பாதுகாப்பு | 1,130,500 | 610,300 |
| கடன் பிணை | 93,000 | 259,500 |
| இணையம் | 1,265,000 | 1,210,000 |
| மொத்தம் | **16,047,087** | **23,400,408** |

குறிப்பு - 14

| | 2023<br>ரூ. | 2022<br>ரூ. |
|---|---|---|
| பிற்போடப்பட்ட வருமானம் | | |
| பட்டப்பின்படிப்பு பாடநெறிகள் | 576,561,092 | 629,897,170 |
| பகுதி நேர பாடநெறிகள் | 5,912,878 | 5,005,494 |
| பயிற்சியளிப்பு நிகழ்ச்சித்திட்டம் | 36,302,595 | 42,129,136 |
| ஏனைய நிகழ்ச்சித்திட்டங்கள் | 64,021,750 | 84,543,872 |
| கருத்திட்டங்கள் | 179,465,281 | 119,497,084 |
| ஒப்பந்த ஆராய்ச்சிகள் | 32,961,552 | 38,696,518 |
| பகுதி நேர பாடநெறிகள் | **895,225,148** | **919,769,273** |

குறிப்பு - 14.1. கணக்கியல் கொள்கையின் கீழ் 2.5 இற்கு இணங்க பேரேட்டுக் கணக்குகளை மீள வகைப்படுத்துவதன் காரணமாக ஒப்பீட்டுத் தொகைகள் கீழுள்ளவாறு மீண்டும் காட்டப்பட்டுள்ளன.

| | மீளக் காட்டப்பட்டுள்ளது<br>2022<br>ரூ. | கணக்காய்வு செய்யப்பட்டது<br>2022<br>ரூ. |
|---|---|---|
| ஏனைய நிகழ்ச்சித்திட்டங்கள் | 84,543,872 | 89,852,271 |
| கருத்திட்டங்கள் | 38,696,518 | 33, 388,119 |
| மொத்தம் | **123,240,390** | **123,240,390** |

குறிப்பு - 15

| | 2023<br>ரூ. | 2022<br>ரூ. |
|---|---|---|
| பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் | | |
| ஆரம்ப மீதி | 807,324,732 | 749,941,352 |
| ஆண்டுக்கான ஏற்பாடுகள் (குறிப்பு 15.1.) | 147,177,711 | 107,782,891 |
| காலப்பகுதியில் விலகியவர்களுக்கான பணிக்கொடை செலுத்தியது/ | (105,192,130) | (50,399,512) |
| இறுதி மீதி | **849,310,313** | **807,324,732** |
| | | |
| குறிப்பு 15.1. - ஆண்டுக்கான ஏற்பாடுகள் | | |
| கடந்த சேவை செலவு | - | 10,624,864 |
| வட்டி செலவு | 145,318,452 | 86,243,256 |
| நடைமுறை சேவை செலவு | 52,774,997 | 55,619,143 |
| | 198,093,448 | 152,487,263 |
| தேறிய உள்ளபடியான (இலாபம்) / நட்டம் உடனடியாக இனங்காணப்பட்டது | (50,915,737) | (44,704,372) |
| ஆண்டின் போது செய்த மொத்த ஏற்பாடுகள் | **147,177,711** | **107,782,891** |

குறிப்பு - 15.2: வருடத்தினுள் பயன்படுத்தப்பட்ட மதிப்பீட்டு அனுமானங்கள்

இறப்பு : A 1967/70 இறப்பு அட்டவணை

இயலாமை: இறப்பு அட்டவணையில் 10%

ஊழியர்கள் சுழற்சி விகிதம்: கல்விசார் பணியாளர்கள் : 5%, கல்விசார பணியாளர்கள் : 2% ஆண்டுக்கு.

பணியாளர்களது 54 வயது வரை மற்றும் அதன் பின் பூச்சியம்.

சாதாரண ஓய்வுபெறும் வயது: கல்விசார் பணியாளர் - 65 வருடங்கள், கல்விசாரா பணியாளர் - 60 வருடங்கள்

தழிவு விகிதம்: 13% ஆண்டுக்கு

சம்பள ஏற்ற விகிதம்: அடிப்படை சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள்: கல்விசார் 12% ஆண்டுக்கு,
கல்விசாரா 12% ஆண்டுக்கு, ஒவ்வொரு ஆண்டும் நியமனம் செய்யப்பட்ட மாதத்தில்
சம்பள ஏற்றம் கொடுத்தல் வேண்டும்.

ஓய்வூதிய பணிக்கொடை சூத்திரம்:- குறைந்தபட்சம் 5 வருட கால சேவைக் காலத்தைக் கொண்டவர்களுக்கு
பூரணப்படுத்தப்பட்ட ஒவ்வொரு வருடத்துக்காகவும் அரை மாத சம்பளம்.

குறிப்பு 15.3. - உணர்திறன் பகுப்பாய்வு 2023

| அனுமான வேறுபாடு | ஏற்பாடுகள் (ரூ.) |
|---|---|
| கழிவு விகிதத்தில் ஒரு சதவீத புள்ளி அதிகரிப்பு (+ 1%) | 789,257,909 |
| கழிவு விகிதத்தில் ஒரு சதவீத புள்ளி குறைவு (- 1%) | 917,941,419 |
| | |
| வேதனம்/ சம்பள ஏற்ற விகிதத்தில் ஒரு சதவீத புள்ளி அதிகரிப்பு (+ 1%) | 918,634,398 |
| வேதனம்/ சம்பள ஏற்ற விகிதத்தில் ஒரு சதவீத புள்ளி குறைவு (- 1%) | 787,669,940 |

| | |
|---|---|
| குறிப்பு 15.4: வரையறுக்கப்பட்ட நலன்கள் சார் கடப்பாட்டினது நிறையூட்டிய சராசரி கால எல்லை. | 8.5 Years |

குறிப்பு - 16

| | 2023<br>ரூ. | 2022<br>ரூ. |
|---|---|---|
| மூலதன மானியம் - செலவிடப்படாதது | | |
| ஆரம்ப மீதி | - | 98,496,274 |
| திறைசேரி மற்றும் AHEAD மூலம் மானியம் | 468,913,635 | 196,048,988 |
| பல்கலைக்கழக அபிவிருத்தி கரு / மூலம் மாற்றப்பட்டது | (77,571,559) | 148,586,366 |
| சொத்துக்கள் கையப்படுத்தல் | (132,585,898) | (239,295,549) |
| ஏனைய கருத்திட்டங்கள் மீதான செலவினம் | (185,968,841) | (203,836,079) |
| மொத்தம் | **77,787,337** | - |

குறிப்பு 16.1 : 2023 ஆண்டுக்கான மூலதன மானியமாக முறையே ரூ. 350 மில்லியன் மற்றும் ரூ. 5 மில்லியன் தொகைகள் திறைசேரியிலிருந்தும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடமிருந்தும் கிடைத்ததுடன், AHEAD கருத்திட்டத்தின் மூலம் ரூ. 118.91 மில்லியன் தொகை கிடைத்துள்ளது. திறைசேரி மானியம் மற்றும் AHEAD மானியம் ஆகியவற்றினது மொத்தம் செலவிடப்பட்ட தொகை, நிதிச் செயலாற்றல் கூற்றில் நாணயமாற்றமல்லாத கொடுக்கல் வாங்கல் வருமானமாக (மூலதனம்) இனங்காணப்பட்டுள்ளது.

குறிப்பு - 17

| | 2023<br>ரூ. | 2022<br>ரூ. |
|---|---|---|
| திரண்ட நிதியம் - மூலதனம் | | |
| ஆரம்ப மீதி | 883,724,614 | 1,000,404,056 |
| கூட்டுக: நாணயமாற்றல்லாத மூலதன வருமானம் | 461,594,119 | 385,438,071 |
| நாணயமாற்று மூலதன வருமானம் | 86,225,759 | 173,871,215 |
| ஆண்டின் போது செய்யப்பட்ட சீராக்கல்கள் | (14,681,699) | - |
| கழி : வருமான கூற்றுக்கான செலவின விதிப்பு | (601,169,709) | (675,988,728) |
| | 836,597,167 | 883,724,614 |
| குறிப்பு 17.1 - 2023.12.34 வரையிலான மூலதன பங்களிப்பு சார் பொழிப்பு | | |
| அரசாங்க மானியம் | 5,182,862,721 | 4,786,736,422 |
| மூலதன நன்கொடை AHEAD கருத்திட்டம் | 409,896,007 | 378,775,685 |
| ஏனைய மூலதன நன்கொடைகள் | 639,770,464 | 527,851,406 |
| உருவாக்கப்பட்ட நிதி மூலதன பங்களிப்புக்கள் | 289,663,088 | 281,008,888 |

குறிப்பு 17.2 - பல்கலைக்கழகத்தை தாபிப்பதற்காக அரசாங்கத்தினால் கைமாற்றப்படும் காணியின் ஆரம்ப அங்கீகரிக்கப்பட்ட பெறுமதி ரூ. 199,489,100 ஆகும் மற்றும் அது திரட்டிய மூலதன நிதியில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

குறிப்பு - 18

| | 2023<br>ரூ.. | 2022<br>ரூ.. |
|---|---|---|
| ஆராய்ச்சி மானியங்கள் | | |
| தேசிய விஞ்ஞான மன்றம் | 1,028,239 | 7,806,694 |
| ஏனைய ஆய்வு மானியங்கள் | 83,174,428 | 99,200,939 |
| | 84,202,667 | 107,007,633 |

குறிப்பு 18.1 ஆண்டின் போது வெளியக ஆராய்ச்சி மானியங்கள் தொடர்பான பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் பின்வருமாறு.

| | ரூ. | ரூ. |
|---|---|---|
| ஆரம்ப செலவளிக்கப்படாத மீதி | 107,007,633 | 111,040,968 |
| மொத்த பெறுவனவுகள் | 30,232,810 | 30,248,852 |
| மொத்த மீண்டெழும் செலவினம் | (50,285,011) | (28,629,756) |
| மொத்த மூலதன செலவினம் | (2,752,765) | (5,652,432) |
| இறுதி செலவளிக்கப்படாத மீதி | 84,202,667 | 107,007,633 |

குறிப்பு 18.2. கணக்கியல் கொள்கையின் கீழ் 2.5 இற்கு இணங்க பேரேட்டுக் கணக்குகளை மீள வகைப்படுத்துவதன் காரணமாக ஒப்பீட்டுத் தொகைகள் கீழுள்ளவாறு மீண்டும் காட்டப்பட்டுள்ளன.

| | மீளக் கணக்காய்வு காட்டப்பட்டுள்ளது | செய்யப்பட்டது செய்யப்பட்ட |
|---|---|---|
| | 2022 | 2022 |
| | ரூ. | ரூ. |
| தேசிய விஞ்ஞான மன்றம் | 7,806,694 | 6,359,500 |
| ஏனைய ஆய்வு மானியங்கள் | 99,200,939 | 100,648,134 |
| மொத்தம் | **107,007,633** | **107,007,634** |

குறிப்பு - 19

| | 2023 | 2022 |
|---|---|---|
| | ரூ.. | ரூ.. |
| கட்டுப்படுத்தப்பட்ட நிதியம் | | |
| (a). உருவாக்கப்பட்ட நிதி | | |
| ஆரம்ப மீதி | **654,480,147** | **675,497,126** |
| கூட்டுக - பெறுவனவுகள் | 870,895,118 | 320,423,325 |
| கழி - கொடுப்பனவுகள் | (627,898,405) | (341,440,303) |
| | **897,476,860** | **654,480,147** |
| கூட்டு: திணைக். க/கு மற்றும் பாடநெறி அபி. நிதி | 264,698,079 | 252,483,981 |
| இறுதி மீதி | **1,162,174,938** | **906,964,129** |
| (b). நன்கொடை நிதிகள் | | |
| ஆரம்ப மீதி | **20,970,175** | **20,325,063** |
| கூட்டுக - பெறுவனவுகள் | 1,127,010 | 730,572 |
| கழி - கொடுப்பனவுகள் | (41,104) | (85,460) |
| இறுதி மீதி | **22,056,082** | **20,970,175** |
| (c). ஆராய்ச்சி மானிய நிதிகள் | | |
| ஆரம்ப மீதி | **10,504,569** | **10,273,343** |
| கூட்டுக - பெறுவனவுகள் | 596,134 | 231,225 |
| கழி - கொடுப்பனவுகள் | - | - |
| இறுதி மீதி | **11,100,702** | **10,504,569** |
| (d) பிணைகள் மற்றும் ஒப்பந்த நிதிகள் | | |
| ஆரம்ப மீதி | **261,306,079** | **209,605,983** |
| கூட்டுக - பெறுவனவுகள் | 105,255,180 | 52,600,533 |
| கழி - கொடுப்பனவுகள் | (7,572,235) | (262,902) |
| இறுதி மீதி | **358,989,025** | **261,306,079** |
| (e) ஏனைய நிதிகள் | | |
| ஆரம்ப மீதி | **45,306,029** | **41,509,508** |
| கூட்டுக - பெறுவனவுகள் | 4,609,045 | 3,949,271 |
| கழி - கொடுப்பனவுகள் | (1,397) | (152,749) |
| இறுதி மீதி | **49,913,677** | **45,306,029** |
| | **1,604,234,424** | **1,245,050,981** |

குறிப்பு - 20

| | 2023<br>ரூ.. | 2022<br>ரூ.. |
|---|---|---|
| அறக்கட்டளை நிதி | | |
| ஆரம்ப மீதி | 44,142,238 | 41,453,360 |
| பெறுவனவுகள் | 50,000 | 2,200,000 |
| பெற்ற வட்டி | 4,206,626 | 2,687,563 |
| கொடுப்பனவுகள் | (1,369,740) | (2,198,685) |
| **மொத்தம்** | **47,029,123** | **44,142,238** |

குறிப்பு - 21

| | 2023<br>ரூ.. | 2022<br>ரூ.. |
|---|---|---|
| மாணவர்களிடமிருந்து வருமானம் | | |
| பதிவுசெய்தல் - பட்டப்படிப்பு | 1,363,690 | 1,626,400 |
| பட்டமேற்படிப்பு | 2,440,500 | 2,579,950 |
| பாடவகுப்புக் கட்டணம் - பட்டப்படிப்பு | 8,735,813 | 10,851,043 |
| பரீட்சைக் கட்டணம் - பட்டப்படிப்பு | 81,490 | 27,100 |
| பட்டமேற்படிப்பு | 777,650 | 740,040 |
| | **13,399,143** | **15,824,533** |

குறிப்பு - 22

| | 2023<br>ரூ.. | 2022<br>ரூ.. |
|---|---|---|
| வட்டி வருமானம் | | |
| முதலீடுகளிலிருந்து வட்டி | 347,475,676 | 230,474,353 |
| கடன் மற்றும் முற்பணம் மூலம் வட்டி | 1,431,836 | 1,512,822 |
| | **348,907,512** | **231,987,174** |

குறிப்பு - 23

| | 2023<br>ரூ.. | 2022<br>ரூ.. |
|---|---|---|
| ஏனைய வருமானம் | | |
| ஆதனங்களிலிருந்து வாடகை | 2,548,339 | 1,495,011 |
| நானாவிதப் பெறுவனவுகள் | 29,911,303 | 19,436,407 |
| வெளிநாட்டு நாணயமாற்று இலாபம் | - | 1,384,153 |
| நூலக தண்டப்பணம் | 345,702 | 204,010 |
| மருத்துவக் கட்டணங்கள் | 269,136 | 195,625 |
| அகற்றப்பட்ட பொருட்கள் ஏலவிற்பனை இலாபம் | 2,204,358 | - |
| | 35,278,839 | 22,715,206 |

குறிப்பு - 24

| | 2023<br>ரூ.. | 2022<br>ரூ.. |
|---|---|---|
| மூலதன மானியம் | | |
| சொத்துக்கள் கையகப்படுத்தல் | 132,585,898 | 105,709,184 |
| ஏனைய மூலதன செயற்பாடுகள் | 22,138,595 | 50,371,453 |
| நிர்மாணித்தல் மற்றும் புனரமைத்தல் கருத்திட்டங்கள் | 163,830,246 | 153,464,626 |
| | **318,554,739** | **309,545,263** |

குறிப்பு - 25

| | 2023<br>ரூ.. | 2022<br>ரூ.. |
|---|---|---|
| மூலதன நன்கொடைகள் | | |
| மூலதன நன்கொடைகள் - ஏனையவை | 111,919,058 | 23,263,323 |
| மூலதன நன்கொடைகள் - AHEAD கருத்திட்டம் | 31,120,322 | 52,629,486 |
| | 143,039,380 | 75,892,809 |

குறிப்பு - 26

| | 2023<br>ரூ.. | 2022<br>ரூ.. |
|---|---|---|
| உருவாக்கப்பட்ட நிதி மூலம் மூலதன பங்களிப்பு | | |
| Capital Contribution by Generated Income | 86,225,759 | 173,871,215 |
| | 86,225,759 | 173,871,215 |

குறிப்பு - 27

| | 2023<br>ரூ. | 2022<br>ரூ.. |
|---|---|---|
| **ஆளுக்குரிய வேதனாதிகள்** | | |
| கல்விசார் | | |
| சம்பளங்களும் கூலிகளும் | 713,638,832 | 731,960,318 |
| படிகள் | 964,935,636 | 970,204,901 |
| வாழ்க்கைச் செலவுப் படி | 51,056,708 | 54,511,499 |
| UPF | 133,022,445 | 130,824,431 |
| ஓய்வூதியம் | 81,316,584 | 86,658,076 |
| ஊ.ந.நி | 42,868,846 | 43,513,158 |
| வருகைதரும் விரிவுரையாளர் கட்டணம் | 49,718,264 | 38,730,873 |
| | | |
| கல்விசாரா | | |
| சம்பளங்களும் கூலிகளும் | 350,829,751 | 340,740,760 |
| படிகள் | 270,775,910 | 261,123,993 |
| வாழ்க்கைச் செலவுப் படி | 63,722,172 | 64,380,045 |
| UPF | 47,046,175 | 47,059,589 |
| ஓய்வூதியம் | 36,442,452 | 34,158,618 |
| ஊ.ந.நி | 16,699,043 | 16,245,637 |
| பதில்கடமை கொடுப்பனவு | 458,746 | 473,394 |
| மேலதிக நேர கொடுப்பனவு | 40,107,163 | 25,704,823 |
| விடுமுறைகால கொடுப்பனவு | 16,262 | 72,949 |
| | **2,862,654,987** | **2,846,363,065** |

குறிப்பு - 28

| | 2023<br>ரூ.. | 2022<br>ரூ.. |
|---|---|---|
| பிரயாண மற்றும் இணைந்த கொடுப்பனவுகள் | | |
| உள்நாடு | 1,679,896 | 1,150,940 |
| வெளிநாடு | - | 11,882,936 |
| | **1,679,896** | **13,033,876** |

குறிப்பு - 29

| | 2023<br>ரூ.. | 2022<br>ரூ.. |
|---|---|---|
| நலன் சேவைகள் | | |
| சீருடைகள் மற்றும் தையல் கட்டணங்கள் | 6,588,486 | 3,080,180 |
| மருத்துவ வழங்கல்கள் | 3,536,449 | 2,376,395 |
| செயலமர்வும் கருத்தரங்குகளும் | 76,500 | 4,500 |
| பணியாளர் அபிவிருத்தி | 1,505,000 | 3,396,636 |
| விடுமுறை ஆணைச்சீட்டுக்களும் பருவகால பயண சீட்டுக்களும் | 6,057,450 | 5,349,230 |
| வெகுமதிகளும் இழப்பீடுகளும் | 185,000 | 165,000 |
| பல்கலைக்கழக விளையாட்டு செயற்பாடுகள் | 2,507,120 | 2,836,973 |
| பங்களிப்புக்களும் அங்கத்துவக்கட்டணமும் | 8,520,288 | 8,724,653 |
| ஏனையன | 35,956,010 | 22,879,940 |
| | **64,932,303** | **48,813,508** |

குறிப்பு - 30

| | 2023<br>ரூ.. | 2022<br>ரூ.. |
|---|---|---|
| பிற தொழிற்பாட்டுச் செலவுகள் | | |
| விசேட சேவைகள் - கவுன்சில் மற்றும் குழு | 2,186,530 | 1,629,440 |
| தொழில்சார் மற்றும் ஏனைய கட்டணங்கள் | 6,653,947 | 5,074,478 |
| களியாட்டச் செலவுகள் | 3,445,178 | 2,395,989 |
| பட்டமளிப்புவிழா | 7,070,905 | 5,561,242 |
| பரீட்சை செலவினங்கள் | 19,200,044 | 19,207,274 |
| பணிக்கொடை ஏற்பாடுகள் | 147,177,711 | 107,782,892 |
| ஆதன கடன் வட்டி - அரசாங்க பங்களிப்பு | 2,888,429 | 2,905,924 |
| | **188,622,743** | **144,557,240** |

குறிப்பு - 31

| | 2023<br>ரூ.. | 2022<br>ரூ.. |
|---|---|---|
| மாணவர்களுக்கான நிதிசார் உதவிகள் | | |
| மாணவர் உதவிப்பணம் | 12,448,000 | 13,592,000 |
| அறக்கட்டளை புலமைபரிசில் | - | 175,000 |
| | **12,448,000** | **13,767,000** |

குறிப்பு - 32

| | 2023<br>ரூ.. | 2022<br>ரூ.. |
|---|---|---|
| ஒப்பந்த சேவைகள் | | |
| போக்குவரத்து | 5,661,572 | 2,823,229 |
| தொடர்பாடல் | 39,387,304 | 47,286,054 |
| அஞ்சல் கட்டணம் | 1,503,274 | 1,838,360 |
| மின்சாரம் | 183,742,064 | 65,361,592 |
| பாதுகாப்பு சேவைகள் | 35,568,480 | 35,412,631 |
| நீர் | 12,526,875 | 5,595,926 |
| சுத்திகரிப்புச் சேவைகள் | 58,159,251 | 42,265,439 |
| வாடகை, வாடகைக்கமர்த்தல் கட்டணம் | 12,000 | 20,000 |
| இறைகள் மற்றும் வரிகள் | 248,015 | 248,015 |
| அச்சடித்தல் மற்றும் விளம்பரப்படுத்தல் | 5,493,738 | 3,849,770 |
| ஏனையன | 761,355 | 1,074,239 |
| | **343,063,927** | **205,775,255** |

குறிப்பு - 33

| | 2023 ரூ.. | 2022 ரூ.. |
|---|---|---|
| வழங்கல்கள் மற்றும் நுகர்வுகள் | | |
| காகிதாகிகள் | 17,921,685 | 16,857,341 |
| எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கிகள் | 24,849,324 | 19,999,657 |
| எந்திர உபகரணம் மற்றும் மின் பொருட்கள் | 1,456,263 | 1,508,281 |
| இரசாயனங்கள் மற்றும் கண்ணாடிப் பொருட்கள் | 2,000,329 | 1,466,668 |
| பிற வழங்கல் (மென்பொருள், பராமரிப்பு பொருட்கள் முதலியன) | 39,313,511 | 24,549,500 |
| | **85,541,113** | **64,381,447** |

குறிப்பு - 34

| | 2023 ரூ.. | 2022 ரூ.. |
|---|---|---|
| பராமரிப்புக்கள் | | |
| வாகனங்கள் | 22,009,924 | 13,675,902 |
| பொறி எந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | 53,005,359 | 52,061,473 |
| ஏனையன - பராமரிப்பு | 1,063,343 | - |
| கட்டடங்களும் ஏனையவையும் | **76,078,626** | **66,157,078** |

குறிப்பு - 35

| | 2023 ரூ.. | 2022 ரூ.. |
|---|---|---|
| நிதிச் செலவு | | |
| வங்கிக் கட்டணம் | 2,660 | 6,500 |
| வெளிநாட்டு நாணயமாற்று நட்டம் | 2,863,076 | - |
| | **2,865,736** | **6,500** |

குறிப்பு 35.1: கொடுக்கல் வாங்கல் நிகழ்ந்த தினத்தில் நிலவும் விகிதத்தில் வெளிநாட்டு நாணயத்தை ரூபாவின் பெறுமதிக்கு மாற்றியதன் பின்வு, வதிவிட வெளிநாட்டு நாணய (RFC) கணக்கின வெளிநாட்டு நாணய கொடுக்கல் வாங்கல் காசுப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டது - SLPSAS 05 இற்கு ஏற்ப, RFC கணக்குகளின் இறுதி மீதி, ஐந்தொகையினது திகதியின் நாணயமாற்று வீதத்தின் படி அறிக்கையிடல் தினத்தன்று ரூபா பெறுமதிக்கு மாற்றப்பட்டதுடன் வெளிநாட்டு பண மாற்றலின் தேறிய இலாபம்/ நட்டம் நிதிச் செயலாற்றல் அறிக்கையில் இனங்காணப்பட்டுள்ளது..

குறிப்பு - 36

| | 2023 ரூ.. | 2022 ரூ.. |
|---|---|---|
| உருவாக்கப்பட்ட வருமானம் / செலவினம் | | |
| பட்டமேற்படிப்பு பாடநெறிகள் | 414,802,497 | 359,883,340 |
| குறுகியகால பாடநெறிகள் | 84,446,056 | 41,335,708 |
| ஆலோசனைசார் கருத்திட்டங்கள் | 172,064,313 | 270,203,859 |
| ஒப்பந்த ஆய்வுகள் | 38,377,694 | 10,807,595 |
| | 709,690,560 | 682,230,502 |

குறிப்பு - 37

| | 2023<br>ரூ.. | 2022<br>ரூ.. |
|---|---|---|
| காசு மற்றும் காசுக்கு சமமானவை | | |
| வங்கியிலுள்ள காசு | 765,414,352 | 512,233,716 |
| கையிலுள்ள காசு | 17,109 | - |
| **காசு மற்றும் காசுக்கு சமமானவை** | **765,431,461** | **512,233,716** |

குறிப்பு - 38

அறிக்கையிடப்பட்ட திகதிக்குப் பின்பு ஏற்படும் நிகழ்வுகள்

குறிப்பு - 38.1. நிதிக் கூற்றுக்களில் சீராக்கல் அல்லது வெளிப்படுத்தல் தேவைப்படும் அறிக்கையிடல் கால வரையின் பின்பு அளவுசார்ந்த நிகழ்வுகள் எதுவுமில்லை.

குறிப்பு - 39

தற்செயலான சொத்துக்கள் மற்றும் தற்செயலான பொறுப்புக்கள்

குறிப்பு - 39. 1. தற்செயலான சொத்துக்கள்

(அ) 2023.12.31-ஆம் திகதியில் பிணை உத்தரவாதம் மற்றும் உடன்படிக்கைகள் என்பன மீறல் சார்பாக கிடைக்கவேண்டிய பெறுமதி ரூ. 173,752,491.35 ஆக இருந்ததுடன், அவை தற்செயலான சொத்துக்களாக இனங்காணப்பட்டன.

(ஆ) உடன்படிக்கையின் பிரகாரம் BIT நிகழ்ச்சித்திட்டம் சம்பந்தமாக தனியார் நிறுவனங்கள் இரண்டிடமிருந்து அறவிடவேண்டிய ரூ. 8,255,000 தொகை தற்செயலான சொத்துக்களாக இனங்காணப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| லங்கா நிபோ:ன் பிஸ் டெக் | Rs. 2,925,000 |
| ஹொரைசன் பல்கலைக்கழகம் | Rs. 5,330,000 |

குறிப்பு - 39.2. தற்செயலான பொறுப்புகள்

(அ) மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் மூலம் தாக்கல் செய்யப்பட்டுள்ள சட்ட வழக்கு விபரம்

| | |
|---|---|
| ஆண்டின் போது தாக்கல் செய்த சட்ட நடவடிக்கைகள் | 06 |
| ஆண்டின் போது முடிவடைந்த சட்ட நடவடிக்கைகள் | 03 |
| 2023.12.31-ம் திகதியன்று தொடரும் சட்ட நடவடிக்கைகள் | 17 |

(ஆ) மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் மூலம் தாக்கல் செய்யப்பட்டுள்ள சட்ட வழக்கு விபரம்:
பிணை உத்தரவாதம் மற்றும் ஒப்பந்தங்கள் மீறல் தொடர்பாக 2023.12.31 ஆம் திகதியன்று வரை வழக்குகள் ஏழு (07) தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

(இ) நட்டஈட்டின் அளவை உறுதியாக மதிப்பீடு செய்ய முடியாததுடன், அதனால் நிதிக் கூற்றுக்களில் நிதியேற்பாடுகள் வழங்கப்படவில்லை.

குறிப்பு - 40

தொடர்புடைய தரப்பினர்களின் கொடுக்கல் வாங்கல்.

2023 ஆம் ஆண்டின் போது இணைந்த நிறுவனமான யுனி கன்சல்டென்சி சர்விசஸ் (பிரை.) கம்பனியுடன் பின்வரும் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொண்டுள்ளது.

யுனி கன்சல்டென்சி சர்விசஸ் (பிரை.) கம்பனி மூலம் கிடைத்த வருமானம் ரூ. 5,252,482.00 ஆகும்.
யுனி கன்சல்டென்சி சர்விசஸ் (பிரை.) கம்பனி மூலம் வழங்கப்பட்ட சேவைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவு ரூ. 1,554,218.16 ஆகும்.

குறிப்பு - 41

வரவு செலவுத் திட்டம் சார் விபரங்கள்

குறிப்பு - 41.1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மூலம் வழங்கப்படுகின்ற வருடாந்த ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட 2023 ஆண்டுக்கான வருடாந்த வரவு செலவுத் திட்டம் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன..

| | பாதீடு (ரூ.) |
|---|---|
| | **2023** |
| மீண்டெழும் மானியம் | 3,630,000,000 |
| மூலதன மானியம் | 350,000,000 |

குறிப்பு - 41.2. வருடாந்த ஒதுக்கீட்டின் மூலம் பெற்ற உள்ளபடியான காசு - 2023

| | ரூ. |
|---|---|
| மீண்டெழும் மானியம் | 3,576,000,000 |
| மூலதன மானியம் | 350,000,000 |

குறிப்பு - 41.3. திறைசேரி மானியம் சார்பாக தயாரிக்கப்பட்ட வருடாந்த வரவு செலவுத் திட்டத்திற்காக வரவு செலவுத் திட்டம்சார் காலப்பகுதி 2023 சனவரி 1 முதல் 2023 திசம்பர் 31 வரை பன்னிரெண்டு மாத காலப் பகுதியை பிரதிநிதித்துவப்படுத்துகிறது. சுய நிதி செயற்பாடுகளில், ஆராய்ச்சி மானியங்களில் ஏனைய வரவு செலவுத் திட்டத்துக்கு உரிய வரவு செலவுத் திட்டம்சார் காலப்பகுதி பல்கலைக்கழகத்தின் நிதி காலப்பகுதியை விட வேறுபட்டதாகும்.

4.6 பாதீட்டு ஒப்பீட்டு அறிக்கை - வருமானம்

| விபரம் | பாதீடு 2023 ரூ | மொத்த வருமானம் 2023 ரூ. | வேறுபாடு | குறிப்பு |
|---|---|---|---|---|
| அரசாங்க மானியம் | 3,630,000,000 | 3,576,000,000 | % | மொத்த ஒதுக்கீடும் திறைசேரியிலிருந்து பெறப்படவில்லை |
| பதிவுசெய்தல் கட்டணம் (பட்டப்படிப்பு) | 2,000,000 | 1,363,690 | -32% | மாணவர் எண்ணிக்கை மற்றும் செலுத்தப்பட்ட கட்டணங்களின் அடிப்படையில் |
| பதிவுசெய்தல் கட்டணம் (பட்டமேற்படிப்பு) | 3,000,000 | 2,440,500 | -19% | மாணவர் எண்ணிக்கை மற்றும் செலுத்தப்பட்ட கட்டணங்களின் அடிப்படையில் |
